# உபநிஷத்ஸாரம்

# ॥ उपनिषत्सारः ॥

(ஸ்ரீராமகிருஷ்ண தீபம் எனும்
உரையுடன் கூடியது)

## முதல் பாகம்

(ஈச–கேன–கட–பிரச்ன–முண்டக–மாண்டூக்கிய–
தைத்திரீய–ஐதரேய–உபநிஷத்துக்கள்)

உரையாசிரியர்
“அண்ணா”

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : : சென்னை

இது சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத்
தலைவரால் பிரசுரிக்கப்பட்டது

முதல் வெளியீடு 1951
இரண்டாம் பதிப்பு 1956

உரிமை பதிப்பாளர்க்குரியது

I—XX—8-'51
II—XX—8-'56

கபீர் அச்சுக்கூடம், சென்னை (3184)

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | ... | iv |
| குறிகளின் விளக்கம் | ... | viii |
| ஆத்ம ஸமர்ப்பணம் | ... | x |
| மங்களாசரணம் | ... | 1 |
| உபநிஷத் மாஹாத்மியம் | ... | 3 |
| வேதத்தின் பாகுபாடு | ... | 7 |
| உபநிஷதங்கள் :— | | |
| ஈசாவாஸ்யோபநிஷத்து | ... | 8 |
| கேனோபநிஷத்து | ... | 20 |
| கடோபநிஷத்து | ... | 38 |
| பிரச்னோபநிஷத்து | ... | 84 |
| முண்டகோபநிஷத்து | ... | 110 |
| மாண்டூக்கியோபநிஷத்து | ... | 141 |
| தைத்திரீயோபநிஷத்து | ... | 173 |
| ஐதரேயோபநிஷத்து | ... | 239 |
| அனுபந்தம் | | |
| சாந்திபாடம் | ... | 249 |
| உபநிஷத மந்திரங்களின் அகராதி | ... | 262 |
| உரையின் அகராதி | ... | 266 |

Government Oriental Manuscripts Library,
Triplicane P.O., Madras-

# முகவுரை

## I

உபநிஷத்ஸாரம் எனும் நூலின் முதல் பாகமாகிய இப்புஸ்தகத்தில் ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய, ஐதரேயம் என்ற எட்டு உபநிஷதங்கள் அடங்கியிருக்கின்றன. இரண்டாம் பாகத்தில் சாந்தோக்கியம் பிருஹதாரணியகம் என்ற இரண்டு பெரிய உபநிஷதங்களும், பிரம்மசூத்திர ஸாரமும், நூலின் அகராதியும் அடக்கம்.

இப்பத்து உபநிஷதங்களும் மிகவும் முக்கியமானவை. வேதாந்தத் தத்துவத்தை நிர்ணயிக்கும் பிரம்மசூத்திரத்தில் பெரும் பகுதி இவ்வுபநிஷதங்களிலுள்ள மந்திரங்களின் கருத்தை ஆராய்வதாகவே அமைகின்றது. ஸ்ரீ சங்கராசாரியரும் மற்ற மதஸ்தாபகாசாரியர்களும் தசோபநிஷதம் என்ற இத்தொகுதிக்கே பாஷ்யம் எழுதியிருக்கின்றனர். ஸ்ரீமத் பகவத் கீதையும் இவற்றின் ஸாரமாகவே இருக்கின்றது.

இந்நூலில் நான் சுயமாகக் கூறிய கருத்து எதுவும் இல்லை. மகான்களின் உபதேசங்களை உரிய இடங்களில் பொழிப்புரையுடன் தொகுத்துக் காட்டுவது மட்டும் நான் மேற்கொண்ட பணி. ஒப்பிட்டுப் படிப்பதற்கு உபயோகமாயிருக்கும் வகையில் கீதை மேற்கோள்களும், சங்கராசாரியரின் விரிவுரைக் குறிப்புக்களும், இராமகிருஷ்ணர் உபதேச மொழிகளும் ஆங்காங்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

முதல் எட்டு உபநிஷதங்களும் சிறியவையாதலால் அதிகம் சுருக்கப்படவில்லை. இரண்டாவது பாகத்திலுள்ள இரண்டு உபநிஷதங்களும் பெரியவையாதலால் சுருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனினும் ஸாரமான பகுதிகள் ஒன்றும் விடப்படவில்லை.

மந்திரங்களுக்கு முதல் நூல்களில் தொன்றுதொட்டு எந்தமாதிரி எண் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளனவோ அவைகளே இங்கும் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஒரு உபநிஷத்தில் 1. 3. 4. எனும் மந்திரத்துக்குப்பின் 1. 3. 7. என்று வந்தால், இடையில் 5, 6 என்ற மந்திரங்கள் சுருக்குகையில் விடப்பட்டன என்று கொள்ள வேண்டும். எவைகளை விட்டதால் கருத்தின் தொடர்ச்சி முறிபட்டுப் போகாதோ, எவை மூலத்தில் ஏற்கெனவே ஒருமுறை கூறப்பட்டிருந்தும் அப்பியாசத்திற்காகத் திருப்பிக் கூறப்பட்டவையோ அவைகள் தாம் விடப்பட்டிருக்கின்றன.

உபநிஷதங்களின் மூலம் முதலில் நாகர எழுத்திலும் அதனடியில் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கிறது. மாண்டூக்கிய உபநிஷத்திற்கு விளக்கமாக அமைந்த கௌடபாத காரிகையும் பிரம்ம சூத்திரமும் நாகர எழுத்தில் மட்டும் அச்சிடப்பட்டிருக்கின்றன. மந்திரங்களை ஓதும்

முறையை வேதத்தைக் கற்றுப் பழகியவர்களிடம் திருத்தமாகக் கேட்டுக் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஸம்ஸ்கிருத உச்சரிப்பைத் தமிழ் எழுத்துக்களாலும் கூடியவரை காட்டுவதற்காகப் பக்கம் viiil குறிப்பிட்டுள்ள சங்கேதமும் தமிழ் நாட்டில் வழக்கத்திலுள்ள ஶ, ஷ, ஸ, ஹ, க்ஷ முதலிய கிரந்தாக்ஷரங் களும், விஸர்க்கம் (:), அனுஸ்வாரம் (ஂ) முதலியனவும் கையாளப் பட்டிருக்கின்றன.

## II

ஆத்ம ஞானத்தில் நாட்டமுடையோர்க்கு உபநிஷதங்களைப்போல் உதவக்கூடிய நூல்கள் வேறு எவையும் இல்லை என்று கூறுதல் மிகை யாகாது. வாழ்க்கையின் அடிப்படையான தத்துவங்களை அச்சமின்றி ஆராய்வதை இங்குக் காண்பது போல் வேறெங்குங் காண்பதரிது.

உபநிஷதங்களைப் படிக்குந்தோறும் குரு சிஷ்யர்கள் பல நூற்றுண்டு களுக்கு முன், ஆசிரமங்களிலும், அரச சபைகளிலும், வேள்விக் கூடங் களிலும் நிகழ்த்திய ஸாரமான ஸம்வாதங்களை நமது கண்முன் நிகழ்வது போல் காணவுங் கேட்கவுஞ் செய்கின்ருேம். உபநிஷத மந்திரங்களின் கம்பீரமான ஒலி காதில் படும்போதே வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத இறைவன் திருவடிகளை எட்டித் தொட்டுவிட்ட உணர்ச்சி மனத்தில் உதிக்கின்றது.

உபநிஷதங்கள் சுட்டிக் காட்டும் உன்னதமான வாழ்க்கை லக்ஷியம் அதை உணரக்கூடிய பான்மை யில்லாதவர்க்குப் பைத்தியக்காரத்தன மாகவும் உலகுக்கு ஒவ்வாததாகவுந் தோன்றக்கூடும். உலகில் நாம் நடத்தும் போலி வாழ்க்கைக்கும் நாம் சச்சரவிடும் அற்பமான கொள்கை களுக்கும் ஆதரவு தேடினுல் உபநிஷதங்களில் கிடைக்காது. ஆனுல் அவை கூறும் வகையில் காலதேச வர்த்தமானங்களைக் கடந்து, இகத்தி லும் பரத்திலும் உள்ள இன்ப நுகர்ச்சியில் ஆசை வையாமல், விருப்பு வெறுப்புக்களைத் துறந்து ஆன்ம வாழ்க்கையைப் பின்பற்ற ஆயத்த மானவர்க்கு உபநிஷதங்கள் உற்ற துணைகளாகவும், ஒப்புயர்வற்ற வழி காட்டிகளாகவும் ஞான பொக்கிஷங்களாகவும் விளங்குகின்றன. எவனே யாயினும் சரி, உண்மையை உள்ளபடி உணர்ந்தால் அவன் அழியாப் பதவியை அடைவான் என்று உபநிஷதம் உறுதிமொழி கூறுகிறது. உபநிஷதங்களில் பல்லவிபோல் அடிக்கடி வரும் “ய ஏவம் வேத” என்ற சொற்றெடர் இவ்வுண்மையையே வற்புறுத்திக் கூறுகின்றது. “மோக்ஷத்துக்கு அவித்தைதான் தடையேயன்றி வேறு தடையில்லை. எவனெருவன் இந்த உலகத்திலிருக்கும் போதே சிரேஷ்டமான பிரம் மத்தை நான்தான் என்று சாக்ஷாத்கரிக்கிருனே அவன் வேறு கதியை அடைவதில்லை. தேவர்களேயாயினும் பிரம்மத்தை யடையும் விஷயத் தில் அவனுக்குத் தடை செய்ய முடியாது. தேவர்களுக்கும் அவனே

ஆத்மாவாயிருக்கிறுன். பிரம்மத்தையறிபவன் பிரம்மமாகவே ஆகிறுன்'' என்று சங்கராசாரியர் கூறுகிறுர்.

எத்தனை நூற்றுண்டுகளாயினும் பழைய சூரியன் தினந்தோறும் புதிதா யிருப்பது போல் உபநிஷதம் என்றும் புதிதாகவும் எல்லோருக்கும் பொதுவாகவும் இருக்கிறது. அன்றுபோல் இன்றும், அங்குப்போல் இங்கும் அது அழிவிலாததும் மாறுபாடிலாததுமான உண்மை. அந்நிய நாட்டினரும் அந்நிய மதத்தினருங்கூடப் பலர் இதன் பெருமையை அறிந்து பயனடைந்து பெரிதும் போற்றியிருக்கின்றனர். உதாரணமாக ஜெர்மானிய வேதாந்தி 'பால் தேவ்ஸேன்' என்பவர் கூறுகிறுர்: "நமக்கு எதிர்காலத்தைக் காணுந்திறமை இல்லை. இடைவிடாது ஆராயும் மனிதனுடைய மனக்கண் முன் இன்னும் என்னென்ன அதிசயங்கள், என்னென்ன தெய்விகக் காட்சிகள் தோன்றப்போகின்றன என்று நாம் கூறமுடியாது. ஆனல் ஒன்று மட்டும் நிச்சயமாய்க் கூறலாம். எந்தப் புதிய வழிகளை எதிர்கால தத்துவ ஆராய்ச்சி கண்டுபிடித்தாலும் (உபநிஷதங்கள் கண்டுபிடித்த, 'தத் த்வம்-அஸி', 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்ற) இந்தப் பேருண்மையை ஒருநாளும் அசைக்க முடியாது. அதினின்று சிறிதேனும் மாறுதல் ஏற்படுதல் இயலாது. இவ்வுலக இயற்கை விடுவிக்க முடியாத ஒரு புதிர் போன்றது. நமது அறிவு வளர வளர, இந்தப் புதிர் எவ்வளவு கடினம் என்பதுதான் தெளிவுபடுகிறது. இதற்கு ஒரு விடை கண்டுபிடிக்க வேண்டுமானல் அதற்குத் திறவு கோலை அது இரகசியமாக வைக்கப்பட்டுள்ள இடத்தில் தேடவேண்டும். அவ்விடம் நமது உள்ளமாகிய கோவில். அதைத் திறந்து பார்த்தால் இயற்கையின் இரகசியத்துக்குத் திறவுகோலைக் காண முடியும். இங்குத்தான் முதன் முதலில் உபநிஷத ரிஷிகள் அதைக் கண்டுபிடித்து ஆத்ம தரிசனம் பெற்று அழியாப் புகழடைந்தனர்."

தினசரி வாழ்க்கைக்குச் சட்ட திட்டங்களை விதிப்பதில் உபநிஷதங்களுக்கு நோக்கமில்லை. அந்த வேலையை ஸ்மிருதிகள் செய்கின்றன. உபநிஷத உலகத்தில் புகும்போதே கருமத்தளைகள் தாமாகவே தளர்கின்றன. இமயத்தின்மேலே ஏறிச்செல்பவனுக்குக் கீழே தரையிலுள்ள வித்தியாசங்கள் மறந்தும் மறைந்தும் போவது போல் சமூகத்தின் வேற்றுமைகளும் விதி விலக்குக்களும் விலகிவிடுகின்றன. அதனல் சம தரிசனமும் அளவற்ற ஆன்ம பலமும் சித்திக்கின்றன.

சமயங்கள் மலிந்த இந்நாட்டில் சமயங்களையெல்லாம் சமரஸப்படுத்தி ஒற்றுமையைச் சிதைவுபடாமல் காப்பாற்றி வந்திருப்பது உபநிஷதமே யாகும். அவதார புருஷர்களும் ஆசாரியர்களும் பல நூற்றுண்டுகளாக உபதேசித்துவந்திருக்கும் உண்மைகள் அனைத்தும் உபநிஷதங்களின் விரிவுரைகளே. முக்கியமாக இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாழ்க்கையும் உபதேச மொழிகளும் நமது காலத்துக்கியைந்த வகையில் நமக்கு உபநிஷதங்களின் கருத்துக்களை விளங்கவைக்கும்

சிறந்த தீப ஒளி போன்றிருப்பதால் இந்நூலின் உரைக்கு ஸ்ரீ ராம கிருஷ்ண தீபம் எனப் பெயரிட்டுள்ளோம்.

விவேகானந்தர் கூறுகிறார்: "உபநிஷதங்கள் அளவற்ற பலத்தைக் கொடுக்கும் சுரங்கங்களாக இருக்கின்றன. உலக முழுதிற்கும் பலம் அளிக்கக்கூடிய சக்தி அவைகளில் இருக்கின்றது. அவைகளின் மூலம் உலக முழுதிற்கும் புத்துயிரும் புது உணர்ச்சியும் புது சக்தியும் அளிக்க முடியும். எல்லா மதங்களிலிருக்கும் பலவீனர்களையும் தாழ்த்தப் பட்டவர்களையும் துன்பத்தில் அழுந்தியவர்களையும் அவை பேரிகை கொட்டி அழைத்து 'ஆண்மையுடன் எழுந்து நின்று விடுதலை யடையுங்கள்' என்று உரக்கக் கூவுகின்றன. விடுதலை—பூர்ண சுதந்திரம்—உடலுக்கு, மனத்துக்கு, ஆன்மாவுக்கு—இதுவே உபநிஷதங்களின் மூல மந்திரமாகும்."

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம்,
தியாகராய நகர், சென்னை.
ஸ்ரீஜயந்தி: கர ஸு ஆவணிமீ 8வ
24—8—1951

உரையாசிரியர்

## இரண்டாம் பதிப்பின் முகவுரை

இப்பதிப்பில் ஈசாவாஸ்ய உபநிஷத்திற்கும் தைத்திரீய உபநிஷத்திற்கும் ஸ்வரங்கள் சேர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றன.

சாந்திபாடமும், மந்திரங்களுக்கும் உரைக்கும் அகராதியும், அனுபந்தமாக இணைக்கப்பட்டிருக்கின்றன.

நூலைப்பரிசோதனை செய்து அச்சில் பிழைவராமல் திருத்திக் கொடுத்துதவிய பிரம்மஸ்ரீ வழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும், அழகுபட அச்சிட்டுத்தந்த கபீர் அச்சுக்கூடத்தாருக்கும் இதைப் படிக்கப்போகும் அன்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்னை,
துர்முகி ஸு
ஆடிமீ 5வ
30—7—1956

உரையாசிரியர்

# குறிகளின் விளக்கம்

## உச்சரிப்புக் குறிகள்

| | | |
|---|---|---|
| க | ग | ' கங்கை ' என்பதில் போல. |
| ட | ड | ' குடம் ' ,, |
| த | द | ' பாதம் ' ,, |
| ப | ब | ' இன்பம் ' ,, |
| ரு | ऋ | ' எருது ' ,, |
| ஶ | श | ' பாசம் ' ,, |

ஹ, ஹி, ஹு... ' ராம: ' = ராமஹ ; = ஶ்ரீ: ஶ்ரீ ஹி ;
பாண்டு: = பாண்டுஹு ; என்றவாறு
ஈற்றெழுத்துடன் ஒத்துவரும்.

ஹ் ' க: கிம் ' = கஹ் கிம்.

' அ ' தொக்கி நிற்கும்
' இதऽ ' = இதகும்.

## வேதஸ்வரக் குறிகள்

உதாரணம்: मा विद्विषावहै ॥

உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என ஸ்வரங்கள் நான்கு.

। இது உதாத்தம். இக்குறியுள்ள எழுத்துக்களை மேலே தூக்கி உச்சரிக்க வேண்டும்.

— இது அனுதாத்தம். இக்குறியுள்ள எழுத்துக்களைக் கீழே இறக்கி உச்சரிக்க வேண்டும்.

॥ இது ஸ்வரிதம். இவ்விடங்களில் மேலே தூக்கியும் மூன்று மாத்திரை நீட்டியும் உச்சரிக்க வேண்டும்.

மற்ற எழுத்துக்களை ஒரே சீராகத் தூக்காமலும் இறக்காமலும் உச்சரிக்க வேண்டும். அது ப்ரசயம்.

## மற்றக் குறிகள்

உ-ம்.—உதாரணம்
ஒ.—ஒப்பிடுக.
கீ.—ஸ்ரீமத்பகவத்கீதை
பி. சூ.—பிரம்ம சூத்திரம்
ம. பா.—மஹாபாரதம்
பாக.—ஸ்ரீமத் பாகவதம்
ரா. கி.—ஸ்ரீராமகிருஷ்ணர்
சங்.—ஸ்ரீசங்கரர்
ராமானு.—ஸ்ரீராமானுஜர்

ஈச.—ஈசாவாஸ்ய உபநிஷத்து
கே.—கேன உபநிஷத்து
கட.—கட ,,
ப்ர.—ப்ரச்ன ,,
மு.—முண்டக ,,
மா.—மாண்டூக்கிய உபநிஷத்து
தை.—தைத்திரீய ,,
ஐ.—ஐதரேய ,,
சா.—சாந்தோக்கிய ,,
ப்ரு.—ப்ருஹதாரண்யக ,,

ॐ

॥ आत्म-समर्पणम् ॥

स्वरूप-निरूपण-हेतवे

श्रीशिवानन्द-गुरवे नमः ॥

धनु-र्गृही-त्वौपनिषदं महास्त्रं
शरं ह्युपासा-निशितं संधयीत ।
आयम्य तद्भाव-गतेन चेतसा
लक्ष्यं तदेवाक्षरं सोम्य विद्धि ॥

சித்தம் அழகியவனே! உபநிஷத்திலுள்ள மஹா அஸ்திர மாகிய (ஓங்கார) வில்லை எடுத்து, உபாஸனையால் கூர்மைபெற்ற (ஜீவனாகிய) அம்பைத்தொடுத்துத் (தியானத்தால்) தன்மயமான சித்தத்தால் அதை இழுத்து, அந்த அக்ஷரப்பிரம்மமாகிய லக்ஷியத்தில் லயமடையச் செலுத்துவாய்.

—(மு. 2. 2. 3)

ॐ

# ॥ मङ्गलाचरणम् ॥

ॐ तत्सत् परमात्मने नमः ॥

ॐ नमो ब्रह्मादिभ्यो ब्रह्मविद्या-संप्रदाय-कर्तृभ्यो वंश-ऋषिभ्यो महद्भ्यो नमो गुरुभ्यः ॥ १ ॥

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तँ ह देव-मात्म-बुद्धि-प्रकाशं मुमुक्षुर्वै शरण-महं प्रपद्ये ॥ २॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம்

## ॥ மங்களாசரணம் ॥

ஓம் தத்ஸத் பரமாத்மனே நம: ॥

ஓம் நமோ ப்ரஹ்மாதிப்ப்யோ, ப்ரஹ்மவித்யா-ஸம்ப்ரதாய-கர்த்ருப்ப்யோ, வம்ஶ-ரிஷிப்ப்யோ, மஹத்ப்ப்யோ, நமோ குருப்ப்ய: ॥ 1 ॥

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்,
யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை ।
தம்ஹ தேவ-மாத்ம-புத்தி-ப்ரகாஶம்,
முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே ॥ 2 ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

---

ஓம்

## மங்களாசரணம்

ஓம் தத்ஸத் பரமாத்மனே நம:

1. ஓம். பிரம்மா முதலாக பிரம்மவித்யாஸம்பிரதாயத்தை அருளிச்செய்தோருக்கும் வம்சரிஷிகளுக்கும் மகான்களாகிய குருக்களுக்கும், நமஸ்காரம்.

2. ஆதியில் பிரம்மாவைப் படைத்து அவனுக்கு வேதங்களைக் கொடுத்தருளியவன் எவனோ, (நமக்குள்ளிருந்து) நமது

புத்தியைப் பிரகாசிக்கச் செய்பவன் எவனோ, அந்த தேவனை மோக்ஷத்தில் விருப்பமுடைய நான் சரணமடைகின்றேன்.

ஓம் ! முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

---

**ஓம் தத் ஸத்**—(ஓம் தத்ஸதிதி நிர்த்தேசோ ப்ரஹ்மணஸ்-த்ரிவித: ஸ்ம்ருத:) ஓம், தத், ஸத் என்று பிரம்மத்திற்கு மூன்று வகையான குறிப்புப் பெயர் கூறப்பட்டுள்ளது. (கீ. 17. 23)

ஓ. (ஓங்காரஶ்சாத ஶப்தஶ்ச த்வாவேதௌ ப்ரஹ்மண: புரா। கண்ட்டம் பித்வா விநிர்யாதௌ தஸ்மான் மாங்களிகாவுபௌ ||) **ஓம்** எனும் சப்தமும் **அத** எனும் சப்தமும் பிரம்மாவின் முகத்தினின்று முதன் முதலில் வெளியாயின. ஆகையால் இவ்விரண்டும் மங்களத்தைத் தருவன.

**ஆத்ம-புத்தி-ப்ரகாஶம்**—ஓ (ய: ந: திய: ப்ரசோதயாத்) எவன் நமது புத்தி சக்திகளைப் பிரகாசிப்பிக்கின்றானோ (காயத்ரி).

**ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:**—(அத்த்யாத்மம், அதிபூதம், அதிதைவம் என (நம்மிடமே தோன்றுவனவும், சூழ்நிலையில் தோன்றுவனவும், தெய்வத்தால் நிகழ்வனவும் ஆகிய முவ்வகைத் துன்பங்களும் அறவே ஒழிந்து முக்காலத்திலும், அமைதியும் இன்பமும் நிலவுக.

ஓ.—ஆழ்க தீயவெல்லாமரன் நாமமே சூழ்க
வையகமுந் துயர் தீர்கவே. —தேவாரம் (சம்பந்தர்)

## ॥ उपनिषन्माहात्म्यम् ॥

श्रीराम उवाच—

ऋग्वेदादि-विभागेन वेदा-श्चत्वार ईरिताः ।
तेषां शाखा ह्यनेकाः स्युस्तासूपनिषद-स्तथा ॥ १ ॥

ऋग्वेदस्य तु शाखाः स्युरेकविंशति-संख्यकाः ।
नवाधिक-शतं शाखा यजुषो मारुतात्मज ॥ २ ॥

## ॥ உபநிஷன்மாஹாத்ம்யம் ॥

ஸ்ரீராம உவாச—

ருக்வேதாதி-விபாகேன வேதாஶ்-சத்வார ஈரிதா: ।
தேஷாம் ஶாகா-ஹ்யனேகா:-ஸ்யுஸ்-தாஸூபநிஷதஸ்-ததா ॥ 1 ॥
ருக்வேதஸ்ய து ஶாகா:ஸ்யு-ரேகவிம்ஶதி ஸங்க்யகா: ।
நவாதிகஶதம் ஶாகா யஜுஷோ மாருதாத்மஜ ॥ 2 ॥

---

## உபநிஷத்-மாஹாத்மியம்

ஸ்ரீராமர் கூறியது—

1. பாகுபாட்டினுல் வேதங்கள் ருக்வேதம் முதலாக நான்கு எனப்படும். அவைகளின் சாகைகள் (கிளைகள்) பல உண்டு; அங்ஙனமே அவற்றுள் உபநிஷதங்களும்.

2. மாருதி புத்ரா! ருக்வேதத்தின் சாகைகள் எண்ணிக்கையில் இருபத்தொன்று. யஜுர்வேதத்தின் சாகைகள் நூற்றெரன்பது.

---

1. "வேதம் எனப்படுவது மனிதர்களுடைய வாக்கன்று. அது உற்பத்தியான காலம் குறிப்பிடப்படவில்லை, குறிப்பிட முடியாது. வேதம் அநாதி. சிருஷ்டி அளவற்றதாயும் அநாதியாயும் இருப்பதுபோல் வேதமும் ஆதியும் அந்தமும் அற்றது. இதன் பகுதிகள் பல ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டவை. ரிஷி என்பவர் 'மந்த்ர-த்ரஷ்டா', மந்திரத்தைப் பார்ப்பவர். மந்த்ரம் அவருடைய கருத்தன்று. வேதத்தின் ஒரு

सहस्र-संख्यया जाता: शाखा: साम्न: परन्तप ।
अथर्वणस्य शाखा: स्यु: पञ्चाशद्भेदतो हरे ॥ ३ ॥

ஸஹஸ்ர-ஸங்க்யயா ஜாதா: ஶாகா: ஸாம்ன: பரந்தப ।
அதர்வணஸ்ய ஶாகா: ஸ்யு:, பஞ்சாஶத்-பேததோ ஹரே ॥ 3 ॥

---

3. எதிரிகளைத் தவிக்கச்செய்வோனே! ஸாமத்தின் சாகைகள் ஆயிரக்கணக்காய் உள்ளன. அதர்வணவேதத்தின் சாகைகள் ஐம்பது பிரிவுகளை உடையன.

---

பகுதி ஒரு ரிஷியிடமிருந்து வந்ததென்று சொன்னால் ஏற்கெனவே இருந்த அந்த உயரிய கருத்தை (மந்த்ரத்தை) அவர் கண்டார் என்பது தான் பொருள்.

"வேதம், கருமகாண்டம், ஞானகாண்டம் என்று இரண்டு பாகம் அடங்கியது. கருமகாண்டம், யக்ஞங்கள், சடங்குகள், கிரியைகள் முதலியன செய்யும் முறைகளையும் வெவ்வேறு நிலையிலுள்ளவர் கடமைகளையுங் கூறும். ஞானகாண்டந்தான் உபநிஷத்து, வேதாந்தம், வேதத்தின் சாரம், வேதத்தின் முடிவான நோக்கம்."

—விவேகானந்தர்—இந்தியப் பிரசங்கங்கள்.

**வேதத்தின் சாகைகள் (பிரிவுகள்)**—ஒரு சாகை ஒருவன் எவ்வளவு அத்தியயனம் செய்யமுடியுமோ அவ்வளவு. அதில் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள கர்மாக்களுக்கு வேண்டிய விஷயங்களெல்லாம் அடங்கியிருக்கும். வியாஸர் நாலுவேதத்தையும் பிரித்தபோது மொத்தம் 1180 சாகைகளாகச் செய்தார் என்பர். ஒரு சாகையையாவது செவ்வையாக அத்தியயனம் செய்யாதவன் வேதியனாகான் என்பது முந்தைய கட்டுப்பாடு. தற்காலத்தில் அங்ஙனம் வழக்கிலுள்ள சாகைகள் மிகக் குறைந்துவிட்டன. ருக்கில், ஐதரேய சாகை என்ற ஒன்றுதான் இருக்கிறது. யஜுஸ்ஸில், காண்வசாகை, தைத்திரீயசாகை, மாத்யந்தின சாகை என்ற மூன்று இருக்கின்றன. ஸாமத்தில், கௌதமசாகை, தலவகாரசாகை என்ற இரண்டு தான் இருக்கின்றன. அதர்வத்தில் ஒரு சாகைகூட வழக்கில் இல்லை.

ஒவ்வொரு சாகையிலும் உள்ளது
- கர்மகாண்டம்
  - மந்த்ரம்
  - ப்ராஹ்மணம் (உபாஸனமார்க்கம்)
- ஞானகாண்டம் (உபநிஷத்து)

एकैकस्यास्तु शाखाया एकैकोपनिषन्मता ॥
माण्डूक्य-मेकमेवालं मुमुक्षूणां विमुक्तये ॥
तथाप्यसिद्धं चेज्ज्ञानं दशोपनिषदं पठ ॥ ४ ॥
ईश-केन-कठ-प्रश्न-मुण्ड-माण्डूक्य-तित्तिरि: ।
ऐतरेयं च छान्दोग्यं बृहदारण्यकं तथा ॥ ५ ॥
सर्वोपनिषदां मध्ये सार-मष्टोत्तरं शतम् ।
सकृ-च्छ्रवण-मात्रेण सर्वाघौघ-निकृन्तनम् ॥ ६ ॥

ஏகைகஸ்யாஸ்து ஶாகாயா ஏகைகோபநிஷன்-மதா ॥
மாண்டூக்ய-மேக-மேவாலம் முமுக்ஷூணாம் விமுக்தயே ।
ததாப்-யஸித்தஞ்-சேஜ்-ஜ்ஞானம் தஶோபநிஷதம் பட ॥ 4 ॥
ஈஶ கேன கட ப்ரஶ்ன முண்ட மாண்டூக்ய தித்திரி: ।
ஐதரேயஞ்ச சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம் ததா ॥ 5 ॥
ஸர்வோபநிஷதாம் மத்த்யே, ஸார-மஷ்டோத்தரம் ஶதம் ।
ஸக்ருச் ச்ரவண-மாத்ரேண ஸர்வாகௌக-நிக்ருந்தனம் ॥ 6 ॥

---

4–5. ஒவ்வொரு சாகையிலும் ஒவ்வொரு உபநிஷத்து உண்டு. முமுக்ஷுக்களின் விடுதலைக்கு மாண்டூக்கியமொன்றே போதும். அப்படி ஞானம் சித்தியாவிடின் பத்து உபநிஷத்துக்களைப்படி ;—அவை ஈசம், கேனம், கடம், பிரச்னம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருஹதாரணியகம் என்பனவாம்.

6. உபநிஷத்துக்கள் அனைத்துள்ளும் ஸாரமானவை நூற்றெட்டு. ஒரு தடவை சிரவணம் செய்த மாத்திரத்தில் எல்லாப் பாவக்கூட்டங்களையும் அவை நாசம் செய்வன.

---

உபநிஷத்து வேதத்தின் கடைப்பாகமாதலால் வேதாந்தம் எனப்படும். வேதத்தின் முக்கியப்பொருளடங்கியதால் இது வேதசிரசு, சுருதி சிரசு எனவுங் கூறப்படும்.

உப (சமீபம்)—ஆசாரியனுடைய சமீபத்தில் சென்று அவரிடம் பெறும் உபதேசம்; நி (நிச்சயம்)—நிச்சயமாக; ஸத் (ஸாதயதி)—களைகிறது; துன்பத்தைக் களைந்து பேரின்பத்தைக் கூட்டுவிக்கிறது: இதனால் வேதத்தின் கடைப்பாகம் 'உபநிஷத்து' எனப் பெயர் பெற்றது.

मयोपदिष्टं शिष्याय तुभ्यं पवन-नन्दन ।
इद-मष्टोत्तर-शतं न देयं यस्य कस्यचित् ॥ ७ ॥

सेवापराय शिष्याय हित-पुष्टाय मारुते ।
मद्भक्ताय सुशीलाय कुलीनाय सुमेधसे ॥ ८ ॥

सम्यक् परीक्ष्य दातव्य-मेवमष्टोत्तरं शतम् ।
यः पठेच्छृणुयाद्वापि स मामेति न संशयः ॥ ९ ॥

(मुक्तिकोपनिषत्)

மயோபதிஷ்டம் ஶிஷ்யாய துப்ப்யம் பவனநந்தன ।
இத-மஷ்டோத்தர-ஶதம் ந தேயம் யஸ்யகஸ்யசித் ॥ 7 ॥

ஸேவாபராய ஶிஷ்யாய ஹித-புஷ்டாய மாருதே ।
மத்பக்தாய ஸுஶீலாய குலீநாய ஸுமேதஸே ॥ 8 ॥

ஸம்யக் பரீக்ஷ்ய தாதவ்ய-மேவ-மஷ்டோத்தரம் ஶதம் ।
ய: படேச்-ச்ருணுயாத் வாபி ஸ மாமேதி ந ஸம்ஶய: 9 ॥

(முக்திகோபநிஷத்)

---

7. பவனநந்தன! இந் நூற்றெட்டும் சிஷ்யனாகிய உனக்கு என்னால் உபதேசிக்கப்பட்டது; (ஆராயாமல்) எவருக்கேனும் இதைக் கொடுத்துவிடக் கூடாது.

8-9. மாருதியே! சேவையையே மேலாகக் கொண்டவனும், பிறர் நன்மையில் நாட்டம் நிறைந்தவனும், என்னிடம் பக்தி உள்ளவனும், நல்ல குணம் உடையவனும், நல்ல குலமுடையவனும், நல்ல புத்தியுடையவனும் ஆகிய சிஷ்யனுக்( நன்கு பரீக்ஷித்தே இந்நூற்றெட்டையும் கொடுக்க வேண்டு( (இவற்றை) எவன் படிக்கின்றானோ அல்லது சிரவணம் செய்கிற. றானோ அவன் என்னை அடைகின்றான். இதில் சந்தேகமில்லை.

(முக்திகோபநிஷத்து)

## வேதத்தின் பாகுபாடு

| வேதங்களும் அவற்றின் அளவும், ரிஷிகளும் | சாகைகள்: விஷ்ணு புராணக் கணக்கின் படி | சாகைகள்: புஸ்தகங்களில் உள்ளவை | சாகைகள்: அனுஷ்டானத்தில் உள்ளவைகளும் அவற்றின் ஸூத்திரக்காரர்களும் | மந்திர பாகத்தின் பெயர் | பிராம்மண பாகத்தின் பெயர் | உபநிஷத் பாகம் |
|---|---|---|---|---|---|---|
| 1. ருக்வேதம் (10170 ருக்) ரிஷி பைலர் | 21 | 3 | 1. —ஐதரேய சாகை (ஆசுவலாயனர்) | ருக்வேத ஸம்ஹிதை | 4—கௌஷீதகி, ஐதரேய, பைங்கி, ஸத்யாயன | 2—ஐதரேய; கௌஷீதகீ |
| 2. யஜுர் வேதம் (ருக் வேதத்தில் $^2/_3$ பங்கு அளவுள்ளது) ரிஷி வைசம்பாயனர் | (i) சுக்ல யஜுஸ் 15 | — | 2. —காண்வ சாகை, மாத்த்யந்தின சாகை (ரிஷி காத்யாயனர்) | வாஜஸநேயி ஸம்ஹிதை | 1—சதபத | 3—ஜாபால, ஈசாவாஸ்ய, பிருஹதாரணியக |
| | (ii) கிருஷ்ண யஜுஸ் 94 | 3 | 1. —தைத்திரீய சாகை (ஆபஸ்தம்பர், போதாயனர், வைகாநஸர், ஸத்யாஷாடர், பாரத்வாஜர், அக்னிவேசர்) | தைத்திரீயஸம்ஹிதை | 4—தைத்திரீய, வல்லபி, ஸத்யாயனி, மைத்ராயனி. | 5—கட; கைவல்ய; ச்வேதாச்வதர; தைத்திரீய; நாராயண. |
| 3. ஸாமவேதம் (ருக் வேதத்தில் பாதியளவு) ரிஷி ஜைமினி | 1000 | 7 | 2. —கௌதம சாகை (த்ராஹ்யாயனர்), தலவகார சாகை (ஜைமினி) | ஸாம வேத ஸம்ஹிதை | 8—சாந்தோக்யம், மந்த்ரம், ஆர்ஷேயம், வம்சம், தைவதாத்த்யாயம், தலவகார, தாண்ட்ய, ஸம்ஹிதோபநிஷத் பிராம்மணம் | 2—சாந்தோக்கிய, கேன (தலவகாரப் பிராம்மணத்தில் அடக்கம்) |
| 4. அதர்வ வேதம் (ருக் வேதத்தில் பாதியளவு) ரிஷி ஸுமந்து | 50 | 1 | ...... | அதர்வ வேத ஸம்ஹிதை | 1. கோபத | 4—பிரச்ன; முண்டக; மாண்டுக்கிய; நிருஸிம்ஹதாபினீ. |
| மொத்தம் | 1180 | 14 | 6 ... | 5 | 18 | 16 * |

* ஸ்ரீ சங்கராச்சார்யார் இப்பதினாறு உபநிஷத்துக்களை முக்கியமாய்க் குறிப்பிடுகிறார். அவற்றில் பத்துக்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். அப்பத்துமே இப்புஸ்தகத்தில் ஆராயப்படுவன.

## ॥ ईशावास्योपनिषत् ॥

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ॐ ईशावास्यमिदꣳ सर्वं यत्किंच जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥ १ ॥

## ॥ ஈஶாவாஸ்யோபநிஷத் ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ண-மாதாய பூர்ண-மேவாவஶிஷ்யதே ॥
ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

ஓம் ஈஶாவாஸ்ய-மித௩ ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாஞ் ஜகத் ।
தேன த்யக்தேன புஞ்ஜீதா மாக்ருத: கஸ்யஸ்வித்-தனம் ॥ 1 ॥

## ஈசாவாஸ்யோபநிஷத்து

ஓம். அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாயுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே எஞ்சி நிற்கின்றது.

ஓம். மூவ்வகையிலும் சாந்தி நிலவுக!

1. ஓம். (தோன்றி மறையும்) இவ்வுலகில் தோன்றி மறைவதாயுள்ளது எது உண்டோ அது அனைத்தும் ஈசனால் வியாபிக்கப்பட்டதாக (காண) வேண்டும். (ஈசுவர பாவனையால் ஏற்பட்ட) அந்த தியாகத்தால் உன்னை ரக்ஷித்துக்கொள்—(உயிரை ரக்ஷிப்பதற்கு மட்டும் அவசியமான பொருளை ஈசுவரன் கொடுத்ததென ஏற்றுக்கொண்டு வாழ்வாயாக). எவருடைய பொருளுக்கும் பேராசைப் படாதே.

---

உபநிஷத்தின் பெயருந் தொடர்பும்—'ஈசாவாஸ்யம்' என்னும் சொல்லில் ஆரம்பிப்பதால் இவ்வுபநிஷத்து 'ஈசாவாஸ்ய உபநிஷத்து' என்றும் 'ஈசோபநிஷத்து' என்றும் சாதாரணமாய் வழங்கும். இது சுக்ல யஜுர்வேதம் வாஜஸநேய ஸம்ஹிதையில் நாற்பதாவது அத்தியாயம்; இக்காரணத்தால் இதை 'சுக்லயஜுர்வேதீய ஸம்ஹிதோப

कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँ समाः ।
एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥ २ ॥

குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் ஶதஂ ஸமா: ।
ஏவம் த்வயி நான்யதேதோऽஸ்தி ந கர்ம லிப்யதே நரே ॥ 2 ॥

2. (மனித வாழ்வை இவ்வுலகில் விரும்புபவன்) விதித்த கருமங்களைச் செய்து கொண்டே நூறாண்டு வாழ விரும்பட்டும். மானிடனே! இதுவே உனக்கு வழி. (எவ்வழியில்) கருமப்பற்றுத் தொடராதோ (அதற்கு) இதை விட வேறு வழியில்லை.

நிஷத்து' என்றும் 'வாஜஸநேயி ஸம்ஹிதோபநிஷத்து' என்றும் கூறுவதுண்டு.

இந்த உபநிஷத்தின் ரிஷி 'தத்யங் ஆதர்வணர்'. கிருஹஸ்தாசிரமத்திலிருக்கும் தன்னுடைய புத்திரன் ஆசைகள் அடங்கினவனாயும் நியமங்களுடன் கூடினவனாயும் மோக்ஷ இச்சை உள்ளவனாயும், தன்னைச் சரணடைந்தவனாயும் இருப்பது கண்டு அவனுக்கு உபதேசம் செய்கிறார்.

சாந்தி பாடம்—(அத:) அது—பிரம்மம்; (இதம்) இது—உலகம். 'பூர்ணமாகிய உலகைக் காட்டிலும் பூர்ணமான பிரம்மம் சிரேஷ்டமானது. பூர்ணமாகிய உலகுக்குப் பூர்ணமாகிய பிரம்மபாவனையை அறிந்தால் பிரம்மமே எஞ்சி நிற்கின்றது' என்றும் பொருள் கொள்ளலாம்.

பூர்ணமே எஞ்சி நிற்கிறது—ஒரு பொருளினின்று ஒரு பகுதியை வேறு படுத்தினால் எஞ்சி நிற்பது முழுமையிழந்து ஒரு பகுதியாகத்தான் நிற்கும் என்பது கணித சித்தாந்தம். ஆனால் பரம்பொருள் இந்தக் கணித நூல் நியதிக்கு அடங்காது. (உபநிஷதப்பலகணி—ராஜாஜி).

1. ஈசாவாஸ்யம்—ஈசுவரன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருத்தலால் பொய்யான உலகும் மெய்போன்ற தோற்றமுடையதாயிற்று (பூர்ணம் இதம்). (தேன த்யக்தேன) அந்த தியாகத்தால்—அவனன்றி உலகில்லை என்று தள்ளுவதே தியாகம். (கஸ்ய ஸ்வித்தனம்) எவருடைய பொருளுக்கும்—(கஸ்யசித் பரஸ்ய ஸ்வஸ்ய வா) பிறருடைய தாயினும் தன்னுடையதேயாயினும், பொருளுடைமை பொய்யுடைமை என்று பற்றை அறவே ஒழிக்க.

ஒ—எல்லாப் பொருள்களிலும் ஸமமாக நிலைபெற்றுள்ளவனும், அழியும் பொருள்களில் அழியாமலுள்ளவனும் ஆகிய பரமேசுவரனை எவன் பார்க்கின்றானோ அவனே பார்க்கின்றான். (கீ. 13. 27)

ஒ—தத்ததேனைவ புஞ்ஜீதா அதோ நான்யம் ப்ரயாசயேத்) அவன் கொடுத்ததைக் கொண்டு திருப்தியடைவாய்; பிறரிடம் யாசிக்கக் கூடாது. (பிரம்மாண்ட புராணம்.)

2-3. முதல் மந்திரத்தில் கூறியது ஞான நிஷ்டை (நிவிருத்தி

असुर्या नाम ते लोका अन्धेन तमसाऽवृताः ।
ताँस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥ 3 ॥

அஸுர்யா நாம தே லோகா அந்த்தேன தமஸாऽவ்ருதா: ।
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யே கே சாத்மஹனோ ஜனா: ॥ 3 ॥

---

3. எவர்கள் ஆத்மஹத்தி செய்கிறவர்களோ அவர்கள் இறந்த பின் செல்லும் உலகங்கள் காரிருள் கவிழ்ந்த அசுர உலகங்களேயாம்.

---

மார்க்கம்), இரண்டாவதில் பற்று நீங்கிய கர்ம நிஷ்டை (பிரவிருத்தி மார்க்கம்). இவ்விரண்டு வழியினின்றுந் தவறியவர்களின் விஷயம் மூன்றுவது மந்திரத்தில் குறிக்கப்படுவது. இவர்கள் அஜ்ஞானமாகிய இருளில் ஆழ்பவர்கள், அசுர சுபாவ முடையவர்கள், தம்மைத் தாமேயறியாமல் இறப்பதால் தற்கொலை செய்து கொண்டவர்களுக் கொப்பான வர்கள்.

ஒ—(லோகேऽஸ்மின் த்விவிதா நிஷ்ட்டா புரா ப்ரோக்தா) இவ்வுலகில் இருவகையான நிஷ்டை ஆதியில் கூறப்பட்டது (கீ. 3. 3.)

ஒ—(நியமாச்ச) ஞானத்துடன் கர்மஞ் செய்ய வேண்டுமென்ற நியமத்தாலும். (பி. சூ. 3. 4. 7.)

ஜிஜீவிஷேத் (வாழ விரும்பட்டும்)—ஞான நிஷ்டனோ வெனில் சாவையும் வெறுக்கான், வாழ்வையும் விரும்பான்: (ந ஜீவிதே மரணே வா க்ருதிங் குர்வீத.)

ஞானசித்தி எய்துவதற்கு முன் எவருங் கருமத்தை முற்றுந் துறக்க இயலாது. காய் காய்த்தவுடன் பூ உதிர்ந்து போவது போல் ஞானசித்தி ஏற்பட்டதும் கருமம் நழுவிப் போகும். அப்போது ஸந்தியாவந்தனம் காயத்ரியிலும், காயத்ரி பிரணவ ஜபத்திலும், பிரணவம் ஸமாதியிலும், மணியின் நாதம் போல் போகப் போக ஒடுங்கும். (ரா. கி.)

ஆதமஹன: (ஆத்மஹத்தி செய்தவர்கள்)—இறந்து போனவனிடத்தில் உயிருக்கு அடையாளமான உணர்ச்சி காணப்படாதது போல், அஜ்ஞானியிடம் ஆத்மா இருக்கும் அடையாளமே செயலில் காணப் படவில்லை.

அசுரர்—(கீதையில் தெய்வாசுரஸம்பத் விபாகயோகம் பார்க்க).

" இரக்க மென்றொரு பொருளிலாத நெஞ்சினர்
அரக்கரென்றுளர் சிலர் அறத்தினீங்கினர் " —கம்பர்

अनेजदेकं मनसो जवीयो नैनद्देवा आप्नुवन् पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्या-नत्येति तिष्ठ-त्तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥ ४ ॥
तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥ ५ ॥

அனேஜ-தேகம் மனஸோ ஜவீயோ நைனத்-தேவா
ஆப்னுவன் பூர்வமர்ஷத் ।
தத்தாவதோ ऽன்யா-னத்யேதி திஷ்ட்டத்-தஸ்மின்னபோ
மாதரிஶ்வா ததாதி ॥ 4 ॥

ததேஜதி தந்நைஜதி, தத்தூரே தத்வந்திகே ।
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய, தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: ॥ 5 ॥

---

4. (ஆத்மா) அசைவற்றது, ஒன்ருயிருப்பது, மனதைவிட வேகமுள்ளது. (மனேவேகத்தைத் தாண்டிச்) சென்றுவிட்டதால் முன்னமேயே (இந்திரியங்களில் அதிஷ்டானமான) தேவர்கள் இதை அடையவில்லை. அது நிலையாக நின்றுகொண்டே தாவிச் செல்லும் மற்றவைகளைத் தாண்டுகிறது. அதனிடம் (இருப்பி ஞலேயே) வாயுதேவன் எல்லா இயக்கங்களையும் தாங்குகிருன்.

5. அது அசைவுள்ளது; (எனினும்) அசைவதில்லை; அது தூரத்திலுள்ளது; (எனினும்) ஸமீபத்திலுள்ளது; அது அனைத் திற்கும் உள்ளே இருப்பது; (எனினும்) அனைத்திற்கும் அப்பால் உள்ளது.

---

(மனஸ: ஜவீய:) மனதைவிட வேகமுள்ளது—மனது எங்கு சென்ருலும் அதற்கு முன்னமே போய் விட்டாற்போல் அங்கும் ஆத்மஸ்வ ரூபம் பிரகாசித்துக் கொண்டிருத்தலால்.

அதனிடம் இருப்பிஞலேயே—ஒ. (பீஷாஸ்மாத் வாத: பவதே) பரமாத்மாவினிடத்தில் பயத்திஞலேயே காற்று வீசுகிறது. (தை. 2. 8. 1)

5. ஒ—இந்திரியங்களனைத்தின் செயலாலுந் துலங்குவதாயினும் இந்திரியங்களனைத்து மிலாததாயும், பற்றற்றதாயினும் அனைத்தையும் பற்றித்தாங்குவதாயும், குணங்களற்றதாயினும் குணங்களை யனுபவிப்ப தாயும்; அது பொருள்களுக்கு வெளியாகவும் உள்ளாகவும், அசையும் பொருளாகவும் அசையாப் பொருளாகவும், சூக்ஷ்மத்தன்மையால் அறிதற்கு முடியாததாயும் உளது; அது தூரத்திலுள்ளதாயினும் அரு கிலேயுள்ளது. (கீ. 13. 14-15)

यस्तु सर्वाणि भूता-न्यात्मन्येवानु-पश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥ ६ ॥
यस्मिन् सर्वाणि भूता-न्यात्मैवाभू-द्विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्व-मनुपश्यतः ॥ ७ ॥
स पर्यगा-च्छुक्र-मकाय-मव्रण-मस्नाविरꣳ शुद्ध-मपापविद्धम् ।
कवि-र्मनीषी परिभूः स्वयंभू-र्याथातथ्यतोऽर्थान् व्यदधा-
च्छाश्वतीभ्यः समाभ्यः ॥ ८ ॥

யஸ்து ஸர்வாணி பூதான்-யாத்மன்-யேவானுபஸ்யதி ।
ஸர்வபூதேஷு சாத்மானம், ததோ ந விஜுகுப்ஸதே ॥ 6 ॥
யஸ்மின் ஸர்வாணி பூதான்-யாத்மைவாபூத் விஜானத: ।
தத்ர கோ மோஹ: க: ஶோக ஏகத்வ-மனுபஶ்யத: ॥ 7 ॥
ஸ பர்யகாச் சுக்ர-மகாய-மவ்ரண-மஸ்னாவிரꣳ
ஶுத்த-மபாபவித்தம் ।
கவிர்மனீஷீ பரிபூ: ஸ்வயம்பூர் யாதா தத்யதோ ऽர்த்தான்
வ்யததாச் சாஶ்வதீப்ப்ய: ஸமாப்ப்ய: ॥ 8 ॥

6. எவன் இருப்புள்ள அனைத்தையும் ஆத்மாவினிடத்திலேயே பார்க்கின்றானோ, இருப்புள்ள அனைத்தினிடத்தும் ஆத்மாவைப் பார்க்கின்றானோ, அப்போது எதையும் வெறுப்பதில்லை.

7. எப்போது இருப்புள்ள அனைத்தும் ஆத்மாவாகவே ஆய்விட்டதோ அப்போது ஒற்றுமையைக் கண்ட அவனுக்கு மயக்கமேது, துக்கமேது?

8. அந்த ஆத்மா எங்கும் வியாபித்தவன், பிரகாசமானவன், சரீர மில்லாதவன், புண்படாதவன், நாடிகளில்லாதவன், சுத்தமானவன், பாவமற்றவன், எல்லாமறிந்தவன், மனதை ஆள்பவன், அனைத்தையுங் கடந்தவன், தானே உண்டானவன்; சாசுவதமான ஆண்டுகளுக்கு (படைப்பவர்களுக்கு) உள்ளது உள்ளபடி பதார்த்தங்களை (அவனே) வகுத்துக் கொடுத்தான்.

6-7. எவன் துன்பத்திலும் இன்பத்திலும் ஸமமானவனோ தன்னிடம் நிலைத்தவனோ, ஓடு கல் பொன் இவற்றைச் சமமாய்ப் பாவிப்பவனோ,

अन्धं तमः प्रविशन्ति येऽविद्यामुपासते ।
ततो भूय इव ते तमो य उ विद्यायाँ रताः ॥ ९ ॥
अन्यदेवाहु-र्विद्ययाऽन्यदाहु-रविद्यया ।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥ 10 ॥

அந்த்தந் தம: ப்ரவிஶந்தி யே ऽவித்யாமுபாஸதே ।
ததோ பூய இவ தே தமோ ய உ வித்யாயாஂ ரதா: ॥ 9 ॥
அன்யதேவாஹுர்-வித்யயா ऽன்யதாஹு-ரவித்யயா ।
இதி ஶுஶ்ரும தீராணாம் யே நஸ்-தத் விசசக்ஷிரே ॥ 10 ॥

9. எவர்கள் (கர்மமாகிய) அவித்தையை (மட்டும்) உபாசிக்கிறார்களோ அவர்கள் (ஸம்ஸாரமாகிய) காரிருளில் புகுகின்றனர்; எவர்கள் (தேவதைகளின் உபாசனையாகிய வித்தையில் (மட்டும்) ஆசைவைத்தவர்களோ அவர்கள் இன்னும் அதிகமான இருளில் புகுகின்றவர்களைப் போல்வர்.

10. வித்தையால் (பெறப்படுவது) வேறு, அவித்தையால் (பெறப்படுவது) வேறு என்று நமக்கு உண்மையை விளக்கிய தீரர்களிடமிருந்து நாம் கேட்டிருக்கிறோம்.

விருப்பையும் வெறுப்பையும் ஒன்றாய்க் கருதுபவனோ, திடச்சித்த முடையவனோ, தன்னை இகழ்வதையும் புகழ்வதையும் ஒன்றாய்க்கொண்டவனோ; மானத்திலும் அவமானத்திலும் ஸமபாவனை யுடையவனோ, மித்திரனிடமும் சத்துருவிடமும் ஸமமானவனோ, ஆசைவாய்ப்பட்டு ஆரம்பிக்கும் எல்லாக் கருமங்களையும் விட்டவனோ அவன் குணாதீதன் என்று சொல்லப்படுகிறான். (கீ. 14. 24-25).

உ-ம். சுகர், ஜடபரதர் முதலியவர்கள்.

9-10. வித்தையும் அவித்தையும்—'அவித்யா கர்மஸம்ஜ்ஞா') அவித்தை என்பது கருமத்தைக் குறிக்கும்—(விஷ்ணுபுராணம் 6வது அம்சம்.)

ஒ—(வித்யயா தேவலோக:) வித்தையால் தேவலோகம். (கர்மணா பித்ருலோக:) அவித்யா கருமத்தால் பித்ருலோகம். (ப்ரு. உப. 1. 5. 16). வித்தை—தேவதைகளின் உபாஸனை. அவித்தை—காம்யகர்மங்கள்.

ஒ—அவித்யாயாம் பஹுதா வர்த்தமானா: வயம் க்ருதார்த்தா இத்யபிமன்யந்தி பாலா: (மு. உப. 1. 9).

அதிகமான இருளில் புகுகின்றவர்கள்—எவர்கள் செய்ய வேண்டிய கருமங்களை விட்டு தேவதைகளைப் பற்றிய உபாஸனா ஞானத்

विद्यां चाविद्यां च यस्तद्वेदोभयँ सह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययामृत-मश्नुते ॥ ११ ॥
अन्धं तमः प्रविशन्ति येऽसंभूति-मुपासते ।
ततो भूय इव ते तमो य उ संभूत्याँ रताः ॥ १२ ॥

வித்யாஞ்சாவித்யாஞ்ச யஸ்-தத்-வேதோபயँ ஸஹ ।
அவித்யயா ம்ருத்யுந் தீர்த்வா வித்யயாம்ருத-மஶ்நுதே ॥ 11 ॥
அந்தந் தம: ப்ரவிஶந்தி யேऽஸம்பூதி-முபாஸதே ।
ததோ பூய இவ தே தமோ ய உ ஸம்பூத்யாँ ரதா: ॥ 12 ॥

---

11. எவன் வித்தையையும் அவித்தையையும், இரண்டையும், ஒன்ருகக்கூட்டி அறிகிருனே அவன் அவித்தையினுல் சாவைத் தாண்டி வித்தையினுல் சாகாத்தன்மையை எய்துகிருன்.

12. எவர்கள் 'அஸம்பூதி'யை உபாசிக்கிருர்களோ அவர்கள் காரிருளில் புகுகின்றனர்; எவர்கள் 'ஸம்பூதி'யில் ஆசை

---

திலேயே ஆசை வைத்தவர்களோ அவர்கள். (கர்ம ஹித்வா தேவதா ஜ்ஞானே ஏவ ரதா:)

அன்யத்—இவ்விரண்டு மார்க்கங்களும் வெவ்வேறு பலனையளிப்பவை; ஆத்ம ஞானத்தினின்றும் முற்றும் வேறு பட்டவை.

ஒ—நித்தியமாய், நின்மலமாய், நிட்களமாய், நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய நிறைச்
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமாய், ஆனந்தமயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற வொன்றைச் சுகாரம்பப்
பெருவெளியைச் சிந்தை செய்வாம். —(தாயுமானவர்)

11. அவித்யா கருமமாயினும் பல தேவதைகளின் உபாஸனையாயினும் பரமாத்மாவுக்கே அர்ப்பணம் எனக்கருதிச் செய்யப்படுமாயின், செய்பவன் தேவதைகளின் பிரஸாதத்தால் படிப்படியாக உயர்ந்து முடிவில் முக்தி எய்துதற்குரியவனுகிருன்.

ஒ—(அநித்யைர் த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம்) 'அநித்தியமான பொருள்களைக் கொண்டு நான் நித்தியத்தை யடைந்துள்ளேன்'. (கட. 2. 10) என்று யமன் நசிகேதனிடம் சொன்னதைக் கவனிக்க.

अन्यदेवाहुः संभवा-दन्यदाहु-रसंभवात् ।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥ १३ ॥
संभूतिं च विनाशं च यस्तद्वेदोभयं सह ।
विनाशेन मृत्युं तीर्त्वा ऽसंभूत्याऽमृत-मश्नुते ॥ १४ ॥

அன்யதேவாஹு: ஸம்பவா-தன்யதாஹு-ரஸம்பவாத் ।
இதி ஶுஶ்ரும தீராணும் யே நஸ்-தத்-விசசக்ஷிரே ॥ 13 ॥

ஸம்பூதிஞ் ச விநாஶஞ் ச யஸ்-தத்-வேதோபய ஸஹ ।
விநாஶேந ம்ருத்யும் தீர்த்வா (அ)ஸம்பூத்யாऽம்ருத-மஶ்நுதே॥14॥

---

வைத்தவர்களோ அவர்கள் இன்னும் அதிகமான இருளில் புகுகின்றவர்கள் போல்வர்.

13. 'ஸம்பவத்'தால் (பெறப்படுவது) வேறு, 'அஸம்பவத்'தால் (பெறப்படுவது) வேறு என்று நமக்கு உண்மையை விளக்கிய தீரர்களிடமிருந்து நாம் கேட்டிருக்கிறோம்.

14. எவன் (அ)ஸம்பூதியையும் (விநாஶஞ்ச) ஸம்பூதியையும், இரண்டையும் ஒன்றாகக்கூட்டி அறிகிறானோ அவன் (விநாஶேன) ஸம்பூதியால் சாவைத்தாண்டி, அஸம்பூதியால் சாகாத்தன்மையை எய்துகிறான்.

---

ஒ—(ஸ யோऽத ஏகைக-முபாஸ்தே ந ஸ வேத) எவனொருவன் தனித்தனியாக உபாசிக்கின்றானோ அவன் அறிந்தவனல்லன். (ப்ரு. 1. 4. 7.)

14. 'ஸம்பூதிஞ்ச—கருத்தை நோக்கி, இந்த மந்திரத்தின் ஆரம்பத்தில் 'அ' எனும் அக்ஷரம் குறைந்திருக்கிறதென்று கொள்ள வேண்டியது (சங்.)

அஸம்பூதி—காரணப்பிரம்மம், அவ்யாக்ருதி, பிரகிருதி.

அஸம்பவம்—அஸம்பூதியின் உபாஸனை.

ஸம்பூதி—விநாஶம், காரியப்பிரம்மம், வ்யாகிருதி, ஹிரண்யகர்ப்பன்

ஸம்பவம்—ஸம்பூதியின் உபாஸனை. (சங்.)

ஸம்பூதி—ஸமாதிரூபமான பிரம்மானுபவம்.

அஸம்பூதி—ஸமாதிக்குத் தடையாயுள்ள கோபம் முதலிய கெட்ட குணங்களினின்று விடுபடுதல். (கூரநாராயணர்)

हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।
तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥ १५ ॥
पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य व्यूह
रश्मीन् समूह ।
तेजो यत्ते रूपं कल्याण-तमं तत्ते पश्यामि
योऽसावसौ पुरुषः सोऽहमस्मि ॥ १६ ॥

ஹிரண்மயேன பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம் முகம் ।
தத் த்வம் பூஷன்-னபாவ்ருணு ஸத்யதர்மாய த்ருஷ்டயே ॥ 15 ॥
பூஷன்-னேகர்ஷே யம ஸூர்ய ப்ராஜாபத்ய
வ்யூஹ ரஶ்மீன் ஸமூஹ ।
தேஜோ யத்தே ரூபம் கல்யாணதமம் தத் தே பஶ்யாமி
யோऽஸாவஸௌ புருஷ: ஸோऽஹமஸ்மி ॥ 16 ॥

---

15. சூரியனே! பொன்மயமான வட்டிலால் ஸத்தியத்தின் முகம் மறைக்கப்பட்டுள்ளது. ஸத்தியத்தை நாடும் என்னுடைய பார்வைக்கு நீ அந்த மறைப்பை நீக்கியருள்வாயாக!

16. உலகை உயிர்ப்பித்துக்காப்பவனே! தனிவெளியில் சஞ்சரிப்பவனே! அனைத்தையும் அடக்கியாள்வோனே! சூரியனே! பிரம்மபுத்திரனே! உன் கிரணங்களைச் சுருக்கி உன் ஒளியை உள்ளே வாங்கிக்கொள். உன்னுடைய உத்தமமான மங்கள வடிவம் எதுவோ அதை நான் பார்க்கும்படி அருள்வாய். இந்த (சூரிய மண்டலத்திலுறையும்) புருஷன் எவனோ அவனே நான்.

---

15. சூரியவொளி தன்னுள்ளுறையும் பரம புருஷனைக் காணவொட்டாது மறைப்பது போல், ஜீவனுடைய அறிவை உலகப்பகட்டு மறைக்கின்றது.

16. ஒ—(ஸயஶ்சாயம்புருஷே । யஶ்சாஸாவாதித்யே । ஸ ஏக:) எவன் இந்த ஜீவனுக்குள் உறைகின்றானோ அவனும், எவன் சூரியனிடத்தில் உள்ளவனோ அவனும் ஒருவனே. (ஸூஷ்டு ஈரயதீதி ஸூர்ய:)

ஒ—' சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலகு திவ்ய தேஜோ மயத்தை ' (தாயுமானவர்.)

' ஸோऽஹமஸ்மி ' என்னும் மஹாவாக்கியம் இங்கு உபதேசிக்கப் படுகிறது.

वायु-रनिल-ममृत-मथेदं भस्मान्तꣳ शरीरम् ।
ओं क्रतो स्मर कृतꣳ स्मर क्रतो स्मर कृतꣳ स्मर ॥ १७ ॥

வாயு-ரனில-மம்ருத-மதேதம் பஸ்மாந்தꣳ ஶரீரம் ।
ஓம் க்ரதோ ஸ்மர, க்ருதꣳ ஸ்மர, க்ரதோ ஸ்மர, க்ருதꣳ ஸ்மர ॥17॥

17. மூச்சுக்காற்று அழிவில்லாத வாயுவை (அடையட்டும்); பிறகு இந்த உடல் சாம்பலாக முடியட்டும். ஓங்கார ஸ்வரூபியும் ஸங்கல்பஸ்வரூபியும் அக்னிஸ்வரூபியுமான பகவானே! (என்னை) நினைப்பீர், (என்னால்) செய்யப்பட்டதை நினைப்பீர். ஸங்கல்ப ரூபியும் அக்னிஸ்வரூபியுமான பகவானே! (என்னை) நினைப்பீர், (என்னால்) செய்யப்பட்டதை நினைப்பீர்.

17-18. இவ்விரண்டு மந்திரங்களும் மரணசமயத்தில் சொல்லத் தக்கவை.

(ஸர்வோபாய-விநிர்முக்தம் க்ஷேத்ரஜ்ஞும் ப்ரஹ்மணி ந்யஸேத் ।
ஏதஜ்-ஜ்ஞானஞ்ச யோகஶ்ச ஶேஷோऽன்யோ க்ரந்த-விஸ்தர: ॥)

"மற்ற உபாயம் அனைத்தினின்று விடுபட்ட ஜீவனைப் பிரம்மத்தினிடம் வைத்துவிடவேண்டியது. இதுவே ஞானமும் யோகமும். ஏனையவை நூல்களின் விரிவேயாம்".

ஸமித்து முதலியவைகளைப் பரிசுத்தப் படுத்தி அக்கினியில் அர்ப்பணம் செய்வதுபோல் ஜீவனை யதார்த்த ஞானத்தால் பரிசுத்தம் செய்து பிரம்மத்தினிடம் சமர்ப்பிக்கவேண்டும். இவ்வுபநிஷத்தில் முதல் எட்டு மந்திரங்களில் சொல்லிய விஷயம் கீதை முதல் ஆறு அத்தியாயங்களிலும் பின் எட்டு மந்திரங்களில் சொல்லிய விஷயம் நடு ஆறு அத்தியாயங்களிலும், முடிவில் இரண்டு மந்திரங்களில் சொல்லிய விஷயம் கடை ஆறுஅத்தியாயங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளன. (கூரநாராயணர்)

ஓம்: (ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம) ஓம் எனும் பிரம்ம வாசகமாகிய ஓரெழுத்தை உச்சரித்துக்கொண்டு என்னை முறைப்படி சிந்தித்தவனாய் உடலை விட்டு எவன் செல்லுகின்றானோ, அவன் உயர்ந்த கதியை அடைகின்றான். (கீ. 8. 13.)

ஒ—(ததஸ்-தம் ம்ரியமாணந்து காஷ்ட-பாஷாண-ஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம் ॥)

கட்டையுடனும் மண்ணுடனும் ஒன்றாகி (சரீரம்) மடிந்து போகும் போது என் பக்தனை நான் நினைக்கின்றேன். (மேன்மையான கதிக்கு அழைத்துச் செல்கின்றேன்: (வராஹ புராணம்).

ஒ—'எய்ப்பென்னை வந்து நலியும் போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன், அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்.'

अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान् ।
युयो-ध्यस्म-ज्जुहुराण-मेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ॥ १८ ॥
ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्ण-मुदच्यते ।
पूर्णस्य पूर्ण-मादाय पूर्णमेवावशिष्यते ॥

ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ इति ईशावास्योपनिषत्समाप्ता ॥

அக்னே நய ஸுபதா ராயே அஸ்மான் விஶ்வானி
தேவ வயுனானி வித்வான் ।
யுயோத்த்-யஸ்மஜ்-ஜுஹுராண-மேனோ பூயிஷ்ட்டாந்தே
நம உக்திம் விதேம ॥ 18 ॥

ஓம் பூர்ணமத : பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

॥ இதி ஈஶாவாஸ்யோபநிஷத் ஸமாப்தா ॥

---

18. அக்னியே! (எங்கள் செயலால் உண்டான) செல்வத்தை யனுபவிப்பதற்கு நல்ல மார்க்கத்தில் எங்களை அழைத்துச் செல்வீர். தேவனே! எல்லா எண்ணங்களையும் நீர் அறிவீர். மறைந்திருந்து கெடுக்கும் பாவத்தை நாசம் செய்வீர். நமஸ்கார வசனங்களை வெகுவாய்ச் சமர்ப்பித்து உம்மைப் பூஜிக்கிறோம்.

ஓம் அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாயுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தை யெடுத்தும் பூர்ணமே எஞ்சி நிற்கின்றது.

முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் ஈசாவாஸ்யோபநிஷத்து முற்றும்

---

இங்குள்ள ஸ்மராமி, நயாமி என்னும் சொற்கள் 17, 18 மந்திரங்களிலுள்ள ஸ்மர, நய என்னும் சொற்களுடன் ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

க்ரதோ—ஒ (அஹம் க்ரது:) நானே க்ரது. (கீ. 9. 16.)

18. அஸ்மான்—(எங்களை) என்னை மட்டுமல்ல, என்னைச் சேர்ந்தவர்களையுங்கூட என்று பன்மையின் கருத்து.

**நம உக்திம்**—(நமஸ்கார வசனங்களை)

ஒ—(நம இத்யேவ வாதின:) நமஸ்காரம் என்பதையே சொல்லுகிற வர்கள் என்று முமுக்ஷுக்களைப் பாரதம் வர்ணிக்கிறது.

ஒ. (தந் நம இத்யுபாஸீத। நம்யந்தேSஸ்மை காமா:।) அதை 'நம:' என்று உபாசித்தால், காமங்கள் இவனை வணங்கி நிற்கும்.

—தை. உப. 3. 10. 4.

**உபநிஷத்தின் விஷயச் சுருக்கம்**—அங்கிங்கெனாதபடி எங்கும் உள்ளவன் ஈசுவரன் என உணர்ந்து, பற்றுகளைத் துறந்து ஈசுவரார்ப் பணமாகக் கடமைகளைச் செய்து வாழ்தலே வாழ்வாங்கு வாழ்வதாம். அதை மறந்து வாழ்வோர் ஆத்மாவைக் கொன்றவர்கள் போல்வர். அவர் கள் வாழ்க்கை நரகத்திற் கொப்பானது. 'எங்கும் நிறைந்திருப்பன் எட்டியும் எட்டாதிருப்பன்' என்றபடி ஆத்மஸ்வரூபம் மனதுக்கும் இந் திரியங்களுக்கும் எட்டாதது. உள், வெளி, பக்கம், தூரம், ஒன்று, பல என்ற வேற்றுமைகளெல்லாம் ஆத்மாவை உணரும்போது ஒழிந்து போகின்றன. அனைத்தையும் ஆத்மாவிலும், ஆத்மாவையே அனைத்தி லும் காண்பவன் எதில் வேற்றுமை காண்பான், எதை வெறுப்பான்? அவனுக்குத் துன்பமேது, மயக்கமேது?

ஆத்மஞான மில்லாத கருமமும் உபாஸனையும் ஸம்ஸார இருளில் அழுத்துமே யன்றி முக்திக்குப் பயன்படாது. அங்ஙனமே மூலப் பிரகிருதியை உபாஸித்தலும் நாம ரூபமாகிய பிரபஞ்சத்தை உபாஸித் தலும். எனினும் கருமமும் உபாஸனையும் சேர்த்துத் தக்கமுறை யில் ஞானத்துடன் அனுஷ்டிக்கப்பட்டால் படிப்படியாய் ஸாதகனைக் கைதூக்கி விடும். உதாரணமாக சூரிய உபாஸனையை எடுத்துக் கொண் டால், சூரியனிடம் உள்ளவனும் இந்த ஜீவனிடம் உள்ளவனும் ஒருவ னாகிய பரமாத்மாவே எனக் காண வேண்டும்—(யோSஸாவஸௌ புருஷ: ஸோSஹமஸ்மி).

சரீரம் விழுவதற்கு முன்னர் அது ஒரு பிடி சாம்பலாவதெனக் கண்டு அதில் பற்றை அறவே ஒழித்து ஓங்கார உள்ளொளியாய் விளங்கும் பரஞ்ஜோதியைப் பணிந்து போற்றி அதனிடம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்தல் வேண்டும்.

ஈசாவாஸ்யோபநிஷத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண தீபம் எனும் உரை முற்றும்.

## ॥ केनोपनिषत् ॥

ॐ आप्यायन्तु ममाङ्गानि। वाक् प्राणश्चक्षुः श्रोत्र-मथो बल-मिन्द्रियाणि च सर्वाणि। सर्वं ब्रह्मोपनिषदम्। माहं ब्रह्म-निराकुर्यां। मा मा ब्रह्म निराकरोत्। अनिराकरणमस्तु अनिराकरणमस्तु। तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ கேனோபநிஷத் ॥

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி। வாக் ப்ராணஶ்-சக்ஷு: ஶ்ரோத்ரம்। அதோ பல-மிந்த்ரியாணி ச ஸர்வாணி। ஸர்வம் ப்ரஹ்மோபநிஷதம்। மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாம்। மா மா ப்ரஹ்ம நிராகரோத்। அநிராகரணமஸ்து, அநிராகரணமஸ்து। ததாத்மனி நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஸ்-தே மயி ஸந்து, தே மயி ஸந்து॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

## கேனோபநிஷத்து

ஓம். என்னுடைய அங்கங்களும், வாக்கும், பிராணனும், பலமும், கண் காது முதலிய எல்லா இந்திரியங்களும் தத்தம் தொழிலை நன்கு செய்யும் திறனுடையன வாகட்டும். அனைத்தும் உபநிஷத்தில் விளங்கும் பிரம்மமே. பிரம்மம் என்னை விட்டு விலகலாகாது. நானும் பிரம்மத்தை விட்டு விலகலாகாது. அந்த விடாத உறவு நிலைபெறட்டும் என்று மேன்மேலும் பிரார்த்திக்கின்றேன். ஆத்மாவில் மகிழ்ந்து வாழ்பவர்களிடம் உள்ள உபநிஷத் தருமங்கள் எவையோ அவை என்னிடத்தில் நிலைபெறட்டும், என்னிடத்தில் நிலைபெறட்டும் (என்று பிரார்த்திக்கின்றேன்).

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

## प्रथमः खण्डः

ॐ केनेषितं पतति प्रेषितं मनः, केन प्राणः प्रथमः प्रैति युक्तः।
केनेषितां वाचमिमां वदन्ति, चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति ॥१.१॥

## ப்ரதம: கண்ட:

ஓம் கேனேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:,
கேன ப்ராண: ப்ரதம: ப்ரைதி யுக்த: ।
கேனேஷிதாம் வாச-மிமாம் வதந்தி
சக்ஷு: ஶ்ரோத்ரம், க உ தேவோ யுநக்தி ॥ 1.1 ॥

---

## முதல் கண்டம்

1.1. (சிஷ்யன்) :—எவரால் விரும்பப்பட்டும் ஏவப்பட்டும் மனம் (விஷயங்களில்) விழுகின்றது? எவரால் ஏவப்பட்டு முக்கியப்பிராணன் (தன் தொழிலில்) பிரவேசிக்கின்றது? எவரால் விரும்பப்பட்டு (ஜனங்கள்) இம்மாதிரி வார்த்தைகளைப் பேசுகிறார்கள்? எந்த தெய்வம் கண்ணையும் காதையும் (தத்தம் தொழிலில்) ஏவுகிறது?

---

**உபநிஷத்தின் பெயரும் தொடர்பும்**—இது 'கேன' எனும் வார்த்தையில் தொடங்குவதால் 'கேன உபநிஷத்து' எனப் பொதுவாய்க் கூறப்படும். ஸாமவேதத்தில் ஜைமினிசாகையில் தலவகார ப்ராஹ்மணத்தில் இது ஒன்பதாவது அனுவாகம். ஆகையால் இது தலவகார உபநிஷத்து எனவும் வழங்கும்.

**1.1. கேனேஷிதம்**—ஒ—(யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாச-மிமாம் ப்ரஸுப்தாம் ஸஞ்ஜீவயதி) எவன் என்னுட்புகுந்து தூங்கியிருந்த எனது வாக்கை உயிர்ப்பித்தானோ. (பாக. 4. 9. 6.)

श्रोत्रस्य श्रोत्रं, मनसो मनो, यद् वाचो ह वाचं, स उ प्राणस्य प्राणः। चक्षुषश्चक्षु-रतिमुच्य धीराः, प्रेत्यास्माल्लोका-दमृता भवन्ति ॥ १.२ ॥

ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம், மனஸோ மனோ, யத் வாசோ ஹ வாசம், ஸ உ ப்ராணஸ்ய ப்ராண:। சக்ஷுஷ்-சக்ஷு-ரதிமுச்ய தீரா: ப்ரேத்யாஸ்மால்-லோகா-தம்ருதா பவந்தி । 1.2 ॥

---

1.2. (குரு) :—காதுக்குக் காதாயும், மனதுக்கு மனதாயும் வாக்குக்கு வாக்காயும் உள்ளது எதுவோ அதுவே பிராணனுக்குப் பிராணனும் கண்ணனுக்குக் கண்ணும் உள்ளது. அதை அறிந்த தீரர்கள் எல்லாப் பற்றுகளையும் இங்கேயே ஒழித்து, இவ்வுலகை விட்டுச் சாகாத் தன்மை எய்துகின்றனர்.

---

1.2. **காதுக்குக் காதாயும்**—காதின் சக்திக்குக் காரண சைதன்யமாயும்—ஒ. (தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி) அந்த ஆத்மாவினுடைய பிரகாசத்தால், இது எல்லாம் பிரகாசிக்கிறது. (கட. 5. 15.)

(நித்யோऽநித்யானும் சேதனஶ்சேதனனும்) அழியும் ஜடப் பொருள்களுள் அழியாப் பொருளாயும், உயிர்களுக்குள் உயிராயும். (கட. 5. 13.)

**மனதுக்கு மனதாயும்**—'மனது' எனும் சொல் புத்தியையும் சேர்த்து இங்கு குறிப்பிடும். **அம்ருதா பவந்தி**—அழியும் இந்திரியங்களில் ஆத்மபுத்தியை ஒழித்து உள்ளுறையும் அழியாத சைதன்யம் ஆத்மா என்று கண்டு கொண்டமையால் சாகாத்தன்மை எய்துகின்றனர்.

ஒ—(அத மர்த்யோऽம்ருதோ பவதி, அத்ர ப்ரஹ்ம ஸமஶ்னுதே) அப்போது சாவுடைய ஜீவன் சாகாதவனுகிறான்; இங்கேயே பிரம்மத்தை அனுபவிக்கிறான். (கட. 6. 14.)

மானிட சரீரம் ஒரு பானையைப் போன்றது. மனம், புத்தி, இந்திரியங்கள் அப்பானையில் இடப்பட்ட நீர், காய்கறி, அரிசி முதலியவற்றிற்குச் சமானம். அப்பானையை அடுப்பின் மீது வைத்தால் நெருப்பு பானையிலுள்ளவற்றை வேகச் செய்யும். ஆனால் வேகவைக்கும் உஷ்ணம் பானையினுடையதன்று. நீர், காய்கறி, அரிசி இவற்றினுடையதன்று. அதுபோல சரீரத்தை இயக்குவிக்கும் சக்தி இந்திரியங்களுடையதன்று) ஆத்மாவினுடையதே. (ரா. கி.)

न तत्र चक्षुर्गच्छति, न वाग्गच्छति, नो मनो, न विद्मो न विजानीमो, यथैत-दनुशिष्यात्। अन्यदेव तद्विदितात्, अथो अविदिता-दधि। इति शुश्रुम पूर्वेषां, ये नस्तद्व्याचचक्षिरे ॥ १.३ ॥

ந தத்ர சக்ஷுர் கச்சதி, ந வாக் கச்சதி, நோ மனோ ந வித்மோ ந விஜானீமோ, யதைத-தனுஶிஷ்யாத்। அன்யதேவ தத்-விதிதாத், அதோ அவிதிதாததி। இதி ஶுஶ்ரும பூர்வேஷாம் யே நஸ்-தத் வ்யாசசக்ஷிரே ॥ 1.3 ॥

---

1.3. அங்கே கண் செல்லாது, வாக்குச் செல்லாது, மனமும் செல்லாது; அதை நாம் (உள்ளபடி) அறியமாட்டோம்; ஆகையால் அதைப்பற்றி உபதேசிக்கும் வகையும் தெரியவில்லை; அது அறிந்த பொருள்களைவிட வேறு, அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டது என்றிவ்வாறே இவ்விஷயத்தைக் கூறிய பூர்வாசாரியர்களிடம் கேட்டுள்ளோம்.

---

ஒ—(நாநாச்சித்ர கடோதர-ஸ்த்தித-மஹா-தீப-ப்ரபா-பாஸ்வரம், ஜ்ஞானம் யஸ்ய து சக்ஷுராதி கரண த்வாரா பஹிஸ்பந்ததே) அநேகத் துவாரங்களுள்ள குடத்திலிட்ட பிரகாசமான விளக்குப் போன்ற ஒரு சைதன்யம் கண் முதலிய கரணங்கள் வழியாக வெளிவந்து பிரகாசிக்கின்றது. (தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்: சங்.)

1.3. ந தத்ர சக்ஷுர் கச்சதி—எந்த ஆன்மசக்தியால் கண் வெளிப்பொருள்களைக் காண்கின்றதோ, அந்த ஆன்ம சக்தியைக் கண் காணாது.

ஒ—(விஜ்ஞாதாரம் அரே கேன விஜாநீயாத்) அறிகிறவனை எதனால் அறிய முடியும்? (ப்ரு. 2. 4. 14.)

ஒ—(பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ: தஸ்மாத் பராங் பஶ்யதி நாந்தராத்மன்) இந்திரியங்களை வெளி நோக்குடையவைகளாய்ப் பரமேசுவரன் சிருஷ்டித்தார். ஆகையால் ஜீவன் (இந்திரியங்களால்) வெளியுலகையே காண்கிறான், அந்தராத்மாவைக் காண்பதில்லை. (கட. 4. 1.)

ஒ—(ரூபந் த்ருஶ்யம், லோசனந் த்ருக், தத் த்ருஶ்யம், த்ருக்து மானஸம்। த்ருஶ்யா தீவ்ருத்தய:, ஸாக்ஷீ த்ருகேவ, ந து த்ருஶ்யதே)

வெளி உருவங்களைக் கண் பார்க்கும்; கண்ணை மனம் பார்க்கும்; மனோவிருத்திகளை அந்தராத்மா காணும்; அந்தராத்மாவை எதுவுங் காணாது. (அது தன்னால் தானே விளங்கிநிற்கும்)

(த்ருக்-த்ருஶ்ய விவேகம் 1.)

यद्वाचा-ऽनभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिद-मुपासते ॥ १.४ ॥

यन्मनसा न मनुते येनाहु-र्मनो मतं ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिद-मुपासते ॥ १.५ ॥

**யத்வாசா ऽனப்ப்யுதிதம், யேன வாகப்ப்யுத்யதே ।**
**ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி, நேதம் யதித-முபாஸதே ॥ 1.4 ॥**

**யன் மனஸா ந மனுதே, யேனாஹுர் மனோ மதம் ।**
**ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதித-முபாஸதே ॥ 1.5 ॥**

---

1.4. எது வாக்கால் விளக்கப் பெறுதோ, ஆனால் வாக்கு எதனால் விள்க்கப்பெறுமோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை 'இது' (பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அது (பிரம்மம்) அன்று.

1.5. எதை ஒருவன் மனதால் உணருவதில்லையோ ஆனால் மனது எதனால் உணரப்பெறும் என்று கூறுகிறார்களோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது (பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அது (பிரம்மம்) அன்று.

---

அன்யதேவ தத் விதிதாத்—

ஒ—உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி
யானெனதென்றவரவரைக் கூத்தாட்டுவானாகி
நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே. (திருவாசகம்)

1.5. ந இதம்—இதம் என்பது 'த்ருஶ்யம்', இந்திரியங்களுக்குப் புலப்படுவது; ஆத்மா த்ருக்.

பிரம்மம் என்றால் எதைவிடப் பெரிது யாதொன்று மில்லையோ, எதற்கு பூமா என்று பெயரோ, எது எங்கும் நிறைந்திருக்கிறதோ, அது.

யத் வாசா—ஒ(யம் வாங் ந வேத, யஸ்ய வாக் ஶரீரம், யோ வாசமந்தரோ யமயதி) வாக்கு எதை அறியவில்லையோ, வாக்கு எதற்குச் சரீரமோ, எது உள்ளே இருந்து கொண்டு வாக்கை ஆள்கின்றதோ.

—ப்ரு. 3. 7. 17.

यच्चक्षुषा न पश्यति येन चक्षूꣳषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिद-मुपासते ॥ १.६ ॥

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्र-मिदꣳ श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिद-मुपासते ॥ १.७ ॥

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिद-मुपासते ॥ १.८ ॥

யச்சக்ஷுஷா ந பஶ்யதி யேன சக்ஷூꣳஷி பஶ்யதி ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி, நேதம் யதித-முபாஸதே ॥ 1.6 ॥

யச்ச்ரோத்ரேண ந ஶ்ருணோதி, யேன ஶ்ரோத்ரமிதꣳ ஶ்ருதம் ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி, நேதம் யதித-முபாஸதே ॥ 1.7 ॥

யத் ப்ராணேன ந ப்ராணிதி, யேன ப்ராண: ப்ரணீயதே ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி, நேதம் யதித-முபாஸதே ॥ 1.8 ॥

---

1.6. எதை (ஒருவன்) கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் கண்களை எதனால் பார்க்கிறானோ, அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது (பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அது (பிரம்மம்) அன்று.

1.7. எதை (ஒருவன்) காதால் கேட்பதில்லையோ, ஆனால் காது எதனால் கேட்பதாகிறதோ, அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது (பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அது (பிரம்மம்) அன்று.

1.8. எதை (ஒருவன்) மூக்கால் (பிராணவாயுவால்) முகர்வதில்லையோ, ஆனால் மூக்கு (பிராணவாயு) எதனால் முகர்வதாகிறதோ, அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது (பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அது (பிரம்மம்) அன்று.

---

1.7. ஒ—கேட்டாரு மறியாதான் கேடொன்றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான். (திருவாசகம்)

## द्वितीयः खण्डः

यदि मन्यसे सुवेदेति दभ्रमेवापि नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपं यदस्य त्वं यदस्य च देवेष्वथ नु मीमाँस्यमेव ते मन्ये विदितम् ॥ २.१ ॥

नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च ।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च ॥ २.२ ॥

## த்விதீய கண்ட:

யதி மன்யஸே ஸுவேதேதி தப்ப்ரமேவாபி நூனம் த்வம் வேத்த ப்ரஹ்மணோ ரூபம் யதஸ்ய த்வம் யதஸ்ய ச தேவேஷ்-வத நு மீமாம்ஸ்ய-மேவ தே மன்யே விதிதம் ॥ 2.1 ॥

நாஹம் மன்யே ஸுவேதேதி, நோ ந வேதேதி வேத ச ।
யோ நஸ்-தத்-வேத தத்வேத நோ ந வேதேதி வேத ச ॥ 2.2 ॥

---

## இரண்டாவது கண்டம்

2.1. (குரு)—'நன்ருக அறிந்து கொண்டேன்' என்று நீ எண்ணுவாயாகில், இந்தப் பிரம்மத்தின் எந்த ரூபத்தை (இங்கு) அறிந்திருக்கிருயோ அது அற்பம் என்பது நிச்சயம்; இந்தப் பிரம்மத்தின் எந்த ரூபத்தை தேவதைகளிடம் அறிந்திருக்கிருயோ அதுவும் (அப்படியே). ஆகையால் (பிரம்மம்) உனக்கு இன்னும் விசாரிக்க வேண்டியதாகவே இருக்கிறது.

(சிஷ்யன் மீண்டும் விசாரித்த பின்)—(இப்போது) அறியப் பட்டதென்று நினைக்கிறேன்.

2.2. (எங்ஙனம் எனின்) நான் 'நன்ருக அறிந்து கொண்டேன்' என்று (இப்போது) எண்ணவில்லை; அறியவில்லை என்ருே, அறிந்தேன் என்ருே எண்ணவில்லை. எங்களுக்குள் எவன் 'அறியவில்லை என்ருே, அறிந்தேன் என்ருே எண்ணவில்லை' என்று இதை உணர்ந்தவனே அவன் அதை (பிரம்மத்தை) உணர்ந்தவன்.

---

'அறியவில்லை என்ருே, அறிந்தேன் என்ருே'—(அன்யதேவ

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञात-मविजानताम् ॥ २.३ ॥
प्रति-बोध-विदितं मत-ममृतत्वं हि विन्दते ।
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दते-ऽमृतम् ॥ २.४ ॥

யஸ்யாமதம் தஸ்ய மதம், மதம் யஸ்ய, ந வேத ஸ: ।
அவிஜ்ஞாதம் விஜாநதாம், விஜ்ஞாத-மவிஜாநதாம் ॥ 2.3 ॥
ப்ரதிபோத-விதிதம் மத-மம்ருதத்வம் ஹி விந்ததே ।
ஆத்மனு விந்ததே வீர்யம், வித்யயா விந்ததே ऽம்ருதம் ॥ 2.4 ॥

---

2.3. அமதம் (அறியப்படாதது பிரம்மம்) என்பது எவன் மதமோ அவனுல் அறியப்பட்டதாம். அறியப்பட்டது என்பது எவன் மதமோ அவன் அறியவில்லை. அறிவாளிகளுக்கு அது அறியப்படாதது; அறிவீனர்களால் அறியப்பட்டதாய்க் கருதப் படுவது.

2.4. ஒவ்வொரு போதத்திலும் விளங்கும் அது அறியப் படாமல் அறியும் வஸ்துவாய் நிற்கிறது என்பது (முடிவான கருத்து) மதம். அதனுல் சாகாத்தன்மையை (ஒருவன்) அடை கிறுன். ஆத்மாவிடமிருந்தே உண்மையான வீரியத்தைப் பெறு கிறுன். அந்த வித்தையாலேயே சாகா நிலையை எய்துகிறுன்.

---

தத் விதிதாத்) அது அறிந்த பொருள்களைவிட வேறு, அறியாத பொருள் களுக்கும் அப்பாற்பட்டது.

ஒரு அறையில் பூந்தொட்டியில் வளருங்கொடியானது ஜன்னல் வழி படர்ந்து ஒளியை நாடிச் செல்வதைப் போன்று மனிதனுடைய மனம் பரம்பொருளை நாடுகிறது.

ஓ—என்னையறியேன் நான், என்னை யறிந்தேன் நான்
என்னல் நகைப்புக் கிடனுகும்—என்னை
தனை விடயமாக்க இரு தானுண்டோ வொன்று
யனைவரனுபூதி யுண்மையால். —(ரமணமஹரிஷி)

इह चेदवेदी-दथ सत्य-मस्ति न चेदिहावेदीन्महती विनष्टिः।
भूतेषु भूतेषु विचित्य धीराः प्रेत्यास्माल्लोका-दमृता भवन्ति॥२.५॥

## तृतीयः खण्डः

ब्रह्म ह देवेभ्यो विजिग्ये, तस्य ह ब्रह्मणो विजये देवा अमहीयन्त। त ऐक्षन्तास्माक-मेवायं विजयो-ऽस्माकमेवायं महिमेति ॥ 3.1 ॥

இஹ சேதவேதீ-தத ஸத்யமஸ்தி, ந சேதிஹாவேதீன் மஹதீ
விநஷ்டி:।
பூதேஷு பூதேஷு விசித்ய தீரா:, ப்ரேத்யாஸ்மான் லோகா-
தம்ருதா பவந்தி ॥ 2.5 ॥

## த்ருதீய: கண்ட:

ப்ரஹ்ம ஹ தேவேப்யோ விஜிக்யே, தஸ்ய ஹ ப்ரஹ்மணோ விஜயே தேவா அமஹீயந்த। த ஐக்ஷந்தாஸ்மாக-மேவாயம் விஜயோ ऽஸ்மாக-மேவாயம் மஹிமேதி ॥ 3.1 ॥

---

2.5. இங்கேயே ஒருவன் உண்மையை அறிந்தால் அவன் அழியாமல் இருக்கிறான்; இங்கே அறியாவிட்டால் பெரும் அழிவு ஏற்படுகின்றது. பொருள்தோறும் (ஆத்மாவை ஆராய்ந்து கண்டு கொண்ட தீரர்களே இவ்வுலகை விட்டுச் சாகாதவர்கள் ஆகின்றனர்.

## மூன்றாவது கண்டம்

3.1. பிரம்மம் தேவர்களுக்காக ஜயித்தது பிரசித்தம். பிரம்மத்தின் அந்த விஜயத்தில் தேவர்கள் பெருமிதம் எய்தினர். "இந்த விஜயம் எங்களுடையது, இந்தப் பெருமை எங்களுடையது" என்று அவர்கள் கருதினர்.

---

2.5. வீர்யம்—ஒ—நாயமாத்மா பலஹீனேன லப்ய: (மு 3. 2. 4.) இந்த ஆத்மா பலமில்லாதவனால் அடைய முடியாது. உண்மையான பலம் ஆத்மபலம். அந்த பலத்தாலேயே அமிருத நிலை பெறப்படும்.

तद्धैषां विजज्ञौ, तेभ्यो ह प्रादु-र्बभूव, तन्न व्यजानन्त किमिदं यक्षमिति ॥ ३.२ ॥

तेऽग्निमब्रुवन् जातवेद एतद्विजानीहि किमेत-द्यक्षमिति ॥ ३.३॥

तथेति तदभ्यद्रव-त्तमभ्यवदत् कोऽसीत्यग्निर्वा अहमस्मीत्य-ब्रवी-ज्जातवेदा वा अहमस्मीति ॥ ३.४ ॥

தத்தைஷாம் விஜஜ்ஞௌ, தேப்ப்யோ ஹ ப்ராதுர்ப்பபூவ, தந் ந வ்யஜானந்த கிமிதம் யக்ஷமிதி ॥ 3.2 ॥

தேऽக்னிமப்ருவன், ஜாதவேத, ஏதத் விஜானீஹி கிமேதத் யக்ஷமிதி ॥ 3.3 ॥

ததேதி ததப்ப்யத்ரவத், தமப்ப்யவதத், கோஸீத்யக்னிர்வா அஹமஸ்மீத்யப்ரவீஜ்-ஜாதவேதா வா அஹமஸ்மீதி ॥ 3.4 ॥

---

3.2 அவர்களுடைய அந்தத் தவறுன எண்ணத்தைப் பிரம்மம் உணர்ந்து அவர்களிடையில் தோன்றிற்று. அந்த யக்ஷ வடிவம் என்ன வென்று அவர்கள் உணரவில்லை.

3.3 அவர்கள் அக்கினியைப் பார்த்து, ஜாதவேதனே! இந்த யக்ஷவடிவம் என்ன என்று இதை அறிந்து வருவாயாக" என்று சொன்ஞர்கள்.

3.4. "அப்படியே ஆகட்டும்" என்றுன். அதை நோக்கி ஓடினுன். நீ யார்?" என்று அவனைக் கேட்டது.

"நான் அக்கினி, ஜாதவேதன் எனப் பிரசித்திப்பெற்றவன்" என்று சொன்ஞன்.

---

அம்ருதா பவந்தி—ஒ (ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி) எவன் பரப்பிரம்மத்தை அறிந்தவனே அவன் பிரம்ம மாகவே ஆகிறுன். (மு 3. 2. 9.)

3.2 யக்ஷம்—பூஜ்யம் மஹத்ப்பூதம்–(ஸ்வயோக-மாஹாத்ம்ய-நிர்மி தேன அத்யத்புதேன விஸ்மாபனீயேன ரூபேண தேவாஞ-மிந்த்ரிய கோசரே ப்ராதுர்ப்பபூவ) பரமேசுவரனுடைய யோகமஹிமையால் தோற்றுவிக்கப்பட்ட அத்யத்புதமான வடிவம் பூஜிக்கத் தகுந்ததாய் விளங்கிற்று. அதை தேவர்கள் உணரவில்லை. —சங்.

तस्मिँस्त्वयि किं वीर्यमि-त्यपीद५ सर्वं दहेयं यदिदं पृथिव्यामिति ॥ ३.५ ॥

तस्मै तृणं निदधावेत-द्दहेति, तदुपप्रेयाय सर्वजवेन तन्नशशाक दग्धुं, स तत एव निववृते, नैत-दशकं विज्ञातुं यदेत-द्यक्षमिति ॥ ३.६ ॥

अथ वायुमब्रुवन् वायवेतद्विजानीहि किमेत-द्यक्षमिति, तथेति ॥ ३.७ ॥

தஸ்மின்ஸ்-த்வயி கிம் வீர்யமித்-யபீத५ ஸர்வந் தஹேயம் யதிதம் ப்ருதிவ்யாமிதி ॥ 3.5 ॥

தஸ்மை த்ருணம் நிததா-வேதத்-தஹேதி, ததுபப்ரேயாய ஸர்வஜவேன, தந்நஶஶாக தக்தும், ஸ தத ஏவ நிவவ்ருதே, நைத-தஶகம் விஜ்ஞாதும் யதேதத்-யக்ஷமிதி ॥ 3.6 ॥

அத வாயு-மப்ருவன், வாயவேதத் விஜாநீஹி, கிமேதத்-யக்ஷமிதி, ததேதி ॥ 3.7 ॥

3.5. "அப்படிப்பட்ட உன்னிடம் என்ன வீரியம் உளது?" என்றது.

"பூமியில் எது உண்டோ அது எல்லாவற்றையும் நான் எரித்து விடக்கூடும்" என்றான்.

3.6. "இதை எரி" என்று ஒரு புல்லை அவன் முன்பாக வைத்தது. அவன் மிக விரைவாக அதன்மேல் பாய்ந்தும் அதை எரிக்க முடியவில்லை. "இந்த யக்ஷவடிவம் என்ன என்று தெரிந்துகொள்ள முடியவில்லை" என்று அதனிடமிருந்து திரும்பி வந்து விட்டான்.

3.7. பின் வாயுவைப் பார்த்து, "வாயுவே! இந்த யக்ஷ வடிவம் என்ன என்று இதை அறிந்து வருவாயாக" என்று சொன்னார்கள். "அப்படியே ஆகட்டும்" என்றான்.

तदभ्यद्रव-त्तमभ्यवदत् कोऽसीति, वायुर्वा अहमस्मीत्यब्रवी-न्मातरिश्वा वा अहमस्मीति ॥ ३.८ ॥

तस्मिँस्त्वयि किं वीर्यमित्यपीदꣳ सर्व-माददीयं यदिदं पृथिव्यामिति ॥ ३.९ ॥

तस्मै तृणं निदधावेत-दादत्स्वेति, तदुपप्रेयाय सर्वजवेन, तन्नशशाकादातुं, स तत एव निववृते नैतदशकं विज्ञातुं यदेत-द्यक्षमिति ॥ ३.१० ॥

ததப்ப்யத்ரவத் தமப்ப்யவதத் கோऽஸீதி, வாயுர்வா அஹ-மஸ்மீத்-யப்ரவீன்-மாதரிஶ்வா வா அஹமஸ்மீதி ॥ 3.8 ॥

தஸ்மின்ஸ்-த்வயி கிம் வீர்யமித்யபீதꣳ ஸர்வ-மாததீயம், யதிதம் ப்ருதிவ்யாமிதி ॥ 3.9 ॥

தஸ்மை த்ருணம் நிததா-வேத-தாதத்ஸ்வேதி, ததுபப்ரேயாய ஸர்வஜவேன, தந்நஶஶாகாதாதும், ஸ தத ஏவ நிவவ்ருதே, நைத-தஶகம் விஜ்ஞாதும் யதேதத்-யக்ஷமிதி ॥ 3.10 ॥

---

3.8. அதை நோக்கி ஓடினான். "நீ யார்?" என்று அவனைக் கேட்டது.

"நான் வாயு, மாதரிச்வா எனப் பிரசித்திபெற்றவன்" என்று சொன்னான்.

3.9. "அப்படிப்பட்ட உன்னிடம் என்ன வீரியம் உளது?" என்றது.

"பூமியில் எது உண்டோ அது எல்லாவற்றையும் நான் தூக்கக் கூடும்" என்றான்.

3.10. "இதைத் தூக்கு" என்று ஒரு புல்லை அவன் முன்பு வைத்தது. அவன் மிக விரைவாக அதன்மேல் பாய்ந்தும்

---

இங்கு கூறியது போலவே இன்னொரு புராணக் கதை உண்டு. அக்னிஸ்தம்பமாக ஆண்டவன் நின்றபோது அவன் அடியையும் முடியையும் யாருங் காணவில்லை. செல்வச் செருக்கு எவ்வளவு கீழே தோண்டிப்

अथेन्द्र-मब्रुवन्मघवन्नेत-द्विजानीहि किमेत-द्यक्षमिति, तथेति तदभ्यद्रव-त्तस्मात् तिरोदधे ॥ ३.११ ॥

स तस्मिन्नेवाकाशे स्त्रिय-माजगाम, बहु-शोभमानां, उमां, हैमवतीं ताँ होवाच किमेत-द्यक्षमिति ॥ ३.१२ ॥

அதேந்த்ர-மப்ருவன்-மகவந்-நேதத் விஜாநீஹி, கிமேதத்-யக்ஷமிதி, ததேதி ததப்யத்ரவத், தஸ்மாத் திரோததே ॥ 3.11॥

ஸ தஸ்மிந்நேவாகாஶே, ஸ்த்ரியமாஜகாம, பஹு°ஶோப மானும், உமாம், ஹைமவதீம், தா॰ ஹோவாச, கிமேதத் யக்ஷமிதி ॥ 3.12 ॥

---

அதைத் தூக்க முடியவில்லை. "இந்த யக்ஷவடிவம் என்ன என்று தெரிந்துகொள்ள முடியவில்லை" என்று அதனிடமிருந்து திரும்பி வந்து விட்டான்.

3.11. அதன் பின் (தேவதைகள்) இந்திரனைப்பார்த்து "இந்திரனே! இந்த யக்ஷவடிவம் என்ன என்று நீர் கண்டு பிடித்தல் வேண்டும்" என்றனர். "அங்ஙனமே ஆகுக" என்று அதை நோக்கிச் சென்றான். அங்கிருந்து அது மறைந்தது.

3.12. அங்கேயே ஆகாயத்தில் இமவான் புத்திரியும் மிகுந்த அழகால் பிரகாசிப்பவளுமான உமாதேவியைக் காணப் பெற்றான். "இந்த யக்ஷவடிவம் என்ன?" என்று அந்த தேவியைக் கேட்டான்.

---

பார்த்தாலும் உண்மையின் அருள் கிடையாது. கல்விச் செருக்கு எவ்வளவு மேலே பறந்து பார்த்தாலும் உண்மையின் முடிவைக் காண முடியாது. பொருளுக்கும் பரம்பொருளுக்கும் வெகுதூரம். அப்படியே அறிவுக்கும் பரஞ்சோதிக்கும்.

## चतुर्थः खण्डः

सा ब्रह्मेति होवाच, ब्रह्मणो वा एतद्विजये महीयध्व-मिति, ततो हैव विदांचकार ब्रह्मेति ॥ ४.१ ॥

तस्माद्वा एते देवा अतितरामिवान्यान् देवान् यदग्नि-र्वायु-रिन्द्रस्ते ह्येनन्नेदिष्ठं पस्पर्शुस्ते ह्येनत् प्रथमो विदांचकार ब्रह्मेति ॥ ४·२ ॥

## சதுர்த்த: கண்ட:

ஸா ப்ரஹ்மேதி ஹோவாச, ப்ரஹ்மணோ வா ஏதத் விஜயே மஹீயத்த்வமிதி, ததோ ஹைவ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥ 4.1 ॥

தஸ்மாத்வா ஏதே தேவா அதிதராமிவான்யான் தேவான், யதக்னிர்-வாயு-ரிந்த்ரஸ்-தேஹ்யேனந்-நேதிஷ்டம் பஸ்பர்சுஸ்-தேஹ்யேனத்-ப்ரதமோ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥ 4.2 ॥

---

## நாலாவது கண்டம்

4.1. "அது பிரம்மம், அந்த பிரம்மத்தின் விஜயத்தில் தான் நீங்கள் பெருமை கொள்ளவேண்டும்" என்று அந்த தேவி கூறினுள். அதன் பின்னரே அது பிரம்மம் என்று அவன் தெரிந்து கொண்டான்.

4.2. எக்காரணத்தால் அக்கினியும் வாயுவும் இந்திரனும் இதை (பிரம்மத்தை) நெருங்கிய பொருளாகக் கண்டார்களோ, மேலும் இதைப் பிரம்மம் என்று முதன்மையாகத் தெரிந்து கொண்டார்களோ அக்காரணத்தால் இந்த தேவர்கள் மற்ற தேவர்களை விடச் சிறந்தவர்களாயினர்.

---

4.1. அகங்காரம் அறவே ஒழிந்தால் அகிலாண்டேசுவரியின் அருள் ஏற்படும். அவள் உண்மையான ஞானத்தை யளிப்பாள்.

तस्माद्वा इन्द्रो अतितरामिवान्यान् देवान् सह्येनं नेदिष्ठं पस्पर्श स ह्येनं प्रथमो विदांचकार ब्रह्मेति ॥ ४.३ ॥

तस्यैष आदेशो यदेतद्विद्युतो व्यद्युतदा ३ इतीन्न्यमीमिषदा ३ इत्यधिदैवतम् ॥ ४.४ ॥

अथाध्यात्मं यदेतद्गच्छतीव च मनोऽनेन चैत-दुपस्मर-त्यभीक्ष्णं संकल्पः ॥ ४.५ ॥

தஸ்மாத்வா இந்த்ரோ அதிதராமிவான்யான் தேவான், ஸ ஹ்யேனந்-நேதிஷ்டம் பஸ்பர்ச ஸ ஹ்யேனம் ப்ரதமோ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥ 4.3. ॥

தஸ்யைஷ ஆதேசோ யதேதத் வித்யுதோ வ்யத்யுததா 3 இதீந் ந்யமீமிஷதா 3 இத்யதிதைவதம் ॥ 4.4 ॥

அதாத்த்யாத்மம், யதேதத் கச்சதீவ ச, மனோऽனேன-சைத-துபஸ்மரத்-யபீக்ஷ்ணம் ஸங்கல்ப: ॥ 4.5 ॥

---

4.3. இந்திரன் இதை நெருங்கிய பொருளாகக் கண்டு மேலும் இதை பிரம்மம் என்று முதன்மையாகத் தெரிந்து கொண்டான். அதனால் இந்திரன் மற்ற தேவர்களை விடச் சிறந்தவனாயினன்.

4.4. அதைப்பற்றிய உபதேசம் இது: இந்தப் பிரம்மம் மின்னலின் மின்னல் போன்றதாம்; இமை கொட்டுதல் போன்ற தாம். இது அதிதைவதம்.

4.5. இதை மனது சென்றடைவது போலும், அதனால் இதை அருகில் ஸ்மரிப்பது போலும் அடிக்கடி (பளிச்சென்று

---

4.3. (இத-மதர்ச-மித-மதர்சமிதி, தஸ்மா-திந்த்ரோ நாமேதி ச்ரூயதே) இதைக் கண்டுகொண்டேன், இதைக் கண்டு கொண்டேன் என்றதால் இந்திரன் எனப்பெயர் ஏற்பட்டதாய்ச் சுருதி கூறுகிறது.

4.4. மின்னல் போன்றதாம்—ஓ 'வித்யுல்லேகேவ' பாஸ்வரா (புருஷ ஸூக்தம்)—மின்னல்கொடி போல் பிரகாசிப்பதாம். இருண்ட மேகத்திடை மின்னலைப்போல் உள்ளத்தினுள்ளே தியானத்தில் தோன்றி மறைவதாம்.

4.5. தத்வனம்—(தஸ்யவனம் தத்வனம்; தஸ்ய ப்ராணிஜாதஸ்ய

तद्ध तद्वनं नाम तद्वनमित्युपासितव्यं, स य एतदेवं वेदाभि हैनं, सर्वाणि भूतानि संवाञ्छन्ति ॥ ४.६ ॥

उपनिषदं भो ब्रूहीत्युक्ता त उपनिषद्ब्राह्मीं वाव त उपनिषद-मब्रूमेति ॥ ४.७ ॥

तस्यै तपो दमः कर्मेति प्रतिष्ठा वेदाः सर्वाङ्गानि सत्यमायतनम् ॥ ४.८ ॥

தத்த தத்வனம் நாம, தத்வன-மித்-யுபாஸிதவ்யம், ஸ ய ஏததேவம், வேதாபிஹைனம், ஸர்வாணி பூதானி ஸம்வாஞ்சந்தி ॥ 4.6 ॥

உபநிஷதம் போ ப்ரூஹீத்யுக்தா, த உபநிஷத் ப்ராஹ்மீம் வாவ த உபநிஷத-மப்ரூமேதி ॥ 4.7 ॥

தஸ்யை தபோ தம: கர்மேதி ப்ரதிஷ்ட்டா, வேதா: ஸர்வாங்கானி, ஸத்ய-மாயதனம் ॥ 4.8 ॥

---

தோன்றி மறையும்) பாவனே உண்டாகிறது. இது அத்தியாத்மம்.

4.6. அது (பிரம்மம்) தத்வனம் என்று பெயர்பெற்றது. தத்வனம் என்று உபாசிக்கத்தக்கது. எவனொருவன் அதை இப்படி அறிகிருனே அவனே எல்லாப் பிராணிகளும் விரும்புகின்றன.

4.7. 'ஐயனே! உபநிஷத்தை உபதேசியும்' என்ற உனக்கு உபநிஷத்து உபதேசிக்கப்பட்டது. உனக்குப் பிரம்மத்தைப் பற்றிய ரகசியத்தைத் தெளிவுறக் கூறினேன்.

4.8. தவம், அடக்கம், கருமம் என்பவை அதன் பாதங்கள்; வேதங்கள் எல்லா அங்கங்களும்; ஸத்தியம் உறைவிடம்.

---

ப்ரத்யகாத்ம-பூதத்வாத், வனனீயம் ஸம்பஜனீயம்) ஸகலப் பிராணிகளுக்கும் பிரத்யகாத்மாவாயிருப்பதால் அந்தப் பிரம்மம் நன்ருய்ப் பஜிக்கத்தக்கது—சங்.

4-8. ஸத்யம் உறைவிடம்—ஒ. (ந யேஷு ஜிஹ்மம் அந்ருதம் ந மாயா சேதி) எவர்களிடத்தில் சூதும் பொய்யும் வஞ்சனேயும் இல்லேயோ அவர்களிடம் இது உறைகின்றது. (ப்ர. 1. 16.)

यो वा एतामेवं वेदापहत्य पाप्मान-मनन्ते स्वर्गे लोके ज्येये प्रतितिष्ठति प्रतितिष्ठति ॥ ४.९ ॥

ॐ आप्यायन्तु मामाङ्गानि । वाक्प्राणश्चक्षुः श्रोत्रमथो बलमिंद्रियाणि च सर्वाणि । सर्वं ब्रह्मोपनिषदम् । माहं ब्रह्म निराकुर्याम् । मा मा ब्रह्म निराकरोत् । अनिराकरणमस्तु, अनिराकरणं मे अस्तु । तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ केनोपनिषत्समाप्ता ॥

யோ வா ஏதாமேவம் வேதாபஹத்ய பாப்மான-மனந்தே ஸ்வர்க்கே லோகே ஜ்யேயே ப்ரதிதிஷ்ட்டதி ப்ரதிதிஷ்ட்டதி ॥ 4.9 ॥

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி। வாக்-ப்ராணஶ்சக்ஷு:-ஶ்ரோத்ர-மதோ-பல-மிந்திரியாணி ச ஸர்வாணி।......அநிராகரணமஸ்து, அநிராகரணம் மே அஸ்து। ததாத்மனி நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஸ்-தே மயி ஸந்து, தே மயி ஸந்து ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

॥ கேஞேபநிஷத் ஸமாப்தா ॥

---

4.9. எவன் இதை இவ்வாறு அறிகின்றுனே அவன் தீமைகளை யெல்லாம் அறவே ஒழித்து, எல்லையில்லாததும் உயர்ந்தது மான ஸ்வர்க்க லோகத்தில் நிலைபெறுகிருன், நிலை பெறுகிருன்.

ஓம். என்னுடைய அங்கங்களும், வாக்கும், பிராணனும் பலமும் கண் காது முதலிய இந்திரியங்களும் தத்தம் தொழிலை நன்கு செய்யும் திறனுடையன வாகட்டும்...ஆத்மாவில் மகிழ்ந்து வாழ்பவர்களிடம் உள்ள உபநிஷத்தருமங்கள் எவையோ அவை என்னிடத்தில் நிலை பெறட்டும், நிலை பெறட்டும் (என்று பிரார்த்திக்கின்றேன்).

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

கேஞேபநிஷத்து முற்றும்.

உபநிஷத்தின் விஷயச்சுருக்கம்.

இந்திரியங்களை அதனதன் தொழிலில் ஏவி நிற்பது எது என்பது கேள்வி. கண்ணுக்குக் கண்ணும் வாக்குக்கு வாக்காயும் மனதுக்கு மனதாயும் உள்ளே உள்ளது ஒரு பொருள். அங்கே கண் செல்லாது வாக்குச் செல்லாது; மனமுஞ் செல்லாது. அது அறிந்த பொருளனைத் துக்கும் வேறு, அறியாத பொருளுக்கும் வேறு. எதை ஒருவன் கண்ணு லும் வாக்காலும் மனத்தாலும் உணரமுடியாதோ, ஆனால் கண்ணும் வாக்கும் மனமும் எந்த சக்தியால் உணர்கின்றனவோ அதுவே பிரம்மம் எதை 'இது பிரம்மம்' என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று அறிவாளிகளுக்கு அது அறியப்படாதது. அறிவீனர்களால் அது அறி யப்பட்டதாய்க் கருதப்படுவது. ஒவ்வொரு போதத்திலும் அதுவே விளங்குகிற தெனினும் அது அறியப்படாமல் அறியும் வஸ்துவாய் நிற்கிறது. இவ்வுண்மையை அறியாமல் இறப்பவன் பெரு நஷ்டத்துக்கு ஆளாகிறான். 'அவனன்றி ஓரணுவுமசையாது' என்பதே உண்மை இதை விளக்க ஒரு உபாக்கியானம் கூறப்படுகிறது.

தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் ஜயமடைந்தபோது அவர்கள் தங்கள் வீரியத்தால் ஜயித்து விட்டதாய்த் தவறான கர்வங் கொண்டனர் அவர்களுக்குப் புத்தி புகட்டப் பிரம்மமே ஒரு ஜோதி வடிவில் அவர்கள் முன் தோன்றிற்று. அது குறிப்பிட்ட துரும்பைக்கூட அசைக்க முடியா மல் அக்கினியும் வாயுவுந் தோல்வியடைந்தனர். இந்திரன் அதை யணுகியபோது அந்த ஜோதி மறைந்து விட்டது. பின் இந்திரனுடைய தவத்துக் கிரங்கி உமாதேவி அவன் முன் தோன்றி "அது பிரம்மம் பிரம்மத்தின் சக்தியால் தான் நீங்கள் ஜய மடைந்தீர்கள். உங்கள் ஜயத்தில் நீங்கள் பிரம்மத்தையே தான் போற்ற வேண்டும்" என்று உபதேசித்தருளினாள். இதை அறிந்ததால் இந்திரன் தேவர்களுள் சிறந்தவனானான். இந்தப் பிரம்மத்தைப் பற்றிய அனுபவம் நம்முடைய இருண்ட மனத்துள்ளும் பல அனுபவங்களிடையில் மின்னல்கொடி போல் ஒவ்வொரு சமயம் பளிச்சென்று தோன்றி மறையும். அதுவே உபாசிக்கத்தக்கது. அந்த உபாசனைக்குத் தவம், அடக்கம், கருமம் என்பன அங்கங்கள்; ஸத்தியம் உறைவிடம். இதையறிபவன் தீமைகளை யெல்லாங் கடந்து எல்லையற்ற உயர்நிலை எய்துகிறான்.

இங்ஙனம் கேனோபநிஷத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ண தீபம் எனும் உரை முற்றும்.

# ॥ कठोपनिषत् ॥

ॐ सह नाववतु। सह नौ भुनक्तु। सह वीर्यं करवावहै। तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै।

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ கடோபநிஷத் ॥

ஓம் ஸஹ நாவவது। ஸஹ நௌ புனக்து। ஸஹ வீர்யம் கரவாவஹை ॥ தேஜஸ்விநா-வதீதமஸ்து மா வித்விஷாவஹை ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

---

## கடோபநிஷத்து

ஓம். (குருசிஷ்யர்களாகிய எங்களை) இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும்; சேர்த்துப் போஷிக்கட்டும். இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் ஒளி பொருந்தியதாக வேண்டும். (நாங்கள் ஒருவரையொருவர்) பகைத்துக் கொள்ளாமலிருக்கவேண்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

---

உபநிஷத்தின் பெயரும் தொடர்பும்—இது கிருஷ்ணயஜுர்வேத கடசாகையைச் சேர்ந்ததால் 'கடோபநிஷத்து' என்று வழங்கும். தைத்திரீயப் பிராம்மணத்திலும் நசிகேதோபாக்கியானம் வருகிறது.

இவ்வுபநிஷத்தில் இரண்டு அத்தியாயங்கள் இருக்கின்றன. முதல் அத்தியாயத்தின் முடிவில் 'பலசுருதி'யுடன் உபநிஷத்து முடிவுபெறும் அடையாளம் இருப்பதால் ஆதியில் இது மட்டுமே இருந்திருக்க வேண்டுமென்றும் இரண்டாவது அத்தியாயம் பிற்காலத்தில் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும் மென்றும் சிலர் கருதுகின்றனர். அது எங்ஙனம் இருப்பினும் ஸ்ரீ சங்கராசாரியர் இரண்டு அத்தியாயங்களுக்கும் பாஷ்யம் எழுதியிருப்பதால் அவர் காலத்துக்கு முன்பே இரண்டு அத்தியாயங்களும் கூடியிருந்திருக்க வேண்டும்.

அதர்வண வேதத்திலும் இவ்வுபநிஷத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அங்கு இரண்டு அத்தியாயங்களும் வெவ்வேறு உபநிஷத்துக்களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் மூன்று வல்லிகளாக மொத்தம் ஆறு வல்லிகள் (கொடிகள்) இருக்கின்றன. முதல் வல்லியில் நசிகேதஸ்ஸின் வரலாறும் அவன் யமனிடம் கேட்டுக்கொண்ட வரங்களும்; இரண்டாவதில் முமுக்ஷுவின் இலக்ஷணங்களும் ஆத்மஞானத்தை அடையும்

## प्रथमा वल्ली

ॐ उशन् ह वै वाजश्रवसः, सर्ववेदसं ददौ। तस्य ह नचिकेता नाम पुत्र आस ॥ १.१ ॥

तꣳह कुमारꣳ सन्तं दक्षिणासु नीयमानासु, श्रद्धाऽऽविवेश सोऽमन्यत ॥ १.२ ॥

पीतोदका जग्धतृणा दुग्धदोहा निरिन्द्रियाः। अनन्दा नाम ते लोकास्तान् स गच्छति ताददत् ॥ १.३ ॥

## ப்ரதமா வல்லீ

ஓம் உஶன் ஹ வை வாஜஶ்ரவஸ:, ஸர்வவேதஸம் ததௌ। தஸ்ய ஹ நசிகேதா நாம புத்ர ஆஸ ॥ 1.1 ॥

த꣫ஹ குமார꣫ ஸந்தம், தக்ஷிணாஸு நீயமாநாஸு, ஶ்ரத்தாऽऽவிவேஶ, ஸோऽமன்யத ॥ 1.2 ॥

பீதோதகா, ஜக்த-த்ருணா, துக்த-தோஹா, நிரிந்த்ரியா:। அநந்தா நாம தே லோகாஸ்-தான் ஸ கச்சதி தா ததத் ॥ 1.3 ॥

## முதல் வல்லீ

1.1. (உயர்ந்த பயனில்) இச்சை உடையவராய் வாஜசிரவஸ் (விசுவஜித் என்னும் யாகத்தில்) உடைமை அனைத்தையும் தானம் செய்தார் என்பது பிரசித்தம். அவருக்கு நசிகேதஸ் என்ற புத்திரன் இருந்தான்.

1.2. தக்ஷிணைகள் கொண்டுவரப்படும்போது நசிகேதஸ் எனும் அவ்விளங்குமாரனிடம் சிரத்தையின் ஆவேசம் உண்டாயிற்று. அவன் (பின்வருமாறு) சிந்திக்கலானான்.

1.3. "நீருங் குடித்தாகிப் புல்லுந்தின்ருகிப் பாலுங்கறந்

உபாயமும்; மூன்ருவதில் ஜீவாத்ம பரமாத்மாக்களின் சம்பந்தமும் ஜீவன் மரணத்தை அதிக்கிரமிக்கும் யோகமார்க்கமும் விவரிக்கப்படுகின்றன. பின் மூன்று வல்லிகளில் இவ்விஷயங்கள் மீண்டுந் தெளிவுபடுத்தப்படுவதுடன் கர்மகதி, புனர்ஜன்மம், யோகி சரீரத்தை விட வேண்டிய கிரமம் முதலியவைகளுங் கூறப்படுகின்றன.

1.1. வாஜசிரவஸ்—வாஜம் என்ருல் அன்னம். ஶ்ரவ:—கீர்த்தி அன்னதானத்தால் கீர்த்தி வாய்ந்தவன். அவனுடைய பிள்ளை வாஜசிரவஸ்.

सहोवाच पितरं तत कस्मै मां दास्यसीति। द्वितीयं तृतीयं त॰होवाच, मृत्यवे त्वा ददामीति ॥ १.४ ॥

बहूना-मेमि प्रथमो, बहूना-मेमि मध्यमः ॥ कि॰स्वि-द्यमस्य कर्तव्यं यन्मयाद्य करिष्यति ॥ १.५ ॥

अनुपश्य यथा पूर्वे, प्रतिपश्य तथा परे। सस्यमिव मर्त्यः पच्यते, सस्यमिवाजायते पुनः ॥ १.६ ॥

ஸஹோவாச பிதரம் தத கஸ்மை மாம் தாஸ்யஸீதி। த்விதீயம், த்ருதீயம், த॰ஹோவாச, ம்ருத்யவே த்வா ததாமீதி ॥ 1.4 ॥

பஹூனா-மேமி ப்ரதமோ, பஹூனா-மேமி மத்த்யம:। கி॰ஸ்வித் யமஸ்ய கர்த்தவ்யம், யன்மயாத்ய கரிஷ்யதி ॥ 1.5 ॥

அனுபஶ்ய யதா பூர்வே, ப்ரதிபஶ்ய ததா பரே। ஸஸ்யமிவ மர்த்ய: பச்யதே, ஸஸ்யமிவாஜாயதே புன: ॥ 1.6 ॥

---

தாகி இந்திரியமுமற்றதாயுள்ள அவற்றை (கிழட்டுப் பசுக்களை) கொடுப்பவன் உண்மையில் ஆனந்தமற்ற உலகங்கள் எவைகளோ அவற்றையே அடைவான்.''

1.4 (பின்) அவன் தகப்பனரை அணுகி "அப்பா! என்னை யாருக்குத் தானம் செய்யப்போகிறீர்கள்?'' என்றான், இருமுறையும் மும்முறையும். அவனை நோக்கி (தகப்பனர் கோபத்தால்) "உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன்'' என்றார்.

1.5. (சீடர்களாகிய பலருள் நான் முதலிற் செல்வேன்; (இன்றேல்) நடுவிற் செல்வேன். யமனுக்குச் செய்தற்குரியது என்ன இருக்கிறது, (என் தகப்பனர்) இப்போது என்னால் எதை (அவருக்குச்) செய்யக்கூடும் (என்று நசிகேதஸ் சிந்தித்தான்).

1.6. 'முன்னோர் எங்ஙனம் இருந்தனர் என்பதை ஊன்றிப் பார்த்து அப்படியே மற்றையோர் (இருக்கவேண்டும்) என்பதையும் பார்த்து (அங்ஙனமே நடந்து கொள்ளுதல் வேண்டும்).

---

தானத்தில் ஏற்பட்ட குற்றம் தகப்பனுக்குப் பிரியமான தன்னைத் தானம் செய்வதால் நீங்கும் என்று எண்ணி அங்ஙனம் கேட்டான்.

1.6 பூண்டுபோல்—மழையால் பூண்டு முளைப்பதுபோல் சஞ்சித கர்மத்தால் இறந்த மனிதன் வேறு சரீரத்தை அடைகிறான்.

वैश्वानरः प्रविश-त्यतिथि-र्ब्राह्मणो गृहान् ॥ तस्यैताꣳ शान्ति कुर्वन्ति हर वैवस्वतोदकम् ॥ १.७ ॥

आशा-प्रतीक्षे सङ्गतꣳ सूनृतां चेष्टापूर्ते पुत्रपशूꣳश्च सर्वान्। एतद्-वृङ्क्ते पुरुषस्याल्पमेधसो, यस्यानश्नन् वसति ब्राह्मणो गृहे ॥ १.८ ॥

வைஶ்வாநர: ப்ரவிஶத்-யதிதிர்-ப்ராஹ்மணோ க்ருஹான் । தஸ்யைதாꣳ ஶாந்திம் குர்வந்தி, ஹர வைவஸ்வதோதகம் ॥ 1.7 ॥

ஆஶா-ப்ரதீக்ஷே, ஸங்கதꣳ ஸூந்ருதாஞ்-சேஷ்டாபூர்த்தே புத்ரபஶூꣳஶ்ச ஸர்வான் । ஏதத் வ்ருங்க்தே புருஷஸ்யால்ப-மேதஸோ, யஸ்யாநஶ்னன் வஸதி ப்ராஹ்மணோ க்ருஹே ॥ 1.8 ॥

---

மனிதன் பூண்டுபோல் அழிகிறான், மீண்டும் பூண்டுபோல் உண்டாகிறான் '.

(நசிகேதஸ் இவ்விதம் சொல்லித் தகப்பனாரின் உத்திரவு பெற்று யமஉலகம் சேர்ந்தான். அப்போது யமதர்மராஜன் மனையில் இல்லை. அவர் வரும்வரை மூன்று நாள் நசிகேதஸ் அவர் வீட்டு வாயிலில் பட்டினியாயிருந்தான்).

1.7. 'அதிதியாகிய பிராம்மணனாய் வைசுவானர அக்னியே வீட்டில் நுழைகிறான். அவனுக்கு (அர்க்கியபாத்திய வடிவான) இந்த சாந்தியைச் (சாதுக்கள்) செய்கிறார்கள். வைவஸ்வதரே! ஜலத்தைக்கொண்டு வாரும்' (என்று யமனிடம் அங்குள்ளோர் கூறினர்).

1.8. 'எந்த அறிவீனனான மனிதனுடைய வீட்டில் ஒரு பிராம்மணன் சாப்பாடின்றித் தங்குகிறானோ அவனுடைய ஆசைகளும் ஸங்கல்பங்களும் நல்லோரிணக்கமும் நல்ல வார்த்தைகளும் தேவபூஜையும் மனிதசேவையும், மக்களும் பசுக்களும் ஆகிய அனைத்தையும் அக்னிவடிவாகிய அவன் (பொசுக்கி) நசிக்கச் செய்கிறான்'.

---

1.7. ஒ—'அக்னே-ரப்ப்யாகதோ மூர்த்தி:' அக்னியே மானிட வடிவில் வந்த அதிதி (பாகவதம்).

तिस्रो रात्री-र्यदवात्सी-र्गृहे मेऽनश्नन् ब्रह्मन्नतिथि-र्नमस्यः। नमस्तेऽस्तु ब्रह्मन् स्वस्ति मेऽस्तु तस्मात् प्रति त्रीन् वरान् वृणीष्व ॥ १.९ ॥

शान्तसंकल्पः सुमना यथा स्याद्वीतमन्यु-र्गौतमो माभिमृत्यो। त्वत्प्रसृष्टं माभिवदेत् प्रतीत एतत्त्रयाणां प्रथमं वरं वृणे ॥ १.१० ॥

திஸ்ரோ ராத்ரீர்-யதவாத்ஸீர்-க்ருஹே மேऽனஶ்னன் ப்ரஹ்மன்-னதிதிர் நமஸ்ய: ॥ நமஸ்தேऽஸ்து ப்ரஹ்மன், ஸ்வஸ்தி மேऽஸ்து, தஸ்மாத் ப்ரதி த்ரீன் வரான் வ்ருணீஷ்வ ॥ 1.9 ॥

ஶாந்தஸங்கல்ப:, ஸுமனா யதா ஸ்யாத், வீதமன்யுர்-கௌதமோ மாபிம்ருத்யோ। த்வத்ப்ரஸ்ருஷ்டம், மாபிவதேத் ப்ரதீத, ஏதத் த்ரயாணாம் ப்ரதமம் வரம் வ்ருணே ॥ 1.10 ॥

---

1.9. (யமன் கூறுவது)—'பிராம்மணனே! வணங்கத்தக்க அதிதியாகிய நீ மூன்று இரவு சாப்பிடாமல் என் வீட்டில் இருந்து விட்டதால் (அக்குற்றத்தைப் போக்க) உன்னை நமஸ்கரிக்கின்றேன். பிராம்மணனே! எனக்கு நன்மை உண்டாக வேண்டும். அதற்காக நீ தனித்தனியே (மூன்று இரவுகளுக்காக) மூன்று வரன்களைக் கேட்டுக்கொள்.'

1.10. 'யமனே! (என் தகப்பனார்) கௌதமர் என்னைக் குறித்துச் சாந்த ஸங்கல்பமுடையவராகவும் கலக்கமற்ற மனதுடையவராகவும் கோபமில்லாதவராகவும் ஆகட்டும். உன்னால் விடப்பட்ட என்னைப் பிரீதியுடன் ஏற்று ஆசிர்வதிக்கட்டும். இதை மூன்றினுள் முதல் வரமாக நான் கோருகிறேன்'.

---

1.10. ஸாவித்திரி யமனிடம் கேட்ட வரத்துடன் இதை ஒப்பிடுக.

1.11. 'ஔத்தாலக ஆருணி'—உத்தாலகன் என்று பெயருடையவனும் அருணகோத்திரத்தில் பிறந்தவனும் கௌதமன் எனப்பட்டவனும் ஆகிய வாஜசிரவஸ்.

यथा पुरस्ताद्भविता प्रतीत औद्दालकि-रारुणि-र्मत्प्रसृष्टः। सुख॰ रात्रीः शयिता वीतमन्यु-स्त्वां ददृशिवान् मृत्युमुखात् प्रमुक्तम् ॥ १.११ ॥

स्वर्गे लोके न भयं किंचनास्ति, न तत्र त्वं, न जरया बिभेति। उभे तीर्त्वाशनायापिपासे शोकातिगो मोदते स्वर्गलोके ॥ १.१२ ॥

स त्वमग्नि॰ स्वर्ग्यमध्येषि मृत्यो प्रब्रूहि त॰ श्रद्दधानाय मह्यम्। स्वर्गलोका अमृतत्वं भजन्त एतद् द्वितीयेन वृणे वरेण ॥ १.१३ ॥

யதா புரஸ்தாத் பவிதா ப்ரதீத ஔத்தாலகி-ராருணிர்-மத்-ப்ரஸ்ருஷ்ட: । ஸுக॰ ராத்ரீ: ஶயிதா வீதமன்யுஸ்-த்வாம் தத்ருஶிவான், ம்ருத்யுமுகாத் ப்ரமுக்தம் ॥ 1.11 ॥

ஸ்வர்க்கே லோகே ந பயம் கிஞ்சனாஸ்தி, ந தத்ர த்வம், ந ஜரயா பிபேதி । உபே தீர்த்வாஶனாயாபிபாஸே, ஶோகாதிகோ, மோததே ஸ்வர்க்கலோகே ॥ 1.12 ॥

ஸ த்வ-மக்னி॰ ஸ்வர்க்ய-மத்த்யேஷி, ம்ருத்யோ, ப்ரப்ரூஹி த॰ ஶ்ரத்ததானாய மஹ்யம் । ஸ்வர்க்கலோகா அம்ருதத்வம் பஜந்த, ஏதத்-த்விதீயேன வ்ருணே வரேண ॥ 1.13 ॥

---

1.11. '(உன்னுடைய தகப்பனார்) ஔத்தாலக ஆருணி (நான் அளிக்கும் வரத்தால் கவலையினின்று) என்னால் விடுவிக்கப்பட்டவராகவும் முன்னிருந்தது போலவே பிரீதியுடையவராகவும் ஆவார். மரணத்தின் வாயினின்று விடுபட்ட உன்னை ஆவலுடன் பார்த்துக் கோபமில்லாதவராகவும் இரவு நேரங்களில் சுகமாய்த் தூங்குபவராகவும் ஆவார்'.

1.12. 'சுவர்க்கலோகத்தில் சிறிதும் பயமில்லை. அங்கு நீர் (யமன்) இல்லை. கிழத்தனத்தால் பயப்படுவதில்லை. பசி தாகம் இரண்டையுங் கடந்து சோக மற்றவனாய் சுவர்க்கலோகத்தில் (அதை யடைந்தவன்) இன்புறுகிறான்.

1.13. 'சுவர்க்க ஸம்பந்தமான அக்னிவித்தையை நீ அறிவாய். யமனே! சிரத்தையுடன் கூடிய எனக்கு நீ அதை உபதேசித்தருளல் வேண்டும். சுவர்க்கலோகம் எய்தியவர்கள்

प्र ते ब्रवीमि तदु मे निबोध, स्वर्ग्यमग्निं नचिकेत प्रजानन्। अनन्तलोकाप्ति-मथो प्रतिष्ठां, विद्धि त्वमेनं निहितं गुहायाम् ॥ १.१४ ॥

लोकादि-मग्निं तमुवाच तस्मै, या इष्टका यावतीर्वा यथा वा। स चापि तत्प्रत्यवद-द्यथोक्त-मथास्य मृत्युः पुनरेवाह तुष्टः ॥ १.१५ ॥

ப்ர தே ப்ரவீமி, தது மே நிபோத, ஸ்வர்க்ய-மக்னிம், நசிகேத: ப்ரஜானன் । அனந்தலோகாப்தி-மதோ ப்ரதிஷ்ட்டாம், வித்தி த்வமேனம், நிஹிதம் குஹாயாம் ॥ 1.14 ॥

லோகாதி-மக்னிம் தமுவாச தஸ்மை, யா இஷ்டகா, யாவதீர்வா, யதா வா ॥ ஸசாபி தத் ப்ரத்யவதத் யதோக்த-மதாஸ்ய ம்ருத்யு:, புனரேவாஹ துஷ்ட: ॥ 1.15 ॥

---

அடையும் தெய்வீக நிலை எதுவோ அதை (அதைப்பற்றிய ஞானத்தை) இரண்டாவது வரத்தால் கோருகிறேன்'.

1.14. 'நசிகேதஸே! சுவர்க்க ஸம்பந்தமான அக்கினி வித்தையை நன்கறிந்த நான் அதை உனக்குக் கூறுவேன். நீ அதைச் செவ்வனே தெரிந்து கொள்வாயாக. சுவர்க்கலோகத்தை யடைவதற்குச் சாதனமாயுள்ள இதை மேலும் (உலகனைத்தும்) நிலைபெறும் இடமாயும் (புத்தி) குகையில் வைக்கப்பட்டுள்ளதாயும் நீ அறிந்து கொள்'.

1.15. சுவர்க்கத்திற்குக் காரணமான இவ்வக்கினிவித்தை

---

1.14. 'நிஹிதம் குஹாயாம்'—புத்தி குகையில் வைக்கப்பட்டுள்ளது. ஒ—சரீரத்துக்கு ஏன் சரீரம் எனப்பெயர்? ஞானக்கினி, தர்சனக்கினி, கோஷ்டாக்கினி என்ற மூன்று அக்கினிகள் இதை ஆசிரயத்திருப்பதால். கோஷ்டாக்கினி சாப்பிட்டதைச் சமைக்கிறது; தர்சனக்கினி ரூபங்களைக்காண்கிறது; ஞானக்கினி நல்லதுங்கெட்டதுமான கர்மங்களை அறிகிறது. இவைகளின் ஸ்தானம் மூன்று; வயிற்றில் கோஷ்டாக்கினி 'கார்ஹபத்யம்', முகத்தில் தர்சனக்கினி 'ஆஹவனீயம்', இருதயத்தில் ஞானக்கினி 'தக்ஷிணக்கினி'. ஆத்மா, யஜ்ஞம் செய்பவன். (கர்ப்போபநிஷத்து.) வெளியில் நிகழும் யஜ்ஞம் உள்ளே நிகழும் யஜ்ஞத்தின் பிரதீகமே யாகும்.

1.15. ஒ—(ஸ ஏவ ஸர்வலோகாதிஸ்-தம் ஜ்ஞாத்வா முச்யதே

तमब्रवीत् प्रीयमाणो महात्मा वरं तवेहाद्य ददामि भूयः।
तवैव नाम्ना भविताय-मग्निः सृंकां चेमा-मनेकरूपां गृहाण
॥ १.१६ ॥

त्रिणाचिकेत-स्त्रिभिरेत्य सन्धिं त्रिकर्मकृ-त्तरति जन्ममृत्यू।
ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा निचाय्येमाꣳ शान्ति-मत्यन्त-मेति
॥ १.१७ ॥

தமப்ரவீத் ப்ரீயமாணோ மஹாத்மா வரம் தவேஹாத்ய ததாமி பூய: । தவைவ நாம்னா பவிதாயமக்னி: ஸ்ருங்காஞ்சேமா-மனேக-ரூபாம் க்ருஹாண ॥ 1.16 ॥

த்ரிணாசிகேதஸ்-த்ரிபிரேத்ய ஸந்திம், திரிகர்மக்ருத், தரதி ஜன்ம-ம்ருத்யூ । ப்ரஹ்மஜஜ்ஞம், தேவமீட்யம், விதித்வா, நிசாய்யேமாꣳ ஶாந்தி-மத்யந்த-மேதி ॥ 1.17 ॥

---

யையும் அதில் (வேள்விக் குண்டம் அமைவதற்கு உபயோகிக்கும்) கற்கள் எவ்வகையானவை, என்ன கணக்குடையவை, எங்ஙனம் பயன் படுபவை என்பவற்றையும் அவனுக்குக் கூறினார். அவனும் அதைக் கூறியபடியே திருப்பிச் சொன்னான். அதனால், ஸந்தோஷமடைந்த யமன் மீண்டும் உரைக்கலானார்.

1.16. பிரீதியடையந்த மஹாத்மாவாகிய யமன் ‘ இப்போது இங்கு மீண்டும் ஒரு வரத்தை உனக்குத் தருகிறேன். உன் பேராலேயே இவ்வக்னிவித்தை உலகில் பிரசித்தமாகட்டும். பல வர்ணங்களுள்ள இந்த இரத்தின மாலையையும் பெற்றுக்கொள் ’ என்று அவனிடம் கூறினார்.

1.17. நாசிகேத வேள்வியை மூன்றுதடவை அனுஷ்டித்தவன் (அத்தியயனம் செய்து, அறிந்து, அனுஷ்டித்தவன்; வேதம்,

---

த்ருவம் । இஷ்டகா தேவதாம் விஷ்ணும் ஷஷ்ட்யுத்தரஶதத்ரிகம்). 360 (இஷ்டகா) கற்கள் (360 நாட்களுடன் காலரூபியாயிருக்கும்) விஷ்ணுவின் பிரதீகம். அவனே உலகுக்கெல்லாம் காரணம். அவனையறிந்தே ஒருவன் விடுபடுகிறான். (கதிஸாரம்).

1.16. இரத்தின மாலை—மனதைக் கவரும் கர்ம மார்க்கத்தைக் குறிக்கும், இதை நசிகேதஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. (கட. 2. 3. பார்க்க)

त्रिणाचिकेत-स्त्रयमेत-द्विदित्वा य एवं विद्वाꣳश्चिनुते नाचिकेतम् । स मृत्युपाशान् पुरतः प्रणोद्य शोकातिगो मोदते स्वर्गलोके ॥ १.१८ ॥

एष तेऽग्नि-र्नचिकेतः स्वर्ग्यो यमवृणीथा द्वितीयेन वरेण । एतमग्निं तवैव प्रवक्ष्यंति जनास-स्तृतीयं वरं नचिकेतो वृणीष्व ॥ १.१९ ॥

த்ரிணாசிகேதஸ்-த்ரயமேதத்-விதித்வா ய ஏவம் வித்வாꣳ ஶ்சினுதே நாசிகேதம் । ஸ ம்ருத்யுபாஶான் புரத: ப்ரணோத்ய ஶோகாதிகோ மோததே ஸ்வர்க்கலோகே ॥ 1.18 ॥

ஏஷ தே஽க்னிர் நசிகேத:ஸ்வர்க்யோ யமவ்ருணீதா த்விதீயேன வரேண । ஏத-மக்னிம் தவைவ ப்ரவக்ஷ்யந்தி ஜனாஸஸ்-த்ருதீயம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ ॥ 1.19 ॥

---

ஸ்ம்ருதி, சிஷ்டாசாரம் ஆகிய) மூன்றுடன் தொடர்புடையவனாகி, (யஜ்ஞம், அத்தியயனம், தானம் ஆகிய) மூன்று கர்மங்களைச் செய்கிறவன் பிறப்பு இறப்புக்களைத் தாண்டுகிறான். ஹிரண்யகர்ப்பனிடம் தோன்றியவனையும் அனைத்தையும் அறிபவனையும் போற்றத் தகுந்தவனையும் உள்ள (அக்னி) தேவனை அறிந்து ஆத்மாவாக உணர்ந்து, அளவுகடந்த சாந்தியை எய்துகிறான்.

1.18. நாசிகேதாக்னியை முவ்வகையில் உணர்ந்த எவன் இம் மூன்றையும் உள்ளபடி தெரிந்து கொண்டு நாசிகேதாக்னி உபாசனை செய்கின்றானோ அவன் (அதர்மம், அஞ்ஞானம், ராகம், துவேஷம் முதலிய வடிவுகளில் உள்ள) யமபாசங்களைச் சரீரம் விழுவதற்கு முன்பே உதறிவிட்டுச் சோக மற்றவனாய்ச் சுவர்க்கலோகத்தில் இன்புறுகிறான்.

1.19. நசிகேதஸே! இரண்டாவது வரத்தால் நீ எதை

---

1-18. ஒ—(அபஹத பாப்மானம் அனந்தே ஸ்வர்க்கே லோகே ஜ்யேயே ப்ரதிதிஷ்ட்டதி ப்ரதிதிஷ்ட்டதி) கேன. 4. 9.

த்ரிணாசிகேத:—மனம் வாக்கு காயம் இம் மூன்றையும் ஒன்றாகச் செலுத்தி உள்ளத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவே வேள்வித்தீ என்று

येयं प्रेते विचिकित्सा मनुष्ये ऽस्तीत्येके नाय-मस्तीति चैके ।
एतद्विद्या-मनुशिष्ट-स्त्वयाहं वराणा-मेष वर-स्तृतीयः ॥ १.२० ॥

शतायुषः पुत्रपौत्रान् वृणीष्व बहून् पशून् हस्ति-हिरण्य-मश्वान् । भूमे- र्मह-दायतनं वृणीष्व स्वयं च जीव शरदो यावदिच्छसि । एतत्तुल्यं यदि मन्यसे वरं वृणीष्व वित्तं चिरजीविकां च ॥ १.२४ ॥

யேயம் ப்ரேதே விசிகித்ஸா மனுஷ்யே அஸ்தீத்யேகே நாய-மஸ்தீதி-சைகே । ஏதத் - வித்யா - மனுஶிஷ்டஸ்-த்வயாஹம் வராணா-மேஷ வரஸ்-த்ருதீய: ॥ 1.20 ॥

ஶதாயுஷ: புத்ர-பௌத்ரான் வ்ருணீஷ்வ பஹூன் பஶூன் ஹஸ்தி-ஹிரண்ய-மஶ்வான் । பூமேர்-மஹ-தாயதனம் வ்ருணீஷ்வ ஸ்வயஞ்ச ஜீவ ஶரதோ யாவதிச்சஸி । ஏதத் துல்யம் யதி மன்யஸே வரம் வ்ருணீஷ்வ வித்தம் சிரஜீவிகாஞ்ச ॥ 1.24 ॥

---

விரும்பினுயோ அந்தச் சுவர்க்க சம்பந்தமான அக்னிவித்தை உனக்கு அளிக்கப்பட்டது. இந்த அக்னிவித்தையை ஜனங்கள் இனி உன்னுடையதாகவே சொல்லுவார்கள். நசிகேதஸே! மூன்ருவது வரத்தைக் கேட்பாய்.

1.20. நசிகேதஸ் கூறுவது—பூதவுடலை விட்டுக் கிளம்பின ஜீவன் விஷயத்தில்—இவன் இங்ஙனமிருக்கிருன் என்று சிலரும் அவன் அங்ஙனமில்லை என்று சிலரும்—எதைப்பற்றி வாதிக்கின்றனரோ—அதைப்பற்றிய உண்மையை உனது உபதேசத்தால் அறியக் கடவேன். வரங்களுள் இதுவே மூன்ருவது வரமாகும்.

1.24. யமன் கூறுவது—நூருண்டு வாழும் புத்திர பௌத்

---

அறிந்து எல்லா ஆசைப்பற்றுகளையும் அந்தத்தீயில் எறிந்தவன் பரம பதம் அடைவான் என்பது உட்பொருள். (உபநிஷதப்பலகணி—ராஜாஜி).

1.20. இந்தக் கேள்விக்கு நேர்விடை கட. உப. 5.6-9ல் பார்க்க.

1.24. செவ்வையாய்ப் பரிசோதிக்கப்பட்ட சிஷ்யனுக்கே பிரம்ம வித்தை சொல்லத்தக்கது என்ற அபிப்பிராயத்தால் யமன் இங்ஙனம் கூறினுன்.

நெருப்பைத் தூண்டிவிட்ட பின்னரே ஹோமம் செய்ய வேண்டும்; அங்ஙனம் மனதைக் கிளறிவிட்டுப் பின் உபதேசம் செய்யவேண்டும்.

श्वोभावा मर्त्यस्य यदन्तकैतत् सर्वेन्द्रियाणां जरयन्ति तेजः। अपि सर्वं जीवित-मल्पमेव तवैव वाहा-स्तव नृत्तगीते ॥ १.२६॥

न वित्तेन तर्पणीयो मनुष्यो लप्स्यामहे वित्त-मद्राक्ष्म चेत्त्वा॥ जीविष्यामो याव-दीशिष्यसि त्वं, वरस्तु मे वरणीयः स एव ॥ १.२७ ॥

ஶ்வோபாவா மர்த்யஸ்ய யதந்தகைதத் ஸர்வேந்த்ரியாணும் ஜரயந்தி தேஜ: । அபி ஸ்ர்வம் ஜீவித-மல்பமேவ தவைவ வாஹாஸ்-தவ ந்ருத்தகீதே ॥ 1.26 ॥

ந வித்தேன தர்ப்பணீயோ மனுஷ்யோ லப்ஸ்யாமஹே வித்த-மத்ராக்ஷ்ம சேத்-த்வா॥ ஜீவிஷ்யாமோ யாவ-தீஶிஷ்யஸி த்வம் வரஸ்து மே வரணீய: ஸ ஏவ ॥ 1.27 ॥

---

திரர்களேயும், பல பசுக்கள், யானைகள், குதிரைகள், பொன் முதலியவைகளேயும் விரும்பிப்பெற்றுக்கொள். பூமியில் பரந்த அரசைக் கேட்டுக்கொள். நீயும் எத்தனை வருஷங்கள் வாழ விரும்புகிருயோ அவ்வளவு காலம் வாழலாம். இதுபோன்று செல்வத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் ஸமமாக வேறு எந்த வரத்தை நீ விரும்பினுலுங் கேட்டுக்கொள்.

1.26. 'அந்தகனே! இவையெல்லாம் (இன்றைக்கிருந்தாலும்) நாளேக்கு அழிவனவேயன்ருே! மனிதனுடைய எல்லா இந்திரியங்களின் வலிமையையும் இவை அழிப்பவை யன்ருே! எவ்வளவு நீண்ட வாழ்வாயினும் அல்பமே. (முடிவில்) வாகனங்களும் ஆடல் பாடல்களும் (இறந்துபட்டு) உன்னுடையவையே யாகின்றன.

1.27. 'மனிதன் ஒருபோதும் பொருளால் திருப்தியடையக் கூடியவனன்று. உன்னைத் தரிசித்தால் (நிச்சயமாய் வேண்டிய)

---

1.26. கொடுப்பது போல் காட்டி மறுபடியும் உன்வசமே திரும்பும் பொருளேக்கொடுக்கிறேன் என்கிருய். இவை உனதேயாகும். என்றிருந்தாலும் ஒரு நாள் கொண்டு போய்விடுவாய். ஆகையால் இவை உண்மையில் கொடுத்த வரங்கள் ஆகமாட்டா.

1.27. நீ தான் ஆயுளேயும் பொருளேயும் அபகரித்துச் செல்பவன்.

अजीर्यता-ममृताना-मुपेत्य जीर्यन् मर्त्यः क्वधःस्थः प्रजानन्। अभिध्यायन् वर्णरतिप्रमोदा-नतिदीर्घे जीविते को रमेत ॥ १.२८ ॥

यस्मिन्निदं विचिकित्सन्ति मृत्यो, यत्सांपराये महति ब्रूहि नस्तत् ॥ योऽयं वरो गूढ-मनुप्रविष्टो नान्यं तस्मान्नचिकेता वृणीते ॥ १.२९ ॥

அஜீர்யதா-மம்ருதாநா-முபேத்ய ஜீர்யன் மர்த்ய:க்வத: ஸ்த்த: ப்ரஜானன் । அபித்த்யாயன் வர்ண-ரதி-ப்ரமோதா-னதி தீர்க்கே ஜீவிதே கோ ரமேத ॥ 1.28 ॥

யஸ்மிந்நிதம் விசிகித்ஸந்தி ம்ருத்யோ யத் ஸாம்பராயே மஹதி ப்ரூஹி நஸ்தத் । யோऽயம் வரோ கூட-மனுப்ரவிஷ்டோ நான்யம் தஸ்மாந் நசிகேதா வ்ருணீதே ॥ 1.29 ॥

---

பொருளை யடைவோம். (அதைத் தனியாய்ப் பிரார்த்திக்க வேண்டியதில்லை). நீ எங்களை ஆண்டு அனுக்கிரகிக்கும் வரை வாழ்வையும் அடைவோம். (ஆகையால்) என்னுல் விரும்பப் படும் வரம் (நான் ஏற்கெனவே கேட்ட) அதுவே யாகும்.

1.28. மூப்பும் மரணமும் இல்லாதவர்களிடம் சேர்ந்து அவர்களிடம் பெறக்கூடிய பெரும் பயனை உணர்ந்தும், மூப்புக் கும் மரணத்துக்கும் அடிமையாய் பூமியில் வாழும் எந்த மனிதன் (சிற்றின்பங்களின் சிறுமையைக் கண்டு கொண்ட பின்னும்) பாடல் ஆடல் முதலிய சுகங்களை எண்ணி இங்கே நீண்ட வாழ்வில் ரமிப்பான் ?

1.29. மிருத்யுதேவனே ! எந்தப் பெரியதான பரலோக விஷயத்தில் ஜனங்கள் ஸம்சயிக்கின்றுர்களோ அதைப்பற்றி எங்களுக்குக் கூறியருளுதல் வேண்டும். எளிதில் புத்திக்கெட் டாததாய் மறைந்துள்ள அவ்விஷயத்தைப்பற்றிய வரனை யன்றி வேறென்றையும் நசிகேதஸ் வேண்டவில்லை.

---

உன்னைக் கண்டு உன் அருள் பெற்றுல் அவற்றை இச்சிப்பவர்க்கு அவை தாமே கிடைக்கும். அறிவாளி அவற்றைப் பொருட்படுத்த மாட்டான்.

## द्वितीया वल्ली

अन्यच्छ्रेयो ऽन्यदुतैव प्रेयस्ते उभे नानार्थे पुरुषँ सिनीतः। तयोः श्रेय आददानस्य साधु भवति, हीयते ऽर्थाद्य उ प्रेयो वृणीते ॥ २.१ ॥

श्रेयश्च प्रेयश्च मनुष्य-मेतस्तौ संपरीत्य विविनक्ति धीरः। श्रेयो हि धीरो ऽभिप्रेयसो वृणीते प्रेयो मन्दो योगक्षेमाद् वृणीते ॥ २.२ ॥

## த்விதீயா வல்லீ

அன்யச்-ச்ரேயோ ஽ன்யதுதைவ ப்ரேயஸ்-தே உபே நானர்த்தே புருஷ॰ ஸிநீத:। தயோ: ஶ்ரேய ஆததானஸ்ய ஸாது பவதி, ஹீயதே அர்த்தாத் ய உ ப்ரேயோ வ்ருணீதே ॥ 2.1 ॥

ஶ்ரேயஶ்ச ப்ரேயஶ்ச மனுஷ்ய-மேதஸ்-தௌ ஸம்பரீத்ய விவிநக்தி தீர: । ஶ்ரேயோ ஹி தீரோ அபிப்ரேயஸோ வ்ருணீதே ப்ரேயோ மந்தோ யோகக்ஷேமாத் வ்ருணீதே ॥ 2.2 ॥

---

## இரண்டாவது வல்லீ

2.1. யமன் கூறியது—'ச்ரேயஸ்' என்பது ஒன்று; 'ப்ரேயஸ்' என்பது அதினின்று முற்றும் வேருனது. அவை இரண்டும் வெவ்வேறு விஷயங்களில் புருஷனை இழுத்துக் கட்டுப் படுத்துகின்றன. அவற்றுள் சிரேயஸ்ஸைப் பின்பற்றியவனுக்கு உயர்ந்த நன்மை உண்டாகிறது; ப்ரேயஸ்ஸைப் பின்பற்றிய வன் புருஷார்த்தத்தினின்று நழுவுகிருன்.

2.2. சிரேயஸ்ஸூம் பிரேயஸ்ஸூம் மனிதனை நாடிவருகின்றன. தீரன் அவைகளை நன்கு பரிசீலனை செய்து அவற்றின் வேறுபாட்டை உணர்கிருன். தீரன் பிரேயஸ்ஸைவிட்டு சிரேயஸ்ஸை வரிக்கிருன்; மந்தபுத்தியுள்ளவன் பொருளை ஈட்டுதலிலும் காப்பாற்றுவதிலும் நோக்கங்கொண்டு பிரேயஸ்ஸை வரிக்கிருன்.

स त्वं प्रियान् प्रियरूपाँश्च कामान् अभिध्यायन् नचिकेतोऽत्यस्राक्षीः ॥ नैतां सृङ्कां वित्तमयी-मवाप्तो यस्यां मज्जन्ति बहवो मनुष्याः ॥ २.३ ॥

दूरमेते विपरीते विषूची अविद्या या च विद्येति ज्ञाता । विद्याभीप्सिनं नचिकेतसं मन्ये न त्वा कामा बहवोऽलोलुपन्त ॥ २.४ ॥

ஸ த்வம் ப்ரியான் ப்ரியரூபாம்ஶ்ச காமான் அபித்த்யாயந் நசிகேதோऽத்யஸ்ராக்ஷீ: । நைதாம் ஸ்ருங்காம் வித்தமயீ-மவாப்தோ யஸ்யாம் மஜ்ஜந்தி பஹவோ மனுஷ்யா: ॥ 2.3 ॥

தூரமேதே விபரீதே விஷூசீ அவித்யா யா ச வித்யேதி ஜ்ஞாதா । வித்யாபீப்ஸினம் நசிகேதஸம் மன்யே ந த்வா காமா பஹவோ ऽலோலுபந்த ॥ 2.4 ॥

---

2.3. நசிகேதஸ்ஸே! நீயோ உள்ளத்தைக்கவரும் பிரியமான காமங்களை அற்பமென்று கண்டு விட்டொழித்தாய். எதில் (எந்தப் பொருள் நாட்டத்தில்) பல மனிதர்கள் ஆழ்ந்து மடிகின்ருர்களோ அந்த மாயப்பொருள் வழியை நீ அடையவில்லை.

2.4. அவித்தையும், வித்தை என உணரப்படுவது எதுவோ அதுவும், கொண்டு செல்லும் வழிகள் ஒன்றுக்கொன்று வெகு தூரம் வேறு பட்டவை. நசிகேதஸே! உன்னை வித்தையை நாடியவன் என அறிகின்றேன்; ஏனெனில் பல வகைப்பட்ட காமபோகங்களும் உன்னை அசைக்கவில்லையல்லவா?

---

2.3. ஸ்ருங்காம்—(ஶ்ருங்கலை) சங்கிலிபோல் மனிதனைப் பந்தத்துக் குள்ளாக்குவதால் நசிகேதஸ் கர்ம மார்க்கத்தை (மாயப்பொருள் வழியை) விரும்பவில்லை. கட. உப. 1-16 பார்க்க.

'சிரேயஸ்'—உயர்ந்த நன்மையைத் தருவது; மோக்ஷசாதனம். 'ப்ரேயஸ்'—குறுகிய பார்வையுள்ளவர்க்குப் பிரியமாய்த் தோன்றும் சிற்றின்பசாதனம்.

2.4. ஒ—(க்ஷரந்த்வவித்யா ஹ்யம்ருதந்து வித்யா) அழிவது அவித்தை, அழியாதது வித்தை (சுவே. உப. 5.1). வித்தையும் அவித்தையும் ஒளியும் இருளும் போன்றவை. அவித்தையில் பற்று விடாதவன் வித்தையை அடைய முடியாது.

अविद्याया-मन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं-मन्य-मानाः। दन्द्रम्यमाणाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः ॥ २.५ ॥

न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यन्तं वित्त-मोहेन मूढं। अयं लोको नास्ति पर इति मानी पुनः पुन-र्वश-मापद्यते मे ॥ २.६ ॥

அவித்யாயா-மந்தரே வர்த்தமாநா: ஸ்வயந்தீரா: பண்டிதம் மன்யமாநா: । தந்த்ரம்யமாநா: பரியந்தி மூடா அந்தேநைவ நீயமாநா யதாந்தா: ॥ 2.5 ॥

ந ஸாம்பராய: ப்ரதிபாதி பாலம் ப்ரமாத்யந்தம் வித்த-மோஹேன மூடம் । அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ புன: புனர்-வஶ-மாபத்யதே மே ॥ 2.6 ॥

---

2.5. அவித்தையினுள் ஆழ்ந்து கிடக்கும் மூடர்கள் தாமே தீரர்கள் என்றும், பண்டிதர்கள் என்றும் நினைத்துக்கொண்டு தடுமாற்றத்தை யடைந்தவர்களாய், குருடர்களால் வழிகாட்டப் பெற்ற குருடர்களைப்போல் சுற்றிச்சுற்றி வருகின்றனர்.

2.6. பரலோக விஷயமும் ஆத்மஞானமும் அதில் கவன மில்லாதவனுக்கும் பொருளில் மோகமடைந்து மதியிழந்து உள்ள அவிவேகிக்கும் விளங்காது. 'இதுவே லோகம், பரலோகம் என்று ஒன்றுங்கிடையாது' என எண்ணும் அவன் மீண்டும் மீண்டும் மிருத்யுவாகிய என் வசம் அகப்படுகிறான்.

---

2.5. ஒ. மு. 2.8.

2.6. ஒ—(அஸத்ய-மப்ரதிஷ்ட்டம்) கீ. 16.8.9. (ஸம்யமனேத்-வநு பூய) பி. சூ 3.1.13. அஜ்ஞானி செல்லாத நாணயத்தைப் போன்றவன். மீண்டும் உருக்கி வார்ப்பதற்காக யமனிடம் அனுப்பப்படுகிறான்.

श्रवणायापि बहुभिर्यो न लभ्यः शृण्वन्तोऽपि बहवो यन्न विद्युः। आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धाश्चर्यो ज्ञाता कुशलानुशिष्टः ॥ २.७ ॥

न नरेणावरेण प्रोक्त एष सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः। अनन्य-प्रोक्ते गति-रत्र नास्त्यणीयान् ह्यतर्क्य-मणुप्रमाणात्॥२.८॥

ஶ்ரவணாயாபி பஹு᳚ர்பிர்-யோ ந லப்ப்ய: ஶ்ருண்வந்தோऽபி பஹவோ யம் ந வித்யு:। ஆஶ்சர்யோ வக்தா குஶலோऽஸ்ய லப்த்தாஶ்சர்யோ ஜ்ஞாதா, குஶலானுஶிஷ்ட: ॥ 2.7 ॥

ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ ஸு᳚விஜ்ஞேயோ பஹு᳚தா சிந்த்யமான:। அனன்யப்ரோக்தே கதி-ரத்ர நாஸ்த்-யணீயான்-ஹ்யதர்க்ய-மணுப்ரமாணாத் ॥ 2.8 ॥

---

2.7. எதைப் பற்றிய கேள்விகூடப் பலருக்குக் கிட்டுவதில்லையோ, கேட்டிருந்தாலும் எதைப் பலரும் அறியவில்லையோ, அதைப்பற்றிக் கூறுகிறவன் அரிது, அதை அடையும் நிபுணன் அரிது; நிபுணனை ஆசாரியனால் உபதேசிக்கப் பெற்று அதை அறிகிறவன் (அனைத்தினும்) அரிது.

2.8. தாழ்ந்த மனிதனால் சொல்லப்பட்டால் ஆத்மா நன்கு அறிந்து கொள்ளத்தக்கதன்று. (ஏனெனில்) அது பல விதமாய்ச் சிந்திக்கப்பட்டிருக்கிறது. பிரம்மத்திடம் அபேத புத்தியுள்ளவரால் உபதேசிக்கப்பெற்றால் இதில் பலவிதமான விகற்பச்சிந்த

---

2.7. ஒ—(மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு) ஆயிரவர்க்குள் ஒருவன் சித்திபெற முயற்சிக்கின்றான். முயற்சி செய்யும் சித்தர்களுள் யாரோ ஒருவன் என்னை உண்மையில் உணர்கிறான். கீ. 7.3.

ஒ—ஆஶ்சர்யவத் பஶ்யதி கீ. 2.29.

2.8. 'இதுவல்ல, அதுவல்ல' என்று விலக்கும் முறையிலன்றி ஆத்மாவைப்பற்றி உபதேசிக்க வழியில்லை.

ஒ—"பேசரிய ஒளியென்றும் வெளியென்றும் நாதாதி பிறவுமே நிலயமென்றும், தன்னேரிலாததோர் அணுவென்றும் மூவிதத்தன்மை யாங் காலமென்றும் சாற்றிடுஞ் சில சமயமிவையாகி வேறதாய்ச் சதா ஞான வானந்தமாய், என்னையெனே கருணை விளையாட்டிருந்தவா றெம்மனோர் புகல வெளிதோ?" —தாயுமானவர்.

नैषा तर्केण मति-रापनेया प्रोक्तान्येनैव सुज्ञानाय प्रेष्ठ । यां त्वमापः सत्यधृति-र्बतासि त्वादृङ्नो भूयान्नचिकेतः प्रष्टा ॥ २.९ ॥

जानाम्यहँ शेवधिरित्यनित्यं न ह्यध्रुवैः प्राप्यते हि ध्रुवं तत् । ततो मया नचिकेतश्चितोऽग्नि-रनित्यै-र्द्रव्यैः प्राप्तवा-नस्मि नित्यं ॥ २.१० ॥

நைஷா தர்க்கேண மதி-ராபனேயா ப்ரோக்தான்யேனைவ ஸுஜ்ஞாநாய ப்ரேஷ்ட । யாந்த்வமாப: ஸத்யத்ருதிர்ப்-பதாஸி த்வாத்ருங் நோ பூயாந்-நசிகேத: ப்ரஷ்டா ॥ 2.9 ॥

ஜாநாம்யஹம் ஶேவதி-ரித்-யநித்யம் நஹ்யத்த்ருவை: ப்ராப்யதே ஹி த்ருவந் தத் । ததோ மயா நசிகேதஶ்சிதோக்னி-ரநித்யைர்-த்ரவ்யை: ப்ராப்தவா-னஸ்மி நித்யம் ॥ 2.10 ॥

---

னைக்கு இடமே இல்லை. அணுவுக்கும் அணுவாயிருப்பதால் அதைத் தர்க்கத்தால் அறிய முடியாது.

2.9. பிரியத்துக்குகந்த நசிகேதஸே! நீ அடைந்த புத்தி எதுவோ அது தர்க்கத்தால் அடையக் கூடியதல்ல. வேறு (தகுந்த) ஆசாரியனால் உபதேசிக்கப்பட்டால் தான் அது தெளிந்த ஞானத்தின் பொருட்டாகும். நீ உண்மையான திடச் சித்தமுடையவன். ஆச்சரியம்! உன்னைப்போல் கேட்கிறவன் எமக்கு இனியும் கிட்டட்டும்.

2.10. சேமித்த செல்வம் அநித்தியம் என்பதை நான் அறிவேன்; நிலையற்ற பொருள்களால் நிலையுள்ள (ஆன்ம ஞானமாகிய) அச்செல்வத்தை அடைந்து விடமுடியாது தான். ஆனாலும் அநித்தியமான பொருள்களைக்கொண்டு நசிகேதாக்னி

---

2.10. அநித்யைர்-த்ரவ்யை:—அழியும் பொருள்களும் பகவானுக்கு அர்ப்பிக்கப்பட்டால் அழியாப் பலனைப் பெறுதற்குச் சாதனமாம்.

ஒ—'இவ்வாறு புண்ணிய பாவ வடிவான கருமக்கட்டுகளினின்றும் விடுபடுவாய்' (ஶுபாஶுபபலைரேவம் மோக்ஷ்யஸே கர்மபந்தனை:) கீ. 9.29.

कामस्याप्तिं जगतः प्रतिष्ठां क्रतो-रानन्त्य-मभयस्य पारं। स्तोमं मह-दुरुगायं प्रतिष्ठां दृष्ट्वा धृत्या धीरो नचिकेतो ऽत्यस्राक्षीः ॥ २.११ ॥

तं दुर्दर्शं गूढ-मनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणं। अध्यात्म-योगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥ २.१२ ॥

காமஸ்யாப்திஞ் ஜகத: ப்ரதிஷ்ட்டாம் க்ரதோ-ராநந்த்ய-மபயஸ்ய பாரம்। ஸ்தோமம் மஹ-துருகாயம் ப்ரதிஷ்ட்டாம் த்ருஷ்ட்வா த்ருத்யா தீரோ நசிகேதோ ऽத்யஸ்ராக்ஷீ: ॥ 2.11 ॥

தம் துர்த்தர்ஶம், கூட-மனுப்ரவிஷ்டம், குஹாஹிதம், கஹ்வரேஷ்டம், புராணம்। அத்த்யாத்ம-யோகாதிகமேன தேவம் மத்வா தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி ॥ 2.12. ॥

---

என்றால் உபாசிக்கப்பட்டது; அதனால் (கல்பகாலம் வரை நீடித்துள்ள யம பதவியான) நித்தியப் பதவியைப் பெற்றவனானேன்.

2.11. ஆசைகளின் பூர்த்திக்கு எல்லை நிலமும், உலகுக்கெல்லாம் உறைவிடமும், கருமங்களுக்கெல்லாம் முடிவான பயனும், பயமின்மை நிலைபெறும் ஸ்தானமும், எல்லோராலும் போற்றப்படுவதும், அளவுக்கடங்காததும், எங்கும் பரந்து நிற்பதும், உயிர்க்குயிராய் உள்ளதும் ஆகிய ஆன்மநிலையை திடச்சித்தத்தால் உணர்ந்து, நசிகேதஸே! தீரனாகிய நீ அநித்தியமாகிய அனைத்தையும் தாண்டிவிட்டாய்.

2.12. காண்பதற்கரியதும், அனைத்திலும் ஊடுருவி உள்ளுறையும் மறைபொருளும் புத்தி குகையில் நிலைபெற்றதும், உடல்தோறும் வியாபித்து நிற்பதும், பழைமையான பொருளும் ஆகிய அந்த திவ்ய தேஜோமயத்தை அத்தியாத்ம யோகத்தால்

---

2.12. **அத்த்யாத்மயோகம்**—வெளிவிஷயங்களினின்று மனதைத் திருப்பி ஆத்மாவிடத்தில் செலுத்துவது. ஒ. கட. 6.10-11.

**ஹர்ஷஶோகௌ ஜஹாதி**—ஆத்மாவின் உண்மை சொரூபத்தைத் தனக்குள் கண்டபின் மகிழ்ச்சியும் துக்கமும் இரண்டும் அற்றுப்போகும். பரம்பொருளுக்கு நன்மை ஏது, தீமை ஏது? நமது ஆசாபாசங்கள்,

एतच्छ्रुत्वा संपरिगृह्य मर्त्यः प्रवृह्य धर्म्य-मणुमेत-माप्य। स मोदते मोदनीयꣳ हि लब्ध्वा विवृतँ सद्म नचिकेतसं मन्ये ॥२.१३॥

अन्यत्र धर्मा-दन्यत्राधर्मा-दन्यत्रास्मात् कृताकृतात्। अन्यत्र भूताच्च भव्याच्च यत्तत्पश्यसि तद्वद ॥ २.१४ ॥

ஏதச் ச்ருத்வா ஸம்பரிக்ருஹ்ய மர்த்ய: ப்ரவ்ருஹ்ய தர்ம்ய-மணு-மேத-மாப்ய। ஸ மோததே மோதனீயꣳ ஹி லப்த்வா விவ்ருதꣳ ஸத்ம நசிகேதஸம் மன்யே ॥ 2.13 ॥

அன்யத்ர தர்மா-தன்யத்ராதர்மா-தன்யத்ராஸ்மாத் க்ருதா-க்ருதாத்। அன்யத்ர பூதாச்ச பவ்யாச்ச யத்தத் பஶ்யஸி தத்வத ॥ 2.14 ॥

---

உணர்ந்து தீரனானவன் இன்பதுன்பக் கிளர்ச்சிகளை விட்டவனாகின்றான்.

2.13. இதைக் கேட்டு உள்ளபடி உணர்ந்து, தர்மமூலத்தை விவேகத்தால் பிரித்தெடுத்து அணுவாகிய இவ்வான்மாவை அடைந்த மனிதன் எவனோ அவன் ஆனந்திக்கத்தக்கதை யடைந்து ஆனந்திக்கிறான். மோக்ஷ வீடு நசிகேதஸூக்கு வழி திறந்திருப்பதாய் நான் எண்ணுகிறேன்.

2.14. (நசிகேதஸ் கூறுவது)—தருமத்திற்கும் அதருமத்திற்கும் அப்பாற்பட்டதாயும், இந்தக் காரியத்திற்கும் காரணத்திற்கும் அப்பாற்பட்டதாயும், உண்டானதிற்கும் உண்டாகப் போவதற்கும் அப்பாற்பட்டதாயும் உள்ளதாக எதை நீ காண்கிறாயோ அதை எனக்குக் கூறியருள்வாய்.

---

சுகதுக்கங்கள் இவைகளுக்கிடையில் இருப்பினும் அவற்றால் ஆத்மா தொடப்படுவதில்லை. அங்ஙனம் உள்ள ஆத்மாவைக் காண்பதே மோக்ஷம் அல்லது வீடு.

2.14. ஒ—(ப்ரகரணாச்ச) பி. சூ. 1. 2. 10.

सर्वे वेदा यत्पद-मामनन्ति तपाँसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण ब्रवीम्योमित्येतत्
॥ २.१५ ॥

न जायते म्रियते वा विपश्चि-न्नायं कुतश्चिन्न बभूव-
कश्चित् । अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने
शरीरे ॥ २.१८ ॥

ஸர்வே வேதா யத்பத-மாமனந்தி தபா^ஃஸி ஸர்வாணி ச யத் வதந்தி । யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யஞ் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம்-யோமித்-யேதத் ॥ 2.15 ॥

ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந் நாயங் குதஶ்சிந் ந பபூவ கஶ்சித் । அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ ந ஹன்யதே ஹன்யமானே சரீரே ॥ 2.18 ॥

---

(யமன் கூறுவது)—

2.15. வேதங்கள் எல்லாம் எந்தப் பொருளைப் போற்றுகின்றனவோ, தவங்கள் எல்லாம் எதை நாடுகின்றனவோ, எதை விரும்பி பிரம்மசரியத்தை யனுஷ்டிக்கிறார்களோ அந்தப்பதத்தை உனக்குச் சுருக்கிக் கூறுவேன். அது 'ஓம்' என்பதேயாம்.

2.18. இதனுண்மையைத் தெளிவுறக்கண்டவன் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. இந்த ஆத்மா எங்கிருந்தும் உண்டாக வில்லை, இதிலிருந்தும் எதுவும் உண்டாகவில்லை. இது பிறப்பற்றது, என்றுமுள்ளது, அழிவற்றது, அனைத்துக்கும் முன்னுள்ளது, சரீரம் அழிக்கப்படும் போது அழிக்கப்படாமல் நிற்பது.

---

2.15. ஒ—(கதிஸாமான்யாத்) பி. சூ. 1. 1. 10.

2.18. பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை—ஒ. கீ. 2. 20. (தர்ஶயதி ச) பி. சூ. 3. 3. 4.

अणोरणीयान्महतो महीया-नात्मास्य जन्तोर्निहितो गुहायाम् । तमक्रतुः पश्यति वीतशोको धातुः प्रसादान्महिमान-मात्मनः ॥ २.२० ॥

नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन । यमेवैष वृणुते तेन लभ्य-स्तस्यैष आत्मा विवृणुते तनूँ स्वाम् ॥२.२३॥

அணோ-ரணீயான் மஹதோ மஹீயா-னாத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் । தமக்ரது: பஶ்யதி வீதஶோகோ தாது: ப்ரஸாதான் மஹிமான-மாத்மன: ॥ 2.20 ॥

நாயமாத்மா ப்ரவசனேன லப்ப்யோ ந மேதயா ந பஹுனா ஶ்ருதேன । யமேவைஷ வ்ருணுதே தேந லப்ப்யஸ்-தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூ஁ ஸ்வாம் ॥ 2.23 ॥

---

2.20. அணுவுக்கும் அணுவாயும் பெரிதுக்கும் பெரிதாயும் உள்ள ஆத்மா இந்த ஜீவனுடைய உள்ளத்தில் உறைவது. ஆசை நீங்கியவன் இந்த ஆத்மாவைக்காண்கிறான்; (அப்போது) சோகமற்றவனாய் அந்தக்கரணங்களின் தெளிவால் இந்த ஆத்மாவின் பெருமையையுங் காண்கிறான்.

2.23. வேதங்களைக் கற்றதாலோ, நுண்ணறிவினாலோ, விரிந்த கேள்வியாலோ இந்த ஆத்மா (ஒரு ஸாதகனால்) அடையப் படுவதன்று; (ஸாதகன் எப்போது) ஆத்மா ஒன்றையே (ஆத்மாவினால்) பிரார்த்திக்கின்றானோ (அப்போது) அவனால் அடையப்படும்; அவனுக்கு அப்போது இந்த ஆத்மா தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தைப் பிரகாசப்படுத்துகின்றது.

---

கே. ஆத்மா எங்கும் நிறைந்து போக்குவரவற்றதாயிருக்கையில் ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தை யடைவதெங்ஙனம்?

வி. உண்மையில் ஒரு சரீரத்தை விடுவதும் மற்றொன்றை அடைவதும் ஆத்மாவுக்கு இல்லை தான்: சூரியன் உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பது மில்லை; ஆனால் பூமியிலுள்ள நமக்கு அவ்வாறு தோன்றுகிறது. அப்படியே பிறப்பற்ற ஆத்மா பிரகிருதி ஸம்பந்தத்தால் சரீரத்தில் புகுவதுபோலும், சரீரத்தை விடுவதுபோலுந் தோன்றுகிறது.

2.20. அணுவுக்கு அணுவாயும் பெரிதுக்கும் பெரிதாயும்—ஒ. தஹரவித்தை. சா. 8. 1.

2.23. நாயமாத்மா—ஒ. கீ. 11.53-54. (நாஹம் வேதை:)

नाविरतो दुश्चरिता-न्नाशान्तो नासमाहितः। नाशान्त-मानसो वापि प्रज्ञानेनैन-माप्नुयात् ॥ २.२४ ॥

यस्य ब्रह्म च क्षत्रं च उभे भवत ओदनः। मृत्यु-र्यस्योपसेचनं क इत्था वेद यत्र सः ॥ २.२५ ॥

நாவிரதோ துஶ்சரிதாந் நாஶாந்தோ நாஸமாஹித:। நாஶாந்தமானஸோ வாபி ப்ரஜ்ஞாநேநைந-மாப்னுயாத் ॥ 2.24॥

யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதன:। ம்ருத்யுர்-யஸ்யோபஸேசனம் க இத்தா வேத யத்ர ஸ: ॥ 2.25 ॥

---

2.24. துர்நடத்தையினின்று விலகாதவனும் இந்திரியங்களை அடக்காதவனும் மனத்தை ஒரு முகப்படுத்திச் சாந்தி எய்தாதவனும் பிரஜ்ஞானத்தால் இந்த ஆத்மாவை அடைய மாட்டான்.

2.25. எந்த ஆத்மாவுக்கு பிராம்மண க்ஷத்திரியராதியோரும் (ஏனையோரும்) அன்னம் போன்றவர்களோ, எந்த ஆத்மாவுக்கு (உலகை உண்ணும்) யமனும் ஊறுகாய் போன்றவனோ அந்த ஆத்மா எங்ஙனம் உளதென்று எவன் அறிவான்?

---

2.25. **யஸ்ய ப்ரஹ்ம ச**—'அத்தா சராசரக்ரஹணாத்' என்ற பிரம்ம சூத்ரம் 1.2.9ல் இதின் அர்த்தம் ஆராயப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் உண்பவனாக இங்கே கூறப்பட்டுள்ளது பரமாத்மா. வாழ்க்கை அன்னம் என்றால் இடையிடையில் நிகழும் மரணம் ஊறுகாய் போலும்.

**எவன் அறிவான்?**—2.24ல் கூறியபடி திருந்தாத புத்தியுள்ள எவனும் அறிய மாட்டான். உள்ளந் தெளிந்தாலொழிய உள்ளத்திலுள்ள பொருளைக் காணமுடியாது. இரண்டாவது வல்லியில் கூறியது நாசிகேத வித்தை எனப்படும்.

மூன்றாவது வல்லியில் கூறப்படுவது புருஷவித்தை எனப்படும்.

ஒ. 'த்வாஸுபர்ணா' மு. உப. 3. 1. 1.

## तृतीया वल्ली

ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमे परार्धे। छायातपौ ब्रह्मविदो वदन्ति पञ्चाग्नयो ये च त्रिणाचिकेताः ॥3.1॥

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु। बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥ 3.3 ॥

## த்ருதீயா வல்லீ

ருதம்-பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே । ச்சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி பஞ்சாக்னயோ யே ச த்ரிணசிகேதா: ॥ 3.1 ॥

ஆத்மானம் ரதினம் வித்தி ஶரீரம் ரதமேவ து । புத்திந்து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவ ச ॥ 3.3 ॥

---

## மூன்றுவது வல்லீ

3.1. இவ்வுலகில் (சரீரந்தோறும்) ஸ்வயமாகச் செய்யப் பட்ட கருமத்தின் பலனை அனுபவிப்பவர்களாய், சித்பர வெளியில் இருதய குகையில் இருவர் புகுந்துறைகின்றனர். பிரம்ம ஞானிகளும், பஞ்சாக்னியுபாஸகர்களும், நசிகேதாக்னி சயனம் மும்முறை செய்தவர்களும் இவ்விருவரையும் வெயிலுக்கும் நிழலுக்கும் ஒப்பிட்டுக் கூறுகின்றனர்.

3.3. சரீரத்தைத் தேராகவும் மனதைக் கடிவாளமாகவும் புத்தியைச் சாரதியாகவும் ஜீவனைத் தேரில் வீற்றிருப்பவனாக வும் அறி.

---

3.1. ஒரு கூட்டத்தில் ஒருவன் குடைபிடித்துக்கொண்டு போனலும் அக்கூட்டத்தைக் குறிப்பிடும்போது குடைபிடித்துப் போகிறவர்கள் என்று சொல்லுவதுபோல் (ச்சத்ரி நியாயத்தால்) இங்கு ஜீவன் மட்டும் கர்மபலனை அனுபவிப்பவனும் ஈசுவரன் அனுபவியாதவனுயும் இருந்தாலும், இருவரும் அனுபவிப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது (சங்).

வெயிலும் நிழலும்—ஜீவாத்மாவும் பரமாத்மாவும் நிழலும் வெயிலும் போல என்று உவமை கூறப்படுகிறது. வெயிலுக்கு ஏற்பட்ட

इन्द्रियाणि हयानाहु-र्विषयांस्तेषु गोचरान् । आत्मेन्द्रिय-मनोयुक्तं भोक्तेत्याहु-र्मनीषिण: ॥ ३.४ ॥

यस्त्वविज्ञानवान् भवति अयुक्तेन मनसा सदा । तस्येन्द्रि-याण्यवश्यानि दुष्टाश्वा इव सारथे: ॥ ३.५ ॥

இந்த்ரியாணி ஹயாநாஹு˜ர் விஷயாம்ஸ்தேஷு˜ கோசரான்। ஆத்மேந்த்ரிய-மநோயுக்தம் போக்தேத்-யாஹு˜ர் மநீஷிண: ॥ 3.4 ॥

யஸ்த்-வவிஜ்ஞானவான் பவதி அயுக்தேன மனஸா ஸதா। தஸ்யேந்தரியாண்-யவஶ்யானி துஷ்டாஶ்வா இவ ஸாரதே: ॥ 3.5 ॥

---

3.4. இந்திரியங்களைக் குதிரைகள் என்றும், விஷயங்களை அவை செல்லும் பாதைகள் என்றுங் கூறுவர். சரீரம் இந்திரியம் மனம் இவற்றுடன் கூடிய ஜீவனையே போக்தா என்று ஞானிகள் கூறுகின்றனர்.

3.5. அடக்கப்படாத மனதுடனும் விவேகமில்லாத புத்தியுடனுங் கூடியவன் எவனோ அவனுக்கு, ஸாரதிக்கடங்காத துஷ்டக் குதிரைகள்போல், இந்திரியங்கள் வசப்படமாட்டா.

---

தடை அல்லது குறையே நிழலின் வடிவத்தை உண்டாக்குகிறது. வெயிலுக்கு வடிவம் இல்லை. நிழலுக்கு வடிவம் உண்டு. ஆனால் வெயிலே ஒளிப்பொருள். ஒளியின் குறைக்கு நிழல் என்று பெயர். வெயில் வேறு நிழல் வேறு அல்ல. இவ்வாறே ஜீவாத்மா, பரமாத்மாவின் நிழல் ஆகிறது. தடையை நீக்கியவுடன் நிழலும் வெயிலும் ஒன்றாகிவிடும்.—உபநிஷதப் பலகணி (ராஜாஜி)

பி. சூ. 1.2.11லும் 3.3.34லும் இந்த மந்திரத்தின் அர்த்தம் விசாரிக்கப்பட்டிருக்கிறது. (குஹாம் ப்ரவிஷ்டாவாத்மானௌ ஹி தத் தர்ஶனாத்).

பஞ்சாக்னய:—ஐந்து அக்கினிகளில் ஹோமம் செய்பவர்கள்—ஒ. திரவ்ய யஜ்ஞும், தபோயஜ்ஞும், யோகயஜ்ஞும், ஸ்வாத்த்யாய யஜ்ஞும், ஜ்ஞானயஜ்ஞும், கீ. 4. 28. அல்லது பிரம்மயஜ்ஞும், தேவ யஜ்ஞும், மனுஷ்ய யஜ்ஞும், பூத யஜ்ஞும், பித்ருயஜ்ஞும் எனும் ஐந்து.

3.3. பி. சூ. 1. 2. 12; 1. 4. 1.

विज्ञान-सारथि-र्यस्तु मनः-प्रग्रहवान्नरः। सोऽध्वनः पार-माप्नोति तद्विष्णोः परमं पदम् ॥ ३.९ ॥

इन्द्रियेभ्यः परा ह्यर्था अर्थेभ्यश्च परं मनः। मनसस्तु परा बुद्धि-र्बुद्धे-रात्मा महान् परः ॥ ३.१० ॥

महतः पर-मव्यक्तं अव्यक्तात् पुरुषः परः। पुरुषान्न परं किञ्चित् सा काष्ठा सा परा गतिः ॥ ३.११ ॥

விஜ்ஞானஸாரதிர்-யஸ்து மன: ப்ரக்ரஹவாந் நர: । ஸோऽத்வன: பார-மாப்னோதி தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥ 3.9 ॥

இந்த்ரியேப்ப்ய: பராஹ்யர்த்தா, அர்த்தேப்ப்யஶ்ச பரம் மன: । மனஸஸ்து பரா புத்திர் புத்தேராத்மா மஹான் பர: ॥ 3.10 ॥

மஹத: பரமவ்யக்தம், அவ்யக்தாத் புருஷ: பர: । புருஷாந் ந பரங் கிஞ்சித், ஸா காஷ்ட்டா ஸா பராகதி: ॥ 3.11 ॥

---

3.9. எந்த மனிதன் விவேகமுள்ள புத்தியை ஸாரதியாகவும் அடக்கப்பட்ட மனதைக் கடிவாளமாகவும் உடையவனோ அவன் ஸம்ஸாரமாகிய கடுவழியின் எல்லை நிலத்தை யடைகிறான். அதுவே எங்கும் நிறைந்த பரம் பொருளுடன் ஒன்று பட்ட பரம பதம் எனும் நிலையாம்.

3.10. இந்திரியங்களைவிட மேலானவை (அவைகட்குக் காரணமான) சூக்ஷ்மபூதங்கள்; சூக்ஷ்மபூதங்களைவிட மேலானது மனம்; மனத்தைவிட மேலானது புத்தி; புத்தியைவிட மேலானது மகத்தான பிரத்யகாத்மா.

3.11. அந்த மகத்தான பிரத்யகாத்மாவைவிட மேலானது

---

3.9. ஒ—'யதா'பஞ்சாவதிஷ்ட்டந்தே' கட. உப. 6. 10
தேரில் கட்டின குதிரை வசப்படாவிட்டால் கடிவாளத்தையும் ஸாரதியையும் இழுத்துக்கொண்டு செல்லும். கடிவாளத்தைக்கொண்டு குதிரையை ஸாரதி அடக்கி நடத்தப் பயிலுதல் வேண்டும்.

3.10. ஒ. கீ. 3. 42; பி. சூ. 1. 4. 7., 3. 3. 7.

3.11. பராங்கதி:—ஒ.—(யத்-கத்வா ந நிவர்த்தந்தே) எங்கு

एष सर्वेषु भूतेषु गूढात्मा न प्रकाशते । दृश्यते त्वग्र्यया बुद्धया सूक्ष्मया सूक्ष्मदर्शिभिः ॥ ३.१२ ॥

यच्छेद्वाङ्मनसी प्राज्ञ-स्तद्यच्छे-ज्ज्ञान आत्मनि । ज्ञान-मात्मनि महति नियच्छे-त्तद्यच्छे-च्छान्त आत्मनि ॥ ३.१३ ॥

ஏஷ ஸர்வேஷு பூதேஷு கூடாத்மா ந ப்ரகாஶதே। த்ருஶ்யதே த்வக்ர்யயா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்ம-தர்ஶிபி: ॥ 3.12 ॥

யச்சேத்-வாங்-மனஸீ ப்ராஜ்ஞஸ்-தத் யச்சேஜ்-ஜ்ஞான ஆத்மனி। ஜ்ஞான-மாத்மனி மஹதி நியச்சேத்-தத்யச்சேச் சாந்த ஆத்மனி ॥ 3.13 ॥

---

மூலப் பிரகிருதி; மூலப் பிரகிருதிக்கும் மேலானவன் பரம புருஷன். இந்தப் பரமபுருஷனைவிட மேலானது ஒன்றுமில்லை. அந்நிலைதான் எல்லை; அது தான் உன்னதமான நிலை.

3.12. இந்தப் பரமபுருஷன் எல்லா உயிர்களிலும் மறைந்திருக்கிறார்; வெளிப்படத் தோன்றுவதில்லை. (ஆனால்) நுண்ணறிவுடையவர்களால் ஒரு முகப்பட்ட சூக்ஷ்ம புத்தியால் பார்க்கப் படுகிறார்.

3.13. நுண்ணறிவுடைய விவேகி வாக்கை மனதில் ஒடுக்கி, அதைப் பிரகாசரூபமான புத்தியில் ஒடுக்கி, புத்தியைப் பிரத்யகாத்மாவில் ஒடுக்கி, அதை எல்லாம் ஒழிவடையும் பரமாத்மாவினிடம் ஒடுக்கவேண்டும்.

---

சென்று திரும்புவதில்லையோ அது என்னுடைய உயர்ந்த உறைவிடம். கீ. 15. 6.

பி. சூ 1. 4. 1., 3. 3. 14.

3.13. (யோகஸ்ய ப்ரதமம் த்வாரம் வாங்-நிராதோபரிக்ரஹ:) யோகத்தின் முதல் வாசல் பேச்சை அடங்குதலும் உடைமையைத் துறத்தலும். (விவேக சூடாமணி—சங்).

उत्तिष्ठत जाग्रत प्राप्य वरा-न्निबोधत। क्षुरस्य धारा निशिता दुरत्यया दुर्गं पथ-स्तत् कवयो वदन्ति ॥ ३.१४ ॥

अशब्द-मस्पर्श-मरूप-मव्ययं तथाऽरसं नित्य-मगन्धवच्च यत्। अनाद्यनन्तं महतः परं ध्रुवं निचाय्य तन्मृत्युमुखात् प्रमुच्यते ॥ ३.१५ ॥

உத்திஷ்ட்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத। க்ஷுரஸ்ய தாரா நிஶிதா துரத்யயா துர்க்கம் பதஸ்-தத்-கவயோ வதந்தி ॥ 3.14 ॥

அஶப்த-மஸ்பர்ஶ-மரூப-மவ்யயந்-ததா-ऽரஸம் நித்ய-மகந்த வச்ச யத்। அனாத்யனந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தன் ம்ருத்யு-முகாத் ப்ரமுச்யதே ॥ 3.15 ॥

3.14. எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! சிறந்த ஆசாரியர்களை யடைந்து ஞானத்தைப் பெறுங்கள்! அந்த மார்க்கம் கத்தியின் நுனிபோல் கூரியது, நடப்பதற்கும் கடப்ப தற்குங் கடினமானது என்று ஞானிகள் கூறுகின்றனர்.

3.15. சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களுக்கு அப்பாற்பட்டதும், மாறுபாடில்லாததும், என்றுமுள்ளதும், ஆதியந்த மில்லாததும், மகத்தத்துவத்துக்கு மேலானதும், நிலை பிறழாததும் எதுவோ அதை யறிந்து மரணத்தின் வாயினின்று விடுபடுகிறான்.

3.14. உத்திஷ்ட்டத—இது ஸம்ஸாரமாகிய ஸ்வப்னத்தில் ஆழ்ந்துள்ள ஜீவனைத் தட்டியெழுப்பும் மந்திரம். ஒ. 'இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்'—ஆண்டாள்.

(உத்திஷ்ட்டத மா ஸ்வபத) எழுந்திருங்கள், உறங்காதீர்கள்—தைத்தீரீய ஆருணம்.

ஸம்ஸாரமாயை என்ற தூக்கத்தினின்று விழிப்பது எளிதல்ல. அதற்கு விடுபடவேண்டும் என்ற விருப்பம் உள்ளத்தில் பொங்க வேண்டுவதன்றிக் கத்திமுனைமேல் நடப்பதுபோல் இடைவிடாத ஜாக்கிரதையுடன் புலன்களையும் மனதையும் அடக்கிச் சீலத்தைக் காப்பாற்றி மனதையும் மாசற நிறுத்தி வேற்றுமை உணர்ச்சியை அறவே நீக்க வேண்டும். (உபநிஷதப்பலகணி—ராஜாஜி).

3.15. பி. சூ. 1. 4. 5; 3. 2. 11.

य इमं परमं गुह्यं श्रावयेद् ब्रह्मसंसदि । प्रयत: श्राद्धकाले वा तदानन्त्याय कल्पते, तदानन्त्याय कल्पत इति ॥ ३.१७ ॥

## चतुर्थी वल्ली

पराञ्चि खानि व्यतृणत् स्वयंभू-स्तस्मात् पराङ् पश्यति नान्तरात्मन् । कश्चिद्धीर: प्रत्यगात्मान-मैक्ष-दावृत्त-चक्षु-रमृतत्वमिच्छन् ॥ ४.१ ॥

ய இமம் பரமங் குஹ்யம் ஶ்ராவயேத் ப்ரஹ்ம-ஸம்ஸதி । ப்ரயத: ஶ்ராத்தகாலே வா ததானந்த்யாய கல்பதே ததானந்த்யாய கல்பத இதி ॥ 3.17 ॥

## சதுர்த்தீ வல்லீ

பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்ப்பூஸ்-தஸ்மாத் பராங் பஶ்யதி நாந்தராத்மன் । கஶ்சித்தீர: ப்ரத்யகாத்மான-மைக்ஷ-தாவ்ருத்த-சக்ஷு-ரம்ருதத்வ-மிச்சன் ॥ 4.1 ॥

---

3.17. எவன் இந்தப்பரம ரகசியத்தைப் பிரம்மநாட்டமுடையவர்களின் கூட்டத்தில் ஓதுவிக்கின்றானோ, அல்லது சிரத்தையுடன் சிராத்த காலத்தில் ஓதுவிக்கின்றானோ அவனுக்கு அது அளவில்லாத நற்பயனை அளிப்பதாக ஆகிறது.

## நான்காவது வல்லீ

4.1. பரமேசுவரன் இந்திரியங்களை வெளிநோக்குடையவையாய்ச் சிருஷ்டித்துள்ளார். ஆகையால் (மனிதன்) வெளித்தோற்றங்களையே பார்க்கிறான். எவனோ ஒரு தீரன் சாகா நிலையை விரும்பி, அடக்கி உள்முகமாய்த் திருப்பப்பெற்ற பார்வையுடையவனாய்ப் பிரத்யகாத்மாவைப் பார்க்கிறான்.

---

4.1. ‘வ்யத்ருணத்’ எனும் சொல் ‘இம்சித்தார்’ ‘தண்டித்தார்’ எனவும் பொருள்படும். இந்திரியங்களை வெளிவியாபாரம் மட்டும் உடையனவாய் ஆத்மாவைப் பார்க்கமுடியாமல் இருப்பது வெளிநாட்டுக்கு ‘பஹிஷ்காரம்’ செய்தது போன்ற தண்டனையாம்.

**ப்ரத்யகாத்மா**—‘நான்’ என்பது யார்? அது ப்ரத்யகாத்மா.

पराचः कामा-ननुयन्ति बालास्ते मृत्यो-र्यन्ति विततस्य पाशम्। अथ धीरा अमृतत्वं विदित्वा ध्रुव-मध्रुवेष्विह न प्रार्थयन्ते ॥ ४.२ ॥

येन रूपं रसं गन्धं शब्दान् स्पर्शांश्च मैथुनान्। एतेनैव विजानाति किमत्र परिशिष्यत एतद्वै तत् ॥ ४.३ ॥

பராச: காமா-னனுயந்தி பாலாஸ்-தே ம்ருத்யோர்-யந்தி விததஸ்ய பாஶம் । அத தீரா அம்ருதத்வம் விதித்வா த்ருவ-மத்ருவேஷ்-விஹ ந ப்ரார்த்தயந்தே ॥ 4.2 ॥

யேந ரூபம் ரஸங் கந்தம் ஶப்தான் ஸ்பர்ஶாம்ஶ்ச மைதுனான் । ஏதேனைவ விஜானாதி கிமத்ர பரிஶிஷ்யத ஏதத்வை தத் ॥ 4.3 ॥

---

4.2. அறிவிற்சிறியோர் வெளியிலுள்ள இன்ப நுகர்ச்சிகளையே தொடர்ந்து செல்லுகின்றனர். அவர்கள் விரிந்து கிடக்கும் மரணவலையில் விழுகின்றனர். தீரர்களோ அழிவற்ற உண்மைப்பொருளை யறிந்து நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் நிலையுண்டென்று எதையும் நாடுவதில்லை.

4.3. சப்த-ஸ்பர்ச-ரூப-ரஸ-கந்த வடிவான இந்திரிய நுகர்ச்சிகளை எந்த அறிவால் மனிதன் அனுபவிக்கின்றானோ அந்த அறிவாலேயே அவைகளைப் பிரித்துக் காண்கின்றான். அதற்கு (அந்தச் சாக்ஷிக்கு)ப் புறம்பாக உள்ளது எது? இதுவே (இந்தச் சாக்ஷியே ஆத்மாவாகிய) அது.

---

உண்மையில் அது பரமாத்மாவின் பிரதிபிம்பமே. அவனன்றி 'நான்' என்பது ஒன்றில்லை. ஒ. (க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி மாம் வித்தி) என்னையே க்ஷேத்ரஜ்ஞனாக அறி. கீ. 13. 2.

ஒ. அபிச ஸம்ராதனே—பி. சூ. 3. 2. 24.

4.2. ஒ. 'அவனுக்கு இங்கே ஒரு கர்மத்தைச் செய்ததால் பயன் இல்லை. ஒன்றைச் செய்யாததாலும் எப்பயனும் இல்லை தான். அவனுக்கு எல்லாப் பொருள்களிலும் பயனைக்கருதி நாடத் தகுந்ததும் ஒன்றும் இல்லை. (கீ. 3. 18.)

4.3. ஏதத்வைதத்—(யேயம் ப்ரேதே)எது நசிகேதஸினால் கேட்கப் பட்டதோ (ஸா காஷ்ட்டா ஸா பரா கதி:) எது தர்மத்திற்கும் அதர்மத்

यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह । मृत्योः स मृत्यु-माप्नोति य इह नानेव पश्यति ॥ ४.१० ॥

मनसैवेद-माप्तव्यं नेह नानास्ति किंचन । मृत्योः स मृत्युं गच्छति य इह नानेव पश्यति ॥ ४.११ ॥

யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததன்விஹ । ம்ருத்யோ: ஸ ம்ருத்யு-மாப்னோதி ய இஹ நாநேவ பஶ்யதி ॥ 4.10 ॥

மனஸைவேத-மாப்தவ்யம் நேஹ நாநாஸ்தி கிஞ்சன । ம்ருத்யோ: ஸ ம்ருத்யுங் கச்சதி ய இஹ நாநேவ பஶ்யதி ॥ 4.11 ॥

---

4.10. இங்கு எது உளதோ அதுவே அங்கும்; எது அங்குளதோ அதுவே இங்கும். எவன் இங்கு வேற்றுமை காண்கின்றானோ அவன் மரணத்தினின்று மரணத்தையே அடைகிறான்.

4.11. இது மனதாலேயே அடையப்படவேண்டும். இங்கு சிறிதும் வேற்றுமை இல்லை. எவன் இங்கு வேற்றுமை காண்கின்றானோ அவன் மரணத்தினின்று மரணத்தையே யடைகின்றான்.

---

திற்கும் அப்பாற்பட்டதோ (அன்யத்ர தர்மாத்) எதைவிட உயர்ந்தது வேறொன்றுமில்லையோ அதுவே இது.

**4.10.** ஆங்கென்று மீங்கென்று முண்டோ
சச்சிதானந்த சோதியகண்டவடிவாய்
ஓங்கி நிறைந்தது கண்டால். —தாயுமானவர்

**4.11.** இது மனதாலேயே அடையப்படவேண்டும்—பூமியின் நான்கு திக்குகளிலும் சென்றாலும் உண்மையான தருமத்தை ஓரிடத்துங் காண மாட்டாய். இருப்பதெல்லாம் உன் மனத்திலேயே இருக்கிறது. (ரா. கி.)

ஈசுவரன், குரு, அடியார் இவர்கள் எல்லோருடைய அருளும் இருந்தாலுங்கூட இன்னொரு அருள் இல்லை யாகில் ஜீவன் நாசமடைவான். அந்த முக்கியமான அருள் தன் நெஞ்சினது; அதாவது தான் முக்தி அடைய வேண்டும் என்ற ஆர்வம் நெஞ்சில் உதிக்கவேண்டும். (ரா. கி.)

ஒ. (வாயுனா நீயதே மேக: புனஸ்-தேனைவ லீயதே । மனஸா கல்ப்யதே பந்தோ மோக்ஷஸ்-தேனைவ கல்ப்யதே) காற்றினால் மேகங்கூடு

अंगुष्ठमात्रः पुरुषो ज्योति-रिवाधूमकः। ईशानो भूतभव्यस्य स एवाद्य स उ श्वः, एतद्वै तत् ॥ ४.१३ ॥

यथोदकं शुद्धे शुद्धं आसिक्तं तादृगेव भवति। एवं मुनेर्विजानत आत्मा भवति गौतम ॥ ४.१५ ॥

அங்குஷ்ட்டமாத்ர: புருஷோ ஜ்யோதிரிவாதூமக:। ஈசானோ பூதபவ்யஸ்ய ஸ ஏவாத்ய ஸ உ ஶ்வ:, ஏதத்வை தத் ॥ 4.13 ॥

யதோதகம் ஶுத்தே ஶுத்தம் ஆஸிக்தந் தாத்ருகேவ பவதி। ஏவம் முனேர் விஜாநத ஆத்மா பவதி கௌதம ॥ 4.15 ॥

---

4.13. (இருதயகுகையிலுள்ள) புருஷன் கட்டை விரல் அளவினனுகப் புகையில்லாத ஜோதி போலும் உளன். உண்டானதற்கும் உண்டாகப்போவதற்கும் ஈசுவரனுகிய அவனே இன்றைக்குள்ளவன், நாளைக்கு முள்ளவன்.

4.15. எங்ஙனம் சுத்தமான ஜலத்தில் விடப்பட்ட சுத்த ஜலம் அதுபோலவே ஆகிறதோ அங்ஙனமே உண்மை உணர்ந்த முனியின் ஆத்மா ஆகிறது.

---

கிறது; மீண்டுங் காற்றினுலேயே கலைகிறது. மனதால் பந்தங் கற்பிக்கப்படுகிறது. மனதாலேயே மோக்ஷமும் கற்பிக்கப்படுகிறது.

(விவேக சூடாமணி—சங்).

ஒ. பிரு. 4. 4. 19; பி. சூ. 2. 1. 14.

4.13. ஒ. (ஶப்தாதேவ ப்ரமித:) பி. சூ. 1. 3. 24.

4.15. ஒ. எங்ஙனம் பெருகியோடும் நதிகள் நாமரூபங்களை இழந்து ஸமுத்திரத்தில் மறைகின்றனவோ அங்ஙனம் ஞானி நாமரூபங்களினின்று விடுபட்டு உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்த தேஜோமயமான புருஷனை அடைகிறுன். (மு. 3. 2. 8.)

## पञ्चमी वल्ली

पुर-मेकादश-द्वारं अजस्यावक्र-चेतसः। अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यत एतद्वै तत् ॥ ५.१ ॥

न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन। इतरेण तु जीवन्ति यस्मिन्नेता-वुपाश्रितौ ॥ ५.५ ॥

हन्त त इदं प्रवक्ष्यामि गुह्यं ब्रह्म सनातनम्। यथा च मरणं प्राप्य आत्मा भवति गौतम ॥ ५.६ ॥

## பஞ்சமீ வல்லீ

புர-மேகாதச-த்வாரம் அஜஸ்யாவக்ர-சேதஸ:। அனுஷ்ட்டாய ந ஶோசதி விமுக்தஶ்ச விமுச்யத ஏதத்வை தத் ॥ 5.1 ॥

ந ப்ராணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கஶ்சன। இதரேண து ஜீவந்தி யஸ்மின்-நேதா-வுபாஶ்ரிதௌ ॥ 5.5 ॥

ஹந்த த இதம் ப்ரவக்ஷ்யாமி குஹ்யம் ப்ரஹ்ம ஸநாதனம்। யதா ச மரணம் ப்ராப்ய ஆத்மா பவதி கௌதம ॥ 5.6 ॥

---

## ஐந்தாவது வல்லீ

5.1. பிறப்பில்லாதவனும் கோணலில்லாத புத்தியுடையவனும் ஆகிய எவனுடையது இப்பதினொரு வாயிலுடைய பட்டினமோ (அவனைச்) சிந்தித்துணர்ந்தபின் (எவனும்) துக்கிக்கமாட்டான். முக்தனாய் நின்று (சரீரத் தொடர்பினின்றும் பிறப்பிறப்பினின்றும்) விடுபடுகிறான். இதுதான் அது.

5.5. பிராணனாலோ அபானனாலோ எந்த மனிதனும் ஜீவித்திருக்கவில்லை. எதை இவ்விரண்டும் ஆதாரமாயுடையதோ அதனாலன்றோ ஜீவித்திருக்கின்றான்.

5.6. கௌதம! கவனித்துக் கேட்பாய்! இரகசியமானதும் பழையதுமான இதே பிரம்மத்தைப்பற்றி மீண்டுங் கூறுவேன்.

---

5.1. ஒ. இந்திரியங்களை வசப்படுத்திய புருஷன் மனத்தால் எல்லாக் கருமங்களையும் துறந்து சுகமாக ஒன்பது வாயிலுடைய புரியில் ஒன்றும் செய்யாமலும் செய்விக்காமலும் இருக்கின்றான். (கீ. 5. 13.)

योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः। स्थाणु-मन्येऽनु-संयन्ति यथा कर्म यथा श्रुतम् ॥ ५.७ ॥

य एष सुप्तेषु जागर्ति कामं कामं पुरुषो निर्मिमाणः। तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृत-मुच्यते ॥ तस्मिंल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन, एतद्वै तत् ॥ ५.८ ॥

யோனி-மன்யே ப்ரபத்யந்தே ஶரீரத்வாய தேஹின:। ஸ்த்தாணு-மன்யே ऽனுஸம்யந்தி யதா கர்ம யதா ஶ்ருதம் ॥ 5.7. ॥

ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி காமங்காமம் புருஷோ நிர்மிமாண:। ததேவ ஶுக்ரந்-தத்-ப்ரஹ்ம ததேவாம்ருத-முச்யதே ॥ தஸ்மின் லோகா: ஶ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கஶ்சன ஏதத்வை தத் ॥ 5.8 ॥

---

(இதை அறியாமையால்) ஜீவாத்மா மரணத்துக்குப்பின் எங்ஙனம் உழல்கிறதென்றுங் கூறுவேன்.

5.7. உடல்படைத்தோரிற் சிலர் வேறு உடல்களை வேண்டி யோனித்துவாரத்தை யடைகின்றனர்; சிலர் தாவர நிலையை யடைகின்றனர்; அவரவர் கருமத்துக்கும் ஞானத்துக்கும் தக்கவாறு.

5.8. தூங்கும்போதும் எந்தப்புருஷன் பல விதமான ஆசைகளை உருப்படுத்திக்கொண்டு விழித்திருக்கிறானோ அவனே சுத்தன், அவனே பிரம்மம், அவனே அமிருதம் எனப்படுகிறான். அவனிடத்திலேயே உலகங்களெல்லாம் நிலை பெறுகின்றன. அவனை மீறிச் செல்பவன் எவனும் இல்லை. இதுவே அது.

---

5.7. ஒ. நல்ல கருமத்தைச் செய்கிறவர்கள் நல்ல யோனியையும் கெட்ட கர்மத்தைச் செய்கிறவர்கள் கெட்ட யோனியையும் அடைகிறார்கள். (ரமணீய சரணா: ரமணீயாம் யோனிம் ஆபத்யந்தே...). சா. 5. 10. 7.

ஸத்துவகுணமுடையோர் மேலே செல்லுகின்றனர்; ரஜோகுணமுடையோர் மத்தியில் நிற்கின்றனர்; கடைக்குணச் செயலுடைய தாமஸர்கள் கீழே செல்லுகின்றனர். (கீ. 14. 18.)

अग्नि-र्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ ५.९ ॥

सूर्यो यथा सर्वलोकस्य चक्षुर्न लिप्यते चाक्षुषै-र्बाह्यदोषैः।
एकस्तथा सर्वभूतान्तरात्मा न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥ ५.११ ॥

அக்னிர்-யதைகோ புவனம் ப்ரவிஷ்டோ ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ। ஏகஸ்-ததா ஸர்வபூதாந்தராத்மா ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஶ்ச ॥ 5.9 ॥

ஸூர்யோ யதா ஸர்வலோகஸ்ய சக்ஷுர் ந லிப்யதே சாக்ஷுஷைர் பாஹ்ய தோஷை:। ஏகஸ்-ததா ஸர்வபூதாந்தராத்மா ந லிப்யதே லோகது:க்கேன பாஹ்ய: ॥ 5.11 ॥

---

5.9. எங்ஙனம் ஒரே நெருப்பு உலகப் பொருள்களில் புகுந்து அந்தந்தப் பொருள்களின் உருவத்துக்குத் தக்கவாறு தனித்தனி உருவுடையதாக ஆயிற்றோ, அங்ஙனமே உண்டான உயிர்களனைத்திற்கும் ஒன்றேயாகிய அந்தராத்மா அந்தந்த உருவங்களுக்குத் தக்க உருவுடையதாக ஆகி அவைகட்கப்பாலும் (உள்ளதாக ஆயிற்று).

5.11. உலகுக்கெல்லாங் கண்ணாகவுள்ள சூரியன் கண்ணின் வெளிக்குற்றங்களால் எங்ஙனம் பற்றப்படுவதில்லையோ அங்ங

---

5.9. ஒரே வஸ்துவான தண்ணீரைச் சிலர் ஜலம் என்றும் சிலர் அக்வா என்றும், சிலர் பாணி என்றுங் கூறுவதுபோல் பரம் பொருள் ஒன்றையே சிலர் கடவுள் என்றும், சிலர் அல்லா என்றும், சிலர் ஹரி என்றும் அழைக்கின்றனர். (ரா. கி.)

ஈசுவரனுடைய நாமங்கள் அனந்தம், ரூபங்களும் அனந்தம்; நீ எந்த நாம ரூபத்துடன் அறிய உள்ளன்புடன் விரும்புகிறாயோ அந்த நாம ரூபத்துடன் அவன் உனக்குப் புலப்படுவான். (ரா. கி.)

விஶ்வ மூர்த்திர் மஹா மூர்த்திர் தீப்த மூர்த்தி-ரமூர்த்திமான் ।
அநேக மூர்த்தி-ரவ்யக்த: ஶதமூர்த்தி: ஶதாநந: ॥
ஏகோ நைக: ஸவ: க: கிம் யத்தத் பதமனுத்மம் ॥
—விஷ்ணுஸஹஸ்ரநாமம்

5.11. ஒ. 'யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம் யாத்'—கீ. 13. 32, 33.

एको वशी सर्वभूतान्तरात्मा एकं रूपं बहुधा यः करोति। तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरा-स्तेषां सुखं शाश्वतं नेतरेषाम् ॥ ५.१२ ॥

नित्योऽनित्यानां चेतनश्चेतनानां एको बहूनां यो विदधाति कामान्। तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरा-स्तेषां शान्तिः शाश्वती नेतरेषाम् ॥ ५.१३ ॥

ஏகோ வஶீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம் ரூபம் பஹுதா ய: கரோதி। தமாத்மஸ்த்தம் யேऽனுபஶ்யந்தி தீராஸ்-தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம் ॥ 5.12 ॥

நித்யோऽநித்யானும் சேதனஶ்-சேதனுனும் ஏகோ பஹூனும் யோ விததாதி காமான்। தமாத்மஸ்த்தம் யேऽனுபஶ்யந்தி தீராஸ்-தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் ॥ 5.13 ॥

---

னமே உண்டாய உயிர்களனைத்திற்கும் ஒன்றேயாகிய அந்தராத்மா உலகத்துன்பங்களால் பற்றப்படாமல் அவைகட்கு அப்பால் உளது.

5.12. உண்டாய பொருளனைத்திற்கும் அந்தரான்மாவும் ஆண்டவனுமாகிய எந்த ஒருவன் ஒன்றேயாகிய தன் வடிவைப் பலவாகச் செய்கிறானோ அவனை எந்த தீரர்கள் தங்களிடம் உறைபவனாய்க் காண்கிறார்களோ அவர்களுக்கே அழிவிலாச் சுகம் உண்டு, பிறர்க்கில்லை.

5.13. நிலையில்லாப் பொருள்களிடை நிலையுள்ளவனாயும் அறிவுள்ள உயிர்களின் அறிவாயும், ஒருவனாய் நின்று அனைவருடைய ஆசைகளையும் அளிப்பவனாயும் உள்ள அவனை எந்த

---

ஒ—ஸம்போக-ப்ராப்திரிதி சேந் ந வைஶேஷ்யாத்.—பி. சூ. 1. 2. 8.

அவனேயவனு மவனுமவனும்
அவனே மற்றெல்லாமுமறிந்தனமே.—நம்மாழ்வார்

5.11. தாமரைப் பூவும் முள்ளிப்பூவும் மலர்வதும், ஒட்டு மாங்கனியும் எட்டிப்பழமும் பழுப்பதும் சூரிய வெப்பத்தாலும் ஒளியாலுமே; எனினும் அவற்றின் குண தோஷங்கள் சூரியனைத்தொடா.

तदेत-दिति मन्यन्ते-ऽनिर्देश्यं परमं सुखम्। कथं नु तद्विजानीयां किमु भाति विभाति वा ॥ ५.१४ ॥

न तत्र सूर्यो भाति न चन्द्र-तारकं नेमा विद्युतो भान्ति कुतोऽय-मग्निः। तमेव भान्त-मनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥ ५.१५ ॥

ததேததிதி மன்யந்தே ऽநிர்த்தேஶ்யம் பரமம் ஸுகம்। கதந் நு தத் விஜாநீயாம் கிமு பாதி விபாதி வா ॥ 5.14 ॥

ந தத்ர ஸூர்யோ பாதி, ந சந்த்ர-தாரகம் நேமா வித்யுதோ பாந்தி, குதோऽயமக்னி:। தமேவ பாந்த-மனுபாதி ஸர்வம், தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥ 5.15 ॥

---

தீரர்கள் தங்களிடம் உறைபவனுயைக் காண்கிறுர்களோ, அவர்களுக்கே அழிவிலாச் சாந்தி உண்டு, பிறர்க்கில்லை.

5.14. 'அது' எனப்படும் உத்தமமான ஆன்மசுகம் சுட்டிக்காட்ட வொண்ணுதாயினும் 'இது'வே (இங்கே பிரத்தியக்ஷமாய் விளங்குவதாம்) என்று (ஞானிகள்) கருதுகின்றனர். அது தானே ஒளிருஞ் சுடர் போன்றதா அல்லது பிறவொளியால் பிரகாசிக்கும் பொருள் போன்றதா? அதை எங்ஙனம் புத்தியால் அறிவோம்?

5.15. அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை; சந்திரனும் நக்ஷத்திரங்களும் (பிரகாசிப்பதில்லை); மின்னல் கொடிகளும் பிரகாசிப்பதில்லை; இந்த அக்கினி எங்ஙனம் (பிரகாசிக்கும்)? ஸ்வயம்பிரகாசமுள்ள அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றது; அவனொளியாலேயே இவையனைத்தும் விளங்குகின்றது.

---

5.14-15. ஒ. 'நதத் பாஸயதே'—கீ. 15. 6; 13. 32-33.

ஒ. (அனுக்ருதேஸ்தஸ்ய ச)—பி. சூ. 1. 3. 22.

**கதந்நு தத்விஜானீயாம்**—பொருள்களைப் பார்ப்பது உள்ளத்துள் நாம் படைத்த ஒளியே யல்லாது வெளியில் வீசும் ஒளியல்ல. இந்த உள்ளொளி தானுக ஒளிர்கிறதா அல்லது ஈசுவரனுடைய ஒளியால் பிரகாசிக்

## षष्ठी वल्ली

ऊर्ध्व-मूलोऽवाक्-शाख एषोऽश्वत्थः सनातनः। तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृत-मुच्यते। तस्मिंल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन, एतद्वै तत् ॥ ६.१ ॥

## ஷஷ்டீ வல்லீ

ஊர்த்த்வ-மூலோऽவாக்-ஶாக ஏஷோऽஶ்வத்த: ஸநாதந: । ததேவ ஶுக்ரந் தத் ப்ரஹ்ம ததேவாம்ருத முச்யதே ॥ தஸ்மின் லோகா: ஶ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கஶ்சன ஏதத்வை தத் ॥ 6.1 ॥

---

## ஆருவது வல்லீ

6.1. மேலே வேருங் கீழே கிளைகளுமுள்ள இந்த அசுவத்த மரம் புராதனமானது. அதுவே (அதன் மூலமே) சுத்தம், அதுவே பிரம்மம், அதுவே அமிருதம் எனப்படுவது. அதனிடத்திலேயே உலகங்களெல்லாம் நிலை பெறுகின்றன. அதை மீறிச் செல்லுபவன் எவனும் இல்லை. இதுவே அது.

---

கிறதா, நாம் எப்படி அறிவோம்? ஆத்மா வேறு பரமாத்மா வேரு? அல்லது இரண்டும் ஒன்றேயா? ‘அதுவானல் அதுவாவர், அதுவே சொல்லும்’

5.15. ஒ. கண்முதற்புலன்க ளந்தக்கரணங்கள் விளங்கு மெத்தாற்
றண்மதியருக்கனங்கி தாரகை விளங்கு மெத்தால்
விண்முதற் பூதமியாவும் விளங்குமெத்தாலந்த
உண்மையாம் சிவப்ரகாச ஒளியது வாழிவாழி.

—தாயுமானவர்

6.1. ஊர்த்த்வமூலம்—‘உலகெலாமுணர்ந்தோதற்கரியவ’ ஞயிருக்கும் பரமாத்மாவே வேர்.

அஶ்வத்தம்—(ஶ்வ-நாளை, ஸ்த்தம்-இருப்பு, அ-இல்லாதது)—இன்றிருந்து நாளை (ஞானந்தோன்றியதும்) இல்லாமற்போவது. ஒ. கீ. 15. 1.

इह चेदशक-द्बोद्धुं प्राक् शरीरस्य विस्रसः। ततः सर्गेषु लोकेषु शरीरत्वाय कल्पते ॥ ६.४ ॥

यथादर्शे तथात्मनि, यथा स्वप्ने तथा पितृलोके। यथाप्सु परीव ददृशे तथा गन्धर्वलोके, छायातपयोरिव ब्रह्मलोके ॥ ६.५ ॥

இஹசே-தஶகத்-போத்தும் ப்ராக் ஶரீரஸ்ய விஸ்ரஸ: । தத: ஸர்க்கேஷு லோகேஷு ஶரீரத்வாய கல்பதே ॥ 6.4 ॥

யதாதர்ஶே ததாத்மனி, யதா ஸ்வப்னே ததா பித்ருலோகே । யதாப்ஸு பரீவ தத்ருஶே ததா கந்தர்வலோகே, ச்சாயதபயோரிவ ப்ரஹ்மலோகே ॥ 6.5 ॥

---

6.4. இங்கேயே, சரீரம் விழுவதற்கு முன்பே, ஒருவன் (ஆன்மப் பொருளை) அறிவதற்கு அசக்தனாய்ப் போவான் எனின், பிற்பாடு ஸ்தாவர ஜங்கமங்களில் சரீரத்தை (மீண்டும்) அடைபவனாகின்றான்.

6.5. அவரவருள்ளத்தில் கண்ணாடியில் போலும், பிதிருக்கள் உலகத்தில் கனவில் போலும், கந்தருவருலகத்தில் நீர் நிலையில் காணப்படுவது போலும், பிரம்மலோகத்தில் வெயிலும் நிழலும் போலும் (ஆன்மா அறியப்படுகின்றது).

---

6.4. ஒ. கேன. 2.5,

6.5. கண்ணாடியில் முகத்தைத் தெளிவாய்ப் பார்ப்பதுபோல் மானிட உலகிலேயே ஆத்மதரிசனம் தெளிவாய்ப் பெறக்கூடியது. மற்ற உலகங்களில் எளிதல்ல.

ஒரு யோகி தேவலோகம் சென்று "பகவான் எங்கே இருக்கிறார்?" என்று தேவர்களைக் கேட்டார். "பகவான் பூலோகத்தில் வசிப்பதாக அல்லவா நாங்கள் அறிகிறோம்; நீங்கள் இங்கே வந்து தேடுகிறீர்களே?" என்று அவர்கள் கூறினர்.

न संदृशे तिष्ठति रूप-मस्य न चक्षुषा पश्यति कश्चनैनम् । हृदा मनीषा मनसाभिक्लृप्तो य एतद्विदु-रमृतास्ते भवन्ति ॥६.९॥

यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह। बुद्धिश्च न विचेष्टति तामाहुः परमां गतिम् ॥ ६.१० ॥

तां योगमिति मन्यन्ते स्थिरा-मिन्द्रिय-धारणाम् । अप्रमत्त-स्तदा भवति योगो हि प्रभवाप्ययौ ॥ ६.११ ॥

ந ஸந்த்ருஶே திஷ்ட்டதி ரூப-மஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சனைனம் । ஹ்ருதா மனீஷா மனஸாபிக்லுப்தோ ய ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி ॥ 6.9 ॥

யதா பஞ்சாவதிஷ்ட்டந்தே ஜ்ஞானானி மனஸா ஸஹ । புத்திஶ்ச ந விசேஷ்டதி தாமாஹு: பரமாங்கதிம் ॥ 6.10 ॥

தாம் யோகமிதி மன்யந்தே, ஸ்த்திரா-மிந்த்ரிய-தாரணாம் । அப்ரமத்தஸ்-ததா பவதி, யோகோ ஹி ப்ரப்வாப்யயௌ ॥ 6.11 ॥

---

6.9. இதனுடைய ரூபம் கண்முன் நிற்காது; எவனும் இதைக் கண்ணால் காண்பதில்லை. நிச்சயமான புத்தியாலும் மனதாலுமே இது அடையத்தக்கது. இதை யறிந்தவர்கள் சாகா நிலையை யடைகின்றனர்.

6.10. எப்போது ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனதுடன் அசையாது நிற்கின்றனவோ, புத்தியும் தொழிலற்றுப் போகின்றதோ அதை உயர்ந்த நிலை என்பர்.

6.11. இந்திரியங்கள் அசைவற்றடங்கிய அந்நிலையே (ஸ்திரமான இந்திரிய தாரணையே) யோகம் என்று கருதப்படும். அப்போது (அந்நிலையடைந்தவன்) இந்திரியங்களின் வசமாகி மயங்காமல் ஜாக்கிரதையாயிருக்கிறான் (இருத்தல் வேண்டும்)— யோகமானது தோன்றி மறையும் இயல்புடையதாதலின்.

---

6.9. துவிஜர்கள் பரமாத்வை அக்கினியில் பூஜிக்கின்றனர்; யோகிகள் தங்கள் இருதயத்தில் பூஜிக்கின்றனர்; அறிவின் முதிர்ச்சியடையாதவர்கள் பிம்பங்களில் பூஜிக்கின்றனர்; ஸமதர்சிகள் எங்கும் பூஜிக்கின்றனர். (உத்தர கீதை.)

नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा । अस्तीति ब्रुवतो ऽन्यत्र कथं तदुपलभ्यते ॥ ६.१२ ॥

अस्तीत्येवोपलब्धव्य-स्तत्त्वभावेन चोभयोः । अस्तीत्येवोपलब्धस्य तत्त्वभावः प्रसीदति ॥ ६.१३ ॥

यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः । अथ मर्त्यो ऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते ॥ ६.१४ ॥

நைவ வாசா, ந மனஸா, ப்ராப்தும் ஶக்யோ ந சக்ஷுஷா । அஸ்தீதி ப்ருவதோऽன்யத்ர, கதந் ததுபலப்ப்யதே ॥ 6.12 ॥

அஸ்தீத்-யேவோபலப்த்தவ்யஸ்-தத்வவபாவேந சோபயோ:। அஸ்தீத்-யேவோபலப்த்தஸ்ய, தத்வபாவ: ப்ரஸீததி ॥ 6.13 ॥

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஶ்ரிதா: । அத மர்த்யோ ऽம்ருதோ பவத்-யத்ர ப்ரஹ்ம ஸமஶ்னுதே ॥ 6.14 ॥

---

6.12. (ஆன்மா) வாக்காலும் மனத்தாலும் கண்ணுலும் அடைதற்கு முடியாதது. (எனினும் ஆத்மவஸ்து) உளது என்று உணர்ந்து கூறும் ஞானிகளிடமிருந்தல்லாது அது வேறு எங்ஙனம் அடையப்படும்?

6.13. (காணக்கூடும், காணக்கூடாது எனும்) இவ்விரண்டினுள் (முதலில்) உண்மையான நம்பிக்கையால் உண்டு (காணக் கூடும்) என்று அதில் (ஸகுண) நாட்டம் பெற்றவனுக்கு (நிர்க் குணமாய் அருவுருவுகளுக்கு அப்பாற்பட்டதும் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததுமான) உண்மை நிலை தானே வெளிப் படும்.

6.14. எப்போது இவனுடைய இருதயத்தில் பொதிந்துள்ள

---

6.12. ஒ. பிரம்மத்தை இல்லை என்று ஒருவன் கருதுவானுயின் அவன் இல்லாதவனுகவே ஆய்விடுகிருன். (தை. 2. 6. 1.).

6.13. நுனியில் பிளவையுடைய நூல் ஊசியின் காது வழியே செல்லாது. அதைப்போல ஆசைகள் அற்பமிருந்தாலும் ஒருவன் ஈசுவர ஸந்நிதானத்தை அடையமாட்டான். (ரா. கி.)

6.14. இந்த சரீரத்திலேயே அணைந்த தீபம்போல் சகல பந்தங்

यदा सर्वे प्रभिद्यन्ते हृदस्येह ग्रन्थयः। अथ मर्त्योऽमृतो भवत्येताव-दनुशासनम् ॥ ६.१५ ॥

शतं चैकाच हृदयस्य नाड्य-स्तासां मूर्धान-मभिनिःसृतैका। तयोर्ध्वमाय-न्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति ॥ ६.१६ ॥

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய:। அத மர்த்யோ ऽம்ருதோ பவத்-யேதாவ-தனுஶாஸனம் ॥ 6.15 ॥

ஶதஞ் சைகாச ஹ்ருதஸ்ய-நாட்யஸ்-தாஸாம் மூர்த்தான-மபி-நி:ஸ்ருதைகா । தயோர்த்த்வ-மாயன்-னம்ருதத்வ-மேதி விஷ்வங்ஙன்யா உத்க்ரமணே பவந்தி ॥ 6.16 ॥

---

ஆசைகள் எல்லாம் ஒழிகின்றனவோ அப்போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனுகின்ருன். பிரம்ம (ஆனந்த)த்தை அனுபவிக்கிருன்.

6.15. எப்போது இருதயத்திலுள்ள முடிச்சுகள் எல்லாம் இங்கேயே அவிழ்ந்து போகின்றனவோ அப்போதே சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனுகின்ருன். இதுவே உபதேசத்தின் முடிவு.

6.16. இருதயத்தின் நாடிகள் நூற்ருென்று. அவற்றுள் ஒன்று தலையின் உச்சி நோக்கிப்பாயும். அதன் வழி மேலே சென்று (ஜீவன்) சாகாநிலை யெய்துகிருன். மற்ற நாடிகளெல்லாம் (மீண்டும்) மரணத்துக்கே காரணமாகின்றன.

---

களும் நிவிருத்தியானபடியால் பிரம்மத்தை அடைகிருன்; அதாவது பிரம்மமாகவே ஆகிருன் (சங்).

ஒ. (ந தஸ்ய ப்ராணு உத்க்ராமந்தி)— ப்ரு. 4. 4. 6.

6.15. முடிச்சுக்கள்—அவித்தையாலும் அஹங்காரத்காலும் ஏற்படும் சிக்கல்கள்.

ஒ. மு. 2. 2. 9.

अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये संनिविष्टः। तं स्वाच्छरीरात् प्रवृहेन् मुञ्जादिवेषीकां धैर्येण ॥ तं विद्या-च्छुक्र-ममृतं, तं विद्या-च्छुक्र-ममृतमिति ॥ ६.१७ ॥

मृत्युप्रोक्तां नचिकेतोऽथ लब्ध्वा विद्यामेतां योगविधिं च कृत्स्नम्। ब्रह्मप्राप्तो विरजोऽभूद्विमृत्यु-रन्योऽप्येवं यो विदध्यात्म-मेव ॥ ६.१८ ॥

அங்குஷ்ட்ட-மாத்ர: புருஷோऽந்தராத்மா ஸதா ஜனானாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:। தம் ஸ்வாச்-சரீராத் ப்ரவ்ருஹேன் முஞ்ஜாதிவேஷீகாந்-தைர்யேண ॥ தம் வித்யாச்-சுக்ர-மம்ருதம், தம் வித்யாச்-சுக்ர-மம்ருத-மிதி ॥ 6.17 ॥

ம்ருத்யு-ப்ரோக்தாம் நசிகேதோऽத லப்த்வா வித்யா-மேதாம் யோகவிதிஞ்ச க்ருத்ஸ்னம்। ப்ரஹ்மப்ராப்தோ விரஜோऽபூத் விம்ருத்யு-ரன்யோऽப்-யேவம் யோ வி-தத்த்யாத்மமேவ ॥ 6.18 ॥

---

6.17. உடலில் உறையும் அந்தராத்மா கட்டைவிரல் அளவுள்ளவனாக எப்போதும் ஜனங்களின் இருதயத்தில் வீற்றிருக்கின்றான். புல்லிலிருந்து ஈர்க்கை உருவி எடுப்பதுபோல் உடலிலிருந்து அவனைப் புத்திவன்மையால் பிரித்தெடுக்க வேண்டும். அவனையே சுத்தன் என்றும் அமிருதன் என்றும் அறிய வேண்டும், அவனையே சுத்தன் என்றும் அமிருதன் என்றும் அறியவேண்டும் என்பாம்.

6.18. இவ்வாறு யமனால் உபதேசிக்கப்பட்ட இந்த வித்தையையும் யோக விதிகள் அனைத்தையும் பெற்று நசிகேதஸ் பிரம்மத்தையடைந்து எல்லா மலங்களும் நீங்கினவனாகவும் சாவைத் தாண்டினவனாகவும் ஆனான். வேறு எவனாயினும் இவ்வாறு அத்தியாத்ம தத்துவத்தை அறிவானேல் அவனும் அவ்வாறே (பிரம்மத்தை யடைந்து எல்லா மலங்களும் நீங்கினவனாகவும் சாவைத்தாண்டினவனாகவும் ஆவான்).

---

6.17. பாம்பும் அதன் மேற் சட்டையும் வெவ்வேறானவை. அது போல் ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவை. (ரா. கி.)

ॐ सह॒ना॑ववतु । स॒ह नौ॑ भुनक्तु । स॒ह वी॒र्यं॑ करवावहै । ते॒ज॒स्विना॒वधी॑तमस्तु मा वि॑द्विषा॒ व॒है॑ ॥

ॐ शान्ति॒: शान्ति॒: शान्ति॑: ॥

॥ इति कठोपनिषत्समाप्ता ॥

ஓம் ஸஹநாவவது । ஸஹ நௌ புனக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்விநாவதீதமஸ்து மாவித்விஷா வஹை॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி ||

|| இதி கடோபநிஷத்ஸமாப்தா ||

---

ஓம். (குருசிஷ்யர்களாகிய) எங்களை இருவரையுஞ் சேர்த்து பிரம்மம் காப்பாற்றட்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் கடோபநிஷத்து முற்றும்.

---

**தம் வித்யாத்...இதி**—இரண்டு தடவை சொன்னதும், இதி என்று சொன்னதும் உபநிஷத்தின் முடிவைக்காட்டும்.

**உபநிஷத்தின் விஷயச்சுருக்கம்:**—வாஜசிரவஸ் என்ற பிராம மணர் தன்னிடமிருந்த பொருள் அனைத்தையும் தானமாகக் கொடுப்ப தாய்ச் சங்கல்பம் செய்துகொண்டு ஒரு யாகம் செய்தார். அவர் தானங் களை வழங்கும்போது அருகிலிருந்த அவருடைய சிறுபிள்ளை நசிகேதஸ் பின்வருமாறு தனக்குள் சிந்திக்கலானுன்: "தகப்பனுர் கொடுக்கும் பொருள்களெல்லாம் அற்பமான மதிப்புள்ளவைகளாயிருப்பதால் தானம் பயனுள்ளதாக இல்லை. கறக்காத பசுக்களையும் கிழட்டுப் பசுக்களையும் கொடுப்பதில் என்ன பயன்? பிரியமான பொருள்களையே கொடுக்கவேண் டியதனுல் பிரியமான என்னையுமல்லவோ தானம் செய்யவேண்டும்?" இங்ஙனம் தனக்குள் சொல்லிக்கொண்டு தகப்பனுரிடம் போய், "அப்பா, என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டான்.

பையன் ஏதோ அர்த்தமில்லாமல் பேசுகிருன் என்று எண்ணி முதலில் தகப்பனுர் அவன் வார்த்தையைக் கவனிக்கவில்லை. ஆனுல் அவன் மீண்டும் மீண்டும் அவ்வாறே கேட்கக் கோபத்தில் அவர் "உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறினுர். சொன்னதும் அவர் "என்ன செய்துவிட்டேன்! இந்த யாகத்தில் கொடுப்பதாய்ச் சொன்ன தைக் கொடுத்தே தீரவேண்டுமே" என்று திகைத்தார்.

தகப்பனரது மனக்குழப்பத்தைக் கண்டு நசிகேதஸ், "உங்கள் பிரதிஜ்ஞையைப் பூர்த்திசெய்யவும் உங்கள் யாகம் சிறப்புற்று உயர்ந்த பயனைத்தருவதாய் விளங்கவும் நான் சந்தோஷமாய் யமனிடம் செல்லு வேன். உண்மையுந் தியாகமுமன்றே நிலைபெறும். மனிதன் பூண்டு போல் தோன்றிப் பூண்டுபோல் அழிகிறான்" என்று அவருக்குத் தேறுதல் கூறி யமாலயம் போய்ச்சேர்ந்தான். மூன்று நாள் காத்திருந்த பின் யமனைச் சந்தித்தான். யமதர்மராஜன் பிராமணச் சிறுவனை நமஸ் கரித்து "அதிதியாய் வந்த நீ ஆதரிக்கப்படாமல் மூன்று நாள் காத் திருந்ததால் நான் குற்றம் செய்தவனானேன். அதற்குப் பரிகாரமாக மூன்று வரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்" என்றார்.

நசிகேதஸ் அவரை வணங்கி, "ஐயனே! என் தகப்பனார் கவலை நீங்கி என்மேலிருக்கக் கூடிய கோபமும் நீங்கி, உம்மால் விடப்பட்டு நான் திரும்பிப் போய் அவரைச் சந்திக்கும்போது என்னைச் சந்தோஷத்துடன் ஏற்க வேண்டும். இதுவே என் முதல் வரம்" என்றான். யமன், "அங்ஙனமே ஆகுக" என்றார்.

"சுவர்க்கத்தை எய்துதற்குச் செய்யவேண்டிய யாகத்தின் முறையை உபதேசித்தருளல் வேண்டும். இதுவே இரண்டாவது வரம்" என்றான். யமன் அங்ஙனமே அக்னிவித்தையையும் அதன் முறையையும் உப தேசித்து, "உன் புத்தியையும் சிரத்தையையும் மெச்சினேன். நான் உனக்கு இப்போது உபதேசித்த இந்த அக்னிவித்தை இனி உலகில் பிரசித்திபெற்று உன் பேராலேயே வழங்கட்டும்" என்றார்.

"சாவுக்குப்பின் ஆத்மாவின் நிலையைப்பற்றிப் பலர் பலவாறாகப் பேசுகின்றனர். இதன் உண்மையை அறிய விரும்புகிறேன். இதுவே மூன்றாவது வரம்" என்றான் நசிகேதஸ்.

யமன் அவனைச் சோதிக்க எண்ணி, "அப்பா! நீ சிறுவன். நீ கேட்பதோ பெரிய கேள்வி. தேவர்களும் இதை அறியவில்லை. உலகில் நீண்ட வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும் விரும்பிப் பெற்றுக்கொள். இன்னும் எது வேண்டுமானாலுங் கேள். இந்த வரத்தை வற்புறுத்தாதே" என்றார்.

நசிகேதஸ் அசையவில்லை. "யமனே! உயிரைக்கொண்டு ஏகும் நீ இருக்கும் வரை எத்தனை நீண்ட ஆயுளாயினும் அது எம்மாத்திரம்? நீ தருவதாகச் சொல்லும் செல்வங்கள் என்ன சுகந்தரும்? மனிதன் பொருளால் ஒருக்காலுந் திருப்தியடைய முடியாது. சந்தேகந்தீர்ந்து

உண்மை உபதேசம் உன்னைப் போன்ற ஒரு குருவினிடம் பெறுவதையே நான் விரும்புகிறேன்" என்றான்.

"உன்னைப்போன்ற விவேகியுந் தீரனும் சீடனாகக் கிடைப்பது அரிது" என்று யமனும் சம்மதித்து உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

எதைப்பற்றிய கேள்வி கூடப் பலருக்குக் கிட்டுவதில்லையோ, கேட்டிருந்தாலும் எதைப் பலரும் அறியவில்லையோ அதைப்பற்றிக் கூறுகிறவன் அரிது, அதை அடையும் நிபுணனும் அரிது. காண்பதற்கரியதும் அனைத்தினும் ஊடுருவி உள்ளுறையும் மறைபொருளும் புத்தி குகையில் நிலைபெற்றதும் உடல்தோறும் வியாபித்து நிற்பதும் பழைமையான பொருளும் ஆகிய அந்த ஆன்மாவை அத்தியாத்ம யோகத்தால் உணர்ந்து தீரனானவன் இன்பதுன்பக் கிளர்ச்சிகளினின்று விடுபடுகிறான். இவ்வுண்மையைத் தெளியுறக் கண்டவன் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. இந்த ஆத்மா எங்கிருந்தும் உண்டாகவில்லை, அனைத்துக்கும் முன்னுள்ளது; சரீரம் அழியும்போதும் அழியாமல் நிற்பது.

துர்நடத்தையினின்று விலகாதவனும், இந்திரியங்களை அடக்காதவனும் மனதை ஒருமுகப்படுத்திச் சாந்தியை நாடாதவனும் இந்த ஆத்மாவை அடையமாட்டான்.

சரீரத்தைத் தேராகவும் மனதைக் கடிவாளமாகவும் புத்தியைச் சாரதியாகவும் ஜீவனைத் தேரில் வீற்றிருப்பவனாகவும் அறி. அடக்கப்படாத மனதுடனும் விவேகமில்லாத புத்தியுடனுங் கூடியவன் எவனோ அவனுக்குச் சாரதிக் கடங்காத துஷ்டக் குதிரைகள் போல இந்திரியங்கள் வசப்படமாட்டா.

சிறந்த ஆசாரியர்களை அடைந்து விழிப்புடன் இருந்து ஞான மார்க்கத்தில் நடக்க வேண்டும். அம்மார்க்கம் கத்தியின் நுனிபோல் நடப்பதற்குங் கடப்பதற்குங் கடினமானது.

இங்கு எது உளதோ அதுவே அங்கும்; எது அங்குள்ளதோ அதுவே இங்கும். எவன் இங்கு வேற்றுமை காண்கிறானோ அவன் மரணத்தினின்று மரணத்தையே அடைகிறான்.

எங்ஙனம் சுத்தமான ஜலத்தில் விடப்பட்ட சுத்தஜலம் அதுபோலவே ஆகிறதோ அங்ஙனமே உண்மை உணர்ந்த முனியின் ஆத்மா ஆகிறது.

ஆனால் இதை உணராதவர்கள் பிறப்பிறப்பாகிய கனவைக் காண்கின்றனர். இவ்வுடல் வீழ்ந்தபின் சிலர் வேறு உடல்களை வேண்டி யோனியிற் புகுகின்றனர்; சிலர் தாவர நிலையையடைகின்றனர், —அவரவர் கருமத்துக்கும் ஞானத்துக்குந் தக்கவாறு.

எங்ஙனம் ஒரே நெருப்பு உலகப் பொருள்களில் புகுந்து அந்தந்தப் பொருளின் உருவத்துக்குத் தக்கவாறு தனித்தனி உருவுடையதாக ஆயிற்றோ அங்ஙனமே உண்டாய உயிர்களனைத்துக்கும் ஒன்றேயாகிய ஆத்மா அந்தந்த உருவத்திற்குத்தக்க உருவுடையதாக ஆகி அனைத்திற்கும் அப்பாலும் உள்ளதாகிறது.

நிலையில்லாப் பொருள்களிடை நிலையுள்ளவனும் அறிவுள்ள உயிர்களின் அறிவாயும் ஒருவனாய் நின்று அனைவருடைய ஆசைகளையும் அளிப்பவனும் உள்ள அவனை எந்த தீரர்கள் தங்களிடம் உறைபவனாய்க் காண்கிறார்களோ அவர்களுக்கே அழிவிலாச் சாந்தி உண்டு. பிறர்க்கில்லை.

எப்போது இருதயத்திலுள்ள முடிச்சுக்கள் எல்லாம் இங்கேயே அவிழ்ந்து போகின்றனவோ அப்போதே சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனாகின்றான். இதுவே உபதேசத்தின் முடிவு.

இந்த ஞானத்தைப்பெற்ற நசிகேதஸ் எல்லா மலங்களும் நீங்கியவனாகவும் சாவைத்தாண்டினவனாகவும் பிரம்மத்தை யடைந்தவனாகவும் ஆனான். வேறு எவனாயினும் நசிகேதஸ்ஸைப்போல் இந்த அத்தியாத்ம தத்துவத்தை அறிவானாயின் அதே பதவியை அடைவதற்குரியவனாவான்.

இங்ஙனம் கடோபநிஷத்திற்கு

ஸ்ரீராமகிருஷ்ணதீபம் எனும் உரைமுற்றும்.

## ॥ प्रश्नोपनिषत् ॥

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पति-र्दधातु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ பிரஶ்னோபநிஷத் ॥

ஓம் பத்ரங் கர்ணேபி: ஶ்ருணுயாம தேவா: । பத்ரம் பஶ்யேமாக்ஷபிர்யஜத்ரா: । ஸ்த்திரை-ரங்கைஸ்-துஷ்டுவாம்ஸ-ஸ்தனூபி: । வ்யஶேம தேவஹிதம் யதாயு: । ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தஶ்ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விஶ்வவேதா: । ஸ்வஸ்தி நஸ்-தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: । ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி ।

---

## பிரச்னோபநிஷத்து

ஓம். தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும். பூஜைக்குரியவர்களே! கண்களால் நாங்கள் நல்லதைக் காணவேண்டும். திடமான உறுப்புக்களுடனும் உடல்களுடனும் (தேவர்களைத்) துதித்துப் போற்றிக்கொண்டு தேவர்களுக்குவப்பான ஆயுள் எவ்வளவோ அதை அடைவோமாக. பெரும்புகழ் வாய்ந்த இந்திரன் நமக்கு நன்மை (அளிக்கட்டும்). எல்லாவற்றையும் அறியும் சூரியன் நமக்கு நன்மை (அளிக்கட்டும்). தடைபடாத கதியுடைய கருடன் நமக்கு நன்மை (அளிக்கட்டும்). பிருஹஸ்பதி நமக்கு நன்மை (அளிக்கட்டும்).

ஓம் மூவ்வகையிலும் சாந்தி நிலவுக!

---

**உபநிஷத்தின் பெயரும் தொடர்பும் :—**இவ்வுபநிஷத்தில் ஆறு 'ப்ரஶ்னங்கள்' அல்லது கேள்விகள் எழுவதால் இதற்குப் பிரச்னோபநிஷத்து என்று பெயர் அமைந்தது. இது அதர்வ வேதத்தைச் சேர்ந்தது.

**தேவர்கள் :—**நம்மைச் சூழ்ந்து நின்று நம்மைக் காப்பாற்றுவதற்குத் தேவர்களை ஆண்டவன் நியமித்திருக்கிறார். அவர்கள் நம்முடைய

## प्रथमः प्रश्नः

ॐ सुकेशा च भारद्वाजः, शैब्यश्च सत्यकामः, सौर्यायणी च गार्ग्यः, कौसल्यश्चाश्वलायनो, भार्गवो वैदर्भिः, कबन्धी कात्यायनस्ते हैते ब्रह्मपरा ब्रह्मनिष्ठाः, परं ब्रह्मान्वेषमाणा, एष ह वै तत्सर्वं वक्ष्यतीति। ते ह समित्पाणयो भगवन्तं पिप्पलादमुपसन्नाः ॥ १.१ ॥

## ப்ரதம: ப்ரஶ்ன:

ஓம் ஸுகேஶா ச பாரத்வாஜ:, ஶைப்யஶ்ச ஸத்யகாம:, ஸௌர்யாயணீ ச கார்க்ய:, கௌஸல்யஸ்-சாஶ்வலாயனோ, பார்க்கவோ வைதர்ப்பி:, கபந்தீ காத்யாயனஸ்-தேஹைதே ப்ரஹ்மபரா ப்ரஹ்மநிஷ்ட்டா:, பரம் ப்ரஹ்மான்வேஷமாணு ஏஷ ஹ வை தத் ஸர்வம் வக்ஷ்யதீதி, தே ஹ ஸ்மித்பாணயோ, பகவந்தம் பிப்பலாத-முபஸன்னு: ॥ 1.1 ॥

---

## முதல் கேள்வி

1.1. ஓம். பாரத்வாஜருடைய புத்திரர் ஸுகேசர், சிபியின் புத்திரர் ஸத்யகாமர், சூரியனுடைய பௌத்ரர் கார்க்கியர், அசுவலரின் புத்திரர் கௌஸல்யர், விதர்ப்ப நாட்டினரான பார்க்கவர், கத்யரின் புத்திரர் கபந்தீ—இவர்கள் அனைவரும் பிரம்ம நாட்டமுடையவர்களாகவும் பிரம்ம நிஷ்டையுடையவர்களாகவும் பிரம்மத்தைத் தேடுபவர்களாகவும் இருந்தனர். அதைப்பற்றிய அனைத்தையும் இவர் உபதேசிப்பார் என்று ஸமித்தைக் கையுறையாகக் கொண்டு அவர்கள் பெருமை மிக்க பிப்பலாதரை அணுகினர்.

---

பிரார்த்தனைகளை ஆண்டவனிடம் சேர்ப்பித்து, ஆண்டவன் நமக்களிப்பதை நம்மிடம் சேர்ப்பிக்கின்றனர்.

1.1. (ஸமித்பாணய) :—ஸமித்தைக் கையுறையாகக் கொண்டு— அரசன், குரு, தெய்வம், குழந்தைகள் இவர்களைக் காணச் செல்லுகையில் வெறுங்கையனாகப் போகக்கூடாது. குருவினிடம் செல்லுகையில் அவருடைய அக்கினியை வளர்ப்பதற்கு நாள்தோறும் அவசியமான ஸமித்

तान् ह स ऋषिरुवाच, भूय एव तपसा ब्रह्मचर्येण श्रद्धया संवत्सरं संवत्स्यथ, यथाकामं प्रश्नान् पृच्छत, यदि विज्ञास्यामः, सर्वं ह वो वक्ष्याम इति ॥ १.२ ॥

தான் ஹ ஸ ருஷிருவாச, பூய ஏவ தபஸா ப்ரஹ்மசர்யேண ஶ்ரத்தயா, ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸ்யத, யதாகாமம் ப்ரஶ்னான் ப்ருச்சத, யதி விஜ்ஞாஸ்யாம:, ஸர்வம் ஹ வோ வக்ஷ்யாம இதி ॥ 1.2 ॥

1.2. ''மீண்டும் தவத்தையும் பிரம்மசரியத்தையும் சிரத்தையையும் மேற்கொண்டு ஒரு வருஷம் வசியுங்கள்; பின் இஷ்டப்படி கேள்விகளைக் கேளுங்கள்; எமக்குத் தெரிந்தால் நிச்சயமாக விடையளிப்போம்'' என்று அவர்களிடம் அந்த ரிஷி கூறினர்.

தைச் சிஷ்யர்கள் கொண்டு செல்வது வழக்கம். ஸமித்து ஈரமில்லாமல் உலர்ந்திருப்பது போல் சிஷ்யனுடைய மனம் வைராக்கிய மடைந்திருக்கிற தென்பதற்கும், தீயிலிட்டதும் அது தீயைப் பற்றிக் கொள்வது போல் குருவின் உபதேசத்தைப் பற்றிக் கொள்ளும் என்பதற்கும், ஸமித்தை அக்னியிலிடுவது போல் சிஷ்யன் தன்னை குருவிடம் முழுவதும் அர்ப்பணம் செய்கிறுன் என்பதற்கும் இது அறிகுறி.

ஒ.—பணிவாலும்,பரிவுமிகுந்த கேள்வியாலும், சேவையாலும் அதை அறிக. மெய்ப்பொருள் கண்ட ஞானிகள் உனக்கு ஞானத்தை உபதேசிப்பார்கள். (கீ. 4.34)

அதையே மேலாகக் கருத்திற் கொண்டவனும் இந்திரியங்களை நன் கடக்கியவனும் ஆகிய சிரத்தை பொருந்தியவன் ஞானத்தை அடைகிறுன் (கீ. 4. 40).

தவஞ்செய்யாதவர்க்கும் பக்தியில்லாதவர்க்கும் பணிவிடை செய்யாதவர்க்கும் இந்த ஞானத்தை உபதேசிக்கக்கூடாது (கீ. 18.67)

பிரம்மசரியம்—பிரம்மசரியமில்லாதவன் மனம் ஓட்டைக் குடம் போன்றது. (ரா. கி.)

(ந தபஸ்-தப இத்யாஹுர் ப்ரஹ்மசர்யம் தபோத்தமம் । ஊர்த்த்வ ரேதா பவேத் யஸ்து ஸ தேவோ ந து மானுஷ:) பிரம்மசரியந்தான் உத்தமமான தவம்; அது இல்லாத தவம் தவமன்று. எவன் ஊர்த்துவ ரேதஸ் ஆகின்றுனே அவன் தெய்வம், மனிதனன்று (ஞானஸங்கிலினீ தந்த்ரம்).

अथ कबन्धी कात्यायन उपेत्य पप्रच्छ। भगवन् कुतो ह वा इमाः प्रजाः प्रजायन्त इति ॥ १.३ ॥

तस्मै स होवाच प्रजाकामो वै प्रजापतिः, स तपोऽतप्यत, स तपस्तप्त्वा, स मिथुनमुत्पादयते, रयिं च प्राणं चेत्येतौ मे बहुधा प्रजाः करिष्यत इति ॥ १.४ ॥

அத கபந்தீ காத்யாயன உபேத்ய பப்ரச்ச। பகவன், குதோ ஹ வா இமா: ப்ரஜா: ப்ரஜாயந்த இதி ॥ 1·3 ॥

தஸ்மை ஸ ஹோவாச, ப்ரஜாகாமோ வை ப்ரஜாபதி: ஸ தபோ ऽதப்யத, ஸ தபஸ்-தப்த்வா, ஸ மிதுன-முத்பாதயதே, ரயிஞ் ச ப்ராணஞ்சேத்-யேதௌ மே பஹுதா ப்ரஜா: கரிஷ்யத இதி ॥ 1.4 ॥

---

1.3. அதன்மேல் கத்யரின் புத்திரரான (காத்யாயனர்) கபந்தீ என்பவர் (பிப்பலாதரை) அணுகிக் கேட்டதாவது:— "ஐயனே ! இந்தப் பிரஜைகள் எங்ஙனம் உற்பத்தியாயின ?"

1.4. (இங்ஙனங் கேட்ட) இவருக்கு அவர் கூறியதாவது:— பிரஜாபதியானவர் பிரஜைகளை விரும்பியவராய்த் தவத்தைச் செய்தார். தவஞ் செய்து ரயி, பிராணன் என்ற இரட்டையைச் சிருஷ்டித்து 'இவை எனக்குப் பலவகையான பிரஜைகளை உண்டாக்கும்' என்று கருதினார்.

---

1.4. ப்ரஜாபதி—ஹிரண்ய கர்ப்பன் (உலக ஸமஷ்டி வடிவினன்).

ஸமஷ்டியான ஒவ்வொன்றும் பிரஜாபதி என்றும், உயிரும், உடலும் வளர்ச்சியுந் தேய்வும், பகலும் இரவும், பிரஜாபதியின் இரு கூறுகளான பிராணனும் ரயியும் எனவுங் கூறப்படுகின்றன. பிராணனும் ரயியும், வெயிலும் நிழலும், வலமும் இடமும், சித்தும் ஜடமும் போல இணைக்கப் பெற்றவை. பிராணனுடைய இயக்கத்தாலேயே பிரஜைகள் உற்பத்தியாகின்றன, நிலைபெறுகின்றன, அழிகின்றன. (பிரச். 2.5-6 பார்க்க).

ஒ.—(ம்ருத்யுர்-கந்தர்வஸ்-தஸ்ய ப்ரஜா அப்ஸரஸ :...) மரணம் ஒரு கந்தர்வன் ; அவனுக்கு மக்கள் அப்ஸரஸ்திரீகள் போன்றவர்கள் ; உலக மேடையில் அவர்களுடன் கூடி விளையாடுகிறான். (காமோ கந்தர்வ: தஸ்யாதயோऽப்ஸரஸ:) காமம் ஒரு கந்தர்வன் ; மனக்கவலைகள் அவனுக்கு அப்ஸரஸ்திரீகள் போன்றவர்கள்...(ஜயாதி ஹோம மந்திரம்—தைத்திரீயம்).

आदित्यो ह वै प्राणो, रयिरेव चंद्रमा, रयिर्वा एतत् सर्वं यन्मूर्तं चामूर्तं च, तस्मान् मूर्तिरेव रयिः ॥ १.५ ॥

संवत्सरो वै प्रजापति-स्तस्यायने दक्षिणं चोत्तरं च। तद्ये ह वै तदिष्टापूर्ते कृत-मित्युपासते, ते चान्द्रमसमेव लोक-मभिजयन्ते। त एव पुनरावर्तन्ते तस्मादेते ऋषयः प्रजाकामा दक्षिणं प्रतिपद्यंते। एष ह वै रयिर्यः पितृयाणः ॥ १.९ ॥

ஆதித்யோ ஹ வை ப்ராணோ ரயிரேவ சந்த்ரமா, ரயிர்வா ஏதத் ஸர்வம், யன்-மூர்த்தஞ்சாமூர்த்தஞ்ச, தஸ்மான் மூர்த்தி ரேவ ரயி: ॥ 1.5 ॥

ஸம்வத்ஸரோ வை ப்ரஜாபதிஸ்-தஸ்யாயனே, தக்ஷிணஞ் சோத்தரஞ் ச । தத்யேஹ வை ததிஷ்டாபூர்த்தே க்ருத-மித்யுபாஸதே, தே சாந்த்ரமஸமேவ லோக-மபிஜயந்தே, த ஏவ புனராவர்த்தந்தே, தஸ்மா-தேதே ருஷய:, ப்ரஜாகாமா தக்ஷிணம் ப்ரதிபத்யந்தே । ஏஷ ஹ வை ரயிர்-ய: பித்ருயாண: ॥ 1.9 ॥

---

1.5. 'ப்ராண'னே சூரியன், 'ரயி'யே சந்திரன். ஸ்தூல வடிவும் சூக்ஷ்ம வடிவுமுள்ள இது எல்லாம் 'ரயி'யே. ஆகையால் உருவே 'ரயி' என்பாம்.

1.9. (கால வடிவான) வருஷமே பிரஜாபதி. தக்ஷிணாயனம் உத்தராயணம் என்று அதற்கு அயனங்கள் இரண்டு. எவர்கள் இங்கு இஷ்டாபூர்த்த வடிவான கருமவழியையே பின்பற்றுகிறார்களோ அவர்கள் சந்திரலோகத்தை யடைகின்றனர். அவர்கள் மீண்டும் திரும்புகின்றனர் (இவ்வுலகிற் பிறக்கின்றனர்). ஆகையால் எந்த ரிஷிகள் பிரஜைகளை விரும்பியவர்களோ அவர்கள் தக்ஷிண மார்க்கத்தை யடைகிறார்கள். பித்ருயானம் என்னும் இது 'ரயி'யே யாகும்.

---

1.9. **இஷ்டா பூர்த்தம்**—அக்னிஹோத்ரம், அதிதி பூஜை, பசு பக்ஷி ஸம்ரக்ஷணை, கிணறு வெட்டுதல், கோவில் கட்டுதல் முதலியன.

अथोत्तरेण तपसा ब्रह्मचर्येण श्रद्धया विद्ययात्मान-मन्विष्यादित्य-मभिजयन्त एतद्वै प्राणाना-मायतन-मेत-दमृत-मभय-मेतत् परायण-मेतस्मान्न पुनरावर्तन्त इत्येष निरोधः ॥ १.१० ॥

तेषामेवैष ब्रह्मलोको येषां तपो ब्रह्मचर्यं येषु सत्यं प्रतिष्ठितम् ॥ १.१५ ॥

तेषामसौ विरजो ब्रह्मलोको, न येषु जिह्मं अनृतं न माया चेति ॥ १.१६ ॥

அதோத்தரேண, தபஸா, ப்ரஹ்மசர்யேண ஶ்ரத்த்யா, வித்ய-யாத்மான-மன்விஷ்-யாதித்ய-மபிஜயந்த, ஏதத்-வை ப்ராணா-மாய-தன-மேத-தம்ருத-மபயம், ஏதத் பராயணம், ஏதஸ்மாந் ந புனராவர்த்தந்த இத்யேஷ நிரோத: ॥ 1.10 ।

தேஷா-மேவைஷ ப்ரஹ்மலோகோ, யேஷாம் தபோ ப்ரஹ்ம-சர்யம், யேஷு ஸத்யம் ப்ரதிஷ்ட்டிதம் ॥ 1.15 ॥ தேஷா-மஸௌ விரஜோ ப்ரஹ்மலோகோ, ந யேஷு ஜிஹ்மம், அந்ருதம், ந மாயா-சேதி ॥ 1.16 ॥

---

1.10. ஆனால் தவத்தாலும் பிரம்மசரியத்தாலும் சிரத்தையாலும் வித்தையாலும் ஆன்மாவை நாடியவர்கள் உத்தர மார்க்கத்தால் சூரியலோகத்தை யடைகின்றனர். இதுவே எல்லாப் பிராணன்களுடைய உறைவிடமும், மரணமும் பயமும் நீங்கிய இடமும் ஆகும். இதுவே உன்னதமான நிலை. இதினின்று மீண்டுந் திரும்புவதில்லை. இது (மற்றவர்களுக்குத்) தடை.

1.15. தவமும் பிரம்மசரியமும் எவர்களிடமோ, உண்மை எவர்களிடம் நிலைபெற்றுள்ளதோ, அவர்களுக்கே இந்தப் பிரம்ம லோகம்.

1.16. எவர்களிடம் சூதும் பொய்யும் வஞ்சனையும் இல்லையோ அவர்களுக்கேயாம் இந்தக் குற்றமற்றப் பிரம்ம லோகம்.

---

1.10. இது தேவயானம் எனப்படுவது. இது கிரம முக்தி மார்க்கம்.

## द्वितीयः प्रश्नः

अथ हैनं भार्गवो वैदर्भिः पप्रच्छ। भगवन् कत्येव देवाः प्रजां विधारयन्ते, कतर एतत् प्रकाशयन्ते, कः पुनरेषां वरिष्ठ इति ॥ २.१ ॥

तस्मै स होवाचाकाशो ह वा एष देवो वायु-रग्नि-रापः पृथिवी वाङ्मनश्चक्षुः श्रोत्रं च। ते प्रकाश्याभिवदन्ति वय-मेतद्बाण-मवष्टभ्य विधारयामः ॥ २.२ ॥

## த்விதீய:ப்ரச்ன:

அத ஹைனம் பார்க்கவோ வைதர்ப்பி: பப்ரச்ச। பகவன், கத்யேவ தேவா: ப்ரஜாம் விதாரயந்தே, கதர ஏதத் ப்ரகாஶ யந்தே, க: புனரேஷாம் வரிஷ்ட்ட இதி ॥ 2.1 ॥

தஸ்மை ஸ ஹோவாச, ஆகாஶோ ஹ வா ஏஷ தேவோ வாயு-ரக்னி-ராப: ப்ருதிவீ வாங்-மனஶ்-சக்ஷு:ஶ்ரோத்ரஞ் ச। தே ப்ரகாஶ்யாபிவதந்தி, வய-மேதத்-பாண-மவஷ்டப்ப்ய விதா ரயாம: ॥ 2.2 ॥

---

## இரண்டாவது கேள்வி

2.1. அதன்மேல் விதர்ப்ப நாட்டினரான (பிருகு வம்சத் தவர்) பார்க்கவர் அவரைக் கேட்டதாவது :—ஐயனே ! எத்தனை தேவதைகள் (உடல் படைத்த) பிரஜைகளை ஆதரிக்கின்றனர்கள் ? எத்தனை (தேவதைகள்) உடலை உயிர்ப்பிக்கின்றனர் ? இவர் களுள் சிறந்த தேவதை எது ?

2.2. இவருக்கு அவர் கூறியதாவது :—இது ஆகாசம் என்ற தேவதையும், வாயுவும், அக்கினியும், அப்புவும், பிருதிவி யும், வாக்கு, மனம், கண், காது முதலியவைகளுமேயாம். அவை தம் சக்திகளை வெளிப்படுத்திக்கொண்டு 'நாங்கள் தான் இவ் வுடலை ஆதரித்துத் தாங்குகிறோம்' என்று கூறின.

---

2.1. ஒவ்வொரு சக்தியும் ஒரு தேவதை எனப்படுகிறது.

तान्वरिष्ठः प्राण उवाच, मा मोह-मापद्यथाहमेवैतत् पंचधा-त्मानं प्रविभज्य एत- द्बाण-मवष्टभ्य विधारयामीति ॥ २.३ ॥

एषोऽग्नि-स्तपत्येष सूर्य एष पर्जन्यो मघवानेष वायु-रेष पृथिवी रयि-र्देवः सदसच्चामृतं च यत् ॥ २.५ ॥

अरा इव रथनाभौ प्राणे सर्वं प्रतिष्ठितम् ॥ २.६ ॥

தான் வரிஷ்ட்ட: ப்ராண உவாச । மா மோஹ-மாபத்யத, அஹமேவைதத் பஞ்சதாத்மானம் ப்ரவிபஜ்ய, ஏதத் பாண-மவஷ்டப்ப்ய, விதாரயாமீதி ॥ 2.3 ॥

ஏஷோऽக்னிஸ்-தபத்-யேஷ ஸூர்ய, ஏஷ பர்ஜன்யோ, மகவா-னேஷ வாயு-ரேஷ ப்ருதிவீ ரயிர்-தேவ:, ஸதஸச்சாம்ருதஞ் ச யத் ॥ 2.5 ॥

அரா இவ ரதநாபௌ, ப்ராணே ஸர்வம் ப்ரதிஷ்ட்டிதம் ॥ 2.6 ॥

---

2.3. முக்கியப் பிராணன் அவைகளை நோக்கி "மயக்கத்தை யடையாதீர்கள். நானே என்னை ஐந்து பாகமாகப் பிரித்துக்கொண்டு இந்த உடலை ஆதரித்துத் தாங்குகின்றேன்" என்றது.

2.5. இதுவே (முக்கியப் பிராணனே) அக்கினியாக எரிகிறது. இதுவே சூரியன். இதுவே மேகம். இதுவே இந்திரன். இதுவே காற்று. இந்த தேவதையே பிருதிவி, ரயி; உளதென்பதும் இலதென்பதுவும், அழிவற்ற பரம்பொருளும் (இதுவே.)

2.6. சக்கரத்தின் குடத்தில் ஆரங்களைப் போல் பிராணனிடத்தில் எல்லாம் பொருத்தப்பட்டுள்ளன.

---

2.3. ஐந்து பாகமாகப் பிரித்துக்கொண்டு—பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் என ஐந்து.

ஒ. (பஞ்சவ்ருத்திர் மனோவத் வ்யபதிஶ்யதே)— பி. ஸூ. 2.4.12.

इन्द्रस्त्वं प्राण तेजसा, रुद्रोऽसि परिरक्षिता। त्वमन्तरिक्षे चरसि सूर्यस्त्वं ज्योतिषां पतिः॥ २.९॥

प्राणस्येदं वशे सर्वं, त्रिदिवे यत्प्रतिष्ठितम्। मातेव पुत्रान् रक्षस्व, श्रीश्च प्रज्ञां च विधेहि न इति॥ २.१३॥

## तृतीयः प्रश्नः

अथ हैनं कौसल्यश्चाश्वलायनः पप्रच्छ। भगवन् कुत एष प्राणो जायते, कथमाया-त्यस्मिन् शरीर आत्मानं वा प्रविभज्य,

இந்த்ரஸ்-த்வம் ப்ராண தேஜஸா, ருத்ரோஸி பரிரக்ஷிதா। த்வ-மந்தரிக்ஷே சரஸி, ஸூர்யஸ்-த்வஞ் ஜ்யோதிஷாம் பதி: ॥ 2.9. ॥

ப்ராணஸ்யேதம் வஶே ஸர்வம், த்ரிதிவே யத் ப்ரதிஷ்ட்டிதம்। மாதேவ புத்ரான் ரக்ஷஸ்வ, ஶ்ரீஶ்ச ப்ரஜ்ஞாஞ்ச விதேஹி ந இதி ॥ 2.13 ॥

## த்ருதீய:ப்ரஶ்ன:

அத ஹைனம் கௌஸல்யஶ்சாஶ்வலாயன: பப்ரச்ச। பகவன், குத ஏஷ ப்ராணோ ஜாயதே, கதமாயாத்-யஸ்மின் ஶரீரே,

---

2.9. பிராணனே! நீயே இந்திரன். வீரியத்தால் ருத்திரனாகவும் இருக்கிறாய். பரிபாலிப்பவனும் நீயே. நீயே சூரியனாக வானத்தில் சஞ்சரிக்கிறாய். நீயே ஒளிகளின் அரசு.

2.13. இதுவும், தேவலோகத்தில் இருக்கின்றது எதுவோ அதுவும், எல்லாம் பிராணனாகிய உன்னுடைய வசமே. தன் மக்களைக் காக்குந் தாயைப்போல் எங்களைக் காத்தருள்வாய்; எங்களுக்கு நற்செல்வத்தையும் நல்லுணர்வையும் தந்தருள்வாய்!

## மூன்றாவது கேள்வி

3.1. அதன்பின் அச்வல புத்திரரான கௌஸல்யர் அவரைக் கேட்டதாவது:—ஐயனே! இந்தப் பிராணன் எங்ஙனம் உண்டாகிறது? இவ்வுடலினுள் எங்ஙனம் வருகிறது? தன்னை

---

2.13. இந்திரன்—இங்கே, சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மா. பரிபாலிப்பவன்—விஷ்ணு. அழிப்பவன்—ருத்ரன்.

कथं प्रातिष्ठते, केनोत्क्रमते, कथं ब्राह्य-मभिधत्ते, कथ-मध्यात्म-मिति ॥ ३.१ ॥

आत्मन एष प्राणो जायते । यथैषा पुरुषे छायैतस्मि-न्नेत-दाततं मनो-कृतेनाया-त्यस्मिञ्छरीरे ॥ ३.३ ॥

यथा संराडेवाधिकृतान् विनियुङ्क्ते । एतान् ग्रामा-नेतान् ग्रामा-नधितिष्ठस्वे-त्येवमेवैष प्राण इतरान् प्राणान् पृथक् पृथगेव सन्निधत्ते ॥ ३.४ ॥

ஆத்மானம் வா ப்ரபிபஜ்ய, கதம் ப்ராதிஷ்ட்டதே, கேனோத்க்ர மதே, கதம் பாஹ்ய-மபிதத்தே, கத-மத்த்யாத்ம-மிதி ॥ 3.1 ॥

ஆத்மன ஏஷ ப்ராணோ ஜாயதே। யதைஷா புருஷே சாயை-தஸ்மிந்-நேத-தாததம், மனோ-க்ருதே-னயாத்-யஸ்மின் ஶரீரே ॥ 3.3 ॥

யதா ஸம்ராடேவாதிக்ருதான் விநியுங்க்தே। ஏதான் க்ரா மான், ஏதான் க்ராமான், அதிதிஷ்ட்டஸ்வேதி, ஏவமேவைஷ ப்ராண இதரான் ப்ராணான் ப்ருதக் ப்ருதகேவ ஸந்நிதத்தே.॥3.4॥

---

விபாகம் செய்து கொண்டு எங்ஙனம் நிலை பெறுகிறது? எதனால் வெளிக் கிளம்புகிறது? வெளி (அதிபூத அதிதைவ) உலகை எங்ஙனம் தாங்குகிறது? அத்தியாத்ம (உள் உலக)த்தை எங்ங னம் (தாங்குகிறது)?

அவர் இவருக்குக் கூறியதாவது :—

3.3. இந்தப் பிராணன் ஆத்மாவினிடத்திலிருந்தே உண் டாகிறது. எங்ஙனம் இப்புருஷனிடம் நிழலோ (அங்ஙனம்) இந்த ஆத்மாவினிடம் இது (பிராணன்) பரவி நிற்கின்றது. மனத்தின் செய்கையால் இவ்வுடலினுள் வருகிறது.

3.4. ஒரு அரசன் அதிகாரிகளை இந்த இந்த கிராமங்களில் இன்னார் இருங்கள் என்று நியமிப்பது போல, இந்த (முக்கியப்) பிராணன் மற்றப் பிராணன்களை தனித்தனியே ஏவுகின்றது.

---

3.3. ஆத்மாவின் நிழல் போன்றது பிராணன். பிராணனின் இயக்கத்தால் தோன்றும் வடிவங்களெல்லாம் திரையில் ஆடும் நிழற் படங்களுக்கொப்பானவைகளே.

पायूपस्थे ऽपानं, चक्षु: श्रोत्रे मुख-नासिकाभ्यां प्राण: स्वयं प्रातिष्ठते, मध्ये तु समान:। एष ह्येत-द्धुतमन्नं समं नयति, तस्मा-देता: सप्तार्चिषो भवन्ति ॥ ३.५ ॥

हृदि ह्येष आत्मा। अत्रैत-देकशतं नाडीनां तासां शतं शत-मेकैकस्यां द्वासप्तति-र्द्वासप्तति: प्रतिशाखा नाडी-सहस्राणि भवन्त्यासु व्यान-श्चरति ॥ ३.६ ॥

பாயூபஸ்த்தேऽபானஞ், சக்ஷு:ஶ்ரோத்ரே முக-நாஸிகாப்ப்யாம் ப்ராண: ஸ்வயம் ப்ராதிஷ்ட்டதே, மத்த்யேது ஸமான:। ஏஷ-ஹ்யேதத்-துத மன்னம் ஸமம் நயதி, தஸ்மாதேதா: ஸப்தார்ச்சிஷோ பவந்தி ॥ 3.5 ॥

ஹ்ருதிஹ்-யேஷ ஆத்மா। அத்ரைத-தேகஶதம் நாடீனாம் தாஸாம் ஶதம் ஶத-மேகைகஸ்யாம், த்வாஸப்ததிர் த்வாஸப்ததி: ப்ரதிஶாகா நாடீஸஹஸ்ராணி பவந்த்யாஸு வ்யானஶ்-சரதி ॥ 3.6 ॥

---

3.5. பாயுவிலும் உபஸ்தத்திலும் அபானனை (பிராணன் நிறுத்துகிறது); கண்ணிலுங் காதிலும் வாயிலும் மூக்கிலும் பிராணன் தானே நிலைபெறுகிறது; இடையில் நாபிப் பிரதேசத்தில் உள்ளது ஸமானன்; (ஜாடராக்னியில்) ஹோமம் செய்யப்பட்ட உணவை (அங்கங்களில்) சமமாகக் கொண்டு செல்லுவது. அதினின்றே இவ்வேழு தீக்கொழுந்துகளும் எழுகின்றன.

3.6. இந்த ஜீவாத்மா இருதயத்தில் (உறைகிறான்). இங்கு நூற்றொரு நாடிகள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் நூறு நூறாகப் பிரிந்து, ஒவ்வொரு கிளை நாடியும் மீண்டும் 72000 வேறு கண்ணி நாடிகளாகவும் பிரிகின்றன. இவைகளில் வியானன் செல்லுகிறது.

---

**பாயு**—மலத்துவாரம்; **உபஸ்தம்**—கருத்துத்துவாரம். **ஏழுதீக்கொழுந்துகள்**—கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, நாசித்துவாரம் இரண்டு, வாய் ஒன்று.

अथैकयोर्ध्व उदानः पुण्येन पुण्यं लोकं नयति, पापेन पापं, उभाभ्यामेव मनुष्य-लोकम् ॥ ३.७ ॥

आदित्यो ह वै बाह्यः प्राण उदयत्येष ह्येनं चाक्षुषं प्राण-मनुगृह्णानः। पृथिव्यां या देवता सैषा पुरुषस्यापान-मवष्टभ्यान्तरा यदाकाशः स समानो वायु-र्व्यानः ॥ ३.८ ॥

அதைகயோர்த்த்வ உதான: புண்யேன புண்யம் லோகம் நயதி, பாபேன-பாபம், உபாப்ப்யாமேவ மனுஷ்யலோகம் ॥ 3.7 ॥

ஆதித்யோ ஹ வை பாஹ்ய:ப்ராண உதயத்-யேஷ-ஹ்யேனஞ் சாக்ஷுஷம் ப்ராண-மனுக்ருஹ்ணாந: । ப்ருதிவ்யாம் யா தேவதா, ஸைஷா புருஷஸ்யாபான-மவஷ்டப்ப்ய, அந்தரா யதாகாஶ: ஸ ஸமானோ வாயுர் வ்யான: ॥ 3.8 ॥

---

3.7. இவற்றுள் ஒன்றின் வழியாக மேல் நோக்கிச் செல்லும் உதானன் புண்ணியத்தால் புண்ணிய உலகத்திற்கு அழைத்துச் செல்லுகிறது; பாவத்தால் பாவ உலகத்துக்கும், இரண்டாலும் மனித உலகத்துக்கும் (அழைத்துச் செல்லுகிறது).

3.8. சூரியனே வெளியிலுள்ள பிராணன்; இது கண்ணிலுள்ள பிராணனை இயக்குவித்துக் கொண்டு உதிக்கிறது. பிருதிவியில் உள்ள தேவதை எதுவோ அதுவே சரீரத்தில் உறைபவனின் அபானனைப்பற்றி இயக்குவிப்பது. (சூரியனுக்கும் பூமிக்கும்) இடையிலுள்ள வெளியே ஸமானன் (சரீரத்தில் ஸமானனை இயக்குவிப்பது). (வெளியிலுள்ள) காற்றே வியானன் (சரீரத்தில் வியானனை இயக்குவிப்பது).

---

3.7. **இவற்றுள் ஒன்றின் வழியாக**—ஒன்று என்றது 'ஸுஷும்ன' நாடி.

**புண்ணியம் மிகுந்த உலகம்**—சுவர்க்கம்.

**பாவ உலகம்**—நரகமும், புழு, பூச்சி, மிருகம் முதலிய பிறவிகளும். புண்ணியமும் பாவமும் சமமாய்க் கலந்தது மனித உலகம்.

3.8. ஸமஷ்டி வடிவான உலகத்திலுள்ள பிராணனுக்கும் வியஷ்டி வடிவான உடலிலுள்ள பிராணனுக்கும் உறவு கூறப்படுகின்றது.

तेजो ह वाव उदान-स्तस्मादुपशान्त-तेजाः। पुनर्भव-मिन्द्रियै-र्मनसि संपद्यमानैः ॥ ३.९ ॥

यच्चित्त-स्तेनैष प्राण-मायाति, प्राण-स्तेजसा युक्तः। सहात्मना यथा संकल्पितं लोकं नयति ॥ ३.१० ॥

தேஜோ ஹ வாவ உதானஸ்-தஸ்மா-துபசாந்ததேஜா: । புனர்ப்பவ-மிந்த்ரியைர்-மனஸி ஸம்பத்யமானை: ॥ 3.9 ॥

யச்சித்தஸ்-தேனைஷ ப்ராண-மாயாதி, ப்ராணஸ்-தேஜஸா யுக்த: । ஸஹாத்மனா யதா ஸங்கல்பிதம் லோகம் நயதி ॥ 3.10 ॥

---

3.9. (வெளியிலுள்ள) ஒளியே உதானன் (சரீரத்தில் உதானனை இயக்குவிப்பது). ஆகையால் (உதான வடிவான) ஒளி மங்கியவர்கள் (இறந்தவர்கள்) மனதில் ஒடுங்கிய இந்திரிய சக்திகளைக் கொண்டு மறுபிறப்பை (அடைகிறார்கள்).

3.10. (மரண காலத்தில்) இவன் என்ன எண்ணம் உடையவனோ அத்துடன் முக்கியப் பிராணனிடம் லயமடைகிறான். உதானனுடன் கூடிய பிராணன் ஜீவனுடன் (கிளம்பி) ஸங்கல்பிக்கப்பட்ட உலகுக்கு (ஜீவனை) அழைத்துச் செல்லுகிறது.

---

3.9. ஒ. (அத ஏவ ஸர்வாண்யனு) பி. சூ. 4.2.2.

மனதில் ஒடுங்கிய இந்திரிய சக்திகளைக் கொண்டு—ஒ.-'எப்போது இச்சரீரத்தையாளும் ஜீவன் சரீரத்தை யடைகிறானோ, மேலும் எப்போது விட்டுக் கிளம்புகிறானோ அப்போது காற்றானது உறைவிடத்தினின்று வாசனைகளைப் போல இவற்றை (மனதுடன் கூடிய ஆறு இந்திரியங்களையும்) கவர்ந்து கொண்டு செல்லுகிறான்.' கீ. 15.8. (ஜீவனுக்கு ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என உடல் மூன்று. மரணத்தில் ஸ்தூல சரீரத்தை மட்டும் விட்டுச் செல்கிறான்).

3.10. ஒ.—கடைசியில் எந்தெந்த நினைவை நினைத்துக் கொண்டு உடலை விட்டாலும் எப்போதும் அந்நினைவையே நினைத்ததால் அதனையே அடைகிறான்.' கீ. 8.6. பி. சூ. 4.2.3; 4.2.5.

उत्पत्ति-मायतिं स्थानं, विभुत्वं चैव पञ्चधा। अध्यात्मं चैव प्राणस्य, विज्ञायामृतमश्नुते, विज्ञायामृतमश्नुत इति ॥ ३.१२ ॥

## चतुर्थः प्रश्नः

अथ हैनं सौर्यायणी गार्ग्यः पप्रच्छ। भगव-न्नेतस्मिन् पुरुषे कानि स्वपन्ति, कान्यस्मिन् जाग्रति, कतर एष देवः स्वप्नान् पश्यति, कस्यैतत्सुखं भवति, कस्मिन्नु सर्वे संप्रतिष्ठिता भवन्तीति ॥ ४.१ ॥

உத்பத்தி-மாயதிம் ஸ்த்தானம் விபுத்வஞ்சைவ பஞ்சதா। அத்த்யாத்மஞ் சைவ ப்ராணஸ்ய விஜ்ஞாயாம்ருத-மஶ்னுதே, விஜ்ஜாயாம்ருத-மஶ்னுத இதி ॥ 3.12 ॥

## சதுர்த்த: ப்ரஶ்ன:

அத ஹைநம் ஸௌர்யாயணீ கார்க்ய: பப்ரச்ச। பகவந் நேதஸ்மின் புருஷே கானி ஸ்வபந்தி, கான்யஸ்மின் ஜாக்ரதி, கதர ஏஷ தேவ: ஸ்வப்னுன் பஶ்யதி, கஸ்யைதத் ஸுகம் பவதி, கஸ்மின்னு ஸர்வே ஸம்ப்ரதிஷ்ட்டிதா பவந்தீதி ॥ 4.1. ॥

---

3.12. பிராணனுடைய உத்பத்தியையும், வரவையும், இருப்பிடத்தையும், ஆட்சியையும் ஐந்து பிரிவையும் அத்தியாத்ம நிலையையும் அறிந்து (ஒருவன்) சாகாநிலை யெய்துவான், அறிந்து சாகாநிலை யெய்துவான் என்றவாறு.

## நாலாவது கேள்வி

4.1. பின் அவரை கர்க்கவம்சத்தவரான ஸௌர்யாயணி கேட்டதாவது:—ஐயனே! இந்தப் புருஷனிடத்தில் எவை தூங்குகின்றன? எவை இவனிடம் விழித்திருக்கின்றன? இவற்றுள் எந்த தெய்வம் ஸ்வப்னங்களைக் காண்பது? இன்பம் எவருடையது? எதனிடம் எல்லாம் நிலை பெற்று நிற்கின்றன?

---

3.12. பிராணனுடைய 'உற்பத்தியும் வரவும் 3.3ல் கூறப்பட்டது; இருப்பிடம் 3.8; ஆட்சி 2.5—13; ஐந்துபிரிவு 2.3; அத்தியாத்மநிலை (ஒவ்வொரு உடலிலும் உள்ள நிலை) 3.4—6.

तस्मै स होवाच। यथा गार्ग्य मरीचयोऽर्कस्यास्तं गच्छतः, सर्वा एतस्मिंस्तेजोमण्डल एकीभवन्ति। ताः पुनः पुन-रुदयतः प्रचरन्त्येवं ह वै तत्सर्वं परे देवे मनस्येकी-भवति ॥ ४.२ ॥

प्राणाग्नय एवैतस्मिन् पुरे जाग्रति। गार्हपत्यो ह वा एषो ऽपानो व्यानो ऽन्वाहार्यपचनो, यद्गार्हपत्यात् प्रणीयते, प्रणयना-दाहवनीयः प्राणः ॥ ४.३ ॥

தஸ்மை ஸஹோவாச। யதா கார்க்ய-மரீசயோ ऽர்க்கஸ்யாஸ்தங் கச்சத:, ஸர்வா ஏதஸ்மின்ஸ்-தேஜோமண்டல ஏகீபவந்தி। தா:புன:புன-ருதயத:ப்ரசரந்த்-யேவம் ஹ வை தத் ஸர்வம் பரே தேவே மனஸ்யேகீ-பவதி ॥ 4.2 ॥

ப்ராணாக்னய ஏவைதஸ்மின் புரே ஜாக்ரதி। கார்ஹபத்யோ ஹ வா ஏஷோऽபானோ, வ்யானோ ऽன்வாஹார்யபசனோ, யத்கார்ஹபத்யாத் ப்ரணீயதே ப்ரணயனா-தாஹவநீய: ப்ராண: ॥ 4.3 ॥

---

4.2. அவர் இவருக்குக் கூறியதாவது:—கார்க்கியரே! அஸ்தமிக்கும் சூரியனுடைய கிரணங்கள் எங்ஙனம் ஒன்று சேர்ந்து சூரிய மண்டலத்தில் ஒடுங்குகின்றனவோ, மறுபடி உதிக்கும் சூரியனுடைய கிரணங்கள் எங்ஙனம் வெளிப்பரவுகின்றனவோ அங்ஙனம் (ஸ்வப்னத்தில் இந்திரியங்கள்) எல்லாம் மனதாகிற பரதேவதையினிடம் ஒடுங்குகின்றன.

4.3. இந்த (சரீரமாகிற) புரத்தில் பிராணாக்கினிகளே விழித்திருக்கின்றன; அபானனே கார்ஹபத்யாக்கினி; வியானனே அன்வாஹார்யபசனம் எனும் தக்ஷிணாக்கினி; ப்ராணனே ஆஹவனீயாக்கினி,—கார்ஹபத்ய (அபான) அக்கினியிலிருந்து எடுக்கப்படுவதால்.

---

4.3. அக்னிஹோத்திர சாலையில் மூன்று அக்கினிகள் வளர்க்கப்படும்.

(i) கார்ஹபத்யம் என்பது யஜமானனுக்குப்பின் வட்ட வடிவமான குண்டத்தில் அமைவது; இதிலிருந்தே மற்ற அக்கினிகள் எடுக்கப்படும். (ii) அன்வாஹார்யபசனம் எனும் தக்ஷிணாக்கினி யஜமானனுக்குத்

यदुच्छ्वास-निःश्वासावेतावाहुती समं नयतीति स समानः। मनो ह वाव जयमान, इष्टफलमेवोदानः, स एनं यजमान-महरह-र्ब्रह्म गमयति ॥ ४.४ ॥

अत्रैष देवः स्वप्ने महिमान-मनुभवति। यद्दृष्टं दृष्ट-मनु-पश्यति, श्रुतं श्रुत-मेवार्थ-मनुशृणोति, देश-दिगन्तरैश्च प्रत्यनुभूतं

யதுச்ச்வாஸ நி:ஶ்வாஸா-வேதா-வாஹுதீ ஸமம் நயதீதி ஸ ஸமான:। மனோ ஹ வாவ யஜமான இஷ்டபல-மேவோதான:, ஸ ஏநம் யஜமானம் அஹரஹர்-ப்ரஹ்ம கமயதி ॥ 4.4 ॥

அத்ரைஷ தேவ: ஸ்வப்னே மஹிமான-மனுபவதி। யத் த்ருஷ்டந் த்ருஷ்ட-மனுபஶ்யதி, ஶ்ருதம் ஶ்ருத-மேவார்த்த-மனு ஶ்ருணோதி, தேஶ-திகந்தரைஶ்ச ப்ரத்யனுபூதம் புன:புன:ப்ரத்யனுபவதி, த்ருஷ்டஞ்சாத்ருஷ்டஞ்ச, ஶ்ருதஞ்சாஶ்ருதஞ்ச,

44. (பிராணனை அபானனில் ஹோமம் செய்யும்) உள் மூச்சு (அபானனைப் பிராணனில் ஹோமம் செய்யும்) வெளி மூச்சு இவ்விரு ஆஹுதிகளையும் ஸமமாய் நடத்துவிப்பதால் (அதைச் செய்யும் வாயு) ஸமானன் எனப்படும். மனமே இந்த (ஹோமம் செய்யும்) யஜமானன். இஷ்டமான பலனுயிருப்பது உதானன்; (ஏனெனில்) உதானனே இந்த (மனதாகிற) யஜமானனை நாள்தோறும் (ஸ்வர்க்கப்ராப்தி போன்ற ஸுஷுப்தி நிலையில்) பிரம்மத்தினிடம் சேர்ப்பிக்கிறான்.

4.5. இந்த (மனதாகிற) தேவன் ஸ்வப்னத்தில் தன் பெருமையை அனுபவிக்கிறான். எது எது (ஏற்கெனவே ஜாக்கிரத்தில்)

---

தென்புறம் (வலது பக்கத்தில்) அரைவட்ட வடிவான குண்டத்தில் உள்ளது; இதில் பிதிருக்களும் க்ஷுத்ர தேவதைகளும் ஆராதிக்கப் படுவர். (iii) ஆஹவனீயாக்கினி என்பது யஜமானனுக்கு முன் சதுர வடிவமான குண்டத்தில் உள்ளது; இதில் தேவர்கள் ஆராதிக்கப்படுவர்.

அபானன் பின் பாகத்தில் எப்பொழுதுமிருப்பதால் கார்ஹபத்யம் எனப்பட்டது. அதிலிருந்து பிராணன் பிரிந்தெழுதலால் பிராணன் ஆஹவனீயம் எனப்பட்டது; வியானன் இருதயத்துக்கு வலது பக்க நாடியில் சஞ்சரிப்பதால் தக்ஷிணாக்னி எனப்பட்டது.

4.5. ஒ. ப்ரு. 4. 3. 9.

पुनः पुनः प्रत्यनुभवति, दृष्टं चादृष्टं च, श्रुतं चाश्रुतं च, अनुभूतं चाननूभूतं च, सच्चासच्च, सर्वं पश्यति, सर्वः पश्यति ॥ ४.५ ॥

स यदा तेजसाभिभूतो भवत्यत्रैष देवः स्वप्नान्न पश्यति । अथ तदैतस्मिञ्छरीरे एतत् सुखं भवति ॥ ४.६ ॥

स यथा सोम्य वयांसि वासो वृक्षं संप्रतिष्ठन्ते, एवं ह वै तत्सर्वं पर आत्मनि संप्रतिष्ठते ॥ ४.७ ॥

அனுபூதஞ்சானனு-பூதஞ்ச, ஸச்சாஸச்ச, ஸர்வம் பஶ்யதி, ஸர்வ: பஸ்யதி ॥ 4.5 ॥

ஸ யதா தேஜஸாபிபூதோ பவத்-யத்ரைஷ தேவ: ஸ்வப்னாந் ந பஶ்யதி, அத ததைதஸ்மின் ஶரீரே ஏதத் ஸுகம் பவதி ॥ 4.6 ॥

ஸ யதா ஸோம்ய வயாம்ஸி வாஸோ வ்ருக்ஷம் ஸம்ப்ரதிஷ்ட்-டந்தே, ஏவம் ஹ வை தத்-ஸர்வம் பர ஆத்மனி ஸம்ப்ரதிஷ்ட்-டதே ॥ 4.7 ॥

---

பார்க்கப்பட்டதோ அதையெல்லாம் (மீண்டும்) பார்க்கிருன்; எது எது கேட்கப்பட்டதோ அதையெல்லாம் கேட்கிருன்; பல இடங்களிலும் பல திக்குகளிலும் எது எது அனுபவிக்கப்பட்டதோ அதையெல்லாம் மீண்டும் மீண்டும் அனுபவிக்கிருன். கண்டதுங் காணுததும், கேட்டதும் கேளாததும், அனுபவித்ததும் அனுபவியாததும், உள்ளதும் இல்லதும் ஆன அனைத்தும் (தானே) ஆகி, அனைத்தையுங் காண்கிருன்.

4.6. அவன் (மனதாகிற தேவன்) எப்போது (சித்தத்தின்) ஒளியால் ஆக்கிரமிக்கப்படுகின்ருனே அப்போது இந்த தேவன் ஸ்வப்னங்களைக் காண்பதில்லை. அப்போது இச்சரீரத்தில் இதுவே (இச்சுஷுப்தி நிலையே) சுகமாகிறது.

4.7. சித்தம் அழகியவனே! பறவைகள் எவ்வாறு தாம் வசிக்கும் மரத்தைச் சாருகின்றனவோ, அவ்வாறே (சக்திகள்) எல்லாம் (கூடஸ்தனை) ஆத்மாவினிடம் அடங்குகின்றன.

एष हि द्रष्टा स्प्रष्टा श्रोता घ्राता रसयिता मन्ता बोद्धा कर्ता विज्ञानात्मा पुरुषः, स परेऽक्षरे आत्मनि संप्रतिष्ठते ॥ ४.९ ॥

विज्ञानात्मा सह देवैश्च सर्वैः प्राणा भूतानि संप्रतिष्ठन्ति यत्र। तदक्षरं वेदयते यस्तु सोम्य स सर्वज्ञः सर्वमेवाविवेशेति ॥ ४.११ ॥

ஏஷ ஹி த்ரஷ்டா, ஸ்ப்ரஷ்டா, ஶ்ரோதா, க்ராதா, ரஸயிதா, மந்தா, போத்தா, கர்த்தா, விஜ்ஞாநாத்மா புருஷ:, ஸ பரே ऽக்ஷரே ஆத்மனி ஸம்ப்ரதிஷ்ட்டதே ॥ 4.9 ॥

விஜ்ஞாநாத்மா ஸஹ தேவைஶ்ச ஸர்வை:, ப்ராணா பூதானி ஸம்ப்ரதிஷ்ட்டந்தி யத்ர। ததக்ஷரம் வேதயதே யஸ்து ஸோம்ய, ஸ ஸர்வஜ்ஞ: ஸர்வமேவாவிவேஶேதி ॥ 4.11 ॥

---

4.9. இவனே உண்மையில் பார்ப்பவனும், தொடுபவனும், கேட்பவனும், முகர்பவனும், ருசிப்பவனும், நினைப்பவனும், அறிபவனும், செய்பவனும் ஆகிய விஜ்ஞானாத்மாவும் (சரீர மாகிய புரத்தில் உறையும்) புருஷனும். இவன் அழிவில்லாத பரமாத்மாவினிடம் நிலைபெறுகிறான்.

4.11. சித்தம் அழகியவனே! (புத்தி குகையில் உறையும்) விஜ்ஞானாத்மா பிரகாசமான சக்திகளுடனும் புலன்களுடனும் எதனிடம் நிலைபெறுகின்றதோ அந்த அழியாப் பொருளை எவன் அறிகின்றானோ அவன் எல்லாம் அறிந்தவனும், எங்கும் நிறைபவனும் ஆகின்றான்.

---

4.9. ஒ. (கல்பயத்-யாத்மனாத்மானம் ஆத்மா தேவ: ஸ்வமாயயா। ஸ ஏவ புத்த்யதே பேதா-னிதி வேதாந்த-நிஶ்சித: ॥) ஸ்வயம்பிரகாச மான ஆத்மா தன்னுடைய மாயையால் தன்னைத்தானே கற்பிக்கிறான், அவனே சிருஷ்டி வேற்றுமைகளை அறிகிறான் என்பதுதான் வேதாந்த நிச்சயம். —மா. கா. 2.12.

## पञ्चमः प्रश्नः

अथ हैनं शैब्यः सत्यकामः पप्रच्छ। स यो ह वै तद्भगवन् मनुष्येषु प्रायणान्त-मोंकार-मभिध्यायीत। कतमं वाव स तेन लोकं जयतीति ॥ ५.१ ॥

तस्मै स होवाच। एतद्वै सत्यकाम, परं चापरं च ब्रह्म यदोंकार-स्तस्माद्विद्वा-नेतेनैवायतने-नैकतर-मन्वेति ॥ ५.२ ॥

## பஞ்சம: ப்ரஶ்ன:

அத ஹைனம் ஶைப்ய: ஸத்யகாம: பப்ரச்ச । ஸ யோ ஹ வை தத்பகவன் மனுஷ்யேஷு ப்ராயணாந்த-மோங்கார-மபித்த்யாயீத । கதமம் வாவ ஸ தேன லோகஞ் ஜயதீதி ॥ 5.1 ॥

தஸ்மை ஸ ஹோவாச । ஏதத்-வை ஸத்யகாம பரஞ்சாபரஞ்ச ப்ரஹ்ம யதோங்காரஸ்-தஸ்மாத்-வித்வா-நேதேநை-வாயதநே-நைகதர-மன்வேதி ॥ 5.2 ॥

---

## ஐந்தாவது கேள்வி

5.1. பின் அவரைச் சிபிபுத்திரரான ஸத்தியகாமர் கேட்டதாவது: "ஐயனே! மனிதர்களுள் எவனொருவன் ஆயுள்முடிய ஓங்காரத்தை உபாசிக்கின்றானோ அவன் அதனால் எந்த உலகத்தை (நிலையை) எய்துகிறான்?

5.2. இவருக்கு அவர் கூறியதாவது—ஸத்தியகாமா! எது ஓங்காரம் எனப்படுவதோ அதுவே பரப்பிரம்மமும், அபரப் பிரம்மமும். அதனால் அதை யுணர்ந்தவன் அவ்வாற்றால் இரண்டில் ஒன்றை அடைகிறான்.

---

5.2. ஒ. உருப்படைத்த அனைத்தும் க்ஷரம் (அபரம்); கூடஸ்தன் அக்ஷரம் (பரம்).—கீ. 15. 16.

यथा पादोदरस्त्वचा विनिर्मुच्यत एवं ह वै स पाप्मना विनिर्मुक्त:, स सामभि-रुन्नीयते ब्रह्मलोकं स एतस्मा-ज्जीव-घनात् परात्परं पुरिशयं पुरुष-मीक्षते ॥ ५.५ ॥

तिस्रो मात्रा मृत्युमत्य: प्रयुक्ता अन्योन्यसक्ता अनवि-प्रयुक्ता:। क्रियासु बाह्याभ्यन्तर-मध्यमासु सम्यक् प्रयुक्तासु न कंपते ज्ञ: ॥ ५.६ ॥

யதா பாதோதரஸ்-த்வசா விநிர்முச்யத, ஏவம் ஹ வை ஸ பாப்மனு விநிர்முக்த:, ஸ ஸாமபி-ருன்னீயதே ப்ரஹ்மலோகம், ஸ ஏதஸ்மாஜ்-ஜீவகனுத்-பராத்பரம் புரிசயம் புருஷ மீக்ஷதே- ॥ 5.5 ॥

திஸ்ரோ மாத்ரா ம்ருத்யுமத்ய: ப்ரயுக்தா அன்யோன்ய-ஸக்தா அநவிப்ரயுக்தா: । க்ரியாஸு பாஹ்யாப்யந்தர-மத்ய மாஸு ஸம்யக்-ப்ரயுக்தாஸு ந கம்பதே ஜ்ஞ: ॥ 5.6 ॥

---

5.5. எங்ஙனம் பாம்பு தன் சட்டையினின்று விடுபடுகிறதோ அங்ஙனம் அவன் பாவத்தினின்று விடுபட்டவனுகிருன். ஸாமங்களால் அவன் பிரம்மலோகத்துக்கு அழைத்துச் செல்லப் படுகிருன். ஸமஷ்டிஜீவவடிவினனுன இந்த ஹிரணியகர்ப்பனுக்கும் அப்பாலுள்ள பரமபுருஷனே, உடல்களனைத்திலும் உறைபவனைக் காண்கிருன்.

5.6. (ஓங்காரத்தின்) மூன்று மாத்திரைகளும் (தனித் தனியே) உபாசிக்கப்பட்டால் அவை அழியும் பலனைத் தருவன. மூன்றும் சேர்த்து உபாசிக்கப்பட்டால் அவை அங்ஙனமாகா. வெளிவியாபாரங்களிலும் உள் வியாபாரங்களிலும் இடை வியாபாரங்களிலும் அவை முறைப்படி பொருத்தப்பட்டால், ஞானியானவன் அசைவுருன்.

---

5.5. ஒ. பி. சூ. 1.3.13.
அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே—நம்மாழ்வார்

5.6. **வெளி வியாபாரங்களிலும், உள் வியாபாரங்களிலும், இடை வியாபாரங்களிலும்—ஜாக்கிரத்திலும், ஸ்வப்னத்திலும், ஸுஷுப்தியிலும்.**

ऋग्भिरेतं, यजुर्भि-रन्तरिक्षं, स सामभि-र्यत्तत्कवयो वेदयन्ते, तमोंकारेणैवायतनेनान्वेति, विद्वान् यत्तच्छान्त-मजर-ममृत-मभयं परं चेति ॥ ५.७ ॥

ருக்பி-ரேதம், யஜுர்ப்பி-ரந்தரிக்ஷம், ஸ ஸாமபிர்-யத்-தத்-கவயோ வேதயந்தே । த-மோங்காரேணே-வாயதனேனான்வேதி வித்வான், யத்தச்-சாந்த-மஜரம் அம்ருத-மபயம் பரஞ்சேதி ॥ 5.7 ॥

5.7. ருக்வேதத்தால் இவ்வுலகும், யஜுர்வேதத்தால் அந்தரிக்ஷமும், ஸாமவேதத்தால் மஹான்களே உணரும் பிரம்ம லோகமும் (எய்தப்படும்). அதை (எல்லாவற்றையும்) ஓங்கார உபாஸனையாலேயே ஞானி அடையக்கூடும். (அதனாலேயே) மூப்பு, மரணம், பயம் அற்றதும் சாந்தம் நிறைந்ததுமான பரமபதம் எதுவோ அதையும் அடையக்கூடும்.

அ, உ, ம என்பன மூன்று மாத்திரைகள். 'அ' ஜாக்கிர (விழிப்பு) நிலையையும் ஸ்தூலதேகத்தையும், 'உ' ஸ்வப்ன நிலையையும் ஸூக்ஷ்ம தேகத்தையும், 'ம' ஸுஷுப்தி நிலையையும் காரண தேகத்தையும் குறிப்பன. இந்நிலைகள் தனித்தனியாய்க் காணப்பெறினும், கடலில் நதிகள் கலப்பதுபோல் ஆன்மாவிடம் ஒன்றுபடுகின்றன என்று காண்பதே அறிவு. அப்படியறிந்த ஞானியை எதுவும் அசைக்கமுடியாது.

மூன்றும் சேர்த்து உபாசிக்கப்பட்டால்—பிரணவத்தின் மூன்று மாத்திரைகளையும் சேர்த்து உபாசித்தால் முப்புரங்களையும் எரித்து முக்தி எய்தலாம். திரிபுரத்தைப்பற்றிப் புராணக் கதையிலுள்ள உட்கருத்தைச் சிந்தித்து உணரவேண்டும். மூன்று அசுரர்கள், இரும்பு, வெள்ளி, பொன்னலான மூன்று பட்டணங்களில் வாழ்ந்தனர். அப்பட்டணங்கள் அவர்களிச்சைப்படி ஆகாயத்தில் பறந்து செல்லும். மூன்றும் ஆயிரம் வருஷத்துக்கொருமுறை ஒன்று சேரும். அப்போது ஒரே பாணத்தால் அடித்தால்தான் முப்புரங்களை ஜயிக்கலாம். பட்டணங்களில் அசுரர்கள் தனித்தனியாய்ப் பரந்து பல ஊர்களின்மேல் அப்படியே இறங்கி அவற்றைப் பாழாக்கி வந்தனர். முப்புரங்களும் ஒன்றாய்ச் சேர்ந்தபோது பரமசிவன் ஒரு பாணத்தால் எரித்தார்.

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்,
உளைந்தன முப்புறமுந்தீபற ஒருங்குடன் வெந்தவாறுந்தீபற.

—மாணிக்கவாசகர்.

5.7. ருக்வேதத்தால்—ருக்வேத ரூபமான அகார உபாஸனையால், ஒன்றாகிய ஓங்காரத்தினின்று மூன்று மாத்திரைகள் தோன்றின. இவை

# षष्ठः प्रश्नः

अथ हैनं सुकेशा भारद्वाजः पप्रच्छ । भगवन् हिरण्यनाभः कौसल्यो राजपुत्रो, मामुपेत्यैतं प्रश्न-मपृच्छत । षोडशकलं

## ஷஷ்ட்ட : ப்ரச்னா:

அத ஹைனம் ஸுகேசா பாரத்வாஜ: பப்ரச்ச । பகவன், ஹிரண்யநாப: கௌஸல்யோ, ராஜபுத்ரோ மாமுபேத்-யைதம் ப்ரச்ன-மப்ருச்சத । ஷோடசகலம், பாரத்வாஜ, புருஷம்

## ஆறுவது கேள்வி

6.1. பின் அவரை பாரத்வாஜவம்சத்தவரான ஸுகேசர் கேட்டதாவது:—"ஐயனே! கோசலதேசத்து அரசகுமாரன் ஹிரண்யநாபன் என்பவன் என்னையணுகி 'பாரத்வாஜரே! பதினறு கலைகளுள்ள புருஷனை நீர் அறிவீரா?' என்று கேட்டான். 'நான் அறியேன்' என்று அக்குமாரனிடங் கூறினேன். அந்தப் புருஷன் யார் என்பதை உம்மைக் கேட்கிறேன்."

களே மூன்று நிலைகளும், முக்காலங்களும், மூவுலகங்களும் மற்றெல்லாமும். முதல் மாத்திரையாகிய 'அ' விலிருந்து பூ:' எனும் வியாஹ்ருதியும், 'தத் ஸவிதுர்-வரேண்யம்' எனும் காயத்ரியின் முதல் பாதமும், ருக்வேதமும் உண்டாயின. இரண்டாவது மாத்திரையாகிய 'உ' விலிருந்து 'புவ:' எனும் வியாஹ்ருதியும், பர்க்கோ தேவஸ்ய தீமஹி' எனும் காயத்ரியின் இரண்டாவது பாதமும் யஜுர்வேதமும் உண்டாயின. மூன்ருவது மாத்திரையாகிய 'ம'விலிருந்து 'ஸுவ:' எனும் வியாஹ்ருதியும் 'தியோ யோ ந: ப்ரசோதயாத்' எனும் காயத்ரியின் மூன்ருவது பாதமும் ஸாமவேதமும் உண்டாயின.

ருக்வேதம் (ஸ்துதிபரா) பரம் பொருளின் புகழைப்பாடுவது. யஜுர்வேதம் (க்ரியாபரா) பரம் பொருளின் ஆராதனைக்குரிய கிரியைகளை விளக்குவது. ஸாமவேதம் (ஞான பரா) ஞானத்தைப்புகட்டுவது.

இங்ஙனம் ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளையும் மூன்று வேதத்திலும், மூன்று காலத்திலும், உரையிலும் செயலிலும் உள்ளத்திலும் வைத்து வைத்துப் பார்த்து உபாசித்து வந்தால் அது தானகவே உபாஸனைப் பரிபூர்ண நிலையாகிய நாலாவது (துரீய) நிலைக்கு அழைத்துச் செல்லும். அந்நிலை சொல்லுக்கடங்காத சுகந்தருவது. இந்நான்கு நிலைகளையும் அரும்பு, மலர், காய், கனிக்கு ஒப்பிடலாம்.

ஒ. மா. 1. 12; தை 5. 1.

भारद्वाज पुरुषं वेत्थ। तमहं कुमार-मब्रुवन्नाहमिमं वेद। तं त्वा पृच्छामि क्वासौ पुरुष इति ॥ ६.१ ॥

तस्मै स होवाच। इहैवान्तःशरीरे सोम्य स पुरुषो यस्मिन्नेताः षोडश कलाः प्रभवन्तीति ॥ ६.२ ॥

स यथेमा नद्यः स्यन्दमानाः समुद्रायणाः समुद्रं प्राप्यास्तं गच्छन्ति, भिद्येते तासां नामरूपे, समुद्र इत्येवं प्रोच्यते। एव-मेवास्य परिद्रष्टु-रिमाः षोडशकलाः पुरुषायणाः पुरुषं प्राप्यास्तं

வேத்த। தமஹங் குமார-மப்ருவந்-நாஹ-மிமம் வேத। தம் த்வா ப்ருச்சாமி க்வாஸௌ புருஷ இதி ॥ 6·1 ॥

தஸ்மை ஸ ஹோவாச। இஹைவாந்த:ஶரீரே, ஸோம்ய, ஸ புருஷோ, யஸ்மிந்நேதா: ஷோடஶகலா: ப்ரபவந்தீதி ॥ 6·2 ॥

ஸ யதேமா நத்ய:, ஸ்யந்தமானா:, ஸமுத்ராயணா:, ஸமுத்ரம் ப்ராப்யாஸ்தங் கச்சந்தி, பித்யேதே தாஸாம் நாமரூபே, ஸமுத்ர இத்யேவம் ப்ரோச்யதே। ஏவ-மேவாஸ்ய பரித்ரஷ்டு-ரிமா:, ஷோடஶகலா: புருஷாயணா:, புருஷம் ப்ராப்யாஸ்தங்-

---

6.2. இவருக்கு அவர் சொன்னதாவது: சித்தம் அழகியவனே! எந்தப் புருஷனிடம் பதினாறு கலைகள் உளவோ அந்தப் புருஷன் இங்கே இச்சரீரத்தினுள்ளேயே உள்ளவன்.

6.5. இந்நதிகள் எங்ஙனம் ஸமுத்திரத்தையே நோக்கிச் சென்று ஸமுத்திரத்தையடைந்து அதனுள் மறைந்து, நாமரூபங்களை இழந்து பின் ஸமுத்திரமென்றே சொல்லப்படுகின்றனவோ, அங்ஙனமே இங்கு பார்ப்பவனுடைய பதினாறு கலைகளும் புருஷனை நோக்கிச் சென்று புருஷனையடைந்து நாமரூபங்களை இழந்து பின் புருஷன் என்றே சொல்லப்படுகின்றன. அப்போதே இவன் கலைகள் அற்றவனாகவும், மரணம் அற்றவனாகவும் ஆகிறான்.

---

6.5. ஒ. 'கதா: கலா: பஞ்சதச ப்ரதிஷ்,ட்டர்'—மு. 3.2.7-9.
பி. சூ. 'தானிபரே ததாஹ்யாஹ'—4.2.16.

गच्छन्ति, भिद्येते तासां नामरूपे, पुरुष इत्येवं प्रोच्यते, स एषो-ऽकलोऽमृतो भवति ॥ ६.५ ॥ तान्होवाचैतावदेवाह-मेतत्परं ब्रह्म वेद नातः पर-मस्तीति ॥ ६.७ ॥

तमर्चयंत-स्त्वं हि नः पिता, योऽस्माक-मविद्यायाः परं पारं तारयसीति ॥ नमः परमऋषिभ्यो नमः मरमऋषिभ्यः ॥ ६.८॥

ॐ भद्रंकर्णेभिः शृणुयाम देवाः ।...

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ इति अथर्ववेदीया प्रश्नोपनिषत्समाप्ता ॥

கச்சந்தி, பித்யேதே தாஸாம் நாமரூபே புருஷ இத்யேவம் ப்ரோச்யதே, ஸ ஏஷோ ऽகலோ ऽம்ருதோ பவதி ॥ 6.5 ॥

தான் ஹோவாசைதாவ-தேவாஹ-மேதத் பரம் ப்ரஹ்ம வேத, நாத: பரமஸ்தீதி ॥ 6.7 ॥

தே த-மர்ச்சயந்தஸ்-த்வம் ஹி ந: பிதா, யோऽஸ்மாக-மவித் யாயா: பரம் பாரந் தாரயஸீதி ॥ நம: பரமருஷிப்ப்யோ, நம: பரமருஷிப்ப்ய: ॥ 6.8. ॥

ஓம் பத்ரங்கர்ணேபி: ஶ்ருணுயாமதேவா: ।...

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

॥ இதி அதர்வவேதீயா ப்ரஶ்னோபநிஷத் ஸமாப்தா ॥

---

6.7. இவர்களிடம் மேலும் அவர் சொன்னதாவது: "இப் பரப்பிரமத்தை நான் இவ்வாறே உணர்ந்தேன். இதற்குமேல் அறியவேண்டியது ஒன்றுமில்லை."

6.8. இவர்கள் அவரைப் பூஜித்துக் கூறுவர்: "எங்களை அவித்தைக்கு அப்பாலுள்ள கரையில் ஏற்றி விட்டமையால் நீங்களே எங்கள் பிதா. பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம், பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம்".

ஓம். தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும்...

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் அதர்வவேதத்தைச் சார்ந்த பிரச்ஞோபநிஷத்து முற்றும்.

**உபநிஷத்தின் விஷயச் சுருக்கம்.**

**முதல் கேள்வி :**—பிரஜைகள் எங்ஙனம் உற்பத்தியாயின ?

**விடை :**—சக்தியும் ஜடப்பொருளுமாகிய பிராணன் - ரயி எனும் இரட்டையைப் பிரஜாபதி சிருஷ்டித்தார். அவ்விரட்டையின் கூட்டுறவால் பிரஜைகள் அனைத்தும் உற்பத்தியாயின.

**இரண்டாங் கேள்வி :**—பிரஜைகளை ஆதரிக்கும் தேவதைகள் எத்தனை பேர் ? அவர்களுள் முக்கியமான தேவதை எது ?

**விடை :**—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் (அதிபூதத்தில்) ; வாக்கு, மனம், கண், காது முதலியவை (அத்தியாத்துமத்தில்) ; முக்கியப் பிராணன் (இரண்டுக்கும் பொதுவாக) ; முக்கியப் பிராணனே முக்கியமான தேவதை. அதுவே தன்னை ஐந்து பாகமாகப் பிரித்துக்கொண்டு அனைத்தையும் இயக்குவிக்கிறது. முக்கியப் பிராணனே அக்கினியாகவும், சூரியனாகவும், மேகமாகவும், காற்றாகவும் பிராணனாகவும் ரயியாகவும் விளங்குவது. சக்கரத்தின் குடத்தில் ஆரங்களைப்போல் அனைத்துலகும் முக்கியப் பிராணனிடத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

**மூன்றாவது கேள்வி:**—முக்கியப் பிராணன் எங்ஙனம் உண்டாகிறது? உடலுள் அது புகுவதும், நிலைப்பதும், உடலினின்று பிரிவதும் எங்ஙனம்? அத்தியாத்மத்திலும் அதிபூதத்திலும் அதன் இயக்கம் எங்ஙனம்?

**விடை :**—முக்கியப் பிராணன் ஆத்மாவினிடத்திலிருந்தே உண்டாகிறது. அது ஆத்மாவின் நிழல் போன்றது. மனதின் செய்கையால் அது உடலுள் புகுகின்றது. ஐந்தாகப் பிரிந்து, அபானனாகப் பாயுவிலும் உபஸ்தத்திலும் நிலைபெறுகிறது ; இடையில் ஸமானனாக இருக்கிறது ; இருதயத்தினின்று கிளம்பும் நூற்றுக் கணக்கான நாடிகளிலும் 72000 கிளை நாடிகளிலும் வியானனாக வியாபிக்கிறது ; தனியாக மேல் நோக்கிச் செல்லும் ஒரு நாடியில் உதானனாக இருக்கிறது. உடலினின்று பிரிவு உதானனால் ஏற்படுகிறது. இது அத்தியாத்மம். அதிபூதத்தில் சூரியனே வெளியிலுள்ள பிராணன் ; பிருதிவியை இயக்குவிப்பதே அபானன் ; அந்தரிக்ஷத்திலுள்ளது ஸமானன் ; காற்றே வியானன் ; ஒளியே உதானன்.

**நான்காவது கேள்வி :**—இந்தப் புருஷனிடத்தில் எந்த தேவதைகள் தூங்குகின்றன? எவை விழித்திருக்கின்றன? கனவுகளைக் காணும் தேவதைகள் எவை? சுகத்தை அனுபவிப்பது எது? எதனிடம் எல்லாம் நிலைபெறுகின்றன ?

**விடை :**—இந்தப் புருஷன் தூங்கும்போது இந்திரியங்களாகிற

தேவதைகள் மனதாகிற பரதேவதையிடம் ஒடுங்கித் தூங்குகின்றன. ஐந்து பிராண தேவதைகளும் விழித்திருக்கின்றன. மனதாகிற தேவதை ஸ்வப்னத்தில் அனைத்துந் தானேயாகி அனைத்தையுங் காண்கிறது. எப்போது மனது ஒரு கனவையுங் காணவில்லையோ அப்போது ஏற்படுவதே சுகம். கூடஸ்தனை ஆத்மாவிடம் எல்லாம் நிலைபெறு கின்றன.

**ஐந்தாவது கேள்வி** :—ஓங்கார உபாஸனையின் பயன் என்ன?

**விடை** :—ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளையும் தனித்தனிப் பிரதீகங்களாக உபாசித்தால் அடையப் பெறுவது பிரம்மலோகம் (கிரம முக்தி). ஒன்று சேர்ந்து உபாசித்தால் அடைவது பிரம்ம நிர்வாணம் (ஸத்யோ முக்தி).

**ஆறுவது கேள்வி** :—பதினாறு கலைகளுள்ள புருஷன் யார்?

**விடை** :—பதினாறு கலைகளுள்ள புருஷன் இங்கே இச்சரீரத்தி னுள்ளே உறைபவன் தான். நதிகள் கடலில் எங்ஙனம் புகுந்து மறை கின்றனவோ அங்ஙனம் பதினாறு கலைகளும் பரமாத்மாவிடம் ஒடுங்கு கின்றன. இதற்கு மேல் அறியவேண்டியது ஒன்றுமில்லை.

இங்ஙனம் பிரச்னோபநிஷத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணதீபம்
எனும் உரை முற்றும்.

## ॥ मुण्डकोपनिषत् ॥

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभि-र्यजत्राः । स्थिरैरंगैस्तुष्टुवाꣳसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्ध श्रवाः । स्वास्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्तिनो बृहस्पतिर्दधातु ।

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ முண்டகோபநிஷத் ॥

ஓம் பத்ரங்கர்ணேபி: ச்ருணுயாம தேவா: । பத்ரம் பச்யே-மாக்ஷபிர்யஜத்ரா: । ஸ்திரை-ரங்கைஸ்-துஷ்டுவாꣳஸஸ்-தனூபி: । வ்யசேம தேவஹிதம் யதாயு: । ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்த-ச்ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: । ஸ்வஸ்தி நஸ்தார்-க்ஷ்யோ அரிஷ்டநேமி: । ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர்-ததாது ।

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

## முண்டகோபநிஷத்து

ஓம் தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும்...

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

**உபநிஷத்தின் பெயருந் தொடர்பும்**—'முண்டகம்' என்ருல் மொட்டைத் தலை. இது வைராக்கியத்துக்கு அடையாளம். ஞான வாழ்க்கைக்குத் தலையை ஈடு வைத்தவர்களுக்கே இவ்வுபநிஷத்தில் அதிகாரம். அதனுல் இவ்வுபநிஷத்துக்கு முண்டகோபநிஷத்து எனப் பெயர் வாய்ந்தது போலும். இது அதர்வவேதத்தைச் சேர்ந்தது. இதில் மூன்று முண்டகங்களும், ஒவ்வொன்றில் இரண்டு கண்டங்களும், ஆக ஆறு பாகங்கள் இருக்கின்றன.

முதல் முண்டகத்தில் வித்தை இரண்டு என்றும், நான்கு வேதங்களும் அபர வித்தையில் அடக்கம் என்றும், பரவித்தை என்பது பிரம்ம ஞானம் என்றும் கூறப்படுகிறது. இரண்டாவது முண்டகத்தில் பிரம்மத்துக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள சம்பந்தமும், பிரம்மத்தை நாடும் உபாயமும் கூறப்படுகிறது. மூன்ருவது முண்டகத்தில் பிரம்மஞானியின் லக்ஷணமும் ஞானத்தின் பலனுங் கூறப்படுகிறது.

## प्रथममुंडके प्रथमः खण्डः

ॐ ब्रह्मा देवानां प्रथमः संबभूव विश्वस्य कर्ता भुवनस्य गोप्ता। स ब्रह्मविद्यां सर्वविद्या-प्रतिष्ठां अथर्वाय ज्येष्ठपुत्राय प्राह ॥ १.१ ॥

अथर्वणे यां प्रवदेत ब्रह्मा ऽथर्वा तां पुरोवाचाङ्गिरे ब्रह्मविद्याम्। स भारद्वाजाय सत्यवाहाय प्राह भारद्वाजो ऽङ्गिरसे परावराम् ॥ १.२ ॥

## ப்ரதம முண்டகே ப்ரதம: கண்ட:

ஓம் ப்ரஹ்மா தேவானும் ப்ரதம: ஸம்பபூவ விஶ்வஸ்ய கர்த்தா புவனஸ்ய கோப்தா । ஸ ப்ரஹ்மவித்யாம், ஸர்வவித்யா-ப்ரதிஷ்ட்டாம், அதர்வாய, ஜ்யேஷ்ட்டபுத்ராய ப்ராஹ ॥ 1.1 ॥

அதர்வணே யாம் ப்ரவதேத ப்ரஹ்மா, அதர்வா தாம் புரோவா-சாங்கிரே ப்ரஹ்மவித்யாம் । ஸ பாரத்வாஜாய ஸத்ய வாஹாய ப்ராஹ, பாரத்வாஜோ ऽங்கிரஸே, பராவராம் ॥ 1.2 ॥

---

## முதல் முண்டகத்தில் முதற் கண்டம்

1.1. ஓம். உலகைப் படைத்தவரும் புவனத்தை இரக்ஷிப்பவரும் ஆகிய பிரம்மா தேவர்களனைவருக்கும் முன் தோன்றியவர். தன் முதல் (மானஸ) புத்திரனுகிய அதர்வருக்கு அவர் எல்லா வித்தைக்கும் ஆதாரமாகிய பிரம்மவித்தையை உபதேசித்தார்.

1.2. பிரம்மா அதர்வருக்கு எதை உபதேசித்தாரோ அந்த

---

1.1. ஸர்வவித்யா ப்ரதிஷ்ட்டாம்—எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகிறதோ, அல்லது எல்லா வித்தைகளாலும் எது ஒன்றே அறியத்தகுந்ததோ அது பிரம்மவித்தை ; அது எல்லா வித்தைகளுக்கும் ஆதாரம்.

ஒ—(யேனுஶ்ருதம் ஶ்ருதம் பவதி, அமதம் மதம், அவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி) எதனுல் கேட்கப்படாதது கேட்கப்பட்டதாயும், உணரப்படாதது உணரப்பட்டதாயும் அறியப்படாதது அறியப்பட்டதாயும் ஆகிறதோ. (சா. 6.1.3)

शौनको ह वै महाशालो ऽङ्गिरसं विधिव-दुपसन्नः पप्रच्छ। कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवतीति ॥ १.३ ॥

तस्मै स होवाच॥ द्वे विद्ये वेदितव्य इति ह स्म यद्ब्रह्मविदो वदन्ति, परा चैवापरा च ॥ १.४ ॥

ஶௌநகோ ஹ வை மஹாஶாலோ ऽங்கிரஸம் விதிவ-துபஸந்ந: பப்ரச்ச। கஸ்மின்னு பகவோ விஜ்ஞாதே, ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதீதி ॥ 1.3 ॥

தஸ்மை ஸ ஹோவாச। த்வே வித்யே வேதிதவ்ய இதி ஹ ஸ்மயத் ப்ரஹ்மவிதோ வதந்தி, பரா சைவாபரா ச ॥ 1.4 ॥

---

பிரம்ம வித்தையை அதர்வர் முதலில் அங்கிரருக்கு உபதேசித்தார். அவர் பரத்வாஜ வம்சத்தவரான ஸத்தியவாஹருக்கு உபதேசித்தார். பரத்வாஜ ஸத்தியவாஹர் பரம்பரையாய் வந்ததும் பராவித்தை அபராவித்தை எல்லாம் அடங்கியதும் ஆன இந்த வித்தையை அங்கிரஸருக்கு உபதேசித்தார்.

1.3. இல்லறத்திற் சிறந்த சௌநகர் அங்கிரஸரை முறைப்படி யணுகிக் கேட்டதாவது: "ஐயனே! எதை உணர்ந்தால் இது எல்லாம் உணர்ந்ததாகும்?"

1.4. இவருக்கு அவர் (அங்கிரஸர்) சொன்னதாவது—'பரா' என்றும் 'அபரா' என்றும் உணரவேண்டிய வித்தைகள் இரண்டு உண்டு என்று வேதத்தையுணர்ந்தவர் (அல்லது பிரம்ம ஞானிகள்) கூறுவரன்றோ?

---

1.3. முதல் புத்திரனாகிய அதர்வருக்கு—ஸ்வாயம்புவ மன்வந்திரத்தில் ஸநகாதிகள் பிரம்மாவிடம் முதலில் உண்டானார்கள். வைவஸ்வத மன்வந்திரத்தில் அதர்வர் முதலில் உண்டானார். இவர் மூலமாய்ப் பிரவிருத்தித்தது அதர்வண வேதம்.

1.3. மஹாஶால :—ஒவ்வொரு வருஷமும் சிறப்பாக யஜ்ஞம் செய்கிறவர் (பிரதீயப்தம் யஜ்ஞக்ருதீ ஸம்யக் மஹாஶால: ப்ரகீர்த்தித:)

तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति । अथ परा यया तदक्षर-मधिगम्यते ॥ १.५ ॥

यथोर्णनाभिः सृजते गृह्णते च, यथा पृथिव्या-मोषधयः संभवन्ति । यथा सतः पुरुषात् केशलोमानि, तथाक्षरात् संभव-तीह विश्वम् ॥ १.७ ॥

தத்ரா(அ)பரா, ருக்வேதோ, யஜுர்வேத:, ஸாமவேதோ ऽதர்வவேத:, ஶிக்ஷா, கல்போ, வ்யாகரணம், நிருக்தஞ், சந்தோ, ஜ்யோதிஷமிதி । அத பரா, யயா ததக்ஷர-மதிகம்யதே ॥ 1.5 ॥

யதோர்ணநாபி: ஸ்ருஜதே, க்ருஹ்ணதே ச, யதா ப்ருதிவ்யா-மோஷதய: ஸம்பவந்தி । யதா ஸத: புருஷாத்-கேஶ-லோமானி, ததாக்ஷராத் ஸம்பவதீஹ விஶ்வம் ॥ 1.7 ॥

---

1.5. அவற்றுள் ‘அபரா’ (கீழ்) என்பது ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம், அதர்வவேதம், சிக்ஷை, கல்பம், வியா கரணம், நிருக்தம், சந்தம், ஜோதிஷம். ஆனால் ‘பரா’ (மேல்) என்பது எதனால் மேலே சொல்லப் போகிற ‘அக்ஷரம்’ என்னும் (ஆன்ம) பொருள் அடையப்படுமோ அது.

1.7. எங்ஙனம் சிலந்திப்பூச்சி (தன்னிடமிருந்தே நூலை) உண்டாக்கி (தனக்குள்ளேயே) இழுத்துக் கொள்ளுகிறதோ, எங்ஙனம் பூமியில் செடி கொடிகள் உண்டாகின்றனவோ, எங்ஙனம் ஜீவபுருஷனிடம் உரோமம் உண்டாகிறதோ அங்ங

---

1.5. ‘கேவலம் உபநிஷத் வாக்கியங்களை அத்தியயனம் செய்து உண்டாகும் அர்த்த ஞானம் எல்லோருக்கும் கிடைக்கக்கூடும். அவர்கள் எல்லோரும் பரவித்தையை அறிந்தவர்களாகமாட்டார்கள். வேதத்தி னலும், குரு உபாஸனையாலும் வைராக்கியத்தாலும் உண்டாகிற பிரம்ம ஸாக்ஷாத்காரமே பரவித்தையாம்’ (சங்).

**எங்ஙனம் சிலந்திப்பூச்சி**:—சிலந்திப்பூச்சி கூடுகட்ட வேருெரு காரணத்தையும் அபேக்ஷிக்காதவாறு.

**1.7. எங்ஙனம் பூமியில் செடி கொடிகள்**:—பூமியானது அந் தந்த விதைகளுக்குத் தக்கபடி செடிகளை உண்டாக்குவதுபோல் ஈசுவரன்

य: सर्वज्ञ: सर्वविद्यस्य ज्ञानमयं तप:। तस्मादेतद्ब्रह्म नाम रूप-मन्नं च जायते ॥ १.९ ॥

## प्रथममुंडके द्वितीय: खण्ड:

तदेतत् सत्यं मन्त्रेषु कर्माणि, कवयो यान्यपश्यंस्तानि त्रेतायां बहुधा संततानि। तान्याचरथ नियतं सत्यकामा एष व: पन्था: सुकृतस्य लोके ॥ २.१ ॥

ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஜ்ஞானமயம் தப:। தஸ்மா-தேதத்-ப்ரஹ்ம நாம-ரூப-மன்னஞ்ச ஜாயதே ॥ 1.9. ॥

## ப்ரதம முண்டகே த்விதீய: கண்ட:

ததேதத் ஸத்யம் மந்த்ரேஷு கர்மாணி, கவயோ யான்-யபஶ்யன்-ஸ்தானி த்ரேதாயாம் பஹுதா ஸந்ததானி। தான்-யாசரத நியதம் ஸத்யகாமா, ஏஷ வ: பந்தா: ஸுக்ருதஸ்ய லோகே ॥ 2.1. ॥

---

னம் அக்ஷரப் பிரம்மத்தினிடமிருந்து இந்த உலகம் உண்டாகிறது.

1.9. (அனைத்துக்குங் காரணமாதலால்) எல்லாவற்றையும் அறிந்தவரும் (எங்கும் நிறைந்திருப்பதால்) எல்லாவற்றையும் அறிபவரும் எவரோ, ஞான பூர்த்தியே எவருடைய தவச் சக்தியோ, அவரிடமிருந்தே (ஸமஷ்டிவடிவான) நாமரூபங்களும் ஜடப்பொருள்களும் உண்டாகின்றன.

## முதல் முண்டகத்தில் இரண்டாம் கண்டம்

2.1. அந்த ஸத்தியமே (பின்வரும்) இதுவும். (வேத) மந்த்ரங்களின் மூலமாக ஞானிகள் எந்தக் கர்மங்களைக் கண்டறிந்த

---

கர்மத்துக்குத் தக்கபடி ஜன்மத்தைக் கொடுக்கிறான். இதில் பக்ஷபாத தோஷம் இல்லை.

ஒ. (வைஷம்ய நைர்க்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்)—பி.ஸூ.2. 1.34.

எங்ஙனம் ரோமம் உண்டாகிறதோ—உயிருள்ள உடலில் மயிர் எப்படிப் பிரயத்தினமின்றி வளர்கிறதோ அப்படி விசுவ ரூபியான ஈசுவரனிடம் அசேதன உலகம் தோன்றுகிறது.

प्लवा ह्येते अदृढा यज्ञरूपा अष्टादशोक्त-मवरं येषु कर्म ।
ऐतच्छ्रेयो येऽभिनन्दन्ति मूढा जरा मृत्युं ते पुनरेवापियन्ति
॥ २.७ ॥

ப்லவா-ஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா, அஷ்டாதஶோக்த-மவரம் யேஷு கர்ம । ஏதச்-ச்ரேயோ யேபிநந்தந்தி மூடா, ஜரா ம்ருத்யும் தே புனரேவாபியந்தி ॥ 2.7 ॥

---

னரோ அவை மூன்று வேதங்களிலும் பலவாருக விவரிக்கப்பட்டுள்ளன. ஸத்தியத்தை நாடும் நீங்கள் அவைகளை எப்போதும் அனுஷ்டியுங்கள். புண்ணிய உலகுக்கு இதுவே உங்களுக்கு வழி.

2.7. ஆனல் (பதினறு ருத்விக்குகளைக் கொண்டு யஜமானனும் யஜமானியுமாகச் செய்யும்) பதினெட்டு வகைப்பட்ட கர்மம் விரிவு பட்டதெனினும் தாழ்ந்தது (அபராவித்தை); யஜ்ஞரூபமான இப்படகுகள் திடமற்றவை. எவர்கள் இதையே பெரும் பேருகக் கொண்டு களிக்கின்ருர்களோ அந்த மூடர்கள் பிறப் பிறப்பை மீண்டும் அடையவே அடைகிருர்கள்.

---

2.1-10. அபரவித்தையின் ஸ்வரூபத்தை ஆராய்ந்து அதனல் அடையப்பெறும் பயன் நிலையற்றதென்பதை உணர்ந்து பரவித்தையை நாடுதல் வேண்டும் என்பது உபதேசிக்கப் பெறுகிறது.

2.9. ஒ. 'அவித்யாயா மந்தநே'—கட. 2.5.

இன்பநுகர்ச்சியிலும் உயர் பதவியிலும் ஆழ்ந்த பற்றுடையவர்களும் அதனல் விவேகத்தை இழந்தவருமாகிய இவர்கட்கு நிச்சயமான புத்தி உள்ளத்தில் உதியாது. (கீ. 2.44)

ஒ. கழுகு ஆகாயத்தில் வெகு உயரத்தில் பறக்கின்றது. ஆயினும் அது எந்தக்குழியில் எந்தப் பிணங்கிடக்கிறதென்று கீழ்நோக்கிய வண்ணமாகவே இருக்கும். அதுபோலச் சாஸ்திரங்களைக் கற்றவராயிருப்பினும் பலர் கீழ்நோக்குடையவராய்ப் பெண்ணுசை பொன்னுசைகளாகிய உலகப்பற்றுகளால் பந்தப்பட்ட மனமுடையவராக இருக்கின்றனர். ஆதலால் அவர்கள் உண்மை ஞானத்தைப் பெறுவதில்லை. (ரா. கி.)

अविद्यायां बहुधा वर्तमाना वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः। यत्कर्मिणो न प्रवेदयन्ति रागा-त्तेनातुराः क्षीणलोका-श्च्यवन्ते ॥ २.९ ॥

इष्टापूर्तं मन्यमाना वरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः। नाकस्य पृष्ठे ते सुकृते ऽनुभूत्वेमं लोकं हीनतरं वा विशन्ति ॥ २.१० ॥

அவித்யாயாம் பஹுதா வர்த்தமாஞ, வயம் க்ருதார்த்தா இத்-யபிமன்யந்தி பாலா: । யத் கர்மிணோ ந ப்ரவேதயந்தி ராகாத், தேநாதுரா: க்ஷீணலோகாஶ்-ச்யவந்தே ॥ 2.9 ॥

இஷ்டா-பூர்த்தம் மன்யமாஞ வரிஷ்ட்டம் நான்யச்-ச்ரேயோ வேதயந்தே ப்ரமூடா: । நாகஸ்ய ப்ருஷ்ட்டே தே ஸுக்ருதே ऽனுபூத்வேமம் லோகம் ஹீனதரம் வா விஶந்தி ॥ 2.10 ॥

---

2.9. அவித்தையில் வெகுவாக ஆழ்ந்தவர்களும் (அறிவிற்) சிறியோருமாகிய இவர்கள் தம்மைக் கிருதார்த்தர்களாக மதித்துக்கொள்ளுகின்றனர். ஆசை வாய்ப்பட்டமையால் காமிய கருமத்தில் பற்றுள்ளவர்கள் (உண்மையை) உணர்வதில்லை; அக்காரணத்தால் துன்பத்தால் பீடிக்கப்பட்டவர்களாய், அழியும் (ஸ்வர்க்காதி) உலகங்களை யடைந்து மீண்டும் (அவ்வுலகங்களினின்று) நழுவுகின்றனர்.

2.10. (சுருதிகளில் கூறின) இஷ்டம் (ஸ்மிருதிகளில் கூறின) பூர்த்தம் எனுங் கருமங்களே சிறந்தவை எனக் கருதும் முழு மூடர்கள் உயர்நலம் தருவது வேறொன்று உண்டு என்றும் உணர்வதில்லை. அவர்கள் ஸ்வர்க்கத்தின் உயர்ந்த ஸ்தானத்திலுள்ள (இன்பங்களை) அனுபவித்தாலும், பின்னர் இந்த (மனித) உலகிலோ இன்னுந் தாழ்ந்த பிறவியிலோ புகுகின்றனர்;

---

2-10. ஒ. பிரச். 1.9; கட. 5.7 ‘க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விஶந்தி’ (கீ. 9.21.)

तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्षचर्यां चरन्तः। सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति यत्रामृतः स पुरुषो ह्यव्ययात्मा ॥ २.११ ॥

परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेद-माया-न्नास्त्यकृतः कृतेन। तद्विज्ञानार्थं स गुरु-मेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥ २.१२ ॥

தப: ஶ்ரத்தே யே-ஹ்யுபவஸந்த்-யரண்யே ஶாந்தா வித்வாம்ஸோ பைக்ஷசர்யாஞ் சரந்த:। ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருத: ஸ புருஷோ-ஹ்யவ்யயாத்மா ॥2.11॥

பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் ப்ராஹ்மணோ நிர்வேத-மாயாந்-நாஸ்த்-யக்ருத: க்ருதேன। தத் விஜ்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்ம-நிஷ்ட்டம் ॥ 2.12 ॥

---

2.11. ஆனால் எவர்கள் இந்திரியங்கள் அடங்கிச் சாந்தியெய்தியவர்களாய் அறிவு நிறைந்தவர்களாய்ப் பிச்சையாய்க் கிடைத்ததைக் கொண்டு அரணியத்தில் தவத்திலும் சிரத்தையிலும் வாழ்கின்றார்களோ அவர்கள் அழுக்கு நீங்கிய மனத்தினராய்ச் சூரியமார்க்கத்திற் சென்று மரணமும் மாறுதலுமற்ற (ஸமஷ்டி) ஆத்ம புருஷனிருக்கும் பிரம்மலோகத்தை அடைகின்றனர்.

2.12. கருமத்தாலடையக் கூடிய உலகங்களைப் பரீக்ஷித்துப் பிராம்மணனவன், செயலற்ற பரம் பொருள் ஒரு செய

---

2.11. இதில் கூறிய லோகாந்தரப்ராப்தி மோக்ஷமன்று. ஏனெனில் 'இவ்விடத்திலேயே எல்லா இச்சைகளும் அற்றுப்போகின்றன; தீரர்கள் எங்கும் நிறைந்த பொருளை எல்லாவிடத்திலும் கண்டு அமைதியில் நிலை பெற்றவர்களாய் அனைத்துள்ளும் புகுந்து நிற்கின்றனர்' என்று சுருதி கூறுவதால் பிரம்மஞானி லோகாந்தரம் போகவேண்டியதில்லை. (இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா: | தே ஸர்வகம் ஸர்வத: ப்ராப்ய தீராயுக்தாத்மான: ஸர்வமேவாவிஶந்தி). (சங்).

ஒ. (ஊர்த்த்வரேத:ஸு ச, ஶப்தேஹி) பி. சூ. 3.4.17.

2.12. ஒ. சா. உப. 8.1.6. (தத்யதேஹ கர்மசிதோ லோக:க்ஷீயதே).

तस्मै स विद्वा-नुपसन्नाय सम्यक् प्रशान्त-चित्ताय शमान्विताय। येनाक्षरं पुरुषं वेद सत्यं प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम् ॥ २.१३ ॥

தஸ்மை ஸ வித்வா-னுபஸந்நாய ஸம்யக் ப்ரஶாந்த-சித்தாய ஶமான்விதாய । யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் ॥ 2.13 ॥

---

லாலும் அடைதற்குரியதன்றெனக் கண்டு வைராக்கியத்தை அடைய வேண்டும். (அங்ஙனமறிந்த) அவன் 'தத்' எனும் அப் பரம்பொருளை உணர்ந்துய்யும் பொருட்டு ஸமித்தைக் கையுறையாய்க் கொண்டு வேதக் கேள்வியிற் சிறந்தவரும் பிரம்ம நிஷ்டருமான குருவையே தேடியடைய வேண்டும்.

2.13. தன்னைத் தக்க முறையில் அணுகியவனும், சாந்தி யெய்திய மனமுடையவனும், கருவிகரணங்களடங்கியவனும் ஆகிய அவனுக்கு அந்த ஞானகுரு எதனால் ஸத்தியமும் அக்ஷரமும் ஆன பரம புருஷனை அவன் அறிவானோ அந்தப் பிரம்ம ஞானத்தை உள்ளபடி உணர்த்துவார்.

---

குருமேவாபிகச்சேத்—பிரம்மநிஷ்டனாகிய குருவில்லாமல் பிரம்ம ஞானத்தை அடையமுடியாதாகையால் அப்படிப்பட்ட குருவையே அடையவேண்டும் என்று கூறப்பட்டது.

தபஸ்—ஒ. கீ. 17.14—16.

உற்றநோய் நோன்றலுயிர்க் குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு. (குறள் 271)

2.13. (புஸ்தகப்ரத்யயாதீதம் நாதீதம் குருஸந்நிதௌ | ப்ராஜதே ந ஸபா மத்த்யே ஜார-கர்ப்ப இவ ஸ்த்ரிய: ||) குருவையண்டிக் கற்காமல் புஸ்தகத்திலிருந்து கற்ற கல்வி, ஜார புருஷனிடம் கருத்தரித்த ஸ்திரீயின் கர்ப்பத்தைப் போல் ஸபையில் பிரகாசிக்காது.

ஒ—(ஶாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ வஸந்தவல்லோகஹிதஞ் சரந்த: | தீர்ணா: ஸ்வயம் பீம-பவார்ணவம் ஜநான் அஹேதுனா அன்யானபி தாரயந்த: ||) வஸந்த ருதுவைப்போல் உலகுக்கு நன்மையே நாடும் சாந்தர்களான மஹா ஸாதுக்கள் உளர். பயங்கரமான பவஸாகரத்தைத் தாங்கள் தாண்டியவர்களாய் மற்ற ஜனங்களையும் பயனை நாடாமல் தாண்டுவிக்கின்றனர். (விவேக சூடாமணி : சங்.)

'ஸ்மாரக, வாரக, தாரக' என்ற மூன்று லக்ஷணங்கள் ஞான குரு

## द्वितीयमुंडके प्रथमः खण्डः

तदेतत् सत्यं यथा सुदीप्तात् पावकाद्विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः। तथाक्षराद्विविधाः सोम्य भावाः प्रजायन्ते तत्र चैवापियन्ति ॥ १.१ ॥

## த்விதீய முண்டகே ப்ரதம: கண்ட:

ததேதத் ஸத்யம், யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்ப்புலிங்கா: ஸஹஸ்ரஶ:: ப்ரபவந்தே ஸரூபா:। ததா அக்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா: ப்ரஜாயந்தே தத்ர சைவாபியந்தி ॥ 1.1. ॥

---

## இரண்டாவது முண்டகத்தில் முதற் கண்டம்

1.1. (பின்வரும்) இதுவும் அந்த ஸத்தியமே. எங்ஙனம் கொழுந்து விட்டெரியும் தீயிலிருந்து தீமயமான பொறிகள் ஆயிரக்கணக்காக உண்டாகின்றனவோ, அங்ஙனமே, சித்த மழகியவரே! பலவகைப்பட்ட உயிர்கள் அக்ஷரப் பிரம்மத்திட மிருந்து பிறந்து அதனிடமே லயிக்கின்றன.

---

விடம் காணப்படும். அவர் ஸத்தியத்தையே இடைவிடாது ஸ்மரிப்பவர்; அதற்கு விரோதமானதை விலக்குபவர்; அதில் தானும் நிலைபெற்றுப் பிறரையும் நிலைபெறும்படி செய்பவர். (மஹாவீரர்).

ஒ. (தத் வித்தி ப்ரணிபாதேன) கீ. 4.34.

1.1. அக்ஷராத்—அபரவித்தையின் காரியமான ஸம்ஸாரம் எதின் ஸாரத்தையுடையதோ, எந்த அக்ஷரமாகிய மூல காரணத்தினின்றும் உண்டாகியதோ எதில் லயமாகிறதோ அந்த அக்ஷரபுருஷன் தான் ஸத்தியம். ததேதத்ஸத்யம்—அபரவித்தையின் விஷயமான கர்மபலம் ஆபேக்ஷிக ஸத்யம்; பரவித்தையின் விஷயமான பரமாத்ம தத்துவம் நிரபேக்ஷிக ஸத்யம்—('ஸத்யஸ்ய ஸத்யம்')

दिव्यो ह्यमूर्तः पुरुषः स बाह्याभ्यन्तरो ह्यजः। अप्राणो ह्यमनाः शुभ्रो ह्यक्षरात्परतः परः ॥ १.२ ॥

अग्निर्मूर्धा, चक्षुषी चन्द्रसूर्यौ, दिशः श्रोत्रे, वाग्विवृताश्च वेदाः। वायुः प्राणो हृदयं विश्वं अस्य पद्भ्यां पृथिवी ह्येष सर्व-भूतान्तरात्मा ॥ १.४ ॥

திவ்யோ-ஹ்யமூர்த்த: புருஷ: ஸ பாஹ்பாப்ப்யந்தரோ-ஹ்யஜ:। அப்ராணோ-ஹ்யமனா: ஶுப்ப்ரோ-ஹ்யக்ஷராத்-பரத: பர: ॥ 1.2. ॥

அக்னிர் மூர்த்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ, திஶ: ஶ்ரோத்ரே வாக்-விவ்ருதாஶ்ச வேதா:। வாயு: பராணோ, ஹ்ருதயம் விஶ்வம், அஸ்ய பத்ப்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வ-பூதாந்தராத்மா ॥ 1.4 ॥

---

1.2. அப்பரமபுருஷன் ஒளிநிறைந்தவன், உருவில்லாதவன், உள்ளும் புறம்பும் ஒருங்கே உள்ளவன், பிராணனில்லாதவன், பரிசுத்தன், மேலான அக்ஷரப்பிரம்மத்துக்கும் மேலானவன்.

1.4. எவனுக்கு அக்கினி தலையோ, சந்திர சூரியர்கள் கண்களோ, திக்குகள் காதுகளோ, பிரசித்தமான வேதங்கள்

---

1.2. ஶுப்ர :—பரிசுத்தன்—'த்யாயதீவ லேலாயதீவ' சிந்திக்கிறது போலிருக்கிறது, காரியம் செய்கிறது போலிருக்கிறது என்று ப்ரு. உபநிஷத்தில் சொல்லியிருப்பதை ஒப்பிடவும். இப்படி இரண்டு உபாதிகளில்லாததால் ஸகல உபாதிகளுமற்றது என்று அறியத்தக்கது. அதனால் சுத்தமா யிருக்கிறது.

ஒ. (விஶேஷண-பேத-வ்யபதேஶாப்யாம் நேதரௌ) பி. சூ. 1.2.22.

அக்ஷராத்பரத: பர: —ஒ. கூடஸ்தன் அக்ஷரபுருஷன். எவன் மூவுலகிலும் புகுந்து நின்று தாங்குகின்றவனோ, மாறுதலில்லாதவனோ, இறைவனோ, பரமாத்மா என்று கூறப்பட்ட உத்தமபுருஷனோ அவன் வேறானவன்.

(கீ. 15.17-18)

1.4. ஸகல பூதங்களிலும் பார்க்கிறவன், கேட்கிறவன், நினைக்கிறவன், அறிகிறவன் எல்லாம் விராட் ரூபியாகிய இவனே.

ஒ. (ரூபோபன்யாஸாச்ச) பி. சூ. 1.2.23.

सप्त प्राणाः प्रभवन्ति तस्मात् सप्तार्चिषः समिधः सप्त होमाः। सप्त इमे लोका येषु चरन्ति प्राणा गुहाशया निहिताः सप्त सप्त ॥ १.८ ॥

अतः समुद्रा गिरयश्च सर्वे ऽस्मात् स्यन्दन्ते सिन्धवः सर्वरूपाः। अतश्च सर्वा औषधयो रसश्च येनैष भूतैस्तिष्ठते ह्यंतरात्मा ॥ १.९ ॥

ஸப்த ப்ராணு: ப்ரபவந்தி தஸ்மாத், ஸப்தார்ச்சிஷ: ஸமித: ஸப்த ஹோமா:। ஸப்த, இமே லோகா, யேஷு சரந்தி ப்ராணு குஹாஶயா நிஹிதா: ஸப்த ஸப்த ॥ 1.8 ॥

அத: ஸமுத்ரா கிரயஶ்ச ஸர்வே ऽஸ்மாத் ஸ்யந்தந்தே ஸிந்த்தவ: ஸர்வரூபா: ॥ அதஶ்ச ஸர்வா ஓஷதயோ ரஸஶ்ச யேநைஷ பூதைஸ்-திஷ்ட்டதே ஹ்யந்தராத்மா ॥ 1.9 ॥

---

வாக்கோ, வாயு பிராணனே, உலகம் உள்ளமோ, எவனுடைய பாதங்களிடம் பூமி தோன்றிற்றோ அவனே உலகில் உண்டாய அனைத்துக்கும் அந்தராத்மா.

1.8. அவனிடமிருந்தே உண்டாயின ஏழு பிராணன்களும்; அவனிடமிருந்தே ஏழு ஜ்வாலைகளும், ஏழு ஸமித்துக்களும், ஏழு ஹோமங்களும்; எவ்வேழாய் இருதயத்தின் குகையில் ஒடுங்கி நின்று (இங்ஙனம்) எவ்வேழாய் விரிந்த பிராணன்கள் சஞ்சரிக்கும் ஏழு லோகங்களும் (அவனிடமிருந்தேயாம்).

1.9. அவனிடமிருந்தே எல்லா சமுத்திரங்களும் மலைகளும்; அவனிடமிருந்தே பலவாருய்ப் பெருகும் நதிகளும்; அவனிட மிருந்தே எல்லாச் செடிகொடிகளும்; எந்த ரஸத்தால் (பஞ்ச)

---

**1.8. ஸப்தஹோமா:**—ஏழு ஹோமங்களும்.—

ஒ. 'யதஸ்ய விஜ்ஞானம் தஜ்ஜுஹோதி' எது விஷயங்களின் விஜ்ஞானமோ அதை (ஞானி) ஹோமஞ்செய்கிருன். (இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாசித்துவாரம், ஒரு வாய் ஆக ஏழு அக்கினி).

पुरुष एवेदं विश्वं, कर्म तपो, ब्रह्म परामृतम्। एतद्यो वेद निहितं गुहायां सोऽविद्याग्रन्थिं विकिरतीह सोम्य ॥ १.१० ॥

புருஷ ஏவேதம் விஶ்வம், கர்ம தபோ, ப்ரஹ்ம பராம்ருதம் । ஏதத்யோ வேத நிஹிதங் குஹாயாம் ஸோऽவித்யாக்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய ॥ 1.10 ॥

---

பூதங்களுடன் கூடி அந்தராத்மா (ஸூக்ஷ்ம சரீரம்) நிற்கிறதோ அந்த ரஸமும் (அவனிடமிருந்தேயாம்).

1.10. பரம புருஷனே இவ்வுலகனைத்தும் ; தவமே கருமம்; பிரம்மமே சிறந்த அமிருதம். இதை (பிரம்மத்தை) இருதய குகையில் உள்ளதாக எவன் காண்கிருனே அவன், சித்தம் அழுகியவனே, அவித்தையாகிற சிக்கலை அவிழ்த்தவனுகிருன்.

---

ஒ. ஒரு சாரார் அடக்கமெனும் அக்கினியில் செவி முதலிய பொறிகளை ஹோமம் செய்கின்றனர். மற்றவர்கள் சப்தம் முதலிய விஷயங்களைப் பொறிகளாகிற அக்கினியில் ஹோமம் செய்கின்றனர். (கீ. 4.26.)

1.9. ஒ. கரந்தசில் இடந்தொறும்
இடந்திகழ் பொருள் தொறும்
கரந் தெங்கும் பாந்துளன். —நம்மாழ்வார்.

ஒ. (விஷ்டப்யாஹ-மிதம் க்ருத்ஸ்ன-மேகாம்ஶேன ஸ்திதோ ஜகத் ॥) இந்த உலகனைத்தையும் என் யோக சக்தியின் ஒரு பகுதியால் தாங்கி நான் நிற்கின்றேன் என்று உணர்.—கீ. 10.42.

1.10. 'எதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும்?' என்ற கேள்விக்கு, எல்லாவற்றிற்குங் காரணமான பரமாத்மாவை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும் என்று இங்கு பதில் கூறப்படுகிறது. எல்லாப் பிராணிகளின் இருதய குகையில் இருக்கும் அமிருதமாகிய பரம்பொருளை 'நானே இது' என்று எவன் அறிகிருனே அவன் அந்த அறிவால் இங்கு ஜீவித்துக் கொண்டிருக்கையிலேயே அறியாமையின் சிக்கலினின்று விடுபட்டு அவித்தையின் வாசனையை நாசம் செய்கிருன்.

## द्वितीयमुंडके द्वितीयः खण्डः

आविः संनिहितं गुहाचरंनाम महत्पद-मत्रैतत् समर्पितम् । एजत् प्राणन्निमिषच्च यदेतज्जानथ सदसद्वरेण्यं परं विज्ञानाद्य-द्वरिष्ठं प्रजानाम् ॥ २.१ ॥

## த்விதீயமுண்டகே த்விதீய: கண்ட:

ஆவி: ஸந்நிஹிதங் குஹாசரந் நாம மஹத்-பத-மத்ரைதத்-ஸமர்ப்பிதம் । ஏஜத் - ப்ராணந் - நிமிஷச்ச, யதேதஜ்ஜாநத, ஸதஸத் வரேண்யம், பரம் விஜ்ஞாநாத் யத்வரிஷ்ட்டம் ப்ரஜாநாம் ॥ 2.1 ॥

## இரண்டாவது முண்டகத்தில்
## இரண்டாவது கண்டம்

2.1. (இருதய குகையில்) நிலைபெற்றுள்ளதாய்ப் பிரசித்தி பெற்று (ஆங்கிருந்தே ஐம்புலன்களின் வழி பிரகாசிக்கும்) பரஞ் ஜோதியே பரமபதம். அதனிடமே —சலனமும், பிராணனுடைய இயக்கமும், இமைத்தலும்—இது எல்லாம் ஸமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஸத்தாகவும் அஸத்தாகவும் எல்லாப் பிரஜைகளுக்கும் போற்றி விரும்பத் தக்கதாகவும் அனுபவ அறிவுக்கும் அப்பாற்பட்டதாகவும் ஒப்புயர்வற்றதாகவும் உள்ளது எதுவோ அதை அறிவீர்களாக!

2.1. உலகில் உணரும் பொருள்கள் தோறும் பிரம்மம் பிரகாசிக்கிறதென்று முமுக்ஷு நினைக்க வேண்டியது. எது இருக்கிறதோ எது விளங்குறதோ (அஸ்தி, பாதி) அது ஆத்மரூபம்; அல்லாததற்கு இருப்புமில்லை, விளக்கமும் இல்லை. ஆத்மசைதன்யம் தான் விளங்குகிறது.

அக்ஷர வஸ்துவானது தீபத்தைப்போல் எல்லாவற்றையும் பரோக்ஷமாய்த் தோற்றுவித்துக்கொண்டு, தானும் தோன்றுகிறது. ஜீவ பாவத்தையடைந்து அபரோக்ஷமாகவும் இருக்கிறது. இந்த பாவனை ஆத்மஸாக்ஷாத்காரத்துக்குச் சாதனமாகும்.

ஆவி :—பிரம்மம் பிரகாச ரூபமாயிருக்கிறது.

धनुर्गृहीत्वौपनिषदं महास्त्रं शरं ह्युपासानिशितं संधयीत। आयम्य तद्भावगतेन चेतसा लक्ष्यं तदेवाक्षरं सोम्य विद्धि ॥ २.३ ॥

प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते। अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥ २.४ ॥

தனுர்-க்ருஹீத்-வௌபநிஷதம் மஹாஸ்த்ரம் ஶரம்-ஹ்யுபாஸா நிஶிதம் ஸந்தயீத। ஆயம்ய தத்பாவ-கதேன சேதஸா லக்ஷ்யம் ததேவாக்ஷரம் ஸோம்ய வித்தி ॥ 2.3 ॥

ப்ரணவோ தனு:, ஶரோஹ்யாத்மா, ப்ரஹ்ம தல்லக்ஷ்ய-முச்யதே। அப்ரமத்தேன வேத்தவ்யம், ஶரவத்-தன்மயோ பவேத் ॥ 2.4 ॥

---

2.3. சித்தம் அழகியோனே! உபநிஷத்திலுள்ள மஹா அஸ்திரமாகிய (ஓங்கார) வில்லை எடுத்து உபாசனையால் கூர்மை பெற்ற (உன் ஜீவனையே) அதில் அம்பாகத் தொடுத்து பிரம்ம பாவனை நிறைந்த சித்தத்தால் அதை இழுத்து அந்த அக்ஷரப் பிரம்மமாகிய லக்ஷியத்தை (நோக்கி அம்புபோல் பாய்ந்து அதனுள்) ஊடுருவிச் செல்வாய்.

2.4. பிரணவமே வில்; ஆத்மாவே அம்பு; பிரம்மமே அதன் குறி; கவனக் குறைவின்றி (குறி) எய்யப்படவேண்டும். அம்பைப்போல் (அதன்பின் லக்ஷியத்துடன்) ஒன்றுபட்ட நிலை ஏற்படும்.

---

2.3. அப்ரமத்தேன—கவனக் குறைவில்லாததும் விஷய நுகர்ச்சிகளால் கவரப்படாததுமான சித்தத்தின் உதவியால்.

ஒ. யதா ராகவநிர்முக்த: ஶர: ஶ்வஸநவிக்ரம: ॥ ராமாயணம் 5.1.43.

ஒ. ஈசுவரன், குரு அடியார் இவர்கள் எல்லோருடைய அருளும் இருந்தாலுங்கூட இன்னொரு அருள் இல்லையாகில் ஜீவன் நாசமடைவான். அந்த முக்கியமான அருள் தன் நெஞ்சினது; அதாவது தான் முக்தி அடைய வேண்டும் என்ற ஆர்வம் நெஞ்சில் உதிக்க வேண்டும். (ரா. கி.)

2.4. ப்ரணவ:—ஒ. (ப்ரணவேன விஹீனம் யத் தன்-மந்த்ரம் ப்ராண-ஹீனகம்) பிரணவத்துடன் கூடாத மந்திரம் எதுவோ அது பிராணன் இல்லாததாம்.

यस्मिन् द्यौः पृथिवी चान्तरिक्ष-मोतं मनः सह प्राणैश्च सर्वैः। तमेवैकं जानथ आत्मान-मन्या वाचो विमुञ्चथामृत-स्यैष सेतुः॥ २.५॥

यः सर्वज्ञः सर्वविद्यस्यैष महिमा भुवि। दिव्ये ब्रह्मपुरे ह्येष व्योम्न्यात्मा प्रतिष्ठितः॥ २.७॥

யஸ்மின் த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷ-மோதம் மன: ஸஹ ப்ராணைஶ்ச ஸர்வை:। தமேவைகஞ் ஜானத ஆத்மானம், அன்யா வாசோ விமுஞ்சத, அம்ருதஸ்யைஷ ஸேது: ॥ 2.5 ॥

ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித், யஸ்யைஷ மஹிமா புவி। திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ன்யாத்மா ப்ரதிஷ்ட்டித: ॥ 2.7 ॥

---

2.5. பூவுலகும் (இடையிலுள்ள) அந்தரிக்ஷமும், ஸர்வப் பிராணன்களுடன் கூடிய மனமும் எவனிடம் (வஸ்திரத்தில் நூல் போலக்) கோக்கப்பட்டுள்ளதோ அந்த ஒருவனுகிய பரமாத்மா வையே அறிவீர்களாக! மற்ற வார்த்தைகளை விட்டொழிக! இதுவே மோக்ஷத்திற்குப் பாலம் (கரை).

2.7. எல்லாவற்றையும் ஸாமான்யமாய் அறிபவரும், எல்லாவற்றையும் விசேஷமாய் அறிபவரும் எவரோ, இப்புவியில்

---

(ப்ராணுன் ஸர்வான் பரமாத்மனி ப்ரணுமயதி இதி ப்ரணவ:) எல்லாப் பிராணன்களையும் பரமாத்மாவிடம் வணங்கச் செய்வது பிரணவம்.

2.5. ஒ. (தமேவம் வித்வா-னம்ருத இஹ பவதி। நான்ய: பந்தா வித்யதே ऽயனுய) இங்ஙனம் பரமாத்மாவை அறிந்தவன் இங்கே சாகாத வனுகிருன். (சாவைக் கடந்து) செல்லுவதற்கு வேறு வழியில்லை.

ஒ. (த்யுப்வாத்-யாயதனம் ஸ்வ-ஶப்தாத்) பி. ஸூ. 1. 3. 1.

2.5. மற்ற வார்த்தைகளை விட்டொழிக—

மாம்பழங்களைச் சாப்பிடு; தோட்டத்தில் எத்தனை ஆயிரம் மரங்கள், எத்தனை கோடி இலைகள் என்று கணக்கிடுவதில் பயன் என்ன? (ரா. கி.)

ஆழமில்லாத குளத்தில் நீர் குடிக்கவேண்டுமாளுல் அதைக் கலக்காமல் மெதுவாகக் குடிக்கவேண்டும். கலக்கிவிட்டால் அடியிலுள்ள சேறு மேலே கிளம்பி விடும், (ரா. கி.)

2.8. ப்ரதிஷ்டிதோன்னே—அன்னத்தால் வளரும் சரீரத்தில் (இருதய குகையில்) இருக்கிருன்.

मनोमयः प्राण-शरीर-नेता प्रतिष्ठितोऽन्ने हृदयं सन्निधाय। तद्विज्ञानेन परिपश्यन्ति धीरा आनन्दरूप-ममृतं यद्विभाति ॥ २.८ ॥

भिद्यते हृदयग्रन्थि-श्छिद्यन्ते सर्वसंशयाः। क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे ॥ २.९ ॥

மனோமய: ப்ராண-ஶரீர-நேதா ப்ரதிஷ்ட்டிதோ ऽன்னே ஹ்ருதயம் ஸந்நிதாய। தத்விஜ்ஞானேன, பரிபஶ்யந்தி தீரா, ஆனந்த ரூப-மம்ருதம், யத் விபாதி ॥ 2.8 ।

பித்யதே ஹ்ருதய-க்ரந்திஶ்-சித்யந்தே ஸர்வஸம்ஶயா:। க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே ॥ 2. 9 ॥

---

காணப்பெறும் மகிமை எல்லாம் எவருடையதோ அந்தப் பரமாத்மா திவ்யப் பிரம்மபுரமாகிய சிற்றம்பலத்தில் (இருதயாகாசத்தில்) எழுந்தருளியுள்ளார்.

2.8. அவர் மனோரூபியாயும் சரீரத்தையும் பிராணனையும் நடத்துபவராயும் இருதயத்தில் (புத்தியில்) நிலைபெற்று உடலில் உறைபவராயும் விளங்குகிறார். ஆனந்த ரூபமாய் அழிவற்றதாய் எது பிரகாசிக்கின்றதோ அதை (ஆத்மப் பிரகாசத்தை) புத்திமான்கள் அனுபவ அறிவால் எங்கும் பூர்ணமாய்க் காண்கின்றனர்.

2. 9. அந்தப் பராபரவஸ்து பார்க்கப்பட்டதும் இவனுடைய இருதயமுடிச்சு அவிழ்கிறது, சந்தேகங்களெல்லாம் ஒழிகின்றன, கருமங்களெல்லாம் நாசமடைகின்றன.

---

2. 9. ஒ—கட. 6. 15; பி. சூ. 4. 1. 13; 1. 3. 2. பிரம்மஸாக்ஷாத்கார ஞானத்தால் ஞானியின் உள்ளத்தில் அஞ்ஞானத்தின் வேர் அறுந்து போகிறது.

குயவன் சக்கரம் முன் சுற்றிவிட்ட வேகத்தால் சுழலுவதுபோல் பிராரப்த வசத்தால் ஞானியின் சரீரயாத்திரை மட்டும் நிகழும். சூரியன் பூமியைச் சுற்றவில்லை என்ற ஞானம் உண்டான பின்னும் விவஹாரத்தில் அந்தப் பழைய அறிவு தொடர்ந்து நிற்பதுபோல் உலக உணர்ச்சி ஞானியிடம் நிகழும், அது அவன் அறிவை மயக்காது.

கிருஷ்ணன் அவதரித்தபோது சிறையின் பூட்டுகள் தாமாகத்

## तृतीयमुंडके प्रथमः खण्डः

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभिचाकशीति ॥ १.१ ॥

## த்ருதிய முண்டகே ப்ரதம: கண்ட:

த்வா ஸுபர்ணா ஸயுஜா, ஸகாயா, ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே । தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்-வத்த்-யனஶ்னந்-நன்யோ அபிசாகஶீதி ॥ 1.1 ॥

---

## மூன்றாது முண்டகத்தில் முதல் கண்டம்

1.1. அழகிய சிறகுடைய பக்ஷிகள் இரண்டு; இணைபிரியாதவை; ஸமான அந்தஸ்துடையவை; ஸமானமாக ஒரே விருக்ஷத்தை வாசஸ்தானமாயடைந்தவை. அவற்றுள் ஒன்று உருசியுள்ள பழத்தை உண்கிறது; மற்றதோவெனின் உண்ணாமல் பார்த்துக்கொண்டு மாத்திரம் இருக்கிறது.

---

திறந்து கொண்டவண்ணம், நமது உள்ளத்தில் அவன் தோன்றும்போது தளைகளெல்லாம் தெரித்துப்போகின்றன.

ஏ அர்ஜுனா! எவ்வாறு மண்டியெரிகின்ற தீ விறகைச் சாம்பலாகச் செய்யுமோ அவ்வாறே ஞானத்தீ எல்லாக் கருமத்தையுஞ் சாம்பலாகச் செய்துவிடும். (கீ. 4. 37)

‘ போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்போலோ ரெம்பாவாய்! (திருப்பாவை)

அநேக வருஷமாய் இருட்டாய்க் கிடந்த ஒரு அறையில் ஒரு தீக்குச்சியைக் கிழித்தால் உடனே இருட்டு ஓடிப்போவதுபோல் ஆண்டவனுடைய அருள் உண்டானால் அநேக ஜன்மங்களில் செய்த பாவம் போயொழியும். (ரா. கி.)

நாடீபந்தம், அபிமானம் எனக் கிரந்திகள் இரண்டாம். எல்லா நாடிகளினின்றும் திரும்பி ஒரே நாடியைச் சாருங்கால் ஆத்மவொளி கட்டுவிட்டுத் தனதியல்புறும். அப்போது கர்த்தா அவனலனாதலின் அவனுக்குக் கர்மங் கழன்றது. அவனுக்கன்னியம் யாது மிலதாதலின் சந்தேக மெதுவு முதியாது. ஒருமுறை கட்டறுந்தோன் மீண்டும் கட்டுறான். அதுவே உத்தம சக்திநிலை. அதுவே உத்தம சாந்திநிலை. (ரமணமஹரிஷி)

1. 1. ஒ—கட. 3. 1. **இரண்டு பக்ஷிகள்**—ஜீவனும் ஈசுவரனும். **ருசியுள்ள பழத்தை**—கர்மத்தாலுண்டாகும் இன்பதுன்பங்களை. ருசி

समाने वृक्षे पुरुषो निमग्नो ऽनीशया शोचति मुह्यमानः।
जुष्टं यदा पश्यत्यन्य-मीश-मस्य महिमान-मिति वीतशोकः ॥१.२॥

यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तार-मीशं पुरुषं ब्रह्मयोनिम्।
तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्य-मुपैति ॥ १.३ ॥

ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ ऽனீஶயா ஶோசதி முஹ்யமான:। ஜுஷ்டம் யதா பஶ்யத்-யன்ய-மீஶ-மஸ்ய மஹிமான-மிதி வீதஶோக: ॥ 1.2 ॥

யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்த்தார-மீஶம் புருஷம் ப்ரஹ்மயோனிம்। ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்ஜன: பரமம் ஸாம்ய-முபைதி ॥ 1.3 ॥

---

1.2. ஸமான வாசஸ்தானமாக விருக்ஷத்தையுடையதாயினும் ஒரு பக்ஷி (ஜீவன்) தாழ்ந்தநிலையடைந்து, மதிமயங்கித் திறமையற்றுச் சோகிக்கிறது. அது எப்போது ஏற்றமுள்ளதும் ஆளுந் திறமை வாய்ந்ததுமான மற்றதைப் பார்க்கிறதோ அப்போது அந்த மகிமை தன்னுடையதே என்று கண்டு சோகம் நீங்கியதாக ஆகிறது.

1.3. பிரம்மமாயும் அதன் பிறப்பிடமாயும் சிருஷ்டி கர்த்தாவாயும் ஈசனையும் உள்ள பொன்போலொளிரும் புருஷனை எப்போது பார்க்குந் திறமையுடையவன் பார்க்கிறானோ அப்போது அவ்வித்வான் புண்ணிய பாவங்களை உதறிவிட்டு மாசற்றவனாய்ப் பரம (புருஷனுடன்) ஸாம்யத்தை அடைகிறான்.

---

யுள்ள பழத்தையே புசிக்கின்றான் என்று கருதத்தல்ல; ருசியற்றதாயினும் ருசியுள்ள தெனக் கருதிப் புசிக்கிறான்.

ஒ. (ஸ்தித்யதனுப்ப்யாஞ்ச) பி. சூ. 1.3.7. (உபயவ்பதேஶாத்த்-வஹிகுண்டலவத்) பி. சூ. 3. 2. 77.

1. 3. கரியானது நெருப்புடன் சேர்ந்தால் உஷ்ணமும் ஒளியும் பெற்று நெருப்பாகவே ஆய்விடுவதுபோல் ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஸாம்யத்தை அடைகிறது.

प्राणो ह्येष यः सर्वभूतै-र्विभाति विजानन्विद्वान् भवते नातिवादी। आत्मक्रीड आत्मरतिः क्रियावान् एष ब्रह्मविदां वरिष्ठः ॥ १.४ ॥

सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा सम्यज्ज्ञानेन ब्रह्मचर्येण नित्यम्। अन्तः शरीरे ज्योति-र्मयो हि शुभ्रो यं पश्यन्ति यतयः क्षीणदोषाः ॥ १.५ ॥

ப்ராணோ-ஹ்யேஷ ய: ஸர்வபூதைர்-விபாதி விஜானன் வித்வான் பவதே நாதிவாதீ ॥ ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவான், ஏஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட்ட: ॥ 1.4 ॥

ஸத்யேன லப்ப்யஸ்-தபஸா ஹ்யேஷ ஆத்மா ஸம்யஜ்-ஜ்ஞாநேந ப்ரஹ்மசர்யேண நித்யம் । அந்த: ශரீரே ஜ்யோதிர் மயோ ஹி ශுப்ப்ரோ யம் பශ்யந்தி யதய: க்ஷீணதோஷா: ॥1.5॥

1. 4. எந்தப் பிராணன் எல்லா உயிர்களிலும் காணப்படுகிறதோ அந்தப் (பிராணனுக்கும்) பிராணன் இவனே என்று அறிந்த வித்வான் (தனக்கு வேருக ஒன்றுமின்றி எல்லாந்தாஞய்க் காண்பதால் தன்னை உயர்த்திப் பிறரைத் தாழ்த்தி) வீணுய் 'அதிவாதம்' பேசியவஞகான். ஆத்மாவினிடமே விளையாடுபவஞகவும் ஆத்மாவினிடமே ஆனந்திப்பவஞகவும், அதையே கிரியையாகவும் உடைய இவன் பிரம்மஞானிகளிற் சிறந்தவன்.

1.5. உடலுக்குள்ளேயே ஜோதிர்மயமாய்ப் பரிசுத்தமாய் விளங்கும் எந்த ஆத்மபொருளைச் சித்தமலம் நீங்கிய ஸந்நி

1. 4. ஆத்மரதி:க்ரியாவான்—என்று ஒரே பதமாகவுங் கொள்ளலாம். ஆத்மரதியைத் தவிற வேறு கிரியை இல்லாதவன் என்று பொருள். இரண்டு பதமாகக் கொண்டால், உலகக் கிரியைகளைச் செய்து கொண்டிருப்பினும், நிவிருத்தி மார்க்கத்தின் எல்லைவிட்டுத் தவருதவன் என்று பொருள்.

ஒ—எவன் உள்ளே சுகமுடையவனே, உள்ளே களியாட்டமுடையவனே, உள்ளே ஒளி உள்ளவனே அந்த யோகி உயிர்வாழும்போதே பிரம்மமாய்ப் பிரம்மத்தில் முக்தியையடைகிருன். (கீ. 5. 24)

1.5. தபஸ் :—(மனஸஶ்-சேந்த்ரியாணாஞ்ச ஹ்யைகாக்ர்யம் பரமம் தப:) மனதும் இந்திரியங்களும் ஒருமுகப்பட்ட நிலையே சிறந்த தவம்.

सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः। येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामा यत्र तत् सत्यस्य परमं निधानम् ॥ १.६ ॥

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம் ஸத்யேன பந்தா விததோ தேவயான: । யேநாக்ரமந்தி ருஷயோ-ஹ்யாப்தகாமா யத்ர தத் ஸத்யஸ்ய பரமம் நிதானம் ॥ 1.6 ॥

---

யாசிகள் காண்கின்ருர்களோ, அந்த ஆத்மப் பொருள் அகண்டமான பிரம்மசரியத்தாலும், தெளிந்த ஞானத்தாலும், இடைவிடாத் தவத்தாலும் ஸத்தியத்தாலுமே அடையப்பெறும்.

1.6. ஸத்தியமே ஜயிக்கும், பொய்யன்று. ஆசைகள் பூர்த்தி பெற்ற ரிஷிகள் ஸத்தியத்தின் எல்லே நிலமாகிய இடத்திற்கு (மோக்ஷத்திற்கு) எந்த மார்க்கத்தில் செல்லுகிருர்களோ, அந்த தேவயான மார்க்கம் ஸத்தியத்தாலேயே பரப்பப் பட்டுள்ளது.

---

**நித்யம்**—எப்போதும்—நித்யம்ஸத்யேன, நித்யம்தபஸா, நித்யம் ஸம்யஜ்ஜஞானேனேதி ஸர்வத்ர நித்யஶப்தோ ऽந்தர்தீபிகா-ந்யாயேன அனுஷக்தவ்ய: (சங்). ஒ. மு. உப. 1. 16.

**ஸத்தியம்**—ஒ.—எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (திருக்குறள்)

**பிரம்மசரியம்**—ஒரு நீர்க்குடத்தில் சிறு துவாரம் இருந்தாலும் அதன் வழி நீர் எல்லாம் ஒழுகிப்போகும். பிரம்மசரியமில்லாதவன் மனம் அந்த ஓட்டைக் குடம் போன்றதே. (ரா. கி.)

ஆகார தோஷத்தால் சிலசமயம் விந்து நாசம் ஏற்படக்கூடும். அதைப் பற்றிக் கவலேப்படவேண்டிய அவசியமில்லே. ஆனல் ஸாதன மார்க்கத்தில் உண்மையான தீவிரமுடையவன் ஸ்திரீகளே நாடக்கூடாது. பெண்ணுசையை ஒழித்தவனுக்குப் பகவான் வெகு ஸமீபத்திலிருப்பான். (ரா. கி.)

ஒருவன் தனது விந்துவைப் பன்னிரண்டு வருஷம் வரை இழக்காது வைத்திருப்பாஞனல் அரிய சக்திகளேப் பெறுவான். அப்போது 'மேதை நாடி' என்ற புதிய நரம்பு ஒன்று சரீரத்தில் உற்பத்தியாகின்றது. அதனல் ஒருவன் எல்லா விஷயங்களேயும் ஞாபகத்தில்

न चक्षुषा गृह्यते नापि वाचा नान्यै-र्देवै-स्तपसा कर्मणा वा। ज्ञानप्रसादेन विशुद्धसत्त्व-स्ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः ॥ १.८ ॥

यं यं लोकं मनसा संविभाति विशुद्ध-सत्वः कामयते यांश्च कामान्। तं तं लोकं जयते तांश्च कामां-स्तस्मा-दात्मज्ञं हि अर्चये-द्भूतिकामः ॥ १.१० ॥

ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நான்யைர் தேவைஸ் தபஸா கர்மணா வா। ஜ்ஞான-ப்ரஸாதேன விஶுத்தஸத்வஸ்-ததஸ்து தம் பஶ்யதே நிஷ்கலந் த்யாயமான: ॥ 1·8 ॥

யம் யம் லோகம் மனஸா ஸம்விபாதி விஶுத்தஸத்வ: காமயதே யாம்ஶ்ச காமான் ॥ தம் தம் லோகம் ஜயதே தாம்ஶ்ச காமான்ஸ்-தஸ்மா-தாத்மஜ்ஞும் ஹி அர்ச்சயேத் பூதிகாம: ॥1.10॥

---

1.8. (அந்த ஆத்மதத்துவத்தைக்) கண்ணுலோ, வாய்ப் பேச்சாலோ, வேறு இந்திரியங்களாலோ, தவத்தாலோ, கருமங் களாலோ அறியமுடியாது. ஞானத் தெளிவால் பரிசுத்தமான மனமுடையவன் அந்த நிஷ்களமான பரிபூர்ணத்தைத் தியானத் தால் காண்கிறுன்.

1.10. தெளித்த சித்தமுடையவன் எந்த எந்த உலகத்தை மனதால் ஸங்கல்பிக்கின்றுனே, எந்தெந்த போகங்களை விரும்பு

---

வைத்துக்கொள்ளவும் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளவுங் கூடும். (ரா. கி.)

ஒழியாத விந்து வுடனிற்க நிற்கு
மழியாப் பிராணனதிபலஞ் சத்தி
யொழியாத புத்தி தபஞ் செப மோன
மழியாத சித்தி உண்டாம் விந்து வற்றிலே　　(திருமந்திரம்)

1. 8. (ஜ்ஞானப்ரஸாதேன) ஞானத்தெளிவால்—தெளிந்த புத்தி யால்—அது நித்தியமாயும் சமீபமாயுமிருந்தும், புத்தியானது அழுக் கடைந்த கண்ணுடி போலும் கலங்கின நீர்போலும் இருந்தால் அதை உணராது. உலகப்பற்று நீங்கிச் சுத்தமான புத்தியால் உணரலாம். அல்லது பரமாத்மப் பிரஸாதத்தால்.

ஒ—(அபி ச ஸம்ராதனே ப்ரத்யக்ஷானுமானப்யாம்)பி. ஸூ. 3.2.24 (ததவ்யக்தம் ஆஹ ஹி)—பி. ஸூ. 3.2. 23.

## तृतीयमुण्डके द्वितीयः खण्डः

स वेदैतत् परमं ब्रह्म धाम यत्र विश्वं निहितं भाति शुभ्रम्।
उपासते पुरुषं ये ह्यकामास्ते शुक्रमेत-दतिवर्तन्ति धीराः ॥ २.१ ॥

## த்ருதீய முண்டகே த்விதீய: கண்ட:

ஸ வேதைதத் பரமம் ப்ரஹ்ம தாம யத்ர விஶ்வம் நிஹிதம் பாதி ஶுப்ரம் । உபாஸதே புருஷம் யே ஹ்யகாமாஸ்தே ஶுக்ர-மேத-ததிவர்த்தந்தி தீரா: ॥ 2.1 ॥

---

கின்றுனே அந்தந்த உலகத்தையும் அந்தந்த போகங்களேயும் அடைகிறுன். ஆகையால் பெரும்பேறு வேண்டுபவன் ஆத்ம ஞானியைப் பூஜிக்கவேண்டும்.

## மூன்றுவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

2.1. எதனிடம் உலகம் நிலேபெற்றுள்ளதோ, எது ஸ்வயஞ் ஜோதியாய்ச் சுத்தமாய் விளங்குகின்றதோ அந்த பரப்பிரம்ம நிலேயை (ஆத்மஞானியாகிய) அவன் அறிவான். நிஷ்காமர்களாய், தீரர்களாய் உள்ள எவர்கள் (ஆத்ம ஞானியாகிய) இப் புருஷனேப் பூஜிக்கின்றுர்களோ அவர்கள் (மீண்டும் பிறவிக்கு விதையாகிய) சுக்கிலத்தைச் சாராமல் (பிறவியினின்று) விடுபடுகின்றனர்.

---

பாதரஸந்தடவின கண்ணுடியில் ஒருவனுடைய முகம் பிரதிபலிக்கும். அதுபோலச் சக்தியையும் தூய்மையையும் பிரம்மசரியத்தால் காப்பாற்றிக் கொண்டிருக்கிறவனுடைய இருதயத்தில் பகவானுடைய திவ்ய ரூபம் பிரதிபலிக்கும்.
(ரா. கி.)

ஒ—உள்ளம் உரை செயல்
உள்ள விம்மூன்றையும்
உள்ளிக்கெடுத்து—இறை
உள்ளிலொடுங்கே.—(நம்மாழ்வார்).

1.10. ஒ. (காமான்னீ காமரூபீ) தை. 3.10.5.

कामान् यः कामयते मन्यमानः स कामभि-र्जायते तत्र तत्र। पर्याप्त-कामस्य कृतात्मनस्तु इहैव सर्वे प्रविलीयन्ति कामाः ॥ २.२ ॥

नाय-मात्मा बलहीनेन लभ्यो न च प्रमादा-त्तपसो वाप्य-लिङ्गात्। एतैरुपायै-र्यतते यस्तु विद्वांस्तस्यैष आत्मा विशते ब्रह्म धाम ॥ २.४ ॥

காமான் ய: காமயதே மன்யமான: ஸ காமபிர்-ஜாயதே தத்ர தத்ர। பர்யாப்த-காமஸ்ய க்ருதாத்மனஸ்து இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா: ॥ 2.2 ॥

நாய-மாத்மா பலஹீனேன லப்ப்யோ நச ப்ராமாதாத் தபஸோ வாப்-யலிங்காத்। ஏதை-ருபாயைர்-யததே யஸ்து வித்வான்ஸ்-தஸ்யைஷ ஆத்மா விஶதே ப்ரஹ்ம தாம ॥ 2.4 ॥

---

2.2. (ஆசைகளை ஜயிக்காத) எவன் எந்த ஆசைகளைப் பற்றியே சிந்தித்து விரும்பி நிற்கின்றானோ அவன் (இறந்தபின்) அந்தந்த (ஆசைகளுக்குத்தக்க) இடங்களில் (அந்தந்த) ஆசைகளுடன் பிறக்கிறான். ஆசைகளின் பூர்த்தியடைந்து ஆத்ம ஸ்வரூபமாய் உள்ளவன் எவனோ அவனுடைய ஆசைகளெல்லாம் இங்கேயே (இந்தஜன்மத்திலேயே) நசித்துப் போகின்றன (மறுபிறப்புக்குக் காரணமாவதில்லை).

2.4. இந்த ஆத்மா பலஹீனனால் அடைய முடியாதது. (உலக இச்சை விட்டுவிட்டோம் என்ற) பிரமையினாலாவது,

---

2.2. ஒ. எவர்களுடைய மனது ஸமநிலையில் நிறுத்தப்பட்டதோ அவர்களால் இங்கேயே பிறவி ஜயிக்கப்பட்டது. (கீ. 5. 19)

வெளிநோக்குடையவன் எத்தனை சாஸ்திரத்தைக் கற்றாலும் ஆத்மலாபம் கிட்டாது. அந்தர்முகமாய் நாடிப் பிரார்த்தித்தால்தான் ஆத்மலாபம் கிட்டும்.

ஒ—(அந்தர்முக ஸமாராத்த்யா பஹிர்முகஸு துர்லபா) உள் நாட்டத்தால் நன்கு பூஜிக்கத்தக்கவள்; வெளிநாட்டத்தால் அடையமுடியாதவள் பரதேவதை (லலிதா ஸஹஸ்ர நாமம்).

2.4. நாயமாத்மா பலஹீனேன—ஆத்மநிஷ்டையாலுண்டாகும் மனோவன்மையில்லாதவனாலும், மனைவி மக்களிடத்தில் உள்ள பற்றினால்

संप्राप्यैन-मृषयो ज्ञानतृप्ताः कृतात्मानो वीतरागाः प्रशान्ताः। ते सर्वगं सर्वतः प्राप्य धीरा युक्तात्मानः सर्वमेवाविशन्ति ॥ २.५ ॥

ஸம்ப்ராப்யைனம் ருஷயோ ஜ்ஞானத்ருப்தா: க்ருதாத்மானோ வீதராகா: ப்ரஶாந்தா: । தே ஸர்வகம் ஸர்வத:ப்ராப்ய தீரா யுக்தாத்மான:ஸர்வமேவாவிஶந்தி ॥ 2.5 ॥

---

ஆசைகள் நீங்காத (ஸந்நியாஸமில்லாத) தவத்தாலாவது (இந்த ஆத்மா அடையமுடியாது). எந்த வித்வான் இவ்வுபாயங்களைக் கைக்கொண்டு முயற்சிக்கின்றுனே அவனுடைய (பிரம்மபுரமாகிய) இருதயத்தில் இந்த ஆத்மா புகுந்து (உள்ளவராக) விளங்குகிருர்.

2.5. இந்த ஆத்மாவை அடைந்த ரிஷிகள் அந்த ஆத்மஞானத்திலேயே திருப்தியெய்தியவர்கள், ஆத்ம ஸ்வரூபமாக ஆய்விட்டவர்கள், பற்று ஒழிந்தவர்கள், பரமசாந்தர்கள். இந்திரியங்களையடக்கியவர்களும் தீரர்களுமாகிய அவர்கள் எங்கும் நிறைகின்ற பரம்பொருளை எங்குங்கண்டு (சரீரம் விழும் போது) எல்லாமாய் விளங்கும் அவ்வான்மப் பொருளில் இரண்டறக் கலக்கிருர்கள்.

---

செய்யவேண்டிய காரியங்களை மறந்துவிட்டவனுலும், ஸந்நியாஸமில்லாத ஞானத்தாலும் ஆத்மாவை அடையமுடியாது. (சங்.)

ஏதைருபாயை :—தவவலிமை, திடச்சித்தம், ஸந்நியாஸத்துடன் கூடிய ஞானம் ஆகிய இவ்வுபாயங்களைக் கைக்கொண்டு.

பத்தியமின்றி மருந்து பயன் தராது. நியம நிஷ்டையும் வைராக்கியமும் இல்லாத முயற்சி ஞானத்தை உண்டாக்காது.

2.5. ஒ—இதுவே பிரம்மத்துடன் ஒன்றுபட்ட நிலை (பிராஹ்மீ ஸ்திதி); இதை அடைந்தபின் ஒருவன் மோகத்தில் அழுந்தமாட்டான்; கடைசி காலத்திலும் இதில் நின்று பிரம்ம நிர்வாணம் அடைகிருன். (கீ. 2.72).

वेदान्त-विज्ञान-सुनिश्चितार्थाः संन्यासयोगा-द्यतयः शुद्ध-सत्त्वाः। ते ब्रह्मलोके तु परान्तकाले परामृतात् परिमुच्यन्ति सर्वे ॥ २.६ ॥

வேதாந்த-விஜ்ஞான-ஸுநிச்சிதார்த்தா: ஸந்ந்யாஸயோகாத்-யதய:சுத்த-ஸத்வா:। தே ப்ரஹ்மலோகே து பராந்தகாலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே ॥ 2.6 ॥

---

2.6. வேதாந்த அனுபவஞானத்தின் பயனாகிய ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் திடநிச்சயம் எய்தியவர்கள், ஸந்நியாஸ யோகத்தால் பரிசுத்தமான சித்தம் படைத்த யதிகள். அவர்கள் எல்லோரும் பராமிருதமாகிய பிரம்மத்தில் நிலைபெற்று (ஜீவன் முக்தர்களாகவே வாழ்ந்து) அந்திய காலத்தில் (சரீரம் விழுந்த பின்) பற்றனைத்தினின்றும் அறவே விடுபடுகின்றனர் (எங்கும் நிறைந்த பிரம்மத்தில் லயிக்கின்றனர்).

---

ஓ—உள்ளே இருக்கும் ஜனங்கள் விழித்துக் கொண்டிருக்கும் வீட்டில் திருடர் நுழைவதில்லை. நீ விழித்துக்கொண்டிருந்தால் உன் உள்ளத்தில் கெட்ட எண்ணங்கள் நுழையமாட்டா. (ரா. கி.)

அவிழ்த்துவிடப்பட்ட யானையானது மரங்களையுஞ் செடிகளையும் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தினதும் அது சாந்தமாகிவிடுகிறது. அதுபோல அடக்கியாளப்படாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது சாந்தமாக அமைகின்றது. (ரா. கி.)

2.6. ஓ—(சகுனீனா-மிவாகாசே ஜலே வாரிசரஸ்ய ச। பதம் யதா ந த்ருச்யேத ததா ஜ்ஞானவதாம் கதி: ॥) ஆகாயத்தில் பறவைகளின் அடிச்சுவடும், நீரில் நீர்ப்பிராணிகளின் அடிச்சுவடும் எப்படி காணப் படுவதில்லையோ அப்படி ஞானிகளின் கதியும் அறிய முடியாதது.

गताः कलाः पञ्चदश प्रतिष्ठा देवाश्च सर्वे प्रति-देवतासु । कर्माणि विज्ञान-मयश्च आत्मा परेऽव्यये सर्व एकीभवन्ति ॥ २.७ ॥

यथा नद्यः स्यन्दमानाः समुद्रेऽस्तं गच्छन्ति नामरूपे विहाय । तथा विद्वान्नामरूपा-द्विमुक्तः परात्परं पुरुष-मुपैति दिव्यम् ॥ २.८ ॥

கதா:கலா:பஞ்சதச ப்ரதிஷ்ட்டா தேவாஶ்ய ஸர்வே ப்ரதி தேவதாஸு । கர்மாணி விஜ்ஞானமயஶ்ச ஆத்மா பரேऽவ்யயே ஸர்வ ஏகீபவந்தி ॥ 2.7. ॥

யதா நத்ய:ஸ்யந்தமானா: ஸமுத்ரே ऽஸ்தங்கச்சந்தி நாம ரூபே விஹாய । ததா வித்வான் நாமரூபாத்-விமுக்த: பராத்பரம் புருஷ-முபைதி திவ்யம் ॥ 2.8. ॥

2.7. (மோக்ஷகாலத்தில்) பதினைந்து கலைகளும் தத்தம் மூலஸ்தானத்திற்குச் சென்றுவிடுகின்றன; இந்திரியங்கள் அனைத்தும் தத்தம் அதிஷ்டான தேவதைகளிடம் (சென்று விடுகின்றன); (பற்று நீங்கிய) எல்லாக் கருமங்களும் விஜ்ஞான மயமான ஆத்மாவும் அழிவில்லாத பரம்பொருளில் ஒன்றுபடு கின்றன.

2.8. எங்ஙனம் பெருகியோடும் நதிகள் நாமரூபங்களை யிழந்து ஸமுத்திரத்தில் மறைகின்றனவோ, அங்ஙனம் ஞானி நாம ரூபங்களினின்று விடுபட்டு உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்த தேஜோமயமான புருஷனை அடைகிருன்.

2.7. ஒ—(தானி பரே ததாஹ்யாஹ) பி. ஸூ. 4.2.15.

2.8. பராத்பரம் புருஷம்—மு. உப. 2. 1. 2-இல் 'திவ்யோ ஹ்ய-மூர்த்த:புருஷ:' என்று வர்ணிக்கப்பட்ட புருஷனை. ஒ—(முக்தோ பஸ்ருப்யவ்யபதேஶாத்) பி. ஸூ. 1. 3. 2.

நதியானது சமுத்திரத்தை நாடியோடி, முகத்துவாரத்தையடைந்து, சமுத்திரத்துள் புகுந்து, இரண்டறக்கலப்பது போல் பிரம்மப்பிராப்திக்கு நாலுபடிகளைப் பிரம்மார்ப்பணம், பிரம்ம ஸ்ம்ஸ்பர்சம், பிராம்மீஸ்திதி, பிரம்ம நிர்வாணம் என்று கீதை கூறுகிறது.

स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति, नास्याऽब्रह्म-वित्कुले भवति, तरति शोकं, तरति पाप्मानं, गुहाग्रन्थिभ्यो विमुक्तो ऽमृतो भवति ॥ २.९ ॥

ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி நாஸ்யாऽப்ரஹ்மவித் குலே பவதி தரதி ஶோகம் தரதி பாப்மானங் குஹாக்ரந்திப்ப்யோ விமுக்தோ ऽம்ருதோ பவதி ॥ 2.9. ॥

---

2.9. எவன் அந்தப் பரப்பிரம்மத்தை யறிகிருனே அவன் குலத்தில் பிரம்மஞானமில்லாதவன் உண்டாகமாட்டான். அவன் சோகத்தைத் தாண்டுகிருன், பாவத்தைத் தாண்டுகிருன். இருதய முடிச்சுகளினின்று விடுபட்டு அமிருதத்வத்தை (சாகாத்தன்மையை) அடைகிருன்.

---

2.9. 'மோக்ஷத்துக்கு அவித்தை தான் பிரதிபந்தமே தவிர வேறு பிரதிபந்தமில்லை. ஆகையால் எவனொருவன் இந்த உலகத்திலேயே அந்த சிரேஷ்டமான பிரம்மத்தை நான் தான் என்று சாக்ஷாத்கரிக்கிருனே அவன் வேறு கதியை அடைகிறதில்லை. தேவதைகள்கூட பிரம்மத்தை அடையும் விஷயத்தில் அவனுக்கு விக்கினம் செய்ய முடியாது. தேவதைகளுக்கும் இவனே ஆத்மாவாயிருக்கிருன். ஆகையால் பிரம்மத்தை அறிபவன் பிரம்மமாகவே ஆகிருன்.' ப்ரு. 1.4.10. (சங்).

ஒ.—(ப்ரகரணுத்) பி. ஸு. 1. 3. 6

(அதோ அனந்தேன ததா ஹி லிங்கம்) பி. ஸு. 3. 2. 26

(புருஷார்த்தோऽத: ஶப்தாதிசி பாதராயண:) பி. ஸு. 3. 4. 1

ஒ. நான் பற்றெழிந்தவன் என்ற அஹங்காரத்தையும் யோக சித்தியால் ஏற்படும் வன்மையையும் அது சம்பந்தமான கருவத்தையும், பிராரப்த வசமாய் வருவனவற்றிலும் ஆசை, கோபம், உடைமை முதலிய பாவனைகளையும் ஒழித்து எனது என்ற எண்ண மில்லாதவனுய் மன அமைதி யுற்றவன் பிரம்மம் ஆவதற்கு உரியவனுகிருன். பிரம்மத்தில் நிஷ்டை கூடித் தெளிந்த மன முடையவன் துக்கிப்பதில்லை, ஆசைப்படுவதில்லை, எல்லா உயிர்களிடத்தும் சமமானவனுய் என்னிடம் ஒப்புயர்வற்ற பக்தியை அடைகிருன். —கீ. 18. 51-52.

तदेतत् सत्य-मृषिरङ्गिराः पुरोवाच, नैत-दचीर्णव्रतो ऽधीते । नमः परमर्षिभ्यो नमः परमर्षिभ्यः ॥ २.११ ॥

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।...

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ इत्यथर्ववेदीया मुंडकोपनिषत्समाप्ता ॥

ததேதத்ஸத்யம் ருஷிரங்கிரா: புரோவாச, நைத-தசீர்ண-வ்ரதோ ऽதீதே. நம: பரமருஷிப்ப்யோ, நம: பரமருஷிப்ப்ய: ॥ 2.11 ॥

ஓம் பத்ரங்கர்ணேபி: ஶ்ருணுயாம தேவா: ।
பத்ரம் பஶ்யேமாக்ஷபிர்யஜத்ரா:...
ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥
॥ இதி அதர்வவேதீயா முண்டகோபநிஷத் ஸமாப்தா ॥

---

2.11. பரம்பொருளைப் பற்றிய இந்த ஸத்தியத்தை அங்கிரஸ ரிஷி (தன்னை முறைப்படி யணுகிய சௌனகருக்கு) முன் உபதேசித்தார். இதை விரதமனுஷ்டிக்காதவன் அத்தியயனம் செய்யக்கூடாது. (பிரம்ம ஸாக்ஷாத்காரத்தை எய்தியவர்களும் பரம்பரையாக உபதேசித்த முனிவர்களுமாகிய) பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம்; பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம்!

ஓம். தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும். பூஜைக்குரியவர்களே! கண்களால் நாங்கள் நல்லதைக் காணவேண்டும்!...முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் அதர்வ வேத முண்டகோபநிஷத்து முற்றும்.

---

2.11. அங்கிரஸ ரிஷியானவர் விதிப்படித் தம்மையணுகிய சௌனகாதி ரிஷிகளுக்குப் பிரம்மத்தை எப்படி உபதேசித்தாரோ அப்படியே மற்ற ஞானிகளும் தங்களை நாடும் முமுக்ஷுக்களுக்கு உபதேசிக்க வேண்டும் என்பது கருத்து. பசித்து உண்ட உணவே நன்றாக ஜீர்ணமாவதுபோல் விரதத்தை அனுஷ்டித்தவனுக்கே வித்தை பலனைக் கொடுக்கும் என்பதும் கூறப்பட்டது. ஒ. பி. சூ. 3.3.3

**உபநிஷத்தின் விஷயச் சுருக்கம்.**—ஆதிதேவனுன பிரம்மா தன் குமாரனுன அதர்வருக்குப் பிரம்ம வித்தையை உபதேசித்தார். பரம்பரையாக வந்த இந்த வித்தையை அங்கிரஸ மகரிஷி தன்னை நாடிய சௌனகருக்கு உபதேசித்தார். வித்தை இரண்டு விதம், ஒன்று உயர்ந்தது, மற்றது தாழ்ந்தது. எதனுல் பிரம்மஞானமுண்டாகிறதோ அது உயர்ந்தது; எதனுல் உலகஞான முண்டாகிறதோ அது தாழ்ந்தது. சிலந்திப் பூச்சி தன்னிடமிருந்தே நூலை உண்டாக்கித் தானுகவே அதை இழுத்துக் கொள்வது போலும், பூமி செடி கொடிகளை உற்பத்தி செய்வது போலும், அக்ஷரப் பொருள் உலகத்தைத் தோற்றுவிக்கிறது.

கர்மானுஷ்டானத்தால் உயர்ந்த உலகங்களை எய்தலாம் எனினும் அவ்வுயர்ந்த உலகங்களும் இவ்வுலகத்தைப் போல் அழிவுள்ளவைகளே என ஆராய்ந்தறிந்து முமுக்ஷுவானவன் இதர விஷயங்களில் ஆசையை விட்டு பிரம்மஞானத்தை யடையும் பொருட்டு பிரம்ம நிஷ்டராகிய குருவைச் சரணடைய வேண்டும்.

பரம புருஷன் ஒளிநிறைந்தவன் எனினும் உருவில்லாதவன்; உள்ளும் புறமும் உறைபவனெனினும் உண்டாகாதவன்; பிராணனில்லாதவன், மனமில்லாதவன், பரிசுத்தன், அக்ஷரத்துக்கும் அப்பாற்பட்டவன். உண்டாய அனைத்துக்கும் அந்தராத்மா. அவனிடமிருந்தே ஜ்வாலையிலிருந்து பொரிகள் போல மலைகளும் நதிகளும் மரங்களும் செடிகளும் பிராணி வர்க்கங்களும், அனைத்தும், உண்டாயின. அவனையறிய முயலுந் தவமே நமது கருமம். இந்த பிரம்மத்தைத் தன் உள்ளத்தே உரைவதாக எவன் காண்கிருனே அவன் அவித்தையினின்றும் விடுபடுகிருன்.

ஓங்கார வில்லை எடுத்து உபாசனையால் கூர்மை பெற்ற ஜீவனை அம்பாகத் தொடுத்து பிரம்ம பாவனை நிறைந்த சித்தத்தால் அதை இழுத்து அக்ஷரப் பொருளாகிய லக்ஷியத்தை நோக்கிப் பாய்ந்து அதனுள் ஊடுருவி நிற்பாய். ஒருவனுகிய பரமாத்மாவை அறிவதே கடமை. மற்ற வார்த்தையை விட்டொழிக. இதுவே மோக்ஷத்திற்குப் பாலம். அந்தப் பராபர வஸ்து பார்க்கப்பட்டதும் ஒருவனுடைய இருதய முடிச்சு அவிழ்கிறது, சந்தேகங்களெல்லாம் ஒழிகின்றன, கருமங்களெல்லாம் நாசமடைகின்றன.

சரீரமாகிற விருக்ஷத்தில் ஜீவனும் ஈசுவரனும் இணைபிரியாத அழகிய இரண்டு பக்ஷிகளைப்போல் உறைகின்றனர். ஜீவனுகிய பக்ஷி கசப்பும் தித்திப்புமான பழங்களை உண்டு மதிமயங்குகிறது. ஈசுவரனுகிய பக்ஷி

உண்ணுமல் பார்த்துக்கொண்டிருக்கிறது. பொன்போலொளிரும் ஈசுவரப் பக்ஷியைப் பார்க்குந்தோறும் அதை நாடி ஜீவப்பக்ஷி முடிவில் (புண்ணிய பாவங்களாகிற) பழங்களை உதறித்தள்ளிவிட்டு அத்துடன் ஸமநிலை எய்துகிறது. அழியாத ஆன்மப்பொருள் அகண்டமான பிரம்மசரியத்தாலும், தெளிந்த ஞானத்தாலும், தவத்தாலும், ஸத்தியத்தாலுமே அடையப்பெறும். ஸத்தியமே ஜயிக்கும், பொய்யன்று. அதை வாய்ப்பேச்சாலோ இந்திரிய வன்மையாலோ, கருமங்களாலோ அடைய முடியாது. ஞானத்தெளிவால் பரிசுத்தமான புத்தியுடையவன் தியானத்தால் காண்பான்.

எவன் எந்த எந்த ஆசைகளைச் சிந்தித்து விரும்பி நிற்கின்ருனே அவன் அந்தந்த ஆசைகளுடன் அந்தந்த இடங்களில் பிறவியடைகிருன். ஆனுல் ஆத்தமஞானியின் ஆசைகளெல்லாம் இங்கேயே நசித்துப்போகின்றன. அவனுக்குப் போக்கு வரவில்லை. எங்ஙனம் பெருகியோடும் நதிகள் நாமரூபங்களையிழந்து ஸமுத்திரத்துடன் ஒன்றுபடுகின்றனவோ அங்ஙனம் ஆத்மஞானி உயர்வற உயர்நலமுடைய பரம்பொருளிடம் இரண்டறக் கலக்கிருன். பிரம்மத்தையறிபவன் பிரம்மமாகவே ஆகிருன். அவன் சோகத்தைத் தாண்டுகிருன், பாவத்தைத் தாண்டுகிருன், சாகாத்தன்மையை யடைகிருன்.

முண்டகோபநிஷத்திற்கு ஶ்ரீராமகிருஷ்ண தீபம் எனும் உரை முற்றும்.

# ॥ माण्डूक्योपनिषत् ॥

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाꣳसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पति-र्दधातु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

## ॥ மாண்டூக்யோபநிஷத் ॥

ஓம் பத்ரங்கர்ணேபி: ஶ்ருணுயாம தேவா:। பத்ரம் பஶ்யேமாக்ஷபிர் யஜத்ரா:॥ ஸ்திரை-ரங்கைஸ்-துஷ்டுவாꣳஸஸ்-தனூபி:। வ்யஶேம தேவஹிதம் யதாயு:। ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தஶ்ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விஶ்வவேதா:। ஸ்வஸ்தி நஸ்-தார்க்ஷ்யோ அரிஷ்ட-நேமி:। ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர்-ததாது।

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

---

## மாண்டூக்கியோபநிஷத்து

ஓம் தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்லதைக் கேட்க வேண்டும். பூஜைக்குரியவர்களே! கண்களால் நாங்கள் நல்லதைக் காணவேண்டும்....

ஓம் முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

---

**உபநிஷத்தின் பெயருந் தொடர்பும்:**—இவ்வுபநிஷத்துக்கு இப்பெயர் வந்த காரணந் தெளிவாய்த் தெரியவில்லை. இவ்வுபநிஷத்தின் ரிஷி மண்டூக ரூபியான வருணபகவான். 'இதி மண்டூகரூபீ ஸந்ததர்ஶ வருண: ஶ்ருதிம்' என்று ஹரிவம்சம் கூறுகிறது. அதனால் இது மாண்டூக்கியோபநிஷத்து எனப் பெயர் பெற்றதென்பர் சிலர். யோகியினுடைய மனம் மூன்று அவஸ்தைகளையும் தவளை (மண்டூகம்) போலத் தாவிச் சென்று நாலாவதான துரீயத்தை யடைவதால் இந்த அனுபவத்தைக் கூறும் இவ்வுபநிஷத்து 'மாண்டூக்கியோபநிஷத்து' எனப்பட்டது என்று கூறுவாரும் உண்டு.

இது அதர்வ வேதத்தைச் சேர்ந்தது. இதில் அடங்கிய பன்னிரண்டு மந்திரங்களையும் நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம். 1 முதல் 6 வரை முதல் பாகம்; 7 வது மந்திரம் இரண்டாம் பாகம்; 8 முதல் 11 வரை மூன்றும் பாகம். 12 வது நான்காம் பாகம். இதில் அதர்வ வேத மஹா வாக்கியமாகிய 'அயமாத்மா ப்ரம்ம' என்பது உபதேசிக்கப்படுகிறது. இதற்கு ஆதிசங்கரருடைய பரமகுருவான ஸ்ரீ கௌடபாதாசார்யார்

ओमित्येत-दक्षर मिदꣳ सर्वं, तस्योपव्याख्यानं, भूतं भव-द्भविष्य-दिति सर्वमोंकार एव। यच्चान्यत् त्रिकालातीतं, तदप्योंकार एव ॥ १ ॥

सर्वꣳ ह्येतद्ब्रह्म, अयमात्मा ब्रह्म, सोऽयमात्मा चतुष्पात् ॥ २ ॥

ஓமித்-யேத தக்ஷர-மிதꣳ-ஸர்வம், தஸ்யோபவ்யாக்யானம், பூதம்-பவத்-பவிஷ்ய-திதி ஸர்வ-மோங்கார ஏவ। யச்சான்யத்-த்ரிகாலாதீதம் ததப்யோங்கார ஏவ ॥ 1 ॥

ஸர்வꣳ-ஹ்யேதத்-ப்ரஹ்ம, அயமாத்மா ப்ரஹ்ம, ஸோऽய மாத்மா சதுஷ்பாத் ॥ 2 ॥

---

1. 'ஓம்' என்ற இந்த அக்ஷரமே இது எல்லாம். (இனி) அதன் விளக்கம். சென்றது, நிகழ்வது, வரப்போவது என்ற எல்லாம் ஓங்காரமே. எது முக்காலத்துக்கும் அப்பாலுள்ளதோ அதுவும் ஓங்காரமே.

2. இது எல்லாம் பிரம்மமே. இந்த ஆத்மாவும் பிரம்மமே. அப்படியுள்ள இவ்வாத்மா நான்கு பாதங்களுள்ளது.

---

காரிகை என்னும் வியாக்கியானத்தை எழுதியிருக்கிறார். இந்தக் காரிகையில் நாலு அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன. சங்கராசாரியார் இந்தக் காரிகையின் நான்கு அத்தியாயங்களுக்கும் பாஷ்யம் எழுதியிருக்கிறார். (மாண்டூக்கிய-மேக-மேவாலம் முமுக்ஷூணாம் விமுக்தயே) முமுக்ஷுக்களின் விடுதலைக்கு மாண்டூக்கியம் ஒன்றே போதும் என்று முக்திகோபநிஷத்துக் கூறுகிறது. ஆதலால் இது உபநிஷத்துக்களுக்குள் மிகச் சிறியதாயினும் அனைத்தினும் மிகப் பெருமை வாய்ந்தது.

1. ஓமித்யேதத்—ஓ. கட. 2.15. தை. 1,8.1. தேவதா புத்தியுடன் உபாசிக்கப்பட்ட பிரதிமை அந்த தேவதையை யடையச் சாதகமாயிருப்பதுபோல் பிரம்ம புத்தியுடன் உபாசிக்கப்பட்ட ஓங்காரம் பிரம்மத்தை யடையச் சாதகமாயிருக்கிறது. ஸமாதி நிஷ்டன் ஓங்காரத்தை அனுசந்தானம் செய்துகொண்டு ஸ்தூலமான அகாரத்தைச் சூக்ஷ்மமான உகாரத்திலும், அதைக் காரணமான மகாரத்திலும் அதைக் காரிய காரண அதீதமான பிரத்யகாத்மாவினிடத்திலும் உபஸம்ஹாரம் செய்து பிரத்யகாத்மாவாகவே இருந்து விடுகிறான்.

2. பிரம்ம வாசகமாகிய பிரணவமே எல்லாம் என்று முதல் மந்திரம் கூறிற்று. வாச்யமாகிய பிரம்மமே எல்லாம் என்று இரண்டாவது

जागरित-स्थानो बहिःप्रज्ञः, सप्ताङ्ग एकोनविंशति-मुखः स्थूलभु-ग्वैश्वानरः प्रथमः पादः ॥ ३ ॥

ஜாகரிதஸ்த்தாநோ, பஹி:ப்ரஜ்ஞ:, ஸப்தாங்க, ஏகோநவிம்ஶதிமுக:, ஸ்த்தூலபுக், வைஶ்வாநர:, ப்ரதம:பாத: ॥ 3 ॥

---

3. முதல் பாதம் ஸ்தூலத்தை யனுபவிக்கும் வைசுவாநரன்; ஏழு அங்கங்கள், பத்தொன்பது முகங்கள், வெளிப் பிரஜ்ஞை; இருப்பிடம் ஜாக்கிரம்.

---

மந்திரம் கூறுகிறது. வாச்யமும் (பதார்த்தமும்) வாசகமும் (சப்தமும்) பிரிக்கப்படாத ஒன்று என்று அறியவேண்டும்.

ஒ. (பாதா மாத்ரா:, மாத்ராஶ்ச பாதா:) பாதங்கள் ஓங்காரத்தின் மாத்திரைகள்; மாத்திரைகளே பாதங்கள். இந்த வாச்ய வாசக அபேதத்தைத்தான் இது எல்லாம் பிரம்மம் என்று இந்த மந்திரங் கூறுகிறது.

'அயமாத்மா ப்ரஹ்ம'—இது அதர்வவேதத்தின் சிரசு. (அஹம் ப்ரஹ்மாஸ்மி—யஜுர்வேதம்; தத்-த்வமஸி—ஸாம வேதம்; ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம—ருக்வேதம்). விசுவன், தைஜஸன், பிராஜ்ஞன், துரீயன் என்று வெவ்வேறு பெயருடன் விளங்கும் இந்த ஆத்மா பிரம்மம் என்று விரலை இருதயத்தில் வைத்து இது சுட்டிக் காட்டுவது போலிருக்கிறது.

துரீயம் அடையத் தகுந்த ஸ்தானம். அதை அடையச் சாதகமாயுள்ளது ஓங்காரத்தின் பாதங்களின் உபாஸனே.

3. ஏழு அங்கங்கள்—ஒ. (அக்னிர்மூர்த்தா) ஸ்வர்க்கம் தலை, சந்திர சூரியர் கண்கள், திசைகள் காதுகள், வாயு மூச்சுக் காற்று, வேதங்கள் வாக்கு, ஆகாயம் இருதயம், பூமி பாதம். மு. உப. 2.4. வைசுவாநரனுக்கு விராட்ரூபம் சொன்னது இருவரும் ஒன்றேயாதலால்.

**பத்தொன்பது முகங்கள்** :—ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன் ஐந்து, அந்தக் கரணம் நான்கு ஆகப் பத்தொன்பது. இவற்றின் வழி உலகை உண்டனுபவிப்பதால் இவைகள் முகங்கள் எனப்பட்டன.

விசுவம் என்ற ஸ்தூல உலகை அனுபவிக்கும் நரன் வைசுவாநரன்—ஆத்தியாத்மிகமான (வைசுவாநர) பிரத்யகாத்மாவும், ஆதிதெய்விகமான விராடாத்மாவும் ஒன்றே. விராட்டும் விசுவனும் ஸ்தூலப் பிரபஞ்சத்தின் அபிமானிகளானதால் ஒன்று என்றும், தைஜஸனும் ஹிரண்ணியகர்ப்பனும் சூக்ஷ்மப் பிரபஞ்ச அபிமானிகளாதலால் ஒன்று என்றும், பிராஜ்ஞனும் அவ்யாகிருதப்பிரளயத்தில் நிர்விசேஷமாயிருக்கும் அவ்வியாகிருதனும் ஒன்று என்றும் அறியவேண்டும்.

ஒ. பிரு. 4.5. (மதுப்பிராம்மணம்).

கட. 3.1. (ருதம் பிபந்தௌ).

स्वप्नस्थानो ऽन्तःप्रज्ञः, सप्ताङ्ग एकोनविंशति-मुखः, प्रविविक्तभुक्, तैजसो द्वितीयः पादः ॥ ४ ॥

यत्र सुप्तो न कञ्चन कामं कामयते, न कञ्चन स्वप्नं पश्यति, तत्सुषुप्तम् । सुषुप्त-स्थान एकीभूतः, प्रज्ञानघन एवानन्दमयो-ह्यानन्दभुक्, चेतोमुखः प्राज्ञ-स्तृतीयः पादः ॥ ५ ॥

ஸ்வப்னஸ்த்தானோ ऽந்த:ப்ரஜ்ஞ:, ஸப்தாங்க, ஏகோநவிம்ஶதிமுக:, ப்ரவிவிக்தபுக், தைஜஸோ, த்விதீய:பாத: ॥ 4 ॥

யத்ர ஸுப்தோ, ந கஞ்சன காமம் காமயதே, ந கஞ்சன ஸ்வப்னம் பஶ்யதி, தத் ஸுஷுப்தம் ། ஸுஷுப்தஸ்த்தான ஏகிபூத:, ப்ரஜ்ஞானகன ஏவானந்தமயோ ஹ்யானந்தபுக், சேதோமுக:, ப்ராஜ்ஞஸ்-த்ருதீய:-பாத: ॥ 5 ॥

---

4. இரண்டாம் பாதம் (ஸூக்ஷ்ம வாசனைகளைத்) தனிமையில் அனுபவிக்கும் தைஜஸன்; ஏழு அங்கங்கள், பத்தொன்பது முகங்கள், உள் பிரஜ்ஞை; இருப்பிடம் ஸ்வப்னம்.

5. மூன்றும் பாதம் ஆனந்தத்தை யனுபவிக்கும் ப்ராஜ்ஞன்; சித்தம் (ஒன்றே) முகம்; ஒருவனாய் நிற்பவன்; பிரஜ்ஞையே வடிவானவன்; ஆனந்த மயன்; இருப்பிடம் ஸுஷுப்தி. தூங்குவோன் எந்நிலையில் விருப்பம் எதையும் விரும்புவதில்லையோ கனவு எதையுங் காண்பதில்லையோ அதுதான் ஸுஷுப்தி.

---

4. 'ப்ரவிவிக்தபுக்'—விசுவன் ஸ்தூல உணர்ச்சியை வெளிப்பட அனுபவிப்பதுபோல் தேஜோமயமாய் ஸ்வப்ன ஸ்தானத்திலுள்ள தைஜஸன் வாசனாமயமான சூக்ஷ்ம உணர்ச்சியைத் தனிமையில் அனுபவிக்கிறான்.

ஒ. 'அத்ரைஷ தேவ: ஸ்வப்னே மஹிமான-மனு பவதி'

ப்ரச். உப. 4.5.

5. ஏகீபூத:—பகலில் காணப்படும் பொருள்கள் தங்கள் குண விசேஷங்களை இழக்காமல் இரவு வந்தபோது பிரித்தறியப்படாமல் இருளில் முழுகிப்போவது போல், ஜாக்ரஸ்வப்ன விவகாரங்கள் ஸுஷுப்தியில் ஒன்றாய் விடுகின்றன.

ஒ. (ப்ராஜ்ஞேனாத்மனா ஸம்பரிஷ்வக்த:) ப்ரு. உப. 4.3.21.

एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ॥ ६ ॥

नान्तःप्रज्ञं, न बहिःप्रज्ञं, नोभयतःप्रज्ञं, न प्रज्ञानघनं, न प्रज्ञं, नाप्रज्ञम् । अदृष्ट-मव्यवहार्य-मग्राह्य-मलक्षण-मचिन्त्य-मव्यपदेश्य-मेकात्म-प्रत्ययसारं प्रपञ्चोपशमं शान्तं शिव-मद्वैतं, चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ॥ ७ ॥

ஏஷ ஸர்வேஸ்வர, ஏஷ ஸர்வ்ஜ்ஞ, ஏஷோ ऽந்தர்யாம்யேஷ யோனி: ஸர்வஸ்ய, ப்ரபவாப்யயௌ ஹி பூதானும் ॥ 6 ॥

நாந்த: ப்ரஜ்ஞம், ந பஹி: ப்ரஜ்ஞம், நோபயத: ப்ரஜ்ஞம், ந ப்ரஜ்ஞானகனம், ந ப்ரஜ்ஞம் நாப்ரஜ்ஞம் । அத்ருஷ்ட-மவ்யவஹார்ய-மக்ராஹ்ய - மலக்ஷண - மசிந்த்ய - மவ்யபதேஸ்ய-மேகாத்மப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபஶமம் ஶாந்தம் ஶிவ-மத்வைதஞ் சதுர்த்தம் மன்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய: ॥ 7 ॥

---

6. இவனே எல்லாவற்றையும் ஆளும் ஈசுவரன், இவனே எல்லாவற்றையும் அறிந்தவன், இவனே உயிரனைத்தையும் உள்ளிருந்து நடத்துபவன், இவனே அனைத்துக்கும் பிறப்பிடமும், உண்டாயவற்றின் தோற்றமும் ஒடுக்கமும்.

7. நாலாவது பதமாய்க் கருதப்படுபவன் உள் பிரஜ்ஞையில்லாதவன், வெளிப் பிரஜ்ஞையில்லாதவன், இரண்டிற்குமிடையேயுள்ள பிரஜ்ஞையில்லாதவன் ; பிரஜ்ஞை வடிவானவனுமன்று, சேதனனுமன்று, அசேதனனுமன்று ; பார்க்க முடியாதவன், விவரிக்க முடியாதவன், கிரகிக்க முடியாதவன், அடையாளமில்லாதவன், நினைக்க முடியாதவன், குறிப்பிட முடியாதவன்.

---

6. ஸுஷுப்தியில் ஞானமில்லை என்று சொல்லக்கூடாது. எல்லாக் கற்பனைகளுக்கும் ஆதாரமான ஞானம் இருக்கவே இருக்கிறது.

ஒ. (ந ஹி விஜ்ஞாதுர் விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே) ப்ரு. 4. 3. 30.

7. **நான்காவது** :—இது எண்ணிக்கைக்கு விஷயமாகாவிட்டாலும் மற்ற மூன்று நிலைகளைவிட் வேறானதால் நான்காவது எனப்பட்டது. கயிறு, தடி, பூமியில் பிளவு இவை வெளிச்சக் குறைவில் பாம்புபோல்

सोऽयमात्मा ऽध्यक्षर-मोंकारः, अधिमात्रं पादा मात्राः, मात्राश्च पादा अकार उकार मकार इति ॥ ८ ॥

ஸோऽயமாத்மா ऽத்த்யக்ஷர-மோங்கார:, அதிமாத்ரம் பாதா மாத்ரா:, மாத்ராஶ்ச பாதா அகார உகார மகார இதி ॥ 8 ॥

---

ஒன்றே ஆத்மா என்ற அறிவால் அனுசரித்தறியத் தக்கவன், (பஞ்ச பூதங்களின் விரிவாகிய) பிரபஞ்சமற்றவன், சாந்தன், சிவன், இரண்டற்றவன். அவனையே துரீயமாக (நான்காவதாகக்) கருதுகின்றனர். அவனே ஆத்மா, அவனே அறியத் தகுந்தவன்.

8. அந்த இவ்வாத்மா (ஒரு) அக்ஷரத்தால் (குறிக்கப்படும் போது) ஓங்காரம்; (ஓங்காரத்தின் பகுதிகளாகிய) மாத்திரைகளால் (குறிக்கப்படும்போது) மாத்திரைகளே பாதங்கள்

---

தோன்றினும், இவற்றினின்று பாம்பு எப்படி வேறோ அப்படி ஆத்மா (ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:).

“ பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளி, அந்தப் புண்புக்கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மையில்லை
தேசமில்லை காலமில்லை திக்குமில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிறிவுமில்லை
சொல்லுமில்லை இராப் பகலாந் தோற்றமில்லை;
அந்தமில்லை ஆதியில்லை நடுவுமில்லை
அகமுமில்லை புறமுமில்லை யனைத்துமில்லை;
இல்லையில்லை யென்னிறென்று மில்லாதல்ல
இயல்பாகி யென்றுமுள்ள வியற்கையாகிச்
சொல்லரிய தன்மையதா யான்றானென்னத்
தோன்றுதெல்லாம் விழுங்குஞ் சொரூபமாகி
அல்லையுண்ட பகல்போல வவித்தையெல்லா
மடையவுண்டு தடையற வுன்னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தானாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளங்குந்தானே.”

—தாயுமானவர்.

8. அத்த்யக்ஷரம்–(அதிசுத்வாச்ச நித்யத்வா-தத்த்யக்ஷர-முதாஹ்ருதம்) எல்லாவற்றிற்கும் மேலானதாலும் நாசமற்றதாலும் அத்த்யக்ஷரம்.

அதிமாத்ரம்–எல்லாம் அதனுடைய அம்சமாயிருப்பதால் அதிமாத்ரம்.

जागरितस्थानो वैश्वानरो ऽकारः प्रथमा मात्राप्ते-रादिमत्त्वा-द्वा आप्नोति ह वै सर्वान् कामा-नादिश्च भवति, य एवं वेद ॥ ९॥

स्वप्नस्थान-स्तैजस उकारो द्वितीया मात्रोत्कर्षा-दुभय-त्वाद्वोत्कर्षति ह वै ज्ञान-सन्ततिं समानश्च भवति, नास्या ऽब्रह्मवित्कुले भवति, य एवं वेद ॥ १० ॥

ஜாகரிதஸ்த்தானோ வைஶ்வாநரோ ऽகார:, ப்ரதமா மாத்ராப்தே-ராதிமத்வாத்வா; ஆப்னோதி ஹ வை ஸர்வான் காமானாதிஶ்ச பவதி, ய ஏவம் வேத ॥ 9 ॥

ஸ்வப்ன-ஸ்த்தானஸ்-தைஜஸ உகாரோ, த்விதீயா மாத்ரோத்கர்ஷா-துபயத்வாத்-வோத்கர்ஷதி ஹ வை ஜ்ஞானஸந்ததிம், ஸமானஶ்ச பவதி, நாஸ்யா ऽப்ரஹ்மவித்குலே பவதி, ய ஏவம் வேத ॥ 10 ॥

---

(ஜாக்ரம் ஸ்வப்னம் ஸுஷுப்தி துரீயம்); அகாரம், உகாரம், மகாரம் என்னும் (பகுதிகளாகிய) பாதங்களே (ஓங்காரத்தின்) மாத்திரைகள்.

9. (எல்லாவற்றையும்) அடையுந்தன்மையால் (எல்லாவற்றிற்கும்) முதல் மாத்திரையாகிய அகாரமே ஜாக்கிரத்தை இருப்பிடமா யுடைய வைசுவானரன்; எவன் இங்ஙனம் அறிகிறானோ அவன் எல்லா விருப்பங்களையும் முற்றும் அடைகிறான்; நிச்சயமாக (எல்லோருக்கும்) முதல்வனாகவும் ஆகிறான்.

10. உயர்வாலும், உபய (இரட்டை) ஸம்பந்தம் உடைமையாலும் இரண்டாவது மாத்திரையாகிய உகாரமே ஸ்வப்னத்தை இருப்பிடமாயுடைய தைஜஸன்; எவன் இங்ஙனம் அறிகிறானோ அவன் ஞானப்பெருக்கை உண்மையில் உயர்த்துவான்; அன்றியும் சுகதுக்கம் முதலிய இரட்டைகளில் ஸமபுத்தியுடையவனாவான்; அவன் குலத்தில் பிரம்மஞானமில்லாதவன் தோன்ற மாட்டான்.

---

9. ஆப்தே:—(அகாரோ வை ஸர்வா வாக்) அகாரமே எல்லா சப்தங்களும்; அகாரம் எல்லாவற்றிலும் வியாபித்திருப்பதால்.

ஒ. அக்ஷராணா மகாரோऽஸ்மி—கீ. 10. 33.

सुषुप्तस्थानः प्राज्ञो मकार-स्तृतीया मात्रा मिते-रपीतेर्वा मिनोति ह वा इद१ सर्व-मपीतिश्च भवति, य एवं वेद ॥ ११ ॥

अमात्र-श्चतुर्थो ऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवो ऽद्वैत एव-मोंकार आत्मैव-संविशत्यात्मनात्मानं, य एवं वेद, य एवं वेद ॥ १२ ॥

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।...

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ इति माण्डूक्योपनिषत्समाप्ता ॥

ஸுஷுப்தஸ்த்தான: ப்ராஜ்ஞோ மகாரஸ்-த்ருதீயா-மாத்ரா மிதே-ரபீதேர்வா-மினோதி ஹ வா இத१ ஸர்வ-மபீதிஶ்ச பவதி ய ஏவம் வேத ॥ 11 ॥

அமாத்ரஶ்-சதுர்த்தோ ऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபஶம: ஶிவோ ऽத்வைத ஏவமோங்கார ஆத்மைவ; ஸம்விஶத்-யாத்மனாத்மானம் ய ஏவம் வேத, ய ஏவம் வேத ॥ 12 ॥

ஓம் பத்ரங்கர்ணேபி: ஶ்ருணுயாமதேவா: ।
பத்ரம் பஶ்யேமாக்ஷபிர்யஜத்ரா: ।...
ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥
॥ இதி மாண்டூக்யோபநிஷத்ஸமாப்தா ॥

---

11. அளவைக் காட்டுந் தன்மையாலும், தன்னிடம் மறைத்துக்கொள்ளுந் தன்மையாலும் மூன்றாவது மாத்திரையாகிய மகாரமே ஸுஷுப்தியை ஸ்தானமாயுடைய பிராஜ்ஞன். எவன் இங்ஙனம் அறிகிறானோ அவன் (அறிவால் உலகனைத்தையும்) அளவிடக் கூடியவனாகவும், எல்லாவற்றையும் (தன்னிடம்) மறைத்துக்கொள்ளக் கூடியவனாகவும் ஆகிறான்.

12. இரண்டற்றதாயும் சிவமாயும் பிரபஞ்சம் லயிக்கும் இடமாயும், விவகரிக்க முடியாததாயும் உள்ள நாலாவது (ஸ்தானம்) மாத்திரையில்லாதது. இங்ஙனம் ஓங்காரம் ஆத்மாவே. எவனெவன் இங்ஙனம் அறிகிறானோ அவனவன் தன்னால் தானாகிய ஆத்மாவையடைகிறான்.

இங்ஙனம் மாண்டூக்கியோபநிஷத்து முற்றும்.

---

11. அபீதே:—விருத்தி ஞானத்தின் லயத்திற்குக் காரணமாயிருப்பதால்.

# ॥ गौडपादकारिका: ॥

## १. आगम-प्रकरणम्

बहि: प्रज्ञो विभु-र्विश्वो ह्यन्त: प्रज्ञस्तु तैजस: ।
घन-प्रज्ञस्तथा प्राज्ञ एक एव त्रिधा स्मृत: ॥ १.१ ॥

दक्षिणाक्षि-मुखे विश्वो मनस्यन्तस्तु तैजस: ।
आकाशे च हृदि प्राज्ञ-स्त्रिधा देहे व्यवस्थित: ॥ १.२ ॥

विश्वो हि स्थूलभुङ्-नित्यं तैजस: प्रविविक्तभुक् ।
आनन्दभुक् तथा प्राज्ञस्त्रिधा भोगं निबोधत ॥ १.३ ॥

---

# கௌடபாத காரிகை

## 1. ஆகமப் பிரகரணம்

1.1. விசுவன் வெளிப் பிரஜ்ஞையுடையவன், எங்கும் வியாபிப்பவன்; தைஜஸன் உள் பிரஜ்ஞையுடையவன்; அவ்வாறே பிராஜ்ஞன் உள்வெளியற்ற பிரஜ்ஞையே உருக்கொண்டவன். (இவ்விதம்) ஒருவனே மூன்று வடிவில் கூறப்படுகிறான்.

1.2. வலது கண்ணின்முன் விசுவரூபியாயும், மனத்தினுள் தைஜஸரூபியாயும், இருதய ஆகாசத்தில் பிராஜ்ஞரூபியாயும், (ஒருவனே) மூன்று வடிவில் தேகத்தில் இருக்கிறான்.

1.3. விசுவன் எப்போதும் ஸ்தூலமான போகங்களை யனுபவிப்பவன்; தைஜஸன் வாஸனாமயமான ஸூக்ஷ்ம போகங்களை யனுபவிப்பவன். அவ்வாறே பிராஜ்ஞன் ஆனந்தத்தை யனுபவிப்பவன். (இவ்விதம்) போகம் முவ்வகைப் படும்.

---

1.1. ப்ராஜ்ஞன்–ப்ர + அஜ்ஞன். ஸுஷுப்தியில் பிரகாசத்துடன் அஜ்ஞான விருத்தி சேர்ந்திருக்கிறது. இருட்டு வீட்டில் சிறு விளக்குள்ள

त्रिषु धामसु यद्भोज्यं भोक्ता यश्च प्रकीर्तितः ।
वेदैत-दुभयं यस्तु स भुञ्जानो न लिप्यते ॥ १.५ ॥

इच्छा-मात्रं प्रभोः सृष्टि-रिति सृष्टौ विनिश्चिताः ।
कालात् प्रसूतिं भूतानां मन्यन्ते काल-चिन्तकाः ॥ १.८ ॥

भोगार्थं सृष्टि-रित्यन्ये क्रीडार्थ-मिति चापरे ।
देवस्यैष स्वभावोऽय-माप्तकामस्य का स्पृहा ॥ १.९ ॥

निवृत्तेः सर्वदुःखाना-मीशानः प्रभु-रव्ययः ।
अद्वैतः सर्व-भावानां देवस्तुर्यो विभुः स्मृतः ॥ १.१० ॥

---

1.5. மூன்று நிலைகளிலும் எது போஜ்யமோ அதையும், எவன் போக்தாவோ அவனையும் எவன் அறிகிருனே, அவன் அனுபவிப்பவனுயினும் பற்றப்படுவதில்லை.

1.8. சிருஷ்டி விஷயத்தில் சிலர் சிருஷ்டியானது ஈசுவரனுடைய இச்சைமாத்திரம் என்றும் நிச்சயித்திருக்கிருர்கள்; காலத்தை ஆராய்பவர்கள் காலத்திலிருந்து பொருள்களின் சிருஷ்டி ஏற்பட்டதாய் எண்ணுகிருர்கள்.

1.9. ஈசுவரனுடைய போகத்தின் பொருட்டு என்று சிலரும், விளையாட்டுக்காக என்று வேறு சிலரும் எண்ணுகிருர்கள். இந்த சிருஷ்டி ஈசுவரனுடைய இயற்கை (ஒரு காரணமும் இல்லை). பூர்ணகாமனுக்கு ஆசை ஏது?

1.10. எல்லாத் துன்பங்களினின்றும் விடுதலைக்காக (நான்காவதான) துரீயன், ஆள்பவன், 'பிரபு, மாறுதலில்லாதவன், பாவனைகள் அனைத்துள்ளும் இரண்டற்றவன், பிரகாசமுள்ளவன் எங்கும் வியாபித்தவன் நினைக்கப்படுகிருன்.

---

சிறு இடம் பிரகாசிப்பது போன்றது அந்தப் பிரகாசம். அங்கே அஹங்காரம் மட்டும் மின்மினிப் பூச்சியைப்போல் பிரகாசிக்கிறது—மற்றென்றும் விளங்கவில்லை.

कार्य-कारण-बद्धौ ताविष्येते विश्व-तैजसौ ।
प्राज्ञः कारण-बद्धस्तु द्वौ तौ तुर्ये न सिध्यतः ॥ १.११ ॥
नाऽऽत्मानं न परंचैव न सत्यं नापि चानृतम् ।
प्राज्ञः किञ्च न संवेत्ति तुर्यं तत् सर्वदृक् सदा ॥ १.१२ ॥
द्वैतस्याग्रहणं तुल्य-मुभयोः प्राज्ञ-तुर्ययोः ।
बीज-निद्रायुतः प्राज्ञः सा च तुर्ये न विद्यते ॥ १.१३ ॥
स्वप्ननिद्रायुतावाद्यौ प्राज्ञ-स्त्वस्वप्न-निद्रया ।
न निद्रां नैव च स्वप्नं तुर्ये पश्यन्ति निश्चिताः ॥ १.१४ ॥
अन्यथा गृह्णतः स्वप्नो निद्रा तत्व-मजानतः ।
विपर्यासे तयोः क्षीणे तुरीयं पद-मश्नुते ॥ १.१५ ॥

1.11. விசுவனும் தைஜஸனும் காரியகாரணத்தால் கட்டப்பட்டவர்களெனச் சொல்லப்படுகிறுர்கள்; பிராஜ்ஞன் காரணத்தால் கட்டப்பட்டவன்; இக்கட்டுகள் (காரிய காரணம்) இரண்டும் துரீயனிடத்தில் இல்லை.

1.12. பிராஜ்ஞன் தன்னையோ, தனக்கு வேருனதையோ, மெய்யையோ, பொய்யையோ, எதையும் நன்ருக அறிகிறதில்லை. ஆனுல் துரீயனே எப்போதும் எல்லாவற்றையும் காண்பவனுக இருக்கிறுன்.

1.13. துவைதத்தைக் காணுமை என்பது பிராஜ்ஞன், துரீயன் இருவருக்கும் சமம். பிராஜ்ஞன் அறியாமையெனும் உறக்கத்துடன் கூடியவன்; அது துரீயனிடத்தில் இல்லை.

1.14. முதல் இருவரும் (விசுவனும் தைஜஸனும்) கனவு(வை) (ஒன்றை மற்ருென்ருக)க் காணும் அஜ்ஞான நித்திரையுடன் கூடியவர்கள்; பிராஜ்ஞனே கனவில்லாத அஜ்ஞான நித்திரையுடன் கூடியவன். துரீய நிலையில் திட நிச்சயமுள்ளவர்கள் நித்திரையையோ கனவையோ காண்பதில்லை.

1.15. ஒன்றை மற்ருென்ருகக் கொள்பவனுக்குக் கனவு (உண்டாகிறது); தத்துவத்தை அறியாதவனுக்கு அஜ்ஞான

अनादि-मायया सुप्तो यदा जीवः प्रबुध्यते ।
अज-मनिद्र-मस्वप्न-मद्वैतं बुध्यते तदा ॥ १.१६ ॥

प्रपञ्चो यदि विद्येत निवर्तेत न संशयः ।
माया-मात्र-मिदं द्वैत-मद्वैतं परमार्थतः ॥ १.१७ ॥

विकल्पो विनिवर्तेत कल्पितो यदि केनचित् ।
उपदेशा-दयं वादो ज्ञाते द्वैतं न विद्यते ॥ १.१८ ॥

त्रिषु धामसु यत्तुल्यं सामान्यं वेत्ति निश्चितः ।
स पूज्यः सर्व-भूतानां वंद्यश्चैव महामुनिः ॥ १.२२ ॥

अकारो नयते विश्व-मुकारश्चापि तैजसम् ।
मकारश्च पुनः प्राज्ञं नामात्रे विद्यते गतिः ॥ १.२३ ॥

---

மாகிற நித்திரை (உண்டாகிறது); இவற்றின் விபரீதங்கள் நசிக்கும்போது நான்காவதான நிலையை (ஜீவன்) அனுபவிக்கிருன்.

1.16. அனுதிமாயையால் தூங்கும் ஜீவன் எப்போது விழித்துக் கொள்கிருனே அப்போது பிறப்பில்லாமலும் நித்திரையில்லாமலும் ஸ்வப்னமில்லாமலும் இருக்கிற அத்வைதஸ்வரூபமான துரீயத்தை அறிகிருன்.

1.17. பிரபஞ்சம் இருக்குமேயானுல் அது போய் விடும், சந்தேகமில்லை. இந்த துவைதமானது மாயாஸ்வரூபமே. உண்மையில் அத்வைதமே இருக்கிறது.

1.18. வித்தியாஸங்கள் கல்பிக்கப்பட்டிருந்தால் நிவிருத்தியாய்விடும். இவ்வித்தியாசங்கள் உபதேசத்தின் பொருட்டே. ஞான மடைந்த பின் துவைதம் இருக்காது.

1.22. மூன்று அவஸ்தைகளிலும் எது ஒரே சமமாக உள்ளதோ அதை நிச்சயமாய் அறிபவன் பூஜிக்கத்தகுந்தவன், வந்தனத்துக்குரியவன், சிறந்த முனிவன்.

1.23. அகாரம் விசுவனிடம் அழைத்துச் செல்லுகிறது; உகாரம் தைஜஸனிடம் அழைத்துச் செல்லுகிறது; மகாரம்

युंजीत प्रणवे चेतः प्रणवो ब्रह्म निर्भयम् ।
प्रणवे नित्य-युक्तस्य न भयं विद्यते क्वचित् ॥ १.२५ ॥

प्रणवो ह्यपरं ब्रह्म प्रणवश्च परं स्मृतः ।
अपूर्वो ऽनंतरो ऽबाह्यो ऽनपरः प्रणवो ऽव्ययः ॥ १.२६ ॥

प्रणवं हीश्वरं विद्यात् सर्वस्य हृदि संस्थितम् ।
सर्वव्यापिन-मोंकारं मत्वा धीरो न शोचति ॥ १.२८ ॥

अमात्रो ऽनंतमात्रश्च द्वैतस्योपशमः शिवः ।
ओंकारो विदितो येन स मुनि-र्नेतरो जनः ॥ १.२९ ॥

---

பிராஜ்ஞனிடம் அழைத்துச் செல்லுகிறது; மாத்திரையில்லாத ஓங்காரத்தினிடம் செல்லுதல் என்பது இல்லை. (காரிய காரணங்களும், அடைகிறவன் அடைதல் என்பவைகளும் இல்லை.)

1.25. மனதைப் பிரணவத்தில் சேர்க்கவேண்டும். பிரணவம் பயமில்லாத பிரம்மஸ்வரூபம். பிரணவத்தை எப்போதும் தியானிப்பவனுக்கு எவ்விடத்திலும் பயமில்லை.

1.26. பிரணவமே அபரப்பிரம்மம்; பிரணவமே பரம் என்றும் கூறப்படுவது. பிரணவம் காரணமில்லாதது, பிரிதொன்றில்லாதது, வெளியொன்றில்லாதது, காரியமில்லாதது, நாசமில்லாதது.

1.28. எல்லாப் பிராணிகளுடைய இருதயத்திலும், வீற்றிருக்கும் ஈசுவரனாகப் பிரணவத்தை அறியவேண்டும். ஞானியானவன் எங்கும் வியாபித்த பிரணவத்தை அறிந்தபின் துக்கப்படுவதில்லை.

1.29. மாத்திரைகளுக்கப்பாற்பட்டதாயும் அளவுக்கு அடங்காததாயும் துவைதமற்றதாயும் மங்களஸ்வரூபமாயும் இருக்கும் பிரணவம் 'எவனால் அறியப்பட்டதோ அவனே முனிவன், மற்ற எம்மனிதனும் அன்று.

## २. वैतथ्य-प्रकरणम्

वैतथ्यं सर्व-भावानां स्वप्न आहु-र्मनीषिणः ।
अन्तः स्थानात्तु भावानां संवृतत्वेन हेतुना ॥ २.१ ॥

अदीर्घत्वाच्च कालस्य गत्वा देशान्न पश्यति ।
प्रति-बुद्धश्च वै सर्व-स्तस्मिन् देशे न विद्यते ॥ २.२ ॥

अभावश्च रथादीनां श्रूयते न्याय-पूर्वकम् ।
वैतथ्यं तेन वै प्राप्तं स्वप्न आहुः प्रकाशितम् ॥ २.३ ॥

स्वप्न-जागरिते स्थाने ह्येकमाहु-र्मनीषिणः ।
भेदानां हि समत्वेन प्रसिद्धेनैव हेतुना ॥ २.५ ॥

---

## 2. வைதத்யப்ரகரணம்

2.1. கனவில் காணப்படும் கற்பனைகள் (தேர், குதிரை முதலியவை சரீரத்திற்குள் இல்லாவிடினும்) உள்ளே இடம் பெற்றமையாலும், மறைந்துள்ள காரணத்தாலும், கற்பனைகள் எல்லாம் பொய்யானவை என்று அறிவாளிகள் கூறுகிறார்கள். (சரீரத்திற்குள் தேருங் குதிரையும் ஏது?)

2.2. (ஸ்வப்னத்தில்) குறுகிய காலத்தில் நெடுந்தூரத்தி லுள்ளவற்றைச் சென்று பார்ப்பதாய்த் தோற்றுகிறது; அப்படிச் செல்லவில்லை. விழித்துக்கொண்ட பின்னும் எவனும் ஸ்வப்னத்தில் கண்ட அந்த இடத்தில் இருப்பதில்லை.

2.3. (ஸ்வப்னத்தில் காணும்) தேர் முதலியன பொய் என்பதைக் காரணத்துடன் சுருதி கூறுகிறது. சூக்ஷ்மமான நாடிகளில் அடையப்படும் தோற்றங்கள் பொய் என (சுருதியால்) விளக்கப்பட்டிருப்பதை (அறிவாளிகள்) கூறுகிறார்கள்.

2.5. (விஷயங்களை இந்திரியங்கள் நுகர்கின்றன என்ற) முக்கியமான காரணத்தால், ஸ்வப்னத்திலும் ஜாக்கிரத்திலும் காணப்படும் வேறுபட்ட தோற்றங்கள் சமமாயிருப்பதால் அறிவாளிகள் அவற்றை ஒன்றாகவே சொல்லுகிறார்கள்.

आदावन्ते च यन्नास्ति वर्तमानेऽपि तत्तथा ।
वितथैः सदृशाः सन्तोऽवितथा इव लक्षिताः ॥ २.६ ॥

सप्रयोजनता तेषां स्वप्ने विप्रतिपद्यते ।
तस्मा-दाद्यन्तवत्वेन मिथ्यैव खलु ते स्मृताः ॥ २.७ ॥

उभयोरपि वैतथ्यं भेदानां स्थानयो-र्यदि ।
क एतान् बुध्यते भेदान् को वै तेषां विकल्पकः ॥ २.११ ॥

कल्पय-त्यात्मना ऽऽत्मान-मात्मा देवः स्वमायया ।
स एव बुध्यते भेदानिति वेदान्त-निश्चयः ॥ २.१२ ॥

---

2.6. எது ஆதியிலும் முடிவிலும் இல்லையோ அது நடுவிலும் அப்படியே (இல்லைதான்). இன்மையால் சமானமாயிருப்பினும் (ஜாக்கிரத்தில் காண்பவை) உண்மைபோல் தோற்றுகின்றன.

2.7. (ஜாக்கிரத்தில் காணும்) அவை பயன்படுவது ஸ்வப்னத்தில் இல்லை. ஆகையால் (அவை எப்போதும் பயன்படுவன அல்ல). ஆதியும் அந்தமும் உள்ள அவை பொய்யெனவே கருதப்படுகின்றன.

2.11. இரண்டு நிலைகளிலுள்ள பொருள்களும் பொய்யாக இருந்தால், இப்பொருள்களை அறிபவன் யார், இவைகளைக் கற்பிப்பவன் யார் (என்று கேள்வி எழக்கூடும்).

2.12. ஸ்வயம்பிரகாசமான ஆத்மா தன்னுடைய மாயையால் தன்னைத் தானே கற்பிக்கிறான், அவனே சிருஷ்டி வேற்றுமைகளை அறிகிறான் என்பது தான் வேதாந்த நிச்சயம்.

---

2.7. ஒரு அரசனைக் கனவில் நரி கடித்தது. உதவிக்காகக் கூக்குரலிட்டும் ஒருவரும் வரவில்லை. தடியால் அடித்து ஓட்டினான். கடித்தவிடத்தில் வலி அதிகமாயிருந்தது. வைத்தியன் வீட்டுக்குச் சென்றான். வைத்தியன் கவனிக்கவில்லை. ஜாக்கிரத்தில் உள்ள எதுவும் ஸ்வப்னத்தில் அந்த அரசனுக்குப் பயன்படவில்லை.

विकरोत्यपरान् भावा-नन्तश्चित्ते व्यवस्थितान् ।
नियतांश्च बहिश्चित्त एवं कल्पयते प्रभुः ॥ २.१३ ॥
चित्तकाला हि येऽन्तस्तु द्वयकालाश्च ये बहिः ।
कल्पिता एव ते सर्वे विशेषो नान्य-हेतुकः ॥ २.१४ ॥
अव्यक्ता एव येऽन्तस्तु स्फुटा एव च ये बहिः ।
कल्पिता एव ते सर्वे विशेषस्त्विन्द्रियान्तरे ॥ २.१५ ॥
जीवं कल्पयते पूर्वं ततो भावान् पृथग्विधान् ।
बाह्या-नाध्यात्मिकांश्चैव यथाविद्य-स्तथा स्मृतिः ॥ २.१६ ॥
अनिश्चिता यथा रज्जु-रन्धकारे विकल्पिता ।
सर्पधारादिभि-र्भावै-स्तद्व-दात्मा विकल्पितः ॥ २.१७ ॥

---

2.13. சர்வவல்லமை வாய்ந்த ஆத்மா உள்நோக்குடையவனு யிருக்கையில் பாவனைகளைச் சிருஷ்டிப்பது போலவே வெளிநோக்குடையவனுயிருக்கையில் வெளியுள்ள பதார்த்தங்களையும் சிருஷ்டிக்கிருன்.

2.14. எவை சித்தத்தில் கற்பிக்கப்பட்ட காலத்தில் மட்டும் உள்ளே உள்ளனவோ, எவை இரு காலங்களிலும் வெளியே உள்ளனவோ, அவையெல்லாம் கற்பனைகளே. (வெளிக்காலம், கற்பனைக்காலம் என்ற) விசேஷமும் வேறு காரணமுடையதாயில்லை.

2.15. எவை வெளிப்படையாயில்லாமல் உள்ளே இருக்கின்றனவோ, எவை வெளிப்படையாக வெளியே இருக்கின்றனவோ அவை எல்லாம் கற்பனைகளே. வேற்றுமை இந்திரிய பேதத்தில் தான் இருக்கிறது.

2.16. (ஆத்மா) முதலில் ஜீவனைக் கற்பித்துப் பின் வெளியிலும் உள்ளும் உள்ள பலவிதமான பொருள்களைக் கற்பிக்கிருன். அறிவுக்குத் தகுந்த ஆசையும், ஆசைக்குத் தகுந்த அறிவும் மாறிமாறி வந்து கற்பனை பெருகுகிறது.

2.17. இருட்டில் நிச்சயபுத்தி ஏற்படாததால் எங்ஙனம் ஒரு பழுதையானது பாம்பு என்ருே கோடு என்ருே விகல்ப

निश्चितायां यथा रज्ज्वां विकल्पो विनिवर्तते ।
रज्जुरेवेति चाद्वैतं तद्व-दात्म-विनिश्चयः ॥ २.१८ ॥
प्राणादिभि-रनन्तैश्च भावै-रेतै-र्विकल्पितः ।
मायैषा तस्य देवस्य यथा संमोहितः स्वयम् ॥ २.१९ ॥
प्राण इति प्राणविदो भूतानीति च तद्विदः ।
गुणा इति गुणविद-स्तत्त्वानीति च तद्विदः ॥ २.२० ॥
पञ्चविंशक इत्येके षड्विंश इति चापरे ।
एकत्रिंशक इत्याहु-रनन्त इति चापरे ॥ २.२६ ॥
यं भावं दर्शये-द्यस्य तं भावं स तु पश्यति ।
तं चावति स भूत्वा-ऽसौ तद्ग्रहः समुपैति तम् ॥ २.२९ ॥

---

மாய்க் கருதப்படுமோ அங்ஙனமே ஆத்மா விகல்பமாய்க் கருதப் படுகிறது.

2.18. இது பழுதை என்ற நிச்சய புத்தி ஏற்படும்போது விகல்பம் எப்படி நீங்கி விடுமோ அப்படி இது ஆத்மா என்ற நிச்சயபுத்தி ஏற்படும்போது அத்வைதசித்தி ஏற்படும்.

2.19. பிராணன் முதலிய பல பாவனைகளால் ஆத்மா பல வாருய்க் கற்பிக்கப்படுகிறது. இந்த மாயை ஸ்வயம் பிரகாசனுன ஆத்மாவினுடையதே. தன் மாயையால் தானே மறைக்கப்படு கிருன்.

2.20. (உலகின் உற்பத்திக்குக் காரணம்) பிராணன் என்று பிராணனை அறிந்தவர்களும், பஞ்சபூதங்கள் என்று அவற்றை யறிந்தவர்களும், குணங்கள் என்று குணங்களை யறிந்தவர் களும் தத்துவங்கள் என்று தத்துவங்களை யறிந்தவர்களும் (கூறுகிருர்கள்).

2.26. தத்துவங்கள் இருபத்தைந்து என்று சிலரும், இருபத்தாறு என்று சிலரும், முப்பத்து ஒன்று என்று சிலரும், அநேகம் என்று பிறரும் கூறுகிருர்கள்.

2.29. (ஆசாரியர்) எக்கருத்தை எவனுக்குக் காண்பிக்

स्वप्न-माये यथा दृष्टे गन्धर्व-नगरं यथा ।
तथा विश्व-मिदं दृष्टं वेदान्तेषु विचक्षणैः ॥ २.३१ ॥

न निरोधो न चोत्पत्तिर्न बद्धो न च साधकः ।
न मुमुक्षुर्न वै मुक्त इत्येषा परमार्थता ॥ २.३२ ॥

वीत-राग-भय-क्रोधै-र्मुनिभि-र्वेदपारगैः ।
निर्विकल्पो ह्ययं दृष्टः प्रपंचोपशमो-ऽद्वयः ॥ २.३५ ॥

तस्मादेवं विदित्वैन-मद्वैते योजयेत् स्मृतिम् ।
अद्वैतं समनुप्राप्य जडव-ल्लोक-माचरेत् ॥ २.३६ ॥

---

கிறோ அக்கருத்தை அவன் பார்க்கிறான். அதுவே ஆத்மாவாயிருந்து அவனைக் காப்பாற்றுகிறது. அதுவே தத்துவம் என்ற அபிப்பிராயம் அவனிடம் நிலை பெறுகிறது.

2.31. எங்ஙனம் ஸ்வப்னமும் மாயையும் பார்க்கப்படுகின்றனவோ, எங்ஙனம் கந்தர்வநகரம் பார்க்கப்படுகிறதோ அவ்வாறே இவ்வுலகெல்லாம் வேதாந்த நிபுணர்களால் பார்க்கப்படுகிறது.

2.32. பிரளயமும் இல்லை, உற்பத்தியும் இல்லை; கட்டுப்பட்டவனும் இல்லை, ஸாதகனும் இல்லை, முமுக்ஷுவும் இல்லை; விடுபட்டவனும் இல்லை என்பதுதான் பரமார்த்த ஸத்தியம்.

2.35. பற்று, பயம், கோபம் இவைகளில்லாதவர்களும் வேதாந்தத்தை அறிந்தவர்களும் ஆகிய முனிவர்களால் நிர்விகல்பமாயும் துவைதப் பிரபஞ்சமற்றதாயும் அத்துவயமாயுமுள்ள ஆத்மா பார்க்கப்படுகிறது.

2.36. ஆகையால் இதை இவ்விதமாக அறிந்து அத்துவைதத்தில் நினைவை நிலைநிறுத்த வேண்டும். அத்துவைதத்தைச் செவ்வையாக அடைந்து ஜடனைப்போல் உலகில் சஞ்சரிக்க வேண்டும்.

निस्तुति-र्निर्नमस्कारो निस्स्वधाकार एव च ।
चलाचलनिकेतश्च यति-र्यादृच्छिको भवेत् ॥ २.३७ ॥

तत्त्व-माध्यात्मिकं दृष्ट्वा तत्त्वं दृष्ट्वा तु बाह्यतः ।
तत्त्वी-भूत-स्तदाराम-स्तत्त्वा-दप्रच्युतो भवेत् ॥ २.३८ ॥

## ३. अद्वैत-प्रकरणम्

अतो वक्ष्याम्यकार्पण्य-मजाति समतां गतम् ।
यथा न जायते किंचि-ज्जायमानं समन्ततः ॥ ३.२ ॥

आत्मा ह्याकाशव-ज्जीवै-र्घटाकाशै-रिवोदितः ।
घटादिवच्च संघातै-र्जातावेत-न्निदर्शनम् ॥ ३.३ ॥

2.37. (தேவதைகளுக்கு) ஸ்தோத்ர நமஸ்காரமோ, பிதிருக்களுக்கு) ஸ்வதாகாரமோ செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாதவனாயும் சலமான சரீரமே வீடாகவும் அசலமான ஆத்மாவே இருப்பிடமாகவும் கொண்டு தற்செயலாய்க் கிடைத்ததில் திருப்தி யடைந்தவனாகவும் யதியானவன் இருக்க வேண்டும்.

2.38. அந்தரங்கத்தில் ஆத்ம தத்துவத்தைப் பார்த்து, வெளியேயும் அதே தத்துவத்தைப் பார்த்துத் தத்துவாகாரமாகி அதிலேயே பரமானந்த முடையவனாய் அந்த ஆத்மதத்துவத்தினின்று ஒரு போதும் நழுவாமலிருக்க வேண்டும்.

## 3. அத்வைதப்ரகரணம்

3.2. உற்பத்தியற்றதாயும் எங்கும் சமமாய் வியாபித்துள்ளதாயும் குறைவற்றதாயும் உள்ளதைக் கூறுகிறேன். எங்கும் உண்டாயிருப்பதாய்த் தோன்றும் எதுவும் எங்ஙனம் உண்டாக வில்லையோ அதையுங் கூறுகிறேன்.

3.3. பரமாத்மா மஹாகாசத்தைப்போல் என்று கூறப்பட்டுள்ளது; சரீரங்கள் குடங்களைப்போலும், ஜீவர்கள் குடத்திலுள்ள ஆகாசத்தைப்போலும்: சிருஷ்டி விஷயத்தில் இதுவே தகுந்த திருஷ்டாந்தம்.

घटादिषु प्रलीनेषु घटाकाशादयो यथा ।
आकाशे संप्रलीयंते तद्वज्जीवा इहात्मनि ॥ ३.४ ॥

मरणे संभवे चैव गत्यागमनयोरपि ।
स्थितौ सर्वशरीरेषु आकाशेनाविलक्षण: ॥ ३.९ ॥

रसादयो हि ये कोशा व्याख्याता-स्तैत्तिरीयके ।
तेषा-मात्मा परो जीव: खं यथा संप्रकाशित: ॥ ३.११ ॥

द्वयो-र्द्वयो-र्मधुज्ञाने परं ब्रह्म प्रकाशितम् ।
पृथिव्या-मुदरे चैव यथा ऽऽकाश: प्रकाशित: ॥ ३.१२ ॥

---

3.4. குடங்கள் உடைந்தபோது குடங்களிலுள்ள ஆகாசம் மஹாகாசத்தில் கலந்து விடுவதுபோல் இந்தப் பரமாத்மாவில் ஜீவன் லயமடைகிறான்.

3.9. இறப்பிலும் பிறப்பிலும், போதலிலும் வருதலிலும் இருத்தலிலும், எல்லாச் சரீரங்களிலும், ஆத்மாவுக்கும் ஆகாசத்திற்கும் வித்தியாசமில்லை.

3.11. அன்னமயம் முதலான எக்கோசங்கள் தைத்திரீய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளனவோ அவைகட்குள்ளுறையும் ஜீவன் பரமாத்மாவே. ஆகாசம் எப்படியோ அப்படியென இது விளக்கப்பட்டது.

3.12. மதுப்பிராம்மணத்தில் இரண்டிரண்டு ஸ்தானங்களில் பரப்பிரம்மம் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. (அதிதெய்வமாகிய) பூமியிலும் (அத்தியாத்மமாகிய) சரீரத்திலும் எங்ஙனம் ஆகாசமோ அங்ஙனம் என்று விளக்கப்பட்டிருக்கிறது.

---

3.11. (பஞ்சாபி கோசா ஆத்மவந்தோऽந்தரதமேன) கோசங்கள் ஐந்தாயினும் அனைத்துள்ளும் உறையும் ஒன்றாலேயே அவை ஆத்மாவை உடையன. அந்த ஆத்மா 'ஸத்யம் ஜ்ஞானம் அனந்தம்' எனப்பட்டது. (தை. 2.)

3.12. (ப்ரஹ்மவித்யாக்யம் மது அம்ருதம், அம்ருதத்வம் மோதனஹேதுத்வாத், தத் விஜ்ஞாயதே யஸ்மின்னிதி மதுஜ்ஞானம் மதுப்ராஹ்

जीवात्मनो-रनन्यत्व-मभेदेन प्रशस्यते ।
नानात्वं निन्द्यते यच्च तदेवं हि समञ्जसम् ॥ ३.१३ ॥

मृल्लोह-विस्फुलिंगाद्यैः सृष्टिर्या चोदिता ऽन्यथा ।
उपायः सो ऽवताराय नास्ति भेदः कथंचन ॥ ३.१५ ॥

स्वसिद्धान्त-व्यवस्थासु द्वैतिनो निश्चिता दृढम् ।
परस्परं विरुध्यन्ते तैरयं न विरुध्यते ॥ ३.१७ ॥

---

**3.13.** ஜீவப்பிரம்ம ஒற்றுமையே அத்துவைதத்தால் போற்றப் படுகிறது; வேற்றுமை நிந்திக்கப்படுகிறது. இதுதான் யுக்திக்கும் பொருத்தமாயிருக்கிறது.

**3.15.** மண், இரும்பு, நெருப்புப்பொறி முதலிய உதாரணங்களாலும் வேறு வகைகளிலும் எந்த சிருஷ்டி சொல்லப்பட்டதோ அது பிரம்மத்தை நமது மனோநிலைக்குக் கொண்டுவர உபாயமேயன்றி அதில் சிறிதும் வேற்றுமை இல்லை.

**3.17.** துவைதிகள் தங்கள் சித்தாந்தங்களை நிலை நிறுத்துவதில் திடமான நிச்சயமுடையவர்கள்; அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதப்படுவார்கள். (அத்துவைதமாகிய) இது அவர்களுடன் விரோதப்படுவதில்லை.

---

மணம்) பிரம்மவித்தையாகிற தேன் அமிருதம், ஆனந்தத்தைத் தருவதால்; எங்கு அந்த மதுஞானம் கூறப்படுகிறதோ அது மதுப்பிராம்மணம் (சங்.)

அயமாத்மா ஸர்வேஷாம் பூதாநாம் மத்த்வஸ்யாத்மன: ஸர்வாணி பூதானி மது, யஶ்சாய-மஸ்மின்-னாத்மனி தேஜோமயோऽம்ருதமய: புருஷோ, யஶ்சாயமாத்மா தேஜோமயோऽம்ருதமய: புருஷோ அயமேவ ஸ யோऽய-மாத்மேத-மம்ருதமிதம், ப்ரஹ்மேதஂ ஸர்வம் ॥ (ப்ரு. 2.5.14.)

**3.13.** ஒ—உதரமந்தரங் குருதே அத தஸ்ய பயம் பவதி. (தை 2.7) ம்ருத்யோ: ஸ ம்ருத்யு-மாப்னோதி ய இஹ நானேவ பஶ்யதி. (கட 4.10.)

**3.15.** யதா ஸோம்யைகேன ம்ருத்பிண்டேன (சா. 6. 1. 4)
யதா ஸோம்யைகேன லோஹமணிநா (சா. 6. 1. 5)
யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்ப்புலிங்கா: (மு. 2. 1. 1)

अद्वैतं परमार्थो हि द्वैतं तद्भेद उच्यते ।
तेषा-मुभयथा द्वैतं तेनायं न विरुध्यते ॥ ३.१८ ॥
मायया भिद्यते ह्येत-न्नान्यथा-ऽजं कथंचन ।
तत्त्वतो भिद्यमाने हि मर्त्यता-ममृतं व्रजेत् ॥ ३.१९ ॥
नेह नानेति चाम्नाया-दिन्द्रो मायाभि-रित्यपि ।
अजायमानो बहुधा मायया जायते तु सः ॥ ३.२४ ॥
स एष नेति नेतीति व्याख्यातं निह्नुते यतः ।
सर्व-मग्राह्य-भावेन हेतुनाऽजं प्रकाशते ॥ ३.२६ ॥

---

3.18. அத்துவைதம் காரணமாகிய பாரமார்த்திக ஸத்தியம்; துவைதம் அதன் காரியமாகிய வியாவஹாரிக ஸத்தியம் என்று சொல்லப்படும். அவர்களுக்கு (துவைதிகளுக்கு) இரண்டிலும் துவைதம் என்ற நம்பிக்கை. அதனால் அத்துவைதமாகிய இது விரோதப்படுவதில்லை.

3.19. இரண்டற்ற ஆத்மா மாயையால் வேற்றுமையடைந்தாற்போல் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் ஒருபோதும் வேற்றுமை இல்லை. உண்மையில் வேறுபாடு ஏற்பட்டால் அழிவற்ற பொருள் அழிவுடையதாய்விடும்.

3.24. (நேஹ நாநா இதி) இந்த ஆத்மாவில் அநேகமில்லை என்றும், (இந்த்ரோ மாயாபி: இதி) ஈசுவரன் மாயையால் என்றும், (அஜாயமானோ பஹுதா ஜாயதே) பிறப்பில்லாதவன் மாயையால் பலவாய்ப் பிறக்கிறான் என்றும் சுருதி கூறுகிறது.

3.26. எதற்கும் பிடிபடாத காரணத்தால் ஆத்மாவை (நேதி, நேதி) இது அல்ல, இது அல்ல என்று அனைத்தையும் சுருதி தள்ளுகிறது. இதனால் பிறப்பையடையாத பிரம்மமே பிரகாசிக்கிறது.

---

3.24. நேஹ நானாஸ்தி கிஞ்சன (கட 4. 11). இந்த்ரோ மாயாபி: புரு ரூப ஈயதே (ப்ரு 2. 5. 19). அஜாயமானோ பஹுதா விஜாயதே (புருஷ ஸூக்தம்).

3.26. ஸ ஏஷ நேதி நேதீயாத்மா ஃக்ருஹ்யோ ந ஹி க்ருஹ்யதே— (ப்ரு. 4.4. 22.)

यथा स्वप्ने द्वयाभासं स्पन्दते मायया मनः ।
तथा जाग्रद्द्वयाभासं स्पन्दते मायया मनः ॥ ३.२९ ॥

अद्वयं च द्वयाभासं मनः स्वप्ने न संशयः ।
अद्वयं च द्वयाभासं तथा जाग्रन्न संशयः ॥ ३.३० ॥

मनोदृश्य-मिदं द्वैतं यत्किञ्चित् सचराचरम् ।
मनसो ह्यमनी-भावो द्वैतं नैवोपलभ्यते ॥ ३.३१ ॥

आत्म-सत्यानुबोधेन न संकल्पयते यदा ।
अमनस्तां तदा याति ग्राह्याभावे तदग्रहम् ॥ ३.३२ ॥

अकल्पक-मजं ज्ञानं ज्ञेयाभिन्नं प्रचक्षते ।
ब्रह्म ज्ञेय-मजं नित्य-मजेनाजं विबुध्यते ॥ ३.३३ ॥

3.29. மனது எப்படி ஸ்வப்னத்தில் மாயையால் இருவகையாய் மாறுகிறதோ அப்படியே ஜாக்கிரத்திலும் மனது மாயையால் (உணர்பவன் உணரப்படுவது என) இருவகையாய் மாறுகிறது.

3.30. இரண்டற்ற மனது ஸ்வப்னத்தில் இரண்டாய்க் காணப்படுகிறது ; இதில் சந்தேகமில்லை. அப்படியே ஜாக்கிரத்திலும் மனது ஒன்றுனாலும் இரண்டாய்க் காணப்படுகிறதென்பதில் சந்தேகமில்லை.

3.31. மனதால் காணப்படும் சராசரமாகிய துவைதப் பிரபஞ்சம் எது உண்டோ அந்த துவைதப் பிரபஞ்சம் மனதற்ற நிலையில் காணப்படுவதில்லை.

3.32. ஆத்மாவே ஸத்தியம் என்ற அறிவு விழிப்பினால், எப்போது மனது சங்கற்பிக்கவில்லையோ அப்போது உணரப்படும் வஸ்து இல்லாததால், உணரும் மனதும் இல்லாததாகிறது.

3.33. கற்பனையற்றதாயும் பிறப்பற்றதாயும் உள்ள சைதன்னியத்தை பிரம்மத்தினின்று வேறல்லாததாகக் கூறுகிறார்கள். பிரம்மம்தான் அறியத்தக்கது, பிறப்பில்லாதது, நித்தியமானது ; பிரம்மத்தாலேயே பிரம்மம் அறியப்படுகிறது.

निगृहीतस्य मनसो निर्विकल्पस्य धीमतः ।
प्रचारः स तु विज्ञेयः सुषुप्ते ऽन्यो न तत्समः ॥ ३.३४ ॥

लीयते हि सुषुप्ते तन्निगृहीतं न लीयते ।
तदेव निर्भयं ब्रह्म ज्ञानालोकं समन्ततः ॥ ३.३५ ॥

अज-मनिद्र-मस्वप्न-मनामक-मरूपकम् ।
सकृद्विभातं सर्वज्ञं नोपचारः कथंचन ॥ ३.३६ ॥

3.34. நன்ருய் அடக்கப்பட்டதாயும் சங்கற்பங்களற்றதாயும் உள்ள விவேகியினுடைய (பிரம்மத்தையே விஷயமாகக் கொண்ட) மனதின்போக்கு அறியத்தக்கது. இது ஸுஷுப்திக்கு வேறு பட்டது, அதற்கொப்பானதன்று.

3.35. ஸுஷுப்தியில் அது (மனது) லயமடைந்துவிடுகிறது. அடக்கப்பட்ட மனது லயமடைகிறதில்லே. அதுவே பயமற்ற ப்ராம்மீ ஸ்திதி, எங்கும் பரந்த ஞானஸ்வரூபம்.

3.36. பிறப்பற்றதாயும் நித்திரையற்றதாயும் ஸ்வப்னமற்ற தாயும் நாமரூபங்களற்றதாயும் ஸ்வயம்பிரகாசமாயும் எல்லாவற்றையும் அறிவதாயும் உள்ளதற்குச் செய்யவேண்டிய உபசாரம் எவ்வாற்ருலுமில்லே.

---

3.36. அதற்குச் செய்யவேண்டிய உபசாரம் எவ்வாற்ருலுமில்லே—

ஒ—ஆதவனுக்கவன் கிரணத்தங்கியைக்கொண்
டாலாத்தி சுழற்றலென்கோ,
சீதமதிக் கவனிலவி ைெழுகுசிலேப்
புனல்கொடுபசரிப்பதென்கோ,
போதியமைக் கடல்வேந்தை யவன்புனலான்
முழுக்காட்டு முறைமையென்கோ
நீ தருசொற்கவி கொடுனேப்பாடியுன
தருள் பெருமென்னீதியம்மே. (ஸௌந்தர்யலஹரீ)

सर्वाभिलापविगतः सर्वचिन्ता-समुत्थितः ।
सुप्रशान्तः सकृज्ज्योति : समाधि-रचलो ऽभयः ॥ ३.३७ ॥
अस्पर्श-योगो वै नाम दुर्दर्शः सर्वयोगिभिः ।
योगिनो बिभ्यति ह्यस्मा-दभये भय-दर्शिनः ॥ ३.३९ ॥
उपायेन निगृह्णीया-द्विक्षिप्तं काम-भोगयोः ।
सुप्रसन्नं लये चैव यथा कामो लयस्तथा ॥ ३.४२ ॥
दुःखं सर्व-मनुस्मृत्य कामभोगा-न्निवर्तयेत् ।
अजं सर्व-मनुस्मृत्य जातं नैव तु पश्यति ॥ ३.४३ ॥
लये संबोधये-च्चित्तं विक्षिप्तं शमयेत् पुनः ।
सकषायं विजानीयात् समप्राप्तं न चालयेत् ॥ ३.४४ ॥

3.37. அது பேச்சற்றது, சிந்தனைகளனைத்துக்கு மப்பாற்பட்டது, சாந்தமானது, ஸ்வயம் பிரகாசமானது, ஸமாதியால் அறியத்தகுந்தது, செயலற்றது, பயமற்றது.

3.39. இது (அஸ்பர்ஶயோகம்) பற்றின்மை எனும் யோகம்; சாதாரண யோகிகளால் அடைதற்குக் கடினமானது. பயமற்ற இதனிடத்தில் பயத்தைக்காணும் யோகிகள் இந்த யோகத்தினின்று பின் வாங்குகிறார்கள்.

3.42. காமத்திலும் போகத்திலும் சிதறிப்போன மனதை உபாயத்தால் அடக்கவேண்டும். காமம் எப்படியோ அப்படித்தான் நித்திரையும் (அனர்த்தத்திற்குக் காரணம்).

3.43 அனைத்துந் துன்பம் என்று நினைவில் வைத்துக் காம போகங்களிலிருந்து மனதைத் திருப்பவேண்டும். அனைத்தும் பிரம்மம் என்று நினைவில் வைத்தபின், உண்டாகிய துவைதப் பிரபஞ்சத்தைப் பார்ப்பதே இல்லை.

3.44. ஸுஷுப்தியில் லயமடைந்த மனதை எழுப்பிவிட வேண்டும். சிதறிப்போன மனதை மறுபடி சமாதானப்படுத்த வேண்டும். அழுக்கடைந்தால் அதை உணரவேண்டும். (இப்படி இடைவிடாமல் அப்பியசித்து சமாதி நிலைக்குக் கொண்டு போக

नास्वादयेत् सुखं तत्र निस्संगः प्रज्ञया भवेत् ।
निश्चलं निश्चरच्चित्त-मेकीकुर्यात् प्रयत्नतः ॥ ३.४५ ॥

यदा न लीयते चित्तं न च विक्षिप्यते पुनः ।
अनिङ्गन-मनाभासं निष्पन्नं ब्रह्म तत्तदा ॥ ३.४६ ॥

स्वस्थं शान्तं सनिर्वाण-मकथ्यं सुखमुत्तमम् ।
अज-मजेन ज्ञेयेन सर्वज्ञं परिचक्षते ॥ ३.४७ ॥

வேண்டும்). ஸமத்துவ நிலையை யடைந்த பின் மீண்டும் (விஷயத்தில்) நழுவவிடக் கூடாது.

3.45. (சமாதியில் அடையக்கூடிய) சுகத்தைக்கூட விரும்பக் கூடாது. அந்நிலையில் விவேகத்தால் பற்றில்லாதவனுயிருக்க வேண்டும். (அந்த சுகமும் பொய்யென்று அதினின்று மனதைத் திருப்ப வேண்டும்). நிச்சலமான மனது மீண்டும் விஷயங்களை நாடினுல் நல்ல முயற்சியால் ஆத்மாவிடம் ஒன்றுபடுத்த வேண்டும்.

3.46. மனது எப்போது ஸுஷுப்தியில் அழுந்திப்போக வில்லையோ, மீண்டும் (சிதறிப்போய்) விக்ஷேபத்தையுமடைய வில்லையோ, (காற்றில்லாத விடத்திலுள்ள தீபம் போல்) அசைவற்று நிற்கிறதோ வெளிப் பொருள்களைப் பிரதிபலிக்காமலிருக்கிறதோ அப்போது அது பிரம்ம ரூபமாகிறது.

3.47. உத்தமமான சுகத்தைத் தன்னிடத்திலேயே இருப்பதாயும், விருத்திகள் அற்றதாயும், நிர்வாணத்துடன் கூடியதாயும், சொல்ல முடியாததாயும், உற்பத்தி யில்லாததாயும், உற்பத்தியற்ற ஜ்ஞேய வஸ்துவுடன் ஒன்றுபட்டு நின்று எல்லாவற்றையும் அறிவதாயும் உள்ள பிரம்மமே என்று (ஞானிகள்) கூறுகிறுர்கள்.

न कश्चि-ज्जायते जीवः संभवो ऽस्य न विद्यते ।
एतत्तदुत्तमं सत्यं यत्र किंचिन्न जायते ॥ ३.४८ ॥

## ४. अलात-शान्ति-प्रकरणम्

अस्पर्श-योगो वै नाम सर्वसत्त्व-सुखो हितः ।
अविवादो ऽविरुद्धश्च देशितस्तं नमाम्यहम् ॥ ४.२ ॥

स्वतो वा परतो वापि न किञ्चि-द्वस्तु जायते ।
सदसत् सदसद्वापि न किञ्चि-द्वस्तु जायते ॥ ४.२२ ॥

हेतुर्न जायते-ऽनादेः फलं चापि स्वभावतः ।
आदिर्न विद्यते यस्य तस्य ह्यादिर्न विद्यते ॥ ४.२३ ॥

---

3.48. எந்த ஜீவனும் உண்டாவதுமில்லை; இவனுக்கு உண்டாகக் காரணமும் இல்லை; எதனிடத்தில் ஒன்றும் உண்டாவதில்லையோ அந்த பிரம்மம் உத்தமமான ஸத்தியம்.

## 4. அலாதசாந்திப்ரகரணம்

4.2. 'அஸ்பர்ச யோக' மெனப்படும் இது எல்லாப் பிராணிகளுக்கும் இன்பத்தையும் நன்மையும் பயப்பது என்பது பிரசித்தம். இது விவாதமில்லாதது, எதையும் விரோதிக்காதது இவ்வுபதேசத்தை நான் நமஸ்கரிக்கிறேன்.

4.22. எந்த வஸ்துவும் தன்னிடத்திலிருந்தோ பிறிதொரு இடத்திலிருந்தோ உண்டாவதில்லை. ஸத்தாயினும், அஸத்தாயினும், ஸதஸத்தாயினும், எவ்வஸ்துவும் உண்டாவதில்லை.

4.23. அனாதிப் பொருளுக்குக் காரணம் இல்லை; இயற்கையில் பயனும் இல்லை.' எதற்குக் காரணமில்லையோ அதற்கு உற்பத்தியும் இல்லை.

चित्तं न संस्पृशत्यर्थं नार्थाभासं तथैव च ।
अभूतो हि यतश्चार्थो नार्थाभासस्ततः पृथक् ॥ ४.२६ ॥
सर्वे धर्मा मृषा स्वप्ने कायस्यान्त-र्निदर्शनात् ।
संवृते ऽस्मिन् प्रदेशे वै भूतानां दर्शनं कुतः ॥ ४.३३ ॥
न युक्तं दर्शनं गत्वा कालस्यानियमाद्गतौ ।
प्रतिबुद्धश्च वै सर्वस्तस्मिन् देशे न विद्यते ॥ ४.३४ ॥
मित्राद्यैः सह संमन्त्र्य संबुद्धो न प्रपद्यते ।
गृहीतं चापि यत्किंचित् प्रतिबुद्धो न पश्यति ॥ ४.३५ ॥
स्वप्ने चावस्तुकः कायः पृथगन्यस्य दर्शनात् ।
यथा कायस्तथा सर्वं चित्तदृश्य-मवस्तुकम् ॥ ४.३६ ॥

---

4.26. மனது விஷயங்களைத் தொடுகிறதில்லை. அப்படியே மனதிலேயே பிரதிபலிக்கும் விஷயக் கற்பனைகளையும் தொடுகிறதில்லை. ஏனெனில் விஷயமும் இல்லை, மனதிற்கு வேருக விஷயாபாஸமும் இல்லை.

4.33. ஸ்வப்னத்தில் எல்லாப் பொருள்களும் உடலுக்குள்ளே காணப்படுவதால் பொய்யே. அடைபட்ட இந்த இடத்துக்குள் பொருள்களின் காட்சி எப்படிக் கூடும்?

4.34. (ஸ்வப்னத்தில் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடம்) போவதில்லை. காலத்தின் கட்டுப்பாடு இல்லாததால் வேறிடத்தில் போய்ப் பொருள்களை ஒருவன் கனவில் காண்கிருன் என்பது யுத்திக்குப் பொருந்தாது. விழித்துக் கொண்டபின் கனவில் கண்ட அனைத்தும் அங்கேயும் இருப்பதும் இல்லை.

4.35. ஸ்வப்னத்தில் நண்பர் முதலியவர்களுடன் பேசிக் கொண்டிருந்து விழித்துக் கொண்டவன் (அங்கு கண்ட எவரையும்) காண்பதில்லை. ஸ்வப்னத்தில் கண்ட எப்பொருளையும் விழித்துக் கொண்டவன் காண்பதில்லை.

4.36. ஸ்வப்னத்தில் சரீரம் பொய்; அந்த ஸ்வப்ன சரீரத்திற்கு வேருக ஜாக்கிர சரீரம் காணப்படுதலால் எப்படி ஸ்வப்ன

ग्रहणा-ज्जागरितवत्तद्धेतुः स्वप्न उच्यते ।
तद्धेतुत्वात्तु तस्यैव सज्जागरित-मिष्यते ॥ ४.३७ ॥
जात्याभासं चलाभासं वस्त्वाभासं तथैव च ।
अजाचल-मवस्तुत्वं विज्ञानं शान्त-मद्वयम् ॥ ४.४५ ॥
ऋजु-वक्रादिकाभास-मलात-स्पन्दितं यथा ।
ग्रहण-ग्राहकाभासं विज्ञान-स्पन्दितं तथा ॥ ४.४७ ॥
अज-मनिद्र-मस्वप्नं प्रभातं भवति स्वयम् ।
सकृद्विभातो ह्येवैष धर्मो धातु-स्वभावतः ॥ ४.८१ ॥

---

சரீரமோ அப்படியே ஜாக்கிரத்திலும் மனதால் காணப்படும் அனைத்தும் பொய்யே.

4.37. ஜாக்கிரத்தில் போலவே ஸ்வப்னத்திலும் விஷயங்கள் கிரகிக்கப்படுங் காரணத்தால், ஜாக்கிரத்தால் ஸ்வப்னம் ஏற்படுகிறதென்று சொல்லப்படுகிறது. அக்காரணத்தால் (ஸ்வப்னத்தைக் காண்பவனுக்கே ஸ்வப்னம் உண்மையாயிருப்பது போல்) அவனுக்கே ஜாக்கிரமும் உண்மையாயிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. (மற்றவர்களுக்கு இல்லை. ஆகையால் ஜாக்கிரமும் பொய்யே).

4.45. ஆத்மாவுக்குப் பிறவியேற்படுதலும், சலனம் ஏற்படுதலும், உடல் முதலியன ஏற்படுதலும் (ஆபாஸம்) தோற்றமேயன்றி உண்மையல்ல; வாஸ்தவத்தில் அது பிறப்பற்றது, சலனமற்றது, வஸ்து சம்பந்தமற்றது, அது ஞானம், சாந்தம், அத்துவயம்.

4.47. எப்படிக் கொள்ளிக்கட்டையின் அசைவானது நேர், கோணல் முதலிய வடிவங்களைத் தோற்றுவிக்கிறதோ அப்படியே விஜ்ஞானத்தின் அசைவும் ஜ்ஞாதா, ஜ்ஞேயம் முதலிய வடிவங்களைத் தோற்றுவிக்கிறது.

4.81. (ஆத்மா) பிறப்பற்றது, நித்திரையற்றது, ஸ்வப்னமற்றது, தானாகவே பிரகாசிப்பது. இது மாறாத பிரகாசமுடையது, இயற்கையாகவே அனைத்தையும் தாங்குவது.

अस्ति नास्त्यस्ति नास्तीति नास्ति नास्तीति वा पुनः ।
चल-स्थिरोभयाभावै-रावृणोत्येव बालिशः ॥ ४.८३ ॥

प्राप्य सर्वज्ञतां कृत्स्नां ब्राह्मण्यं पदमद्वयम् ।
अनापन्नादि-मध्यान्तं किमतः पर-मीहते ॥ ४.८५ ॥

स-वस्तु सोपलम्भञ्च द्वयं लौकिक-मिष्यते ।
अवस्तु सोपलम्भञ्च शुद्धं लौकिक-मिष्यते ॥ ४.८७ ॥

अवस्त्वनुप लंभं च लोकोत्तर-मिति स्मृतम् ।
ज्ञानं ज्ञेयं च विज्ञेयं सदा बुद्धैः प्रकीर्तितम् ॥ ४.८८ ॥

4.83. ஆத்மா இருக்கிறதென்றும், இல்லையென்றும், இருக்கிறதோ இல்லையோ என்றும், இல்லவே இல்லையென்றும்—சலம், ஸ்திரம், உபயம், அபாவம் என்ற நான்கு வகைகளில்—அறிவிற் சிறியோர் ஆத்மாவைப் பற்றி விவாதம் செய்து ஆத்ம தத்துவத்தை மறைக்கிறார்கள்.

4.85. அனைத்தையும் அறியும் நிலையை யடைந்து, அத்துவயமாயும், அடிமுடி நடுவற்றதாயும் உள்ள பிரம்ம பதத்தை யடைந்தால் அதன் பின் இச்சிப்பதற் கென்ன இருக்கிறது?

4.87. ஸ்தூல வியவஹாரமுடையதாயும், தோற்றமுடையதாயும் இருக்கிற துவைத நிலை ஜாக்கிராவஸ்தை என்று சொல்லப்படும். ஸ்தூல வியவஹாரமில்லாமல் தோற்றம் மட்டும் உடைய சூக்ஷ்மமாகிய நிலை ஸ்வப்னம் என்று சொல்லப்படுகிறது.

4.88. ஸ்தூல சூக்ஷ்ம விஷயங்களில்லாமலும் தோற்றமில்லாமலும் உள்ள நிலை (உலகைத் தாண்டிய) ஸுஷுப்தி நிலை என்று பிரம்மஞானிகளால் சொல்லப்படுகிறது.

ज्ञाने च त्रिविधे ज्ञेये क्रमेण विदिते स्वयम् ।
सर्वज्ञता हि सर्वत्र भवतीह महाधियः ॥ ४.८९ ॥

आदिबुद्धाः प्रकृत्यैव सर्वे धर्माः सुनिश्चिताः ।
यस्यैवं भवति क्षान्तिः सोऽमृतत्वाय कल्पते ॥ ४.९२ ॥

आदिशान्ता ह्यनुत्पन्नाः प्रकृत्यैव सुनिर्वृताः ।
सर्वे धर्माः समा भिन्ना अजं साम्यं विशारदम् ॥ ४.९३ ॥

अजे साम्ये तु ये केचिद्भविष्यन्ति सुनिश्चिताः ।
ते हि लोके महाज्ञाना-स्तच्च लोको न गाहते ॥ ४.९५ ॥

4.89. மூன்று விதமான ஞானமும் ஞேயமும் ஒன்றன்பின் ஒன்றாக அறியப்பட்ட அளவில் இங்கேயே அந்தச் சிறந்த புத்திமானுக்குத் தானாகவே எல்லா விடத்திலும் எல்லாவற்றையும் அறியுந் திறமை உண்டாகிறது.

4.92. எல்லா ஜீவர்களும் இயற்கையாகவே நித்திய புத்தர்கள் என நிச்சயிக்கப்பட்டுள்ளனர். எவனுக்கு இவ்வண்ணம் சாந்தி ஏற்படுகிறதோ அவன் மோக்ஷத்திற்குரியவன்.

4.93. எல்லா ஜீவர்களும் இயற்கையாகவே நித்திய சாந்தர்கள், உற்பத்தியில்லாதவர்கள், நித்தியமுக்தர்கள், ஸமமானவர்கள், வேற்றுமையில்லாதவர்கள். ஆத்ம தத்துவம் பிறப்பற்றதாயும், ஸமமாயும், சுத்தமாயும் இருக்கிறது.

4.95. எந்தச் சிலர் பிறப்பற்றதாயும் ஸமமாயும் உள்ள ஆத்ம தத்துவத்தில் திடமான நிச்சய முடையவர்களோ அவர்கள் பிரபஞ்சத்தில் மஹா ஞானிகள். அவர்களுடைய மார்க்கத்தை உலகம் எட்டுகிறதில்லை.

---

4.95. ஒ. (அலோக-ஸாமான்ய-மசிந்த்ய-ஹேதுகம் த்விஷந்தி மந்தாஸ்-சரிதம் மஹாத்மனும்) உலக நடத்தை போலில்லாததும் காரணத்தை அறிய முடியாததுமான மஹான்களின் நடத்தையை அறிவிலிகள் வெறுக்கின்றனர். —காளிதாஸர்.

दुर्दर्श-मतिगंभीर-मजं साम्यं विशारदम् ।
बुद्ध्वा पद-मनानात्वं नमस्कुर्मो यथाबलम् ॥ ४.१०० ॥
इति गौडपादाचार्य-कृत-माण्डूक्योपनिषत्-
कारिकाः संपूर्णाः ॥ ओं तत्सत् ॥

---

4.100. காண்பதற்கரிதாயும், எளிதில் அறியக்கூடாத தாயும், பிறப்பற்றதாயும், சமமாயும், சுத்தமாயும் வேற்றுமை நீங்கியதாயும் உள்ள நிலையை எமது சக்திக்கு எட்டிய வகையில் அறிந்து நமஸ்கரிக்கிறோம்.

இங்ஙனம் மாண்டுக்கியோபநிஷத் காரிகை முற்றும்.

---

**உபநிஷத்தின் விஷயச் சுருக்கம்**:—ஜீவன் இந்திரிய விஷயங் களையும் இந்திரியங்களுக்கு எட்டாதவைகளையும் அறியுந் திறமையுடைய வன். அவனுக்கு ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளும் அவைகளையெல்லாங்கடந்த துரீயம் என்ற நிலையும் உண்டு. ஜாக்கிரத்தில் ஜீவன் இந்திரியங்களின் வழியாக வெளி விஷயங் களை அறிகிறான். ஸ்வப்னத்தில் விஷய வாசனைகளின் வடிவங்களை மன தால் அறிகிறான். ஸுஷுப்தியில் விஷயங்களும் இல்லை. விஷய வாசனைகளின் வடிவங்களுமில்லை; இங்ஙனமென்று விளக்கமுடியாத தாய் இருட்டறையிலுள்ள சிறு விளக்குப்போன்ற ஞானமும் ஆனந்தமுந் தான் இருக்கின்றன. துரீயத்தில் ஜீவன் தன் ஸ்வரூபத்தை அடை கிறான்.

உபாசனையை நாடுவோர்க்கு ஓங்காரம் ஒப்பயர்வற்ற பிரதீகம் என உபதேசிக்கப்படுகிறது. ஸ்தூலமான அகாரத்தை (அது குறிக்கும் ஜாக்கிரத்துடன்) ஸூக்ஷ்மமான உகாரத்திலும் (ஸ்வப்னத்திலும்), அதைக் காரணமான மகாரத்திலும் (ஸுஷுப்தியிலும்), அனைத்தையும் காரிய காரணாதீதமான துரீயத்தில் (பிரத்யகாத்மாவிடத்திலும்) ஒடுக்கித் தானேயாகிய இரண்டற்ற நிலையையடைகிறான்.

"ஆனாலுமிதன் பெருமை யெவர்க்கார் சொல்வார்?
அதுவானாலதுவாவர் அதுவே சொல்லும்."

—தாயுமானவர்

இங்ஙனம் மாண்டுக்கியோபநிஷத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ண தீபம் எனும் உரை முற்றும்.

# ॥ तैत्तिरीयोपनिषत् ॥

## ॥ प्रथमः प्रश्नः ॥ (शीक्षावल्ली)

हरि ओ (४) म्। शं नो मित्रः शं वरुणः। शं नो भवत्वर्यमा। शं न इन्द्रो बृहस्पतिः। शं नो विष्णु-रुरुक्रमः। नमो ब्रह्मणे। नमस्ते वायो। त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि। त्वमेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि। ऋतं वदिष्यामि। सत्यं वदिष्यामि। तन्मामवतु। तद्वक्तारमवतु। अवतु माम्। अवतु वक्तारम्॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥ १ ॥

# ॥ தைத்திரீயோபநிஷத் ॥

## ॥ ப்ரதம:ப்ரஶ்ன: ॥ (ஶீக்ஷாவல்லீ)

ஹரி: ஓம் ॥ ஶந்நோ மித்ர: ஶம் வருண: । ஶந்நோ பவத்-வர்யமா । ஶந்ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: । ஶந்நோ விஷ்ணு-ருருக்ரம: । நமோ ப்ரஹ்மணே । நமஸ்தே வாயோ । த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி । த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ் யாமி । ருதம் வதிஷ்யாமி । ஸத்யம் வதிஷ்யாமி । தன்மாமவது । தத்-வக்தார-மவது । அவது மாம் । அவது வக்தாரம் ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥ 1 ॥

# தைத்திரீயோபநிஷத்து

## முதல் பிரச்னம் (சீக்ஷாவல்லீ)

1. (பகலுக்கும் பிராணனுக்கும் அதிஷ்டான தேவதையான) மித்திரன் எங்களுக்கு மங்களகரனாகவும், (இரவுக்கும் அபானனுக்கும் அதிஷ்டான தேவதையான) வருணன் எங்களுக்கு மங்களகரனாகவும் (சூரியனுக்கும் கண்ணுக்கும் அதிஷ்

---

**உபநிஷத்தின் பெயரும் தொடர்பும் :**—வேதவியாஸரிடமிருந்து ருக்வேதத்தைப் பைலரும், யஜுர் வேதத்தை வைசம்பாயனரும், ஸாம வேதத்தை ஜைமினியும், அதர்வ வேதத்தை ஸுமந்துவும் பெற்றுக்

शीक्षां व्याख्यास्यामः। वर्णः स्वरः। मात्रा बलं। साम सन्तानः। इत्युक्तः शीक्षाध्यायः॥ २॥

*ஶீக்ஷாம் வ்யாக்க்யாஸ்யாம:* । *வர்ண:ஸ்வர:* । *மாத்ரா* **பலம்** । *ஸாம ஸந்தான:* । *இத்யுக்த: ஶீக்ஷாத்த்யாய:* ॥ 2 ॥

---

டான தேவதையான) அர்யமா எங்களுக்கு மங்களகரனாகவும் இருத்தல் வேண்டும். (பலத்துக்கு அதிஷ்டான தேவதையான) இந்திரனும் (வாக்குக்கும் புத்திக்கும் அதிஷ்டான தேவதையான) பிருஹஸ்பதியும் எங்களுக்கு மங்களகரர்களாக (இருத்தல் வேண்டும்). அனைத்தையும் அளவிடும் அடியுடைய விஷ்ணு எங்களுக்கு மங்களகரனாக (இருக்க வேண்டும்).

பிரம்மத்திற்கு நமஸ்காரம். வாயுவே! உன்னை வணங்குகிறேன். நீயே கண்கண்ட பிரம்மமாக இருக்கிறாய். உன்னையே கண்கண்ட பிரம்மமாகப் போற்றுகிறேன். (உன்னையே உலகில் காணும் அழகும் ஒழுங்குமாகிய உண்மை) ருதம் எனப் போற்றுகிறேன். (உன்னையே உலகின் அழகுக்கும் ஒழுங்குக்கும் இருப்புக்கும் ஆதாரமான உண்மை) ஸத்யம் எனப் போற்றுகிறேன்.

அது (அந்தப் பிரம்மம்) என்னைக் காப்பாற்றட்டும். அது ஆசாரியனைக் காப்பாற்றட்டும். (மீண்டும் அதுவே பிரார்த்தனை). என்னைக் காப்பாற்றட்டும்; ஆசாரியனைக் காப்பாற்றட்டும். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

2. சிக்ஷையை விளக்கிக் கூறுவோம். வர்ணம், ஸ்வரம் மாத்திரை, பலம், ஸாமம், ஸந்தானம் எனச் சீக்ஷாத்தியாயம் (பாகுபடுத்திக்) கூறப்படும்.

---

கொண்டதாகக் கூறுவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் சிஷ்யர்கள் பலர். அவர்கள் மூலம் பல சாகைகளாக வேத நெறி பெருகி வந்தது.

வைசம்பாயனர் மிதிலாபுரியிலிருந்து கொண்டு சிஷ்யர்களைப் பயிற்சி செய்து வருகையில் அவரிடம் சேர்ந்தவர்களுள் யாஜ்ஞவல்கியரும் ஒருவர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிஷ்யன் ஜனக மகாராஜனுக்குக் குருவினிடமிருந்து மந்திராக்ஷதை கொண்டுபோய்க் கொடுத்து வர வேண்டும் என்று ஏற்பாடாயிருந்தது. யாஜ்ஞவல்கியர் சென்ற ஒரு நாளன்று அரசன் சபையில் இல்லாதது கண்டு காத்திருக்காமல்

सह नौ यशः । सह नौ ब्रह्मवर्चसं । अथातःसꣳहिताया उपनिषदं व्याख्यास्यामः । पञ्चस्वधिकरणेषु ।

ஸஹ நௌ யஶ: । ஸஹ நௌ ப்ரஹ்ம வர்ச்சஸம் । அதாத: ஸꣳஹிதாயா உபநிஷதம் வ்யாக்க்யாஸ்யாம: । பஞ்சஸ்வதிகரணேஷு ।

---

3.1. (குருசிஷ்யர்களாகிய) எங்களை இருவரையுஞ் சேர்த்து (வித்தியாப்பியாஸத்தாலேற்படும்) கீர்த்தி (அடையட்டும்). எங்களை இருவரையுஞ் சேர்த்து பிரம்மதேஜஸ்ஸும் (அடையட்டும்).

இனிமேல் சந்தியைப்பற்றிய உபாஸனையை விளக்குவோம்—

---

அக்ஷதையைச் சிம்மாசனத்தில் மேல் வைத்துவிட்டு வந்துவிட்டார். அரசன் வருமுன் அக்ஷதை முளைத்துச் சிம்மாசனத்தின் மேல் விதானம்போல் வளர்ந்து பரவியிருந்தது. அரசன் இதைக் கண்டு வியந்து, நிகழ்ந்ததுணர்ந்து, அன்று அக்ஷதை கொண்டு வந்த சிஷ்யனை அழைத்துவரும்படி கூறினர். கல்வி கற்கும் சமயத்தில் அரசன் கூப்பிட்டதை மதிக்காமல் யாஜ்ஞவல்கியர் போக மறுத்துவிட்டார்.

இக்காரணத்தாலும், முன் இரண்டொரு முறை வேறு சிஷ்யர்களை யாஜ்ஞவல்கியர் வித்தியா கர்வத்தால் அவமதித்ததாய் வைசம்பாயனர் கருதியதாலும், அவர் தனக்குரிய சிஷ்யனல்லவென்று தீர்மானித்து "என்னிடம் கற்ற வேதத்தைக் கக்கிவிடு" என்றுர். உண்ட சோற்றைக் கக்குவதுபோல் உண்மையாகவே கக்கிவிட்டாரென்றும், குருவின் கட்டளையால் மற்ற சிஷ்யர்கள் அப்போது தித்திரிப்புரு வடிவங்கொண்டு யாஜ்ஞவல்கியர் கக்கியதை உட்கொண்டனர் என்றும், அதனுல் அந்த வித்தையை அறிந்தவர்களாயினர் என்றுங் கதை வழங்கிவருகிறது. தித்திரிப்புரு வடிவத்தில் சிஷ்யர்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தால் அன்றுமுதல் வேதத்தின் இப்பகுதி தைத்திரீய சாகை எனவும் கிருஷ்ண யஜுர்வேதம் எனவும் வழங்கலாயிற்று. யாஜ்ஞவல்கியர் இதன்பின் விவஸ்வானை (சூரியனை) குருவாயடைந்து அத்தியயனம் செய்தது வாஜஸனேயஸம்ஹிதை என வழங்கும் சுக்லயஜுர்வேதம்.

கிருஷ்ண யஜுர் வேதத்தில் தைத்திரீய ஆரணியகத்தின் ஏழு, எட்டு, ஒன்பதாவது பிரபாடகங்களாக அமைந்துள்ளது தைத்திரீயோபநிஷத்து. மற்ற உபநிஷத்துக்களைவிட அதிகமாக அத்தியயனம் செய்யப்பட்டும் உபாசிக்கப்பட்டும் கர்மானுஷ்டானங்களினிடையில் உபயோகிக்கப்பட்டும் வருவதால் இவ்வுபநிஷத்துக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. முதல் அத்தியாயமாகிய சீக்ஷாவல்லி, 'ஸாம்ஹிதீ' எனப்படும்.

अधिलोक-मधिज्यौतिष-मधिविद्य-मधिप्रजं-मध्यात्मम्। ता महासꣳहिता इत्याचक्षते। अथाधिलोकम्। पृथिवी पूर्वरूपम्। द्यौ-रुत्तररूपम्। आकाशः सन्धिः ॥ 3.1 ॥

அதிலோக-மதிஜ்யௌதிஷ-மதிவித்ய-மதிப்ரஜ - மத்யாத்மம் । தா-மஹாஸꣳஹிதா இத்யாசக்ஷதே । அதாதிலோகம் । ப்ருதிவீ பூர்வ ரூபம் । த்யௌருத்தர ரூபம் । ஆகாஶ:ஸந்த்தி: ॥ 3.1 ॥

---

**அதிலோகம், அதிஜ்யௌதிஷம், அதிவித்யம், அதிப்ரஜம், அத்யாத்மம் என்ற ஐந்து அத்தியாயங்களில். அவை 'மஹாஸம்ஹிதைகள்' எனப்படுவன. உலகத்தைப்பற்றி (கூறுமிடத்து)—பூமி முதல் (எழுத்து) வடிவம், வானம் பின் (எழுத்து) வடிவம், ஆகாயம் சந்திக்குமிடம்.**

---

இது பிரம்மசரிய ஆசிரமத்தின் முறைகளையும் கடமைகளையும் பெருமைகளையும் விரித்துக் கூறி, வேதத்தை அத்தியயனம் செய்யும் கிரமத்தையும், ஓங்கார உபாசனையின் ரஹஸ்யத்தையும், உலகில் வாழ்வாங்கு வாழ்ந்த மஹரிஷிகளின் வாழ்க்கை லக்ஷியங்களையுங் கூறுகிறது. பிரம்மானந்தவல்லி, பிருகுவல்லி எனப்படும் இரண்டாவது மூன்றாவது அத்தியாயங்களுக்கு ரிஷி வருணரானதால் இவை 'வாருணீ' எனப்படுவன. இவற்றில் சிருஷ்டிக்கிரமமும், பஞ்சகோசங்களின் அமைப்பும், படிப்படியாக உபாசனையால் ஒப்புயர்வற்ற பிரம்மபாவத்தை எய்துதலும், உதாரணத்தாலும் உபகதையாலும் விளக்கப்படுகின்றன.

1.1. வாயுவே! **உன்னை வணங்குகிறேன்** :—ஓ.—காற்றே வா. மெதுவாக வா. வலியிழந்தவற்றைத் தொலைப்படுத்தி வேடிக்கை பார்ப்பதிலே நீ மகா ஸமர்த்தன். நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை, நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உயிர், நொய்ந்த உள்ளம், இவற்றைக் காற்றுத்தேவன் புடைத்து நொறுக்கிவிடுவான். சொன்னாலுங் கேட்கமாட்டான். ஆதலால் மானிடரே வாருங்கள். வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம். கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம். உடலை உறுதிகொள்ளப் பழகுவோம். உயிரை வலிமையுற நிறுத்துவோம். உள்ளத்தை உறுதி செய்வோம். இங்ஙனம் செய்தால் காற்று நமக்குத் தோழனாகிவிடுவான். காற்று மெலிய தீயை அவித்துவிடுவான். வலிய தீயை வளர்ப்பான். அவன் தோழமை நன்று. அவனை நித்தமும் வாழ்த்துகின்றோம். (பாரதி)

வாயுவே ப்ரத்தியக்ஷமான ஸகுணப்பிரம்மம், ஹிரண்யகர்ப்பன் அல்லது ஸூத்ராத்மா. அவனுக்கு ஞானசக்தி, கிரியாசக்தி இரண்டும் உண்டு.

वायुः सन्धानं। इत्यधिलोकं। अथाधि-ज्यौतिषम्। अग्निः पूर्वरूपं। आदित्य उत्तररूपं। आपः सन्धिः। वैद्युतः सन्धानं। इत्यधि-ज्यौतिषं। अथाधि-विद्यम्। आचार्यः पूर्वरूपं ॥ ३.२ ॥

अन्तेवास्युत्तररूपं। विद्या सन्धिः। प्रवचनꣳसन्धानं। इत्यधिविद्यम्। अथाधिप्रजं। माता पूर्वरूपं। पितोत्तररूपं। प्रजा सन्धिः। प्रजननꣳसन्धानम्। इत्यधिप्रजम् ॥ ३.३ ॥

வாயு:ஸந்த்தானம்। இத்யதிலோகம்। அதாதிஜ்யௌதிஷம்। அக்னி:பூர்வரூபம்। ஆதித்ய உத்தரரூபம்। ஆப:ஸந்த்தி:। வைத்யுத:ஸந்த்தானம்। இத்யதிஜ்யௌதிஷம்। அதாதிவித்யம்। ஆசார்ய:பூர்வரூபம் ॥ 3.2 ॥

அந்தேவாஸ்-யுத்தரரூபம்। வித்யா ஸந்த்தி: ॥ ப்ரவசநꣳ ஸந்த்தானம்। இத்யதிவித்யம்। அதாதிப்ரஜம்। மாதா பூர்வரூபம்। பிதோத்தரரூபம்। ப்ரஜா ஸந்த்தி:। ப்ரஜனனꣳஸந்த்தானம்। இத்யதிப்ரஜம் ॥ 3.3 ॥

---

3.2. வாயு சந்தியைச் செய்விப்பது; இங்ஙனம் அதிலோகம்.

ஜோதியைப்பற்றி (கூறுமிடத்து)—அக்கினிமுதல் (எழுத்து) வடிவம், ஆதித்தியன் பின் (எழுத்து) வடிவம், ஜலம் சந்திக்குமிடம், மின்னல் சந்தியைச் செய்விப்பது; இங்ஙனம் அதிஜ்யௌதிஷம்.

வித்தையைப்பற்றிக் (கூறுமிடத்து)—ஆசாரியன் முதல் (எழுத்து) வடிவம்;

3.3. சிஷ்யன் பின் (எழுத்து) வடிவம், வித்தை சந்திக்குமிடம்; உபதேசம் சந்தியைச் செய்விப்பது; இங்ஙனம் அதிவித்யம்.

---

**ஸம்ஹிதை**—எழுத்துக்கள் சேர்ந்து வார்த்தையுண்டாதல் ஸம்ஹிதை எனப்படுகிறது. எழுத்துக்களின் கூட்டத்தை ஒரு பிரதீகமாய்க் கொண்டு 'அதிலோகம்' முதலிய உபாஸனை கூறப்படுகிறது. உதாரண

अथाध्यात्मं। अधराहनुः पूर्वरूपं। उत्तराहनु-रुत्तररूपं। वाक् सन्धिः। जिह्वा सन्धानं। इत्यध्यात्मं। इतीमा महा सꣳहिताः। य एवमेता महा सꣳहिता व्याख्याता वेद। सन्धीयते प्रजया पशुभिः। ब्रह्मवर्चसेनान्नाद्येन सुवर्ग्येण लोकेन ॥ ३.४ ॥

அதாத்த்யாத்மம். அதராஹனு:பூர்வரூபம். உத்தராஹனு-ருத்தரரூபம். வாக்-ஸந்த்தி:. ஜிஹ்வா ஸந்த்தானம். இத்யத்த்யாத்மம். இதீமா மஹாஸꣳஹிதா:. ய ஏவமேதா மஹாஸꣳஹிதா வ்யாக்க்யாதா வேத. ஸந்த்தீயதே ப்ரஜயா பஶுபி:! ப்ரஹ்மவர்ச்சஸேநான்னாத்யேன ஸுவர்க்யேண லோகேன ॥ 3.4 ॥

---

பிரஜையைப்பற்றி (கூறுமிடத்து)—தாய் முதல் (எழுத்து) வடிவம், தகப்பன் பின் (எழுத்து) வடிவம், பிரஜை (குழந்தை) சந்திக்குமிடம், பிரஜனனம் சந்தியைச் செய்விப்பது; இங்ஙனம் அதிப்ரஜம்.

3.4. தன்னைப்பற்றிக் கூறுமிடத்து—கீழுதடு முதல் (எழுத்து) வடிவம், மேலுதடு பின் (எழுத்து) வடிவம், வாக்கு சந்திக்குமிடம்; நாக்கு சந்தியைச் செய்விப்பது; இங்ஙனம் அத்த்யாத்மம். இவ்வாருக மஹா ஸம்ஹிதைகள் (விளக்கிக்

---

மாகச் சிஷ்யன் ஒரு எழுத்துப் போன்றவன்; குரு மற்ருெரு எழுத்துப் போன்றவர்; அவர்களுடைய சேர்க்கையால் ஏற்படும் வித்தை வார்த்தையின் அர்த்தம் போன்றது. உபதேசம் இந்தக் கூட்டுறவை உண்டாக்கி வளர்ப்பது. இதேமாதிரி, கூட்டுறவுகள் அனைத்திலும் உபாஸனை செய்க. இப்பழக்கத்தால் ஸ்தூல வடிவங்களில் ஸூக்ஷ்மமான கருத்துக்களைக் காணும் திறன் மனதிற்கு ஏற்படும்.

3.4. ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு பொருளையும் அதிலோகம், அதிஜ்யௌதிஷம், அத்தியாத்மம் என்ற நிலையில் ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும், காரணமாகவும் ஆராய்ந்து பார்த்தால் படிப்படியாக உயர்ந்த தத்துவங்கள் விளங்கும். ஒவ்வொரு நிலையிலும் பரம் பொருளைத் தொட்டுப் பார்க்கலாம்.

ஒ. வானந்தம் மண்ணினந்தம் வைத்து வைத்துப் பார்க்கவெனக்
கானந்தந் தந்த வரசே பராபரமே (தாயுமானவர்).

ஒ. (த்ரீண்யக்ஷராணி ஸதீயமிதி) சா. 8.3.5.

यश्छन्दसामृषभो विश्वरूपः। छन्दोभ्योऽध्यमृतात् संबभूव। स मेन्द्रो मेधया स्पृणोतु। अमृतस्य देव धारणो भूयासम्। शरीरं मे विचर्षणं। जिह्वा मे मधुमत्तमा। कर्णाभ्यां भूरि विश्रुवं। ब्रह्मणः कोशोऽसि मेधया पिहितः। श्रुतं मे गोपाय। ॥ ४.१ ॥

யஶ்-ச்சந்தஸாம்-ருஷபோ விஶ்வரூப:। சந்தோப்யோ ऽத்த்யம்ருதாத்-ஸம்பபூவ। ஸமேந்த்ரோ மேதயா-ஸ்ப்ருணோது। அம்ருதஸ்ய தேவ தாரணோ பூயாஸம்। ஶரீரம் மே விசர்ஷணம்। ஜிஹ்வா மே மதுமத்தமா। கர்ணாப்யாம் பூரி விஶ்ருவம்। ப்ரஹ்மண: கோஶோஸி மேதயா பிஹித:। ஶ்ருதம் மே கோபாய ॥ 4.1 ॥

---

கூறப்பட்டன). எவன் இங்ஙனம் விவரிக்கப்பட்ட மஹாஸம்ஹிதைகளை (உபாஸனையால்) உணர்கின்றானோ (அவன்) மக்களுடனும், பசுக்களுடனும் பிரம்மதேஜசுடனும் அன்னத்துடனும் சுவர்க்க லோக போகங்களுடனும் கூடியவனாகிறான்.

4.1. (பசுக் கூட்டத்தின் நடுவில் ரிஷபம் போல்) வேத மந்திரங்களினிடை சிறந்து எங்கும் விளங்குவது எதுவோ, (அறிவாகிய கடலைக்கடைந்து பிரம்மா அடைந்த) அமிருதமாகிய வேதங்களினிடை விசேஷமாய் எழுந்தது எதுவோ அந்த (அனைத்தையும் அளிக்கும் ஓங்காரமாகிய) இந்திரன் என்னை புத்தியால் பலவானாகச் செய்யட்டும். தேவனே! (ஆன்ம ஞானமாகிய) அழியாச் செல்வத்தைத் தரிப்பவனாக நான் ஆக வேண்டும். உடல் (அதற்குத்) தகுதியுள்ளதாக இருக்க வேண்டும். என் நாக்குத் தேன் போன்று இனியதாகட்டும். காதுகளால்

---

4.1. **யஶ்ச்சந்தஸாம்**—இம்மந்திரத்தின் ஜபத்தால் புத்தி சக்தியும் ஞாபகசக்தியும் இந்திரியங்களின் சக்தியும் உடலின் வன்மையும் ஐசுவரியமும் வளரும். புத்தியில்லாதவனிடம் உடல் வன்மை அனர்த்தத்திற்கு இடமாகும். ஆகையால் புத்தியைப் பிரார்த்தித்த பின்னரே உடல்வன்மை வேண்டப்படுகிறது. இவ்விரண்டிற்குப்பின்னரே ஐசுவரியம் வேண்டப்படுகிறது.

ஒ. அமேதஸோஹி ஶ்ரீ-ரனர்த்தாயைவ ||

ஒ. மாண்டுக்கியோபநிஷத்தில் ஓங்கார விவரணம்.

आवहन्ती वितन्वाना। कुर्वाणा चीरमात्मनः। वासांसि मम गावश्च। अन्नपाने च सर्वदा। ततो मे श्रियमावह। लोमशां पशुभिः सह स्वाहा। आ मा यन्तु ब्रह्मचारिणः स्वाहा। वि मा यन्तु ब्रह्मचारिणः स्वाहा। प्र मा यन्तु ब्रह्मचारिणः स्वाहा। दमायन्तु ब्रह्मचारिणः स्वाहा। शमायन्तु ब्रह्मचारिणः स्वाहा॥ ४.२॥

ஆவஹந்தீ விதன்வாநா। குர்வாணா சீரமாத்மன:। வாஸாம்ஸி மம காவஶ்ச। அன்னபானே ச ஸர்வதா। ததோ மே ஶ்ரிய-மாவஹ। லோமஶாம் பஶுபி: ஸஹ ஸ்வாஹா। ஆமாயந்து ப்ரஹ்மசாரிண:ஸ்வாஹா। விமாயந்து ப்ரஹ்மசாரிண:ஸ்வாஹா। ப்ரமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா। தமாயந்து ப்ரஹ்ம-சாரிண: ஸ்வாஹா। ஶமாயந்து ப்ரஹ்மசாரிண: ஸ்வாஹா ॥4.2॥

---

(நான்) கேள்வி நிறைந்தவனாக வேண்டும். (உலக) அறிவில் ஒளிந்துள்ள (நீ உனக்குள் பிரம்மத்தை ஒளித்துக்கொண்டு) பிரம்மத்துக்குக் கோசம் (உறை) போல் இருக்கின்றாய். (பிரம்ம ஞானத்தைப்பற்றிய) என் கேள்வியையும் காத்தருள்வாய்.

**4.2.** அதன்பின் எனக்கு (ஸௌபாக்கிய) ஸ்ரீயை அருள்வாய்! எந்த சக்தி ஆடைகளையும் பசுக்களையும் உரோமம் மிக்க ஆடு முதலிய மிருகங்களையும் அன்னபானங்களையும் எப்போதும் எனக்கு அளிப்பாளோ, விரைவில் தந்து விரிவுபடுத்தியும் வைப்பாளோ (அந்த சக்தியை அருள்வாய்!). ஸ்வாஹா! (என்ற உச்சாரணத்துடன் இம்மந்திரத்தால் ஹோமம்). பிரம்மசாரிகள் என்னை நாடி வரவேண்டும் (எனப் பிரார்த்தித்து ஹோமம் செய்கின்றேன்). ஸ்வாஹா! பிரம்மசாரிகள் தடையின்றி வரவேண்டும். ஸ்வாஹா! பிரம்மசாரிகள் எல்லாத் திக்குகளிலிருந்தும் வரவேண்டும். ஸ்வாஹா! இந்திரியங்களை ஜயிக்கும் வன்மையுடைய பிரம்மசாரிகள் வரவேண்டும்! ஸ்வாஹா! சாந்தமான (மனதுடைய) பிரம்மசாரிகள் வரவேண்டும். ஸ்வாஹா!

यशो जनेऽसानि स्वाहा । श्रेयान् वस्यसोऽसानि स्वाहा । तं त्वा भग प्रविशानि स्वाहा । स मा भग प्रविश स्वाहा । तस्मिन् सहस्रशाखे । नि भगाहं त्वयि मृजे स्वाहा । यथाऽऽपः प्रवता यन्ति । यथा मासा अहर्जरम् । एवं मां ब्रह्मचारिणः । धातरायन्तु सर्वतः स्वाहा । प्रतिवेशोऽसि प्र मा भाहि प्र मा पद्यस्व ॥ ४.३ ॥

யஶோ ஜனே஽ஸானி ஸ்வாஹா । ஶ்ரேயான் வஸ்யஸோ஽ஸானி ஸ்வாஹா । தந்த்வா பக ப்ரவிஶானி ஸ்வாஹா । ஸமாபக ப்ரவிஶ ஸ்வாஹா । தஸ்மின் ஸஹஸ்ர ஶாகே । நி பகாஹம் த்வயி ம்ருஜே ஸ்வாஹா । யதா஽஽ப: ப்ரவதா஽஽யந்தி । யதா மாஸா அஹர்ஜரம் । ஏவம் மாம் ப்ரஹ்மசாரிண: । தாதரா-யந்து ஸர்வத: ஸ்வாஹா । ப்ரதிவேஶோ஽ஸி ப்ரமா பாஹி ப்ரமா பத்யஸ்வ ॥ 4.3 ॥

---

4.3. ஜன ஸமூஹத்தில் (நான்) நற்கீர்த்தியுடையவனாக வேண்டும். ஸ்வாஹா! செல்வந்தர்களுள் சிரேஷ்டனாக வேண்டும். ஸ்வாஹா! (பகவானுடைய வாசகமான ஓங்காரமே!) ஐயனே! நான் உன்னிடம் புகுந்து நிற்க அருள்வாய். ஸ்வாஹா! ஐயனே! நீயும் என்னிடம் புகுந்து நிற்கவேண்டும். ஸ்வாஹா! ஐயனே! ஆயிரம் கிளைகளுடைய உன்னிடத்தில் நான் என்னை நீராட்டுகின்றேன் (என் மலங்களைப் போக்குகின்றேன்). ஸ்வாஹா! எவ்வாறு ஆழமான இடத்தை நோக்கி ஓடைகள் ஓடுகின்றனவோ, எங்ஙனம் மாதங்கள் சேர்ந்து வருஷத்தைப் பூர்த்தி செய்கின்றனவோ, அவ்வாறே அனைத்தையும் தாங்கும் ஐயனே! எல்லாத் திக்குகளிலிருந்தும் பிரம்மசாரிகள் என்னிடம் வந்து சேரவேண்டும். (அதனால் என் வாழ்க்கை பூர்த்தியடைய வேண்டும்). ஸ்வாஹா! அனைத்துக்கும் சார்விடம் நீயே. (உன்னைச்சாரும்) என்னை ஒளிவீசச் செய்து உன்மயமாக்கிக் கொள்வாய்.

---

4.3. மாதத்தாலேயே வருஷம் பூர்த்தியாவதுபோல் நல்ல சிஷ்யர்களால் என் வாழ்க்கை பூர்த்தியாகவேண்டும். மாதம் வருஷத்துள்

भूर्भुवः सुवरिति वा एतास्तिस्रो व्याहृतयः। तासामुहस्मै तां चतुर्थीं। माहाचमस्यः प्रवेदयते। मह इति। तद्ब्रह्म। स आत्मा। अङ्गान्यन्या देवताः। भूरिति वा अयं लोकः। भुव इत्यंतरिक्षम्। सुवरित्यसौ लोकः॥ ५.१॥

**பூர்ப்புவ:** ஸுவரிதி வா ஏதாஸ்-திஸ்ரோ வ்யாஹ்ருதய:। தாஸா-முஹஸ்மை தாஞ் சதுர்த்தீம்। மாஹாசமஸ்ய: ப்ரவேதயதே। மஹ இதி। தத்ப்ரஹ்ம। ஸ ஆத்மா। அங்கான்யன்யா தேவதா:। பூரிதிவா அயம் லோக:। புவ இத்யந்தரிக்ஷம்। ஸுவ-ரித்யஸௌ லோக: ॥ 5.1 ॥

---

5.1. பூ:, புவ:, ஸுவ: என்ற மூன்று வ்யாஹ்ருதிகள் பிரசித்தம். அவற்றுடன் மஹ: என்றதை நான்காவதாக மாஹா சமஸ்யர் (என்ற ரிஷி) கண்டுணர்த்தியவர். அது பிரம்மம். அது (பிரம்மத்தின்) உடல். மற்ற தேவதைகள் அங்கங்கள். இந்த உலகம் பூ:, அந்தரிக்ஷம் புவ:, அந்த (ஸ்வர்க்க) உலகம் ஸுவ:.

---

ளடங்கி வருஷத்தை விட்டு விலகாதிருப்பது போல் சிஷ்யர்கள் என்னை விட்டு விலகாதிருக்கவேண்டும்.—வித்யாரண்யர்.

நல்ல பிரம்மசாரிகளின் கூட்டுறவால் நல்ல காரியங்களில் முயற்சி ஏற்படும், அதனுல் பாவந் தேய்ந்தொழியும். அதன் பயனுக ஞானம் உற்பத்தியாகும்.

ஒ. ஜ்ஞான-முத்பத்யதே பும்ஸாம் க்ஷயாத் பாபஸ்ய கர்மண:।

**ஸ்வாஹா**—(ஸுஷ்டு ஆஹூயெதே அனயா இதி வ்யுத்பத்தி:). இந்த மந்திரத்தால் ஆஹுதி நன்ருய்ச் செய்யப்பட்டதாகிறது.

**5.1.** சரீரத்திலுள்ள அவயவங்களை விடச் சேதனை ஆத்மா எவ் விதம் மேலானவனே அவ்வாறே மற்றெல்லா வியாஹிருதிகளை விட நான் காவதான 'மஹ:' என்ற வியாஹிருதி மேலானதாகக் கொள்ளப்படு கின்றது.

महृ इत्यादित्यः। आदित्येन वाव सर्वे लोका महीयन्ते। भूरिति वा अग्निः। भुव इति वायुः। सुवरित्यादित्यः। महृ इति चन्द्रमाः। चन्द्रमसा वाव सर्वाणि ज्योतींषि महीयन्ते। भूरिति वा ऋचः। भुव इति सामानि। सुवरिति यजूंषि ॥५.२॥

மஹ இத்யாதித்ய:। ஆதித்யேன வாவ ஸர்வே லோகா மஹீயந்தே। பூரிதிவா அக்னி:। புவ இதி வாயு:। ஸுவரித்யாதித்ய:। மஹ இதி சந்த்ரமா:। சந்த்ரமஸா வாவ ஸர்வாணி ஜ்யோதீம்ஷி மஹீயந்தே। பூரிதிவா ருச:। புவ இதி ஸாமானி। ஸுவரிதி யஜும்ஷி ॥ 5.2 ॥

---

5.2. சூரியன் மஹ:,—சூரியனலன்றோ எல்லா உலகங்களும் மகிமையடைகின்றன. அக்னி பூ:, வாயு புவ:, ஆதித்யன் ஸுவ: சந்திரன் மஹ:,—சந்திரனலன்றோ எல்லா ஜோதிகளும் மகிமையடைகின்றன. ரிக்வேதம் பூ:, ஸாமவேதம் புவ:, யஜுர்வேதம் ஸுவ:.

---

**பூ:** என்ற வியாஹிருதியைப் பூலோகமாகவும், அக்கினியாகவும், ருக் வேதமாகவும் பிராணனாகவும் சிந்திக்கவேண்டியது.

**புவ:** என்ற வியாஹிருதியை அந்தரிக்ஷமாகவும், வாயுவாகவும், ஸாம வேதமாகவும் அபானனாகவும் சிந்திக்க வேண்டியது.

**ஸுவ:** என்ற வியாஹிருதியை ஸுவர் லோகமாகவும் சூரியனாகவும், யஜுர்வேதமாகவும், வியானனாகவும் சிந்திக்க வேண்டியது.

**மஹ:** என்ற வியாஹிருதியைச் சூரியனாகவும் சந்திரனாகவும் ஓங்காரமாகவும் அன்னமாகவும் சிந்திக்கவேண்டியது. இவ்வாறாக அதிலோகம், அதிஜ்யௌதிஷம் முதலிய நிலைகளில் வியாஹிருதி உபாஸனையும் அதன் மூலமாக ஓங்காரத்தின் ஸ்தூலமான உபாஸனையுங் கூறப்பட்டது.

मह इति ब्रह्म। ब्रह्मणा वाव सर्वे वेदा महीयन्ते। भूरिति वै प्राणः। भुव इत्यपानः। सुवरिति व्यानः। मह इत्यन्नम्। अन्नेन वाव सर्वे प्राणा महीयन्ते। ता वा एताश्चतस्र-श्चतुर्धा। चतस्र-श्चतस्रो व्याहृतयः। ता यो वेद। स वेद ब्रह्म। सर्वेऽस्मै देवा बलि-मावहन्ति ॥ ५.3 ॥

மஹ இதி ப்ரஹ்ம। ப்ரஹ்மணு வாவ ஸர்வே வேதா மஹீயந்தே। பூரிதிவை ப்ராண:। புவ இத்யபான:। ஸுவரிதி வ்யான:। மஹ இத்யன்னம்। அன்னேன வாவ ஸர்வே ப்ராணு மஹீயந்தே। தாவா ஏதாஸ்-சதஸ்ரஸ்-சதுர்த்தா। சதஸ்ரஸ்-சதஸ்ரோ வ்யாஹ்ருதய:। தா யோ வேத। ஸ வேத ப்ரஹ்ம। ஸர்வேऽஸ்மை தேவா பலி-மாவஹந்தி ॥ 5.3 ॥

---

5.3. ஓங்காரம் (பிரம்மம்) மஹ:,—ஓங்காரத்தாலன்றே எல்லா வேதங்களும் மகிமையடைகின்றன. பிராணன். பூ:, அபானன் புவ:, வியானன் ஸுவ:, அன்னம் மஹ:—அன்னத்தாலன்றே எல்லாப் பிராணன்களும் மகிமையடைகின்றன. இந்நான்கு (வியாஹிருதிகளே ஒவ்வொன்றும்) நாலு நாலாகப் (பிரித்துக் காட்டப்பட்டன). நான்கின் (தொகுதி நான்கு (சேர்ந்து) வியாஹிருதிகள் (ஆகின்றன). அவற்றை எவன் (உள்ளபடி உபாஸித்து) அறிகின்றானோ அவன் பிரம்மத்தை யறிகிறான். அவனுக்கு எல்லா தேவர்களும் காணிக்கைகளைக் கொண்டுவருகிறார்கள்.

---

புருஷனுடைய கலைகள் பதினாறும், நான்கு வியாஹ்ருதிகளிலும், ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம் என்ற நிலைகளிலும் நாலு நாலாகப் பிரித்து உபாசிக்கப்படவேண்டும். பதினாறுவது கலையில் ஜீவன் பிரம்மத்துடன் ஐக்கியமாகிறான்.

ஒ. (ஸயதேமா நத்ய:) ப்ரச்ன. 6.5. (கதா: கலா: பஞ்சதச ப்ரதிஷ்ட்டா) மு. 3.2.7.

स य एषोऽन्तर्हृदय आकाशः। तस्मिन्नयं पुरुषो मनोमयः। अमृतो हिरण्मयः। अन्तरेण तालुके। य एष स्तन इवावलंबते। सेन्द्रयोनिः। यत्रासौ केशान्तो विवर्तते। व्यपोह्य शीर्षकपाले। भूरित्यग्नौ प्रतितिष्ठति। भुव इति वायौ ॥ ६.१ ॥

ஸ ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ: । தஸ்மிந்நயம் புருஷோ மநோமய: । அம்ருதோ ஹிரண்மய: । அந்தரேண தாலுகே । ய ஏஷ-ஸ்தன இவாவலம்பதே । ஸேந்த்ர-யோனி: । யத்ராஸௌ கேஶாந்தோ விவர்த்ததே ऽ வ்யபோஹ்ய ஶீர்ஷ கபாலே । பூரித்-யக்னௌ ப்ரதிதிஷ்ட்டதி । புவ இதி வாயௌ ॥ 6.1 ॥

---

6.1. இருதயத்தினுள்ளே எந்த ஆகாசம் உண்டோ அதில் மனோமயனாகவும் அழிவில்லாதவனாகவும் பொன்போன்று பிரகாசிப்பவனாகவும் உள்ள புருஷன் (உறைகிறான்). தாடையின் மத்தியில் எது (உள் நாக்கு) முலைக்காம்புபோல் தொங்குகிறதோ அதுவும், எங்கு தலைமயிர்களின் வேர் பிரிகின்றதோ, (எங்கு) கபாலத்தைப் பிளந்துகொண்டு உச்சிவழி செல்லுகின்றதோ அதுவும் (இச்சரீரத்திலுறையும் இந்திரியங்களாகிற தேவதைகளுக்கு இந்திரன் போன்ற) புருஷன் செல்லும் (சுஷும்னா நாடியின்) மார்க்கம். (இந்த மார்க்கத்தில் சென்ற புருஷன்) 'பூ:' என்று கூறப்பட்ட (வ்யாஹ்ருதி வடிவான) அக்கினியில் சேருகிறான் ; பின் 'புவ:' என்ற வாயுவில் (சேருகிறான்).

---

6.1. இருதயகமலத்தின் நடுவில் உள்ள சிறு வெளி சிற்றம்பலம் (தஹராகாசம்) எனப்படும். எங்கும் நிறைந்துள்ள பரமாத்மா, ஜீவன் என்ற பெயருடன் அங்கே விசேஷமாய்ப் பிரகாசிக்கிறான். அவனை உபாசிப்பதற்கு அது சிறந்த இடம். அங்ஙனம் செய்யும் உபாசனை 'தஹரவித்தை' என்றும் 'சாண்டில்ய வித்தை' என்றும் வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளது.

ஒ. சா. 8.1 ; 3.14; மு. 1.2.7

இருதயகமலத்திலிருந்து பல நாடிகள் மேல்நோக்கிச் செல்லுகின்றன. அவற்றுள் முக்கியமானது ஸுஷும்னா நாடி. அது பிரம்ம மார்க்கம். அந்நாடி உள் நாக்குச் சமீபமாய்ச் செல்லுகிறது. உள் நாக்கு ஸ்தானத்திலிருந்து உச்சிக்குழி (பிரம்மரந்திரம்) வரை இந்நாடியைச்

सुवरित्यादित्ये । मह इति ब्रह्मणि । आप्नोति स्वाराज्यम् । आप्नोति मनसस्पतिम् । वाक्पतिश्चक्षुष्पतिः । श्रोत्रपतिर्विज्ञानपतिः । एतत्ततो भवति । आकाशशरीरं ब्रह्म । सत्यात्म प्राणारामं मन आनन्दम् । शान्ति-समृद्ध-ममृतम् । इति प्राचीनयोग्योपास्व ॥ ६.२ ॥

ஸுவ-ரித்யாதித்யே । மஹ இதி ப்ரஹ்மணி । ஆப்னோதி ஸ்வாராஜ்யம் । ஆப்னோதி மனஸஸ்பதிம் । வாக்பதிஶ்சக்ஷுஷ்பதி: । ஶ்ரோத்ரபதிர்-விஜ்ஞானபதி: । ஏதத் ததோபவதி । ஆகாஶ-ஶரீரம் ப்ரஹ்ம । ஸத்யாத்ம ப்ராணாராமம் மன-ஆனந்தம் । ஶாந்தி-ஸம்ருத்த-மம்ருதம் । இதி ப்ராசீனயோக்யோபாஸ்வ ॥ 6.2 ॥

---

6.2. 'ஸுவ:' என்ற ஆதித்தியனிடத்திலும், 'மஹ:' என்ற பிரம்மத்தினிடத்திலும் (சேருகிறான்). (அப்போது) சுயராஜ்யப் பதவியை அடைகிறான்; மனதிற்குப் பதியாயுள்ள பிரம்மத்தை அடைகிறான்; வாக்குக்குப் பதியாகவும் கண்ணுக்குப் பதியாகவும், காதுக்குப் பதியாகவும், அறிவுக்குப் பதியாகவும் (ஸர்வாத்மகனாய் இந்திரியங்களேது மில்லாதவனாயினும் எல்லோருடைய இந்திரியங்களின் மூலமாய் அனைத்தையும் உணர்பவனாகவும் ஆகிறான்.) இன்னும் அதற்குமேல் இதுவும் சித்திக்கிறது. அழிவில்லாததும், அபரிமிதமான சாந்தி நிறைந்ததும், மனதிற்கு ஆனந்தமளிப்

---

சோதித்து யோகம் பழகுவது மிகச்சிறந்த சாதனமாகக் கருதப்படும். இச்சாதனத்தில் ஆரம்பத்தில் நாக்கு நுனியால் உள்நாக்கைத் தொட்டுப் பழகுவதால் சில சித்திகள் ஏற்படும். இதை லம்பிகாயோகம் என்பர்.

6.2. இந்த உபாஸனத்திற்குமுன் இந்த தேகத்திலுள்ள இந்திரியங்களுக்கும் மனதுக்கும் மட்டும் அதிபதியாக இருந்த ஆத்மா இப்போது உபாஸனையின் பயனாக விராட் ஸ்வரூபத்தையடைந்து எல்லா தேகங்களிலுமிருக்கிற இந்திரியங்களுக்கும் மனதுக்கும் அதிபதியாகிறான். வியாஹ்-ருதி வித்தையில் குறிக்கப்பட்ட உலகங்களுக்கு அதிபதியாகிறான்.

மாஹாசமஸ்யர் என்ற குருவானவர் புராதனமாய் ஏற்பட்ட கரும யோகத்தால் சித்த சுத்தியடைந்து யோக்கியனான (ப்ராசீனயோக்கியன் என்ற) சிஷ்யனுக்கு இங்ஙனம் உபதேசித்தார்.

ஒ. (பி. சூ. 4.4.18)

पृथिव्यन्तरिक्षं द्यौ-र्दिशो ऽवान्तरदिशाः। अग्नि-र्वायु-रादित्य-श्चन्द्रमा नक्षत्राणि। आप ओषधयो वनस्पतय आकाश आत्मा। इत्यधिभूतम्। अथाध्यात्मम्। प्राणो व्यानोऽपान उदानः समानः। चक्षुः श्रोत्रं मनो वाक्त्वक्। चर्म माꣳसꣳ स्नावास्थि मज्जा। एतदधि विधाय ऋषिरवोचत्। पाङ्क्तं वा इदꣳ सर्वम्। पाङ्क्तेनैव पाङ्क्तꣳ स्पृणोतीति ॥ ७ ॥

ப்ருதிவ்-யந்தரிக்ஷந்-த்யௌர்-திஶோ-ऽவாந்தரதிஶா:। அக்னிர்-வாயு-ராதித்யஶ்-சந்த்ரமா-நக்ஷத்ராணி। ஆப ஓஷதயோ வனஸ்பதய ஆகாஶ ஆத்மா। இத்யதிபூதம்। அதாத்த்யாத்மம்। ப்ராணோ-வ்யானோऽபான உதான: ஸமான:। சக்ஷு: ஶ்ரோத்ரம் மனோ வாக் த்வக்। சர்ம மாꣳஸꣳ ஸ்நாவாஸ்த்தி மஜ்ஜா। ஏதததி விதாய ருஷி-ரவோசத்। பாங்க்தம் வா இதꣳ ஸர்வம்। பாங்க்தேனைவ பாங்க்தꣳ ஸ்ப்ருணோதீதி ॥ 7 ॥

---

பதும், பிராணனுக்கு அமைதி தருவதும், ஸத்தியத்தையே ஆத்மாவாகவும், ஆகாசத்தையே சரீரமாகவும் கொண்ட பிரம்மமாகவே ஆய்விடுகிறான். இங்ஙனம் உபாசிப்பாய், பிராசீனயோக்கியனே!

7. பூமி, அந்தரிக்ஷம், வானம், திசைகள், திசைமூலைகள், அக்கினி, வாயு, ஆதித்தியன், சந்திரன், நக்ஷத்திரங்கள்;— ஜலம், செடிகொடிகள், மரங்கள், ஆகாயம், ஆத்மா (விராட்);— இங்ஙனம் அதிபூதம் (பிரபஞ்சத்தைப்பற்றிய விஷய பஞ்சகம்). இனி அத்தியாத்மம் (தன்னைப்பற்றிய விஷய பஞ்சகம்). பிரா

---

**ஸ்வாராஜ்யம்—**

ஒ—(தஸ்மா-தேதம் ஸம்யகவேக்ஷ்ய லோபம் நிக்ருஹ்ய த்ருத்யாத்மனி ராஜ்யமிச்சேத்। ஏதத் ராஜ்யம் நான்ய-தஸ்தீஹ ராஜ்யம் ஆத்மைவ ராஜா விதிதோ யதாவத் ||) ஆகையால் இதை நன்கு கண்டறிந்து, லோபத்தை வென்று, திடச்சித்தத்துடன் ஆத்மாவிலேயே ராஜ்யத்தை விரும்புவாயாக. இதுவே ராஜ்யம், ஆத்மாவே ராஜா என்று உள்ளபடி அறிந்தவனுக்கு இங்கு வேறு ராஜ்யம் இல்லை. (ம. பா.)

7. நமது தேகத்திலும் நாம் காணும் உலகத்திலும் பலகூறுகள் ஐந்தைந்தாகத் தொகுக்கப்பட்டுக் காண்கின்றன. வெளியில் சப்தம் ஸ்பரிசம் முதலான ஐந்து விஷயங்கள் இருந்தால் அவற்றை அறிய

ओमिति ब्रह्म। ओमितीद॑ꣳसर्वम्। ओमित्येत-दनु-कृति ह स्म वा अप्योश्रावयेत्याश्रावयन्ति। ओमिति सामानि गायन्ति। ओꣳशोमिति शस्त्राणि श꣫ꣳसन्ति। ओमित्यध्वर्युः प्रतिगरं प्रतिगृणाति। ओमिति ब्रह्मा प्रसौति। ओमित्यग्निहोत्र-मनुजानाति। ओमिति ब्राह्मणः प्रवक्ष्यन्नाह ब्रह्मोपाप्नवा-नीति। ब्रह्मैवोपाप्नोति ॥ ८ ॥

ஓமிதி ப்ரஹ்ம। ஓமிதீதꣳ ஸர்வம்। ஓமித்யேத-தனுக்ருதி ஹஸ்ம வா அப்யோச்ராவயேத்-யாச்ராவயந்தி। ஓமிதி ஸாமானி காயந்தி। ஓꣳசோமிதி சஸ்த்ராணி சꣳஸந்தி। ஓமித்-யத்த்வர்யு: ப்ரதிகரம் ப்ரதிக்ருணாதி। ஓமிதி ப்ரஹ்மா ப்ரஸௌதி। ஓமித்-யக்னிஹோத்ர-மனுஜானாதி। ஓமிதி ப்ராஹ்மண: ப்ரவக்ஷ்யந் நாஹ ப்ரஹ்மோ பாப்னவானீதி। ப்ரஹ்மைவோ பாப்னோதி ॥ 8 ॥

---

ணன், வியானன், அபானன், உதானன், ஸமானன் ;—கண், காது, மனம், வாக்கு, மெய் ;—தோல், மாம்ஸம், தசை, எலும்பு, ஊன் ;—இங்ஙனம் பாகுபாடு செய்து, ரிஷி கூறியதாவது: இது எல்லாம் ஐந்தைந்தாகவே தொகுக்கப்பட்டிருக்கின்றது. அதி பூதத்திலுள்ள ஐங்கூறுகளால் (அத்தியாத்மத்திலுள்ள) ஐங் கூறுகள் பூர்த்தியடைகின்றன.

8. ஓங்காரமே பிரம்மம், ஓங்காரமே இது எல்லாம் என்று (தியானம் செய்ய வேண்டும்). ஓம் என்ற இதுவே 'ஆகட்டும்' ஏன்பதற்கும், 'ஓ! கேள்' என்று கூவிச்சொன்னால் 'கேட் கிறேன்' என்பதற்கும் அறிகுறியாக உள்ளது பிரசித்தம். ஓம் என்று தொடங்கியே ஸாமகானஞ் செய்கின்றனர். ஓம் சோம் என்று தொடங்கி (ருக்வேத) 'சஸ்த்ர' மந்திரங்களைச் சொல்லு

---

உடலில் ஐந்து இந்திரியங்கள் இருக்கின்றன. இவ்வாற்றால் அதிபூதமும் அத்தியாத்மமும் ஒன்றேயென வெவ்வேறு நிலையில் உபாஸிக்க வேண்டும்.

8. ஓங்கார உபாஸனை இங்கு கூறப்படுகிறது. இதை மாண்டூக்கியோபநிஷத்தில் விரிவாய்க் காண்க.

ஒ. கட. 1.2.15-17.

ஸ்தோத்ரமும் சஸ்த்ரமும்—(அப்ரகீத-மந்த்ர-ஸாத்த்யா ஸ்துதி: சஸ்த்ரம்। ப்ரகீத-மந்த்ர-ஸாத்த்யா ஸ்துதி: ஸ்தோத்ரம்।) மந்திரத்தி

ऋतं च स्वाध्याय-प्रवचने च। सत्यं च स्वाध्याय-प्रवचने च। तपश्च स्वाध्याय-प्रवचने च। दमश्च स्वाध्याय-प्रवचने च। शमश्च स्वाध्याय-प्रवचने च। अग्नयश्च स्वाध्याय-प्रवचने च। अग्निहोत्रं च स्वाध्याय-प्रवचने च। अतिथयश्च स्वाध्याय-प्रवचने च। मानुषं च स्वाध्याय-प्रवचने च। प्रजाच स्वाध्याय-प्रवचने च। प्रजनश्च स्वाध्याय-प्रवचने च। प्रजा-

ருதஞ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। ஸத்யஞ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। தபஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। தமஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। ஶமஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। அக்னயஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। அக்னிஹோத்ரஞ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। அதிதயஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। மானுஷஞ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச। ப்ரஜாச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச।

---

கிருர்கள். ஓம் என்றே அத்வர்யு 'ப்ரதிகரம்' எனும் மறுமொழியை (ஹோதாவுக்கு) தெரிவிக்கிருன். ஓம் என்றே பிரம்மா அனுமதியைத் தெரிவிக்கிருர். ஓம் என்றே அக்னிஹோத்திரத்திற்கு அனுமதி (அனுஜ்ஞை) கொடுக்கிருர். (பிரம்மத்தை) வேதத்தை அடையவேண்டும் என்று (வந்த சிஷ்யனுக்கு) அத்தியயனம் செய்விக்கத் தொடங்கும் பிராம்மணன் ஓம் என்றே கூறி (ஆரம்பிக்கிருர்). சிஷ்யனும் (அதனுல் பிரம்மத்தை) வேதத்தை உள்ளபடி அடையவே அடைகிருன்.

9. ருதத்துடன் (உலகில் காணும் அழகையும் ஒழுங்கையும் ஆண்டவனுடையதாய்ப் போற்றிக் காப்பதுடன்) ஸ்வாத்தியாயமும் பிரவசனமும் (கைவிடாமல் காக்கப்படவேண்டும்; (பர

---

னுல் பாடப் பெருத ஸ்துதி சஸ்த்ரம் எனப்படும். மந்திரத்தினுல் பாடப் பெற்றது ஸ்தோத்ரம். ஸ்தோத்திரத்துக்குப் பின்னரே சஸ்திரம் படிக்கப்படும் (ஸ்தோத்ர-மக்ரே-ஶஸ்த்ராத்.)

8. **ஸ்வாத்தியாயமும் பிரவசனமும்**—வேதம் ஓதுவதும் ஓதுவித்தலும். இதுவே பிரம்மயஜ்ஞம் எனப்படும். எந்த நிலையில் இருப்பினும் பிரம்ம நாட்டமுடையவன் தவருது இதைக் கைக்கொள்ளவேண்டும், இதுவே சிறந்த தவம் என்று இங்கு வற்புறுத்திக் கூறப்படுகிறது.

तिश्च स्वाध्याय-प्रवचने च । सत्यमिति सत्यवचा राथीतरः । तप इति तपोनित्यः पौरुशिष्टिः । स्वाध्याय-प्रवचने एवेति नाको मौद्गल्यः । तद्धि तपस्तद्धि तपः ॥ ९ ॥

अहं वृक्षस्य रेरिवा । कीर्तिः पृष्ठं गिरेरिव । ऊर्ध्वपवित्रो वाजिनीव-स्वमृतमस्मि । द्रविणꣳ सवर्चसम् । सुमेधा अमृतोक्षितः । इति त्रिशङ्को-र्वेदानुवचनम् ॥ 10 ॥

ப்ரஜனஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச । ப்ரஜாதிஶ்ச ஸ்வாத்த்யாய ப்ரவசனே ச । ஸத்யமிதி ஸத்யவசா ராதீதர: । தப இதி தபோநித்ய: பௌருஶிஷ்டி: । ஸ்வாத்த்யாய-ப்ரவசனே ஏவேதி நாகோ மௌத்கல்ய: । தத்தி தபஸ்-தத்தி தப: ॥ 9 ॥

அஹம் வ்ருக்ஷஸ்ய ரேரிவா । கீர்த்தி: ப்ருஷ்ட்டங் கிரேரிவ । ஊர்த்த்வ-பவித்ரோ வாஜினீவஸ்-வம்ருத-மஸ்மி ! த்ரவிணꣳ ஸவர்ச்சஸம் । ஸுமேதா அம்ருதோக்ஷித: । இதி த்ரிஶங்கோர்-வேதானுவசனம் ॥ 10 ॥

---

மார்த்த) ஸத்தியத்துடன் ஸ்வாத்தியாயமும் பிரவசனமும்; தவத்துடன்—இந்திரிய ஜயத்துடன்—சாந்தத்துடன்—அக்னிகளுடன்—அக்னி ஹோத்ரத்துடன்—அதிதிகளின் பூஜையுடன்—ஜனசமூகக்கடமைகளுடன்—மக்களைக் காப்பதுடன் — மக்களைப் பெறுவதுடன்—பௌத்ரர்களைப் பெற்றபின்னுங்கூட—ஸ்வாத்தியாயமும் பிரவசனமும் (கைவிடாமல் காக்கப்பட வேண்டும்.) ஸத்தியவாக்குடைய 'ராதீதரர்' ஸத்தியமே (முக்கியம்) என்றார். தவத்தில் நிலைபெற்ற 'பௌருசிஷ்டி' தவமே (முக்கியம்) என்றார். முத்கலரின் புத்திரரான நாகர் ஸ்வாத்தியாயமும் பிரவசனமுமே (முக்கியம்) என்றார். அதுவே தவம், அதுவே தவம்.

10. "நான் (உலகமாகிய) விருக்ஷத்தின் உயிர்நிலை; மலையின் சிகரம் போன்று விளங்குவது (என்) கீர்த்தி; பரம பாவன

---

10. த்ரிசங்கு மஹரிஷியானவர் பிரம்மானுபவத்தால் தான் பெற்ற பெரும் பேற்றை வாய்விட்டுக் கூறுகிறார். அவர் கூறியதை அனுஸந்தானம் செய்வது நமக்கும் ஆத்மப் பிராப்திக்குச் சாதனமாகும். அம்

वेद-मनूच्याचार्यो ऽन्तेवासिन-मनु शास्ति । सत्यं वद । धर्मं चर । स्वाध्यायान्मा प्रमदः । आचार्याय प्रियं धन-माहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः । सत्यान्न प्रमदितव्यम् । धर्मान्न प्रमदितव्यम् । कुशलान्न प्रमदितव्यम् । भूत्यै न प्रमदितव्यम् । स्वाध्याय-प्रवचनाभ्यां न प्रमदितव्यम् ॥ ११.१ ॥

வேதமனூச்-யாசார்யோ ऽந்தேவாஸின-மனுஶாஸ்தி । ஸத்யம் வத । தர்மஞ் சர ॥ ஸ்வாத்த்யாயான்-மா ப்ரமத: ॥ ஆசார்யாய ப்ரியந்-தன-மாஹ்ருத்ய ப்ரஜா-தந்தும் மா வ்யவச்சேத்ஸீ: । ஸத்யாந்-ந ப்ரமதிதவ்யம் । தர்மாந்-ந ப்ரமதிதவ்யம் । குஶலாந்-ந ப்ரமதிதவ்யம் । பூத்யை ந ப்ரமதிதவ்யம் । ஸ்வாத்த்யாய ப்ரவசநாப்ப்யாந்-ந ப்ரமதிதவ்யம் ॥ 11.1 ॥

---

மான பொருள் (நான்); சூரியனிடத்தில்போல் மங்களகரமான ஆத்ம தத்துவத்தின் நிலயமாக இருக்கின்றேன். பிரகாசம் பொருந்திய (ஞானம் என்) செல்வம்; நற்புத்தி குறைவுபடாத அமிருதம்''—என்ற இது த்ரிசங்கு ரிஷியின் (அனுபவத்தாலேற்பட்ட) அருள் வாக்கு.

11.1. வேதத்தைக் கற்பித்த குரு சிஷ்யனுக்கு (பின்வருமாறு) கட்டளையிடுகிறார்:—உண்மை பேசு; தரும வழியில் நட; ஸ்வாத்தியாயத்தினின்று நழுவிவிடாதே. குருவுக்குப் பிரியமான

---

முறையில் இம்மந்திரம் ஜபம் செய்தற்குரியது. அதனால் ஞானக் கண் தானே திறக்கும். ஒ. தை. 2.10.6 ஐ. 2.1.5.

**உலகமாகிய விருக்ஷம் :—**

ஒ. கட. 2.3.1.

மேலே வேருள்ளதும் கீழே கிளையுள்ளதுமான அசுவத்தமாக முடிவற்றதாய்த் தோன்றும் இந்த ஸம்ஸாரத்தை வர்ணிக்கிறார்கள். (கீ. 15.1)

**சூரியனிடத்தில் போல் :**—ஒ. (ஹிரண்மயேன பாத்ரேண) ஈச. 16.

11.1. **ஸந்ததியாகிற நூலை அறுத்துவிடாதே :**—ஜன சமூகத்திற்கு நாமும் நம்முடைய குலமும் செய்யவேண்டிய சேவை உண்டு. அதற்குரிய நல்ல பிரஜைகளை உண்டாக்கிக் காப்பாற்றிப் பயிற்சியளித்துக் கொடுக்க வேண்டியது நமது கடமை. அதைச் செய்யாவிட்டால் நாம் மனித சமூகத்திற்குப் பட்ட கடனைத் தீர்க்காதவர்களாவோம். ஆனால் நல்ல சிஷ்ய பரம்பரையைத் தயாரித்துத் தரக்கூடிய ஸாதுக்கள்

देव-पितृ-कार्याभ्यान्न प्रमदितव्यम्। मातृ-देवो भव। पितृ-देवो भव। आचार्य-देवो भव। अतिथि-देवो भव। यान्यनवद्यानि कर्माणि। तानि सेवितव्यानि। नो इतराणि। यान्यस्माकꣳ सुचरितानि। तानि त्वयोपास्यानि। नो इतराणि ॥ ११.२ ॥

தேவ-பித்ரு-கார்யாப்ப்யாந்-ந-ப்ரமதிதவ்யம். மாத்ரு-தேவோ பவ। பித்ரு-தேவோ பவ। ஆசார்ய-தேவோ பவ। அதிதி-தேவோ பவ। யான்-யனவத்யானி கர்மாணி। தானி ஸேவிதவ்யானி। நோ இதராணி। யான்-யஸ்மாகꣳ ஸு॒சரிதானி। தானி த்வயோபாஸ்யானி। நோ இதராணி ॥ 11.2 ॥

---

தக்ஷிணையைக் கொணர்ந்து கொடுத்து (அவரிடம் விடை பெற்றுக் கொண்டபின்) ஸந்ததியாகிற நூலை அறுத்து விடாமலிரு. ஸத்தியத்திலிருந்து மறந்தும் நழுவுதல் கூடாது; தர்மத்திலிருந்து மறந்தும் நழுவுதல் கூடாது; (ஆத்ம ஞானத்தை வளர்க்கும்) நன்முயற்சிகளினின்று மறந்தும் நழுவுதல் கூடாது; பெருமையுள்ளவற்றைப் போற்றுவதினின்று மறந்தும் நழுவுதல் கூடாது; ஸ்வாத்தியாயப் பிரவசனங்களினின்று மறந்தும் நழுவுதல் கூடாது.

11.2. தேவ பித்ருகாரியங்களினின்று மறந்தும் நழுவுதல் கூடாது. தாயைத் தெய்வமாய்க் கொண்டிரு. தகப்பனைத் தெய்வமாய்க்கொண்டிரு. குருவைத் தெய்வமாய்க் கொண்டிரு.

---

இந்தக் கட்டுப்பாட்டுக்கு விலக்காகக்கூடும் என்பது காணப்படுகின்றது. குரு பரம்பரையைக் கவனிக்கும்போது வசிஷ்டர்—சக்தி—பராசரர்—வியாசர்—சுகர் வரை புத்திர ஸந்ததியும், சுகருக்குப் பின் சிஷ்ய ஸந்ததியும் தொடர்ந்து வருவது காணப்படும்.
(ஓ. பி. சூ. 3.4.18.)

**உண்மை பேசு:**—எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (குறள்).

**தர்மவழியில் நட:**—ஓ. தர்மம் நித்யமானது, சுக துக்கம் அநித்யமானது; ஜீவன் நித்யமானவன், ஜீவனம் அநித்யமானது; ஆகையால் காமத்தாலும், பயத்தாலும், லோபத்தாலும், உயிரைக் காப்பதற்காகவுங் கூட தர்மத்தைக் கைவிடக்கூடாது. (ம. பா. ஸ்வர்க்கா. 5.63).

ये के चास्मच्छ्रेयाꣳसो ब्राह्मणाः। तेषां त्वयाऽऽसनेन प्रश्वसितव्यम्। श्रद्धया देयम्। अश्रद्धयादेयम्। श्रिया देयम्। ह्रिया देयम्। भिया देयम्। संविदा देयम्। अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्त-विचिकित्सा वा स्यात्॥ ११.३॥

யே கே சாஸ்மச்-ச்ரேயாꣳஸோ ப்ராஹ்மணா:। தேஷாம் த்வயாऽऽஸனேன ப்ரஶ்வஸிதவ்யம்। ஶ்ரத்தயா தேயம்। அஶ்ரத்தயாதேயம்। ஶ்ரியா தேயம்। ஹ்ரியா தேயம்। பியா தேயம்। ஸம்விதா தேயம்। அத யதிதே கர்ம-விசிகித்ஸா வா வ்ருத்த விசிகித்ஸா வா ஸ்யாத் ॥ 11.3 ॥

---

அதிதியைத் தெய்வமாய்க் கொண்டிரு. குற்றமற்ற கருமங்கள் எவையோ அவையே சேவிக்கத் தக்கன; மற்றவை அன்று. எங்களிடம் நன்னடத்தைகள் எவையோ அவையே உன்னால் பின்பற்றத் தக்கவை; மற்றவை அன்று.

11.3 எவர்கள் எங்களைக் காட்டிலும் சிரேஷ்டமான பிராம் மணர்களோ, அவர்கள் ஆசனத்தில் வீற்றிருக்க (அவர்கள் முன்

---

(தர்மஞ் சராமி ஸுஶ்ரோணி ந தர்ம-பலகாரணாத் । ஆகமா-னனதிக்ரம்ய ஸதாம் வ்ருத்த-மவேக்ஷ்ய ச || தர்ம ஏவ மன:க்ருஷ்ணே ! ஸ்வபாவாச்சைவ மே த்ருதம் । தர்மவாணிஜ்யகோ ஹீநோ ஜகன்யோ தர்மவாதினாம் ||) அழகிய இடை உடையவளே! தர்மத்தின் பயனைக் கருதி நான் தர்மத்தை யனுஷ்டிக்கவில்லை. ஆகமங்களையும் சாதுக்களின் ஆசாரத்தையும் பார்த்தும் இயற்கையாகவும் என் மனம் தர்மத்தில் நிற்கின்றது. தர்மத்தை வியாபாரமாய்க் கருதுபவன் தர்மவாதிகளில் கடையானவன். (ம. பா).

உ-ம். தேள் ஒன்று கங்கையில் மிதந்து சென்றது. ஒரு ஸந்நியாஸி அதை வெளியே எடுத்துவிட முயன்றார். அவரைக் கொட்டிவிட்டு மறுபடி நீரில் விழுந்தது. பல முறை இப்படி நிகழ்ந்தது. இதைக் கண்டவர்கள் 'அது கொட்டுவது வலிக்கவில்லையா? ஏன் அதை எடுக்கவேண்டும்?' என்றனர். 'உயிர் போகுந் தருவாயிலும் அது தன் ஸ்வபாவத்தை விடவில்லை. நான் மட்டும் அதன் கொட்டு வலிக்குப் பயந்து ஏன் என் ஸ்வதர்மமாகிய ஜீவகாருண்யத்தை விடவேண்டும்?' என்றார் ஸந்நியாஸி.

ஒ. ஞானத்தையும் பக்தியையும் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே சம்பாதித்துக்கொண்டு உலகில் பிரவேசிக்க வேண்டும். கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் பிரவேசிக்குமுன் பாதரக்ஷைகளை அணிந்துகொள்ள வேண்டும். (ரா. கி.)

11.3. அசிரத்தையுடன் கொடுக்கப்படாது:—ஒ. கீ. 17.28;

ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः । युक्ता आयुक्ताः । अलूक्षा धर्मकामाः स्युः । यथा ते तत्र वर्तेरन् । तथा तत्र वर्तेथाः । अथाभ्याख्यातेषु । ये तत्र ब्राह्मणाः संमर्शिनः । युक्ता आयुक्ताः ।

யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்ஶிந: । யுக்தா ஆயுக்தா: । அலூக்ஷா தர்மகாமா: ஸ்யு: । யதா தே தத்ர வர்த்தேரன் । ததா தத்ர வர்த்தேதா: । அதாப்ப்யாக்க்யாதேஷு । யே தத்ர ப்ராஹ்

னிலையில் அவர்கள் சொல்லுவதைக் கேட்கவேண்டுமேயொழிய) நீ (பேசக்கூடாது) மூச்சுவிடக்கூடாது. (கொடுப்பது) சிரத்தையுடன் கொடுக்கப்பட வேண்டும்; அசிரத்தையுடன் கொடுக்கப்படாது. செல்வப் பூர்த்தியை யனுசரித்து (தாராளமாகக்) கொடுக்கப்பட வேண்டும். (அதிகம் கொடுப்பதற்கில்லையே என்று) வெட்கத்துடன் கொடுக்கப்பட வேண்டும்; (கொடுக்கத் தக்க இடத்தில் கொடுக்காமலிருப்பது தவறு என்ற) பயத்துடன் கொடுக்கப்பட வேண்டும். நல்ல எண்ணத்துடன் கொடுக்கப்பட வேண்டும். செய்ய வேண்டிய காரியத்தில் சந்தேகமாவது, நடக்கவேண்டிய முறையில் சந்தேகமாவது உனக்கு உண்டானல்—

11.4. அங்கு தீர விசாரித்துணருந் திறமை வாய்ந்தவர்களும் (கருமங்களிலும் நடத்தையிலும்) முறைப்படி ஒழுகுபவர்

கீ. 17.20—22. கொடுப்பது என்பது தானம் மட்டும் அல்ல. எவ்வித உபகாரமும் இதில் அடங்கும்.

கர்ம-விசிகித்ஸா வா :—வாழ்க்கையில் சிக்கலான நிலையில் ஐயங்களைத் தீர்ப்பதற்குப் பிரமாணம் நல்லோர் வாழ்க்கையே. தருமப்பற்றுந் தயையுங் கொண்ட அந்தணர்களின் வாழ்க்கை முறையைப் பார்த்துச் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். கேட்டு அறிவது போதாது; அவர்கள் செய்வதைப்போல் செய்ய வேண்டும்.

ஒ. (தர்க்கோ ऽப்ரதிஷ்ட்ட: ஶ்ருதயோ விபின்னா நைகோ முனிர்யஸ்ய வச: ப்ரமாணம் । தர்மஸ்ய தத்வம் நிஹிதங் குஹாயாம் மஹாஜனோ யேன கத: ஸ பந்தா: ॥) தர்க்கம் நிலை கொள்ளாதது; சுருதிகள் வேறுபாடுடையன; பிரமாணமான வார்த்தை உடைய முனி ஒருவரன்று; தருமத்தின் தத்துவம் புத்தி குகையில் மறைந்துள்ளது. மஹாபுருஷர்கள் எவ்வழியில் சென்றார்களோ அதுவே வழி.

கீ. 3.21—22.

अलूक्षा धर्मकामाःस्युः। यथा ते तेषु वर्तेरन्। तथा तेषु वर्तेथाः। एष आदेशः। एष उपदेशः। एषा वेदोपनिषत्। एतदनुशासनम्। एव-मुपासितव्यम्। एवमु चैत-दुपास्यम् ॥ ११.४ ॥

மஞு: ஸம்மர்ஶினः । யுக்தா ஆயுக்தா: । அலூக்ஷா தர்மகாமா: ஸ்யு: । யதாதே தேஷு வர்த்தேரன் । ததா தேஷு வர்த்தேதா: । ஏஷ ஆதேஶ: । ஏஷ உபதேஶ: । ஏஷா வேதோபநிஷத் । ஏத-தனு ஶாஸனம் । ஏவ-முபாஸிதவ்யம் । ஏவ முசைத-துபாஸ்யம் ॥ 11.4 ॥

---

களும், பிறருடைய ஏவுதலுக் குட்படாதவர்களும், குரூரஸ்வ பாவம் இல்லாதவர்களும், (காமிகளாயில்லாமல்) தருமத்தில் திட மான பற்றுள்ளவர்களுமான எந்தப் பிராம்மணர்கள் உண்டோ, அவர்கள் எங்ஙனம் அவ்விஷயத்தில் நடப்பார்களோ அங்ஙனம் நீயும் நடக்கவேண்டும். அபக்கியாதி ஏற்பட்டவர்களிடம் (நடந்துகொள்ளும் விஷயத்தில்) அங்கும் நன்கு விசாரித்துண ருந் திறமை வாய்ந்தவர்களும், (கருமங்களிலும் நடத்தையிலும்) முறைப்படி ஒழுகுபவர்களும், பிறருடைய ஏவுதலுக்குட்படாத வர்களும், குரூரஸ்வபாவம் இல்லாதவர்களும், (காமிகளாயில்லா மல்) தர்மத்தில் திடமான பற்றுள்ளவர்களுமான எந்தப் பிராம்ம ணர்கள் உண்டோ, அவர்கள் எங்ஙனம் அவ்விஷயங்களில் நடந்துகொள்ளுகிறார்களோ, அங்ஙனமே நீயும் நடந்துகொள்ள வேண்டும். இதுவே கட்டளை, இதுவே உபதேசம், இதுவே வேத ரகசியம். இதுவே (ஈசுவர) ஆஜ்ஞை. இவ்வாறே செய்ய வேண்டியது. இவ்விதமே இது செய்யத் தக்கது.

---

ஒ. பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தழைந்து தொங்கும். நீ மேன்மையடைய விரும்பினால் பெரியோரிடம் பணிவா யிரு. (ரா. கி.)

ஒ.—(தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித:) தர்மம் கொல் லப்பட்டால் (கொன்றவனை) அது கொல்லும்; தர்மம் காக்கப்பட்டால் (காத்தவனைக்) காக்கும்.

ஆதேஶ:—சாஸ்திரத்தின் கட்டளை. சாஸ்திரம் குணக்கட்டினின்று விடுவிக்கும். ஸ்வபாவம் குணத்தைப் பின்பற்றி ஓடும்.

शं नो मित्रः शं वरुणः । शं नो भवत्वर्यमा । शं न इन्द्रो बृहस्पतिः । शं नो विष्णुरुरुक्रमः । नमो ब्रह्मणे । नमस्ते वायो । त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि । त्वामेव प्रत्यक्षं ब्रह्मावादिषम् । ऋतमवादिषम् । सत्यमवादिषम् । तन्मामावीत् । तद्वक्तारमावीत् । आवीन्माम् । आवीद्वक्तारम् ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥ १२ ॥ हरिः ओ(३)म् ॥

॥ इति तैत्तिरीयोपनिषदि प्रथमः प्रश्नः ॥

ஶந் நோ மித்ர: ஶம் வருண: । ஶந் நோ பவத்-வர்யமா । ஶந் ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: । ஶந் நோ விஷ்ணு-ருருக்ரம: । நமோ ப்ரஹ்மணே । நமஸ்தே வாயோ । த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி । த்வாமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாவாதிஷம் । ருதம வாதிஷம் । ஸத்யமவாதிஷம் । தன்-மா-மாவீத் । தத்-வக்தார-மாவீத் ॥ ஆவீன்மாம் । ஆவீத் வக்தாரம் ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥ 12 ॥ ஹரி: ஓம் ॥

॥ இதி தைத்திரீயோபநிஷதி ப்ரதம: ப்ரஶ்ன: ॥

---

12. மித்திரன் எங்களுக்கு மங்களகரனாகவும், வருணன் எங்களுக்கு மங்களகரனாகவும், அர்யமா எங்களுக்கு மங்களகரனாகவும், இருத்தல் வேண்டும். இந்திரனும் பிருஹஸ்பதியும் எங்களுக்கு மங்களகரர்களாக (இருத்தல் வேண்டும்). அனைத்தையும் அளவிடும் அடியுடைய விஷ்ணு எங்களுக்கு மங்களகரனாக (இருத்தல் வேண்டும்). பிரம்மத்திற்கு நமஸ்காரம். வாயுவே! உன்னை வணங்குகிறேன். நீயே கண்கண்ட பிரம்மமாயிருக்கிறாய். உன்னையே கண்கண்ட பிரம்மமாய்ப் போற்றினேன். ருதம் எனப் போற்றினேன். ஸத்தியம் எனப் போற்றினேன். அது என்னைக் காக்கவேண்டும். அது ஆசாரியனைக் காக்கவேண்டும். (மீண்டும் இதுவே பிரார்த்தனை). என்னைக் காக்கவேண்டும். ஆசாரியனைக் காக்கவேண்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் தைத்திரீயோபநிஷத்தில் முதல் பிரச்னம் முற்றும்.

## ॥ द्वितीयः प्रश्नः ॥

(आनन्दवल्ली)

हरिः ओ(४)म् ॥ सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ब्रह्मविदाप्नोति परम् । तदेषाऽभ्युक्ता । सत्यं ज्ञानमनन्तं ब्रह्म । यो वेद निहितं गुहायां परमे व्योमन् ।

## ॥ த்விதீய ப்ரஶ்ன: ॥

(ஆனந்த வல்லீ)

ஹரி: ஓம் ॥ ஸஹா நா-வவது । ஸஹ நௌ புனக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்விநா-வதீதமஸ்து மா வித்விஷா-வஹை ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

ஓம் ப்ரஹ்மவிதாப்னோதி பரம் । ததேஷாப்ப்யுக்தா । ஸத்யம்-ஜ்ஞான-மனந்தம் ப்ரஹ்ம । யோ வேத நிஹிதங் குஹாயாம் பரமே வ்யோமன் । ஸோऽஶ்னுதே ஸர்வான் காமான் ஸஹ । ப்ரஹ்

---

## இரண்டவது பிரச்னம்: ஆனந்தவல்லீ

ஓம். (குரு சிஷ்யர்களாகிய) எங்களை இருவரையுஞ்சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும். எங்களை இருவரையுஞ் சேர்த்துப் போஷிக்கட்டும். நாங்கள் இருவருஞ் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் கூர்மையுள்ளதாகவும் பிரகாசமுள்ளதாகவும் ஆக வேண்டும். (ஒரு போதும் நாங்கள் ஒருவரையொருவர்) துவேஷிக்காமலிருக்க வேண்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

1. பிரம்மத்தையறிந்தவன் பரம நிலை எய்துகிருன். இனிக் கூறப்படுவது அது (அதைப்பற்றி) :—பிரம்மம், ஸத்யம்-ஞானம்-அனந்தம். (இருதய) குகையில் பரமாகாசத்தில் இருக்கும் இதை

सो॑ऽश्नुते सर्वा॒न् कामा॑न् स॒ह । ब्रह्म॑णा विप॒श्चितेति॑ । तस्मा॒द्वा
ए॒तस्मा॑-दा॒त्मन॑ आका॒शः संभू॑तः । आ॒का॒शाद्वा॒युः । वा॒योर॒ग्निः ।

மணு விபஸ்சிதேதி । தஸ்மாத்வா ஏதஸ்மா-தாத்மன ஆகாஶ: ஸம்ப்பூத: । ஆகாஶாத் வாயு: । வாயோ-ரக்னி: । அக்னே-ராப: ।

---

எவன் அறிகிருனே அவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் பிரம்மத்துடன் கூடி எல்லா ஆசைகளையும் அனுபவிக்கிருன். அதே பிரம்மமாகிற இந்த ஆத்மாவிடமிருந்து ஆகாசம் உண்டாயிற்று ; ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்கினி, அக்கினியிலிருந்து ஜலம், ஜலத்திலிருந்து பிருதிவி, பிருதி

---

1. பரம்—பரமநிலை. இந்நிலை பிரம்மமாயிருத்தலேயாம். பிரம்மத்தை யறிந்தவன் பிரம்மமாகவே ஆய்விடுகிருன்.

ஒ. ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி । மு. 3.2.9.

குகை—தஹராகாசம் அல்லது சிற்றம்பலம். ஒ. தை : 1.6. : சா 8.1 ; 3.14 ; மு. 1.2.7.

**எல்லா ஆசைகளையும் அனுபவிக்கிருன்**—பிரம்மானந்தந் தான் எங்கும் நிறைந்துள்ளது. அதின் ஒரு அணுமாத்திரமே அப்பப்போது உலகில் விஷயானந்தமாய் அனுபவிக்கப்படுகிறது, பரம்பொருள் ‘அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி’ உள்ளது.

ஒ. ஏதஸ்யைவ ஆனந்தஸ்ய அன்யானி பூதானி மாத்ராமுபஜீவந்தி । ப்ரு. 4.3.32.

**அச்னுதே**—ஒ. (யதா பஞ்சைவ லீயந்தே ஜ்ஞானி மனஸா ஸஹ । புத்திஸ்ச நேங்கதே தத்ர பரமாத்மான-மஸ்னுதே ॥) எப்போது ஐம்புலன்களும் பொறிகளும் மனத்துடன் ஒடுங்குகின்றனவோ, புத்தியும் அசைவற்று நிற்கிறதோ அப்போது பரமாத்மாவை அனுபவிக்கிருன்—வேதாந்த பரிபாஷை.

**ஆகாசாத் வாயு** :—மஹத் தத்வத்திலிருந்து முதலில் தோன்றுவது சப்த தன்மாத்திரை மட்டும் உடைய ஆகாசம். இரண்டாவது சப்தம், ஸ்பர்சம் என்ற இரண்டு குணங்களை உடைய வாயு. மூன்ருவது சப்தம், ஸ்பர்சம், ரூபம் என்ற மூன்று குணங்களை உடைய அக்னி. நான்காவது சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் என்ற நான்கு குணங்களை உடைய அப்பு.

अग्नेरापः। अद्भ्यः पृथिवी। पृथिव्या ओषधयः। ओषधीभ्योऽन्नम्। अन्नात्पुरुषः। स वा एष पुरुषोऽन्नरसमयः। तस्येदमेव शिरः। अयं दक्षिणः पक्षः। अयमुत्तरः पक्षः। अयमात्मा। इदं पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति ॥ १ ॥

அத்ப்ய: ப்ருதிவீ। ப்ருதிவ்யா ஓஷதய:। ஓஷதீப்ப்யோऽன்னம்। அன்னாத்புருஷ:। ஸவா ஏஷ புருஷோऽன்னரஸமய:। தஸ்யேதமேவ ஶிர:। அயந் தக்ஷிண: பக்ஷ:। அயமுத்தர: பக்ஷ:। அயமாத்மா। இதம் புச்சம் ப்ரதிஷ்ட்டா। ததப்யேஷ ஶ்லோகோ பவதி ॥1॥

---

வியிலிருந்து செடிகொடிகள், செடிகொடிகளிலிருந்து அன்னம், அன்னத்தினின்று மனிதன். அவ்வாறு தோன்றிய இம்மனிதன் அன்னரஸமே உருவாகியவன். அவனுக்கு இதுவே தலை, இது வலதுபக்கம் (இறகு), இது இடது பக்கம் (இறகு), இது நடுவுடல், இந்த அடிப்பாகம் வால். அதைப்பற்றிப் பின்வரும் மந்திரமும் உளது.

---

ஐந்தாவது, சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து குணங்களை உடைய ப்ருதிவி.

பி. சூ. 2.3.2; 3.4.1.

வாஞகி மண்ஞகி வளியாகி யொளியாகி
ஊஞகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோஞகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வாஞகி நின்ருயை யென்சொல்லி வாழ்த்துவனே. (திருவாசகம்)

**அடிப்பாகம் வால்**—ஸம்ஸாரமாகிய விருக்ஷத்தில் இருந்துகொண்டு புண்ணியமும் பாவமும் ஆன பழங்களைப் புசித்துக்கொண்டு வாழ்வதால் ஜீவனைப் பக்ஷியாக வர்ணிப்பது வழக்கம். (ஒ. மு. 3.1.1.)

இங்கே அன்னமய கோசமும் பின்வரும் பிராணமயகோசம் முதலியனவும் ஒரு பக்ஷியின் உருவத்துடன் ஒப்பிடப்படுகின்றன. ஒரு பக்ஷிக்கு வால் உள்ள ஸ்தானத்தில் மனிதனுக்கு மூலாதாரம் அமைந்திருக்கிறது. அது சரீரத்துக்கு ஆதாரமாயிருப்பதாலும், ஒவ்வொரு கோசமும் இதே வடிவாயிருத்தலாலும், வால் (புச்சம்) என்றதற்கு ஆதாரம் என்று கருத்திற்கொள்ளலாம்.

अन्नाद्वै प्रजाः प्रजायन्ते। याःकाश्च पृथिवीꣳश्रिताः। अथो अन्नेनैव जीवन्ति। अथैनदपि यन्त्यन्ततः। अन्नꣳहि भूतानां ज्येष्ठम्। तस्मात् सर्वौषधमुच्यते। सर्वं वै तेऽन्न-माप्नुवन्ति। येऽन्नं ब्रह्मोपासते। अन्नꣳहि भूतानां ज्येष्ठं। तस्मात्सर्वौषध-मुच्यते। अन्नाद्भूतानि जायन्ते। जातान्यन्नेन वर्धन्ते। अद्यतेऽत्ति

அன்னுத்வை ப்ரஜா: ப்ரஜாயந்தே। யா: காஶ்ச ப்ருதிவீꣳ ஶ்ரிதா:। அதோ அன்னேனைவ ஜீவந்தி। அதைந-தபியந்த்யந்தத:। அன்னꣳஹி பூதானுஞ் ஜ்யேஷ்ட்டம்। தஸ்மாத் ஸர்வௌஷதமுச்யதே। ஸர்வம் வை தேऽன்னமாப்னுவந்தி। யேऽன்னம் ப்ரஹ்மோபாஸதே। அன்னꣳஹி பூதானுஞ் ஜ்யேஷ்ட்டம்।

---

2. பூமியில் உள்ள மக்கள் எல்லாம் அன்னத்திலிருந்தே உண்டாகின்றனர். பின் அன்னத்தாலேயே ஜீவிக்கின்றனர். கடைசியில் அதுவாகவே முடிகின்றனர். அன்னம் உண்டாய பொருள்களுக்கெல்லாம் முன் உண்டாயது. ஆகையால் அனை வருக்கும் அது (பசிப்பிணியைப் போக்கும்) ஔஷதம் எனப் படும். எவர்கள் அன்னத்தைப் பிரம்மம் என உபாசிக்கிறுர்

---

2. பிரமத்தினிடமிருந்து புருஷனுடைய சிருஷ்டிக் கிரமத்தைப் படிப்படியாய்க் கூறிப் பின் அந்தப் பிரம்மம் எப்படி இச்சரீரத்துக்கு அந்தர்யாமியாய் அனைத்துக்கும் ஆதாரமாய் இருக்கிறதென்பதைத் தெளிவுறக் காட்டும் பொருட்டு அன்னமயகோசத்திலிருந்து ஆகாசவடிவான ஆனந்தமயகோசம் வரை கிரமமாக வர்ணிக்கப்படுகிறது.

இருதய குகையிலுள்ள பிரம்மதத்துவம் ஒரு கோவிலின் கர்ப்பக் கிருஹத்திலுள்ள மூலவிக்கிரகத்தால் குறிக்கப்பட்டால் பிராகாரங்கள் கோசங்களைக் குறிக்கும். அன்னமயகோசம் முதல் பிராகாரத்தையும் வெளிக் கோபுரத்தையும் போல் பிரம்மஞானத்துக்கு துவாரமாக இருக்கிறது.

சிருஷ்டியானது பஞ்சபூதங்கள், பிராணன், மனம், விஜ்ஞானம் ஆனந்தம் என்று படிப்படியாக உயர்ந்து செல்லுகிறது. இந்த ஏணியில் இப்போது மனிதன் நிற்பது நாலாவது படியாகிய விஜ்ஞானம் எனலாம்.

चं भूतानि । तस्मादन्नं तदुच्यत इति । तस्माद्वा एतस्मादन्न-रसमयात् । अन्योऽन्तर आत्मा प्राणमयः । तेनैष पूर्णः । स वा एष पुरुषविध एव । तस्य पुरुषविधताम् । अन्वयं पुरुषविधः । तस्य प्राण एव शिरः । व्यानो दक्षिणः पक्षः । अपान उत्तरः पक्षः । आकाश आत्मा । पृथिवी पुच्छं प्रतिष्ठा । तदप्येष श्लोको भवति ॥ २ ॥

தஸ்மாத் ஸர்வௌஷத-முச்யதே ॥ அன்னாத் பூதானி ஜாயந்தே । ஜாதான்யன்னேன வர்த்தந்தே । அத்யதேऽத்தி ச பூதானி । தஸ்மா தன்னந் ததுச்யத இதி । தஸ்மாத்வா ஏதஸ்மா-தன்ன ரஸமயாத் । அன்யோऽந்தர ஆத்மா ப்ராணமய: । தேனைஷ பூர்ண: । ஸ வா ஏஷ புருஷவித ஏவ । தஸ்ய புருஷவிததாம் । அன்வயம் புருஷவித: தஸ்ய ப்ராண ஏவ ஶிர: । வ்யானோ தக்ஷிண: பக்ஷ: । அபான உத்தர: பக்ஷ: । ஆகாஶ ஆத்மா । ப்ருதிவீ புச்சம் ப்ரதிஷ்ட்டா । ததப்யேஷ ஶ்லோகோ பவதி ॥ 2 ॥

---

களோ அவர்கள் எல்லா அன்னத்தையும் அடைகிறார்கள். அன்னமன்றோ உண்டாயவற்றிற்கெல்லாம் முன் உண்டாகி 'ஸர்வௌஷதம்' எனப்படுவது. அன்னத்திலிருந்து பிராணிகள் உண்டாகின்றன. உண்டானவை அன்னத்தால் வளர்கின்றன. (அத்யதே) உண்ணப்படுகிறதும் பிராணிகளை (அத்தி) உண்கிறதும் ஆகையால் அது அன்னம் என்று காரணப் பெயரால் குறிக்கப்படுகிறது. இதுவரை கூறிய இந்த அன்னரஸ மயத்தினும் வேறானது இதனுள்ளிருக்கும் பிராணமய ஆத்மா. அதனால் இது (அன்னமய சரீரம்) பூர்ணமாயிருக்கிறது. அதுவும் புருஷனைப் போலவே உருவுடையது. அந்த (பிராணமய) புருஷவடிவம் இந்த (அன்னமய) புருஷவடிவம் போலவே. (வேறு தனியுருவமில்லை). அந்தப் புருஷனுக்குப் பிராணனே தலை; வியானன் வலது பக்கம் (இறகு); அபானன் (இடது பக்கம்) இறகு; ஆகாசம் நடுவுடல்; ஆதாரமான பிருதிவி (தேவதை) வால். அதைப்பற்றிப் பின்வரும் மந்திரமும் உளது.

प्राणं देवा अनु प्राणन्ति । मनुष्याः पशवश्च ये । प्राणो हि भूतानामायुः । तस्मात्सर्वायुषमुच्यते । सर्वमेव त आयुर्यन्ति । ये प्राणं ब्रह्मोपासते । प्राणो हि भूतानामायुः । तस्मात्सर्वायुषमुच्यत इति । तस्यैष एव शारीर आत्मा । यः पूर्वस्य । तस्माद्वा एतस्मात् प्राणमयात् । अन्योऽन्तर आत्मा मनोमयः । तेनैष पूर्णः । स वा एष पुरुषविध एव । तस्य पुरुषविधताम् । अन्वयं पुरुषविधः । तस्य यजुरेव शिरः । ऋग्दक्षिणः पक्षः । सामोत्तरः पक्षः । आदेश आत्मा । अथर्वाङ्गिरसः पुच्छं प्रतिष्ठा । तदप्येष श्लोको भवति ॥ 3 ॥

ப்ராணம் தேவா அனுப்ராணந்தி । மனுஷ்யா: பஶவஶ்ச யே । ப்ராணோ ஹி பூதானுமாயு: । தஸ்மாத் ஸர்வாயுஷமுச்யதே । ஸர்வமேவ த ஆயுர்-யந்தி । யே ப்ராணம் ப்ரஹ்மோபாஸதே । ப்ராணோ ஹி பூதானுமாயு: । தஸ்மாத் ஸர்வாயுஷ-முச்யத இதி । தஸ்யைஷ ஏவ ஶாரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய । தஸ்மாத்வா ஏதஸ்மாத் ப்ராண மயாத் । அன்யோந்தர ஆத்மா மனோமய: । தேனைஷ பூர்ண: । ஸ வா ஏஷ புருஷவித ஏவ । தஸ்ய புருஷ விததாம் । அன்வயம் புருஷவித: । தஸ்ய யஜுரேவ ஶிர: । ருக் தக்ஷிண: பக்ஷ: । ஸாமோத்தர: பக்ஷ: । ஆதேஶ ஆத்மா । அதர் வாங்கிரஸ: புச்சம் ப்ரதிஷ்டா । ததப்யேஷ ஶ்லோகோ பவதி ॥ 3 ॥

---

3. (அக்னி முதலிய) தேவர்கள் (வாயுரூபியாகிய) பிராணனை யனுசரித்தே ஜீவிக்கின்றனர். தத்தம் தொழிலைச் செய்கின்றனர்) ; அங்ஙனமே மனிதர்களும் மிருகங்களும். பிராணன் பிராணிகளுக்கெல்லாம் ஆயுளாயிருப்பதாலன்றோ அது “ஸர்வாயுஷம்” எனப்படுகிறது. எவர்கள் பிராணனைப் பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அவர்கள் பூரண ஆயுளை யடைகிறார்கள். பிராணிகளுக்கெல்லாம் ஆயுளா யிருப்பதா லன்றோ பிராணன் ‘ஸர்வாயுஷம்’ எனப்படுகிறது. முற்பட்ட தற்கு இதுவே (பிராணமயமே) சரீரம் படைத்த ஆத்மா. இது

यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह । आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कदाचनेति । तस्यैष एव शारीर आत्मा । यः पूर्वस्य । तस्माद्वा एतस्मान्मनोमयात् । अन्योऽन्तर आत्मा विज्ञानमयः । तेनैष पूर्णः । स वा एष पुरुषविध एव ।

யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ । ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் । ந பிபேதி கதாசனேதி । தஸ்யைஷ ஏவ ஶாரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய । தஸ்மாத்வா ஏதஸ்மான் மனோமயாத் । அன்யோऽந்தர ஆத்மா விஜ்ஞானமய: । தேனைஷ பூர்ண: । ஸ வா ஏஷ புருஷவித ஏவ । தஸ்ய

---

வரை கூறிய இந்தப் பிராணமயத்தினும் வேறானது இதனுள்ளிருக்கும் மனோமய ஆத்மா. அதனால் இது பூர்ணமா யிருக்கிறது. அதுவும் புருஷனைப்போலவே உருவுடையது. அந்த (மனோமய) புருஷவடிவம் இந்த (பிராணமய) புருஷவடிவத்தைப் போலவே (அந்தந்த இடத்திற்குரிய எண்ணங்களாலும் வார்த்தைகளாலும் இயங்கும்). அந்த (மனோமய) புருஷனுக்கு (சிறந்த வாக்காகிய) யஜுர்வேதமே தலை; ருக்வேதமே வலது பக்கம் (இறகு); ஸாமவேதமே இடதுபக்கம் (இறகு); வேத ஆஜ்ஞை (ஆதேசம்) நடுவுடல்; ஆதாரமான அதர்வவேதம் வால். அதைப்பற்றிப் பின்வரும் மந்திரமும் உளது.

4. எதினின்று (எந்த மனத்துக்கும் மனதாகிய எல்லையை) எட்டிப் பிடிக்க முடியாமல் வாய்ச் சொற்கள் திரும்பி விடுகின்றனவோ—மனத்துடன் கூட—அந்த பிரம்மானந்த நிலையை

---

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ—

மனோமயமாய் விளங்குவது மனத்துக்கும் மனதாகிய பரம்பொருளே யாதலால் அது மனோமயமாயிருப்பினும் மனதுக்கும் எட்டாது என்றவாறு.

ஒ.—யன்மனஸா ந மனுதே—(கேன. 1.5)
அந்தர்யாமிவித்தை—(ப்ரு. 3.7.20.)

ஒ.—உன்னு மனங் கர்ப்பூர வுண்டை போலே கரைய
மின்னு மானந்த விளக்கே பராபரமே. (தாயுமானவர்)

तस्य पुरुषविधताम् । अन्वयं पुरुषविधः । तस्य श्रद्धैव शिरः । ऋतं दक्षिणः पक्षः । सत्यमुत्तरः पक्षः । योग आत्मा । महः पुच्छं प्रतिष्ठा । तदप्येष श्लोको भवति ॥ ४ ॥

புருஷவிததாம் । அன்வயம் புருஷவித: । தஸ்ய ஶ்ரத்தைவ ஶிர: । ருதந்தக்ஷிண: பக்ஷ: । ஸத்யமுத்தர: பக்ஷ: । யோக ஆத்மா । மஹ: புச்சம் ப்ரதிஷ்ட்டா । ததப்யேஷ ஶ்லோகோ பவதி ॥ 4 ॥

---

அறிந்தவன் ஒருபோதும் பயப்படமாட்டான். முற்பட்ட அதற்கு இதுவே (மனோமய கோசமே) சரீரம் படைத்த ஆத்மா போன்றது. இதுவரை கூறிய இந்த மனோமயத்திலும் வேறானது இதனுள்ளிருக்கும் விஜ்ஞானமய ஆத்மா. அதனால் இது பூர்ணமாயிருக்கிறது. அதுவும் புருஷனைப் போல் உருவுடையது. அந்த (விஜ்ஞானமயப்) புருஷ வடிவம் இந்த (மனோமயப்) புருஷ வடிவத்தைப் போலவே. அந்த (விஜ்ஞானமயப்) புருஷனுக்குச் சிரத்தையே தலை; ஒழுங்கு (ருதம்) வலது பக்கம் (இறகு); உண்மை (ஸத்யம்) இடதுபக்கம் (இறகு); (யோகம்) ஸமாதி நடுவுடல்; ஆதாரமான மஹத்தத்வம் வால். அதைப் பற்றி பின்வரும் மந்திரமும் உளது.

---

(ந பிபேதி கதாசனேதி) ஒரு போதும் பயப்பட மாட்டான்—

ஒ.—அச்சமில்லை அமுங்குதலில்லை
நடுங்குதலில்லை நாணுதலில்லை
பாவமில்லை பதுங்குதலில்லை
ஏது நேரினு மிடர்ப்பட மாட்டோம்
அண்டஞ் சிதறினு லஞ்சமாட்டோம்
கடல் பொங்கி யெழுந்தாற் கலங்கமாட்டோம்
யார்க்குமஞ்சோம் எதற்கு மஞ்சோம்
எங்குமஞ்சோம் எப்பொழுது மஞ்சோம்.

(விநாயகரகவல்—பாரதி.)

विज्ञानं यज्ञं तनुते । कर्माणि तनुतेऽपि च । विज्ञानं देवाः सर्वे । ब्रह्म ज्येष्ठ-मुपासते । विज्ञानं ब्रह्म चेद्वेद । तस्माच्चेन्न प्रमाद्यति । शरीरे पाप्मनो हित्वा । सर्वान् कामान् समश्नुत इति । तस्यैष एव शारीर आत्मा । यः पूर्वस्य । तस्माद्वा एतस्मा-द्विज्ञानमयात् । अन्योऽन्तर आत्मानन्दमयः । तेनैष पूर्णः ।

விஜ்ஞானம் யஜ்ஞம் தனுதே । கர்மாணி தனுதேऽபி ச । விஜ்ஞானந் தேவா:ஸர்வே । ப்ரஹ்ம ஜ்யேஷ்ட்ட-முபாஸதே ॥ விஜ்ஞானம் ப்ரஹ்ம சேத்வேத । தஸ்மாச்சேந் நப்ரமாத்யதி । ஶரீரே பாப்மனோ ஹித்வா । ஸர்வான் காமான் ஸமஶ்னுத இதி । தஸ்யைஷ ஏவ ஶாரீர ஆத்மா । ய:பூர்வஸ்ய । தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞானமயாத் । அன்யோऽந்தர ஆத்மானந்தமய: । தேனைஷ

5. விஜ்ஞானமே வேள்வியைச் செய்கின்றது. மற்ற கருமங்களையுஞ் செய்கின்றது. தேவர்களனைவரும் விஜ்ஞானத்தையே முதலில் தோன்றிய பிரம்மமாக உபாஸிக்கின்றனர். விஜ்ஞானத்தைப் பிரம்மமாக அறிந்து அதினின்று நழுவாமலிருக்கும் ஒருவன் சரீரத்தில் (அதன்) பாவங்களை நீத்து, எல்லா இன்பங்களையும் ஆழ்ந்து அனுபவிக்கிறான். (முற்பட்ட அதற்கு இது விஜ்ஞானமயமே) சரீரம் படைத்த ஆத்மா. இதுவரை கூறிய இந்த விஜ்ஞானமயத்திலும் வேறானது இதனுள்ளிருக்கும் ஆனந்தமய ஆத்மா. அதனால் இது பூர்ணமாயிருக்கிறது. அதுவும் புருஷனைப்போல் உருவுடையது. அந்த (ஆனந்தமயப்) புருஷ வடிவம் இந்த (விஜ்ஞானமயப்) புருஷ வடிவத்தைப் போலவே. அந்த ஆனந்தமயப் புருஷனுக்குப் பிரியமே தலை.

5. சரீரத்தில் பாவங்களை நீத்து—

சரீராபிமானத்தினாலேயே எல்லாப் பாவங்களும் ஏற்படுகின்றன. சரீராபிமானம் நீங்கியபோது அதன் மூலம் ஏற்பட்ட பாவங்களும் நாசமடைகின்றன.

சரீரமும் அதனுடைய நோயும் ஒன்றையொன்று கவனித்துக் கொள்ளட்டும். மனமே! நீ அன்னையை நினைத்து ஆனந்தத்தில் இரு. (ரா. கி.)

ஒரு புருஷன் தன்னை இவன் என்று அறிந்துவிட்டால் எதை விரும்பி, யாருடைய விருப்பத்துக்காகச் சரீரத்தைப் பின்பற்றி அதி துடன் வருந்தவேண்டும்? (ப்ரு. 4. 4.12).

स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य प्रियमेव शिरः। मोदो दक्षिणः पक्षः। प्रमोद उत्तरः पक्षः। आनन्द आत्मा। ब्रह्म पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति ॥ ५ ॥

பூர்ண :। ஸவா ஏஷ புருஷவித ஏவ। தஸ்ய புருஷவிததாம்। அன்வயம் புருஷவித:। தஸ்ய ப்ரியமேவ ஶிர:। மோதோ தக்ஷிண: பக்ஷ:। ப்ரமோத உத்தர: பக்ஷ:। ஆனந்த ஆத்மா। ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்ட்டா। ததப்யேஷ ஶ்லோகோ பவதி ॥ 5 ॥

---

(பிரியத்தைப் பெற்றதாலுண்டாகும் மோதம்) மகிழ்ச்சியே வலது பக்கம் (இறகு); அம் மகிழ்ச்சி பொங்குதலே (ப்ரமோதம்) இடது பக்கம் (இறகு); ஆனந்தம் நடு உடல். ஆதாரமான பிரம்மம் வால். அதை (அந்த பிரம்மத்தைப்) பற்றி பின் வரும் மந்திரமும் உளது.

---

எல்லாக் கருமங்களையும் என்னிடம் ஸமர்ப்பணம் செய்து நான் ஆத்மா என்ற அறிவுடன் ஆசையில்லாதவனாய் என்னுடையது என்ற பற்றில்லாதவனாய் இருந்துகொண்டு மனக் கொதிப்பு முற்றும் நீங்கியவனாய்ப் போர் புரிவாய். (கீ. 3.30.)

தவம், பிரம்மசரியம், உபாஸனை, சிரத்தை முதலியவற்றால் அந்தக் கரணம் எவ்வளவுக் கெவ்வளவு தெளிவடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆனந்தம் பெருகுகிறது. இந்த ஆனந்தம் பிரம்மானந்தத்தின் ஒரு அம்சம் எனக் கொள்ளவேண்டும்.

ஆனந்தமய ஆத்மா ஸம்ஸாரியான ஜீவன். புச்சமாக (ஆதாரமாக)ச் சொல்லப்பட்ட பிரம்மமே பரமாத்மா. ஒ.—பி. சூ. 1.1.12—1.1.19.

அன்னமயத்துக்குப் புச்சம் (ஆதாரம்) மூலாதாரம். உடலில் செயலின்றிக் காணப்படினும் மூலசக்தி அனைத்தையுந் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது.

பிராணமயத்துக்கு உடல் ஆகாசம், புச்சம் ப்ருதிவீ. (ஒ. ப்ருதிவ்யா மாகாச: ப்ரதிஷ்ட்டித :—பிருதிவியில் ஆகாசம் நிலை பெற்றிருக்கிறது).

மனது கர்மங்களைச் சங்கல்பிக்கிறது. எல்லாக் கர்மங்களுக்கும் வேதம் ஆதாரமாய்க் கருதப்படுவதால் மனோமய கோசம் வேதமாய்க் கூறப்பட்டது. அதற்குப் புச்சம் அதர்வ வேதம். யஜ்ஞத்தில் அதர்வ வேதத்துக்கதிகாரியான 'பிரம்மா' என்பவர் செயலற்றிருப்பினும் எல்லாக் கருமங்களுக்கும் மூல புருஷன்போல் சாக்ஷியாய் விளங்குகிறார்.

விஜ்ஞான மயத்துக்குப் புச்சம் மஹத் தத்துவம். (ஒ. மனஸஸ்து

असन्नेव स भवति । असद्ब्रह्मेति वेद चेत् । अस्ति ब्रह्मेति चेद्वेद । सन्तमेनं ततो विदुरिति । तस्यैष एव शारीर आत्मा । यः पूर्वस्य । अथातोऽनुप्रश्नाः । उताविद्वानमुं लोकं प्रेत्य । कश्चन गच्छतीऽ३ । आहो विद्वानमुं लोकं प्रेत्य ।

அஸந்நேவ ஸ பவதி । அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் । அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத । ஸந்தமேனம் ததோ விதுரிதி । தஸ்யைஷ ஏவ ஶாரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய । அதாதோऽநுப்ரஶ்ந: । உதா வித்வானமும் லோகம் ப்ரேத்ய । கஶ்சந கச்சதீ(3) । ஆஹோ

---

5. எவன் பிரம்மம் இல்லை என்று கருதுகிறனே அவன் அஸத்து (கெட்டழிந்தவன்) ஆகிறன். எவன் பிரம்மம் உண்டு என்று அறிகிறனே அவனை அப்போதே ஸத்து (ஸாது) என்று கருதுகின்றனர். முற்பட்ட அதற்கு இது (ஆனந்தமயமே) சரீரம்படைத்த ஆத்மா. இனி இதை யனுசரித்த கேள்விகள். (பிரம்மத்தை) அறியாதவன் எவனுயினும் சரீரத்தை விட்டபின் இந்த (பரமாத்ம) உலகை எய்துவானு (பிரம்மத்திற்குப் பக்ஷபாத மின்மையால்), இல்லையா? தவிர (பிரம்மத்தை) அறிந்தவன் எவனுவது சரீரத்தை விட்டபின் இந்த (பரமாத்ம) உலகை அனுபவிக்காமலிருப்பானு, அனுபவிப்பானு?

(விடை: பரமாத்மா ஒன்றே இவ்வனைத்துமாய் விளங்குவதால் அதில் போக்குவரவேது?) அந்த பரமாத்மா (எதனிடமிருந்து ஆகாசம் முதலியவை உண்டாயிற்றே அது) வெகுவாக விரிந்து

---

பரா புத்தி: புத்தே-ராத்மா மஹான் பர : கட. 1.3.10). எல்லாவிதமான புத்தி விஜ்ஞானங்களுக்கும் மஹத்தத்துவம் மூலாதாரம்.

ஆனந்த மயத்துக்குப் புச்சம் பிரம்மம். அதற்குப் புச்சம் (ஆதாரம்) வேறென்றும் இல்லை. ஒ. புருஷாந் ந பரங்கிஞ்சித் ஸா காஷ்ட்டா ஸா பரா கதி:) கட. 1.3.11 ஒ. பி. சூ. 2. 3.3ஶ.

ஒ. அன்ன-ப்ராண-மன:-ப்ரபோத-பரமானந்தை: ஶிர: பக்ஷயுக் புச்சாத்ம ப்ரகடைர் மஹோபநிஷதாம் வாக்யை: ப்ரஸித்தீ க்ருத: । கோஶை: பஞ்சபி-ரேபி-ரேவ பவதீ-மேதத் ப்ரலீனு-மிதி ஜ்யோதி: ப்ரஜ்வல-துஜ்வலாத்ம-சபலாம் யோ வேத ஸ ப்ரஹ்மவித் ॥ (க்ரோத பட்டாரகர்: லலிதாஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் பாஸ்கரராயர் குறிப்பிடும் மேற்கோள்.)

कश्चित्समश्नुता३ उ। सोऽकामयत। बहु स्यां प्रजायेयेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा। इद॰ सर्वमसृजत। यदिदं किंच। तत्सृष्ट्वा। तदेवानु प्राविशत्। तदनु प्रविश्य। सच्च त्यच्चाभवत्। निरुक्तं चानिरुक्तं च। निलयनं चानिलयनं च। विज्ञानं चाविज्ञानं च। सत्यं चानृतं च सत्यमभवत्। यदिदं किंच। तत् सत्यमित्याचक्षते। तदप्येष श्लोको भवति ॥ ६ ॥

வித்வா-னமும் லோகம் ப்ரேத்ய। கஶ்சித் ஸமஶ்னுதா(3) உ। ஸோ஽காமயத। பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி। ஸதபோ஽தப்யத। ஸ தபஸ்-தப்த்வா। இத॰ஸர்வ-மஸ்ருஜத। யதிதங் கிஞ்ச। தத் ஸ்ருஷ்ட்வா। ததேவானுப்ராவிஶத்। ததனுப்ரவிஶ்ய। ஸச்ச த்யச் சாபவத்। நிருக்தஞ் சாநிருக்தஞ்ச। நிலயனஞ்சாநிலயனஞ்ச। விஜ்ஞானஞ்சாவிஜ்ஞானஞ்ச। ஸத்யஞ்சான்ருதஞ்ச ஸத்ய மபவத்। யதிதங்கிஞ்ச। தத் ஸத்யமித்யாசக்ஷதே। ததப்யேஷ ஶ்லோகோ பவதி ॥ 6 ॥

---

(நாமரூப உலகாக) வளரவேண்டும் என்று சங்கற்பித்தது. (இந்த சங்கற்பத்துடன்) அது தவத்தைச் செய்தது (ஞான ஒளியைப் பரப்பிற்று). அது அத்தவத்தைச் செய்து, இங்கு எதெது உண்டோ அது எல்லாவற்றையும் சிருஷ்டித்தது. அங்ஙனம் சிருஷ்டித்து அதனுள் புகுந்தது. அதனுள் (சிருஷ்டியுள்)புகுந்து

---

ஒ. அஸ்தீத்யேவோபலப்த்தவ்ய: (கட. 6.13)

6. (கத-மஸத: ஸஜ்ஜாயேத) அஸத்திலிருந்து 'ஸத்' எப்படி உண்டாக இயலும்—சா. 6.22.

அது தவத்தைச் செய்தது — இங்கு தவம் என்றது ஞானம். ஒ. (யஸ்ய ஜ்ஞானமயம் தப:) எதனுடைய தவம் ஞானவடிவமானதோ (மு. 1.1.9)

ஒ. பி. சூ. 1.1.14; 1.1.18

**அங்ஙனம் சிருஷ்டித்து அதனுள் புகுந்தது** — ஆலின் விதையொன்று ஆலமரத்தைச் சிருஷ்டித்து, அதில் அரும்பு மலர் காய்கனியை உண்டாக்கி கனியில் ஒவ்வொரு விதையுள்ளும் ஆதி சக்தியாகப் புகுந்து நிற்பது போல் பிரம்மம் சிருஷ்டியனைத்துள்ளும் உறைகிறது எனலாம். ஒ. சா. 6.

असद्वा इदमग्र आसीत्। ततो वै सदजायत। तदात्मानँ स्वयमकुरुत। तस्मात् तत्सुकृत-मुच्यत इति। यद्वै तत्सुकृतम्।

அஸத்வா இதமக்ர ஆஸீத். ததோ வை ஸதஜாயத. ததாத்மானꣳஸ்வயமகுருத. தஸ்மாத் தத் ஸுக்ருதமுச்யத இதி.

---

உருவாகவும் அருவாகவும் அதுவே ஆயிற்று. ஸகுணமாகவும் நிர்க்குணமாகவும், இடமுடையதாகவும் இடமேதுமிலதாகவும், சித்தாயும் அசித்தாயும், உளதாயும் இலதாயும் இங்கு எதேது உண்டோ அது அனைத்துமாக அந்தப் பரமார்த்த ஸத்தியமே ஆயிற்று. ஆகையால் (இந்த ஸத்தியத்திற்கும்) ஸத்தியம் என்று அது கூறப்படும். அதைப் பற்றிப் பின்வரும் மந்திரமும் உளது.

7. ஆதியில் இது (நாம ரூப விளக்கம்) இல்லாததாய் இருந்தது. அதனின்று (அந்த அவ்வியாகிருதப் பிரம்மத்தினின்று)

---

ஒ. தன்னாலே தன்னுருவம் பயந்து தானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகுந்தானாய் வானாய்—(திருமங்கையாழ்வார்)

உருவாகவும் அருவாகவும்—

ஒ. உளனெனிலுளனவன் உருவ மிவ் வுருவுகள்,
உள னலன் எனிலவன் அருவ மிவ்வருவுகள்,
உள னென இலனென இவை குணமுடைமையில்,
உள னிரு தகைமை யோடு ஒழிவிலன் பரந்தே—(நம்மாழ்வார்)

ஒ.—(ஸ ப்ரஹ்ம ஸ ஶிவ: ஸ ஹரி: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்) இருதய குகையிலுள்ள அவனே பிரம்மா, அவனே சிவன், அவனே ஹரி, அவனே இந்திரன், அவனே அக்ஷர புருஷன், அவனே பரமேசுவரன் (நாராயண ஸூக்தம்).

பரமாத்மா, ஆகாசம், வாயு, அக்கினி முதலியவைகளைச் சிருஷ்டித்து ஒவ்வொன்றினுள்ளும் அதன் விசேஷ சக்தியாகப் பிரவேசித்ததுபோலவே ஜீவனிடம் அந்தக்கரணமாகிற குகையில் பார்ப்பவனாகவும் கேட்பவனாகவும் நினைப்பவனாகவும் அனைத்துக்கும் ஸாக்ஷியாகவும் விளங்குகிறான்.

ஒ. உபத்ரஷ்டானுமந்தா ச (கீ. 13.22).
ரஸோஹமப்ஸு...ஜீவனம் ஸர்வபூதேஷு (கீ. 7.8—9).

பரமாத்மா என்று ஒன்று இல்லையா என்ற சந்தேகம் எழுந்தால் அதற்குப் பதில் இங்ஙனம் கூறப்பட்டது. இது அடுத்த அனுவாகத்திலும் விவரிக்கப்படுகிறது.

இதற்குமேல் கேள்விகள் இரண்டு :—(1) பிரம்மம் வித்வானுக்கும்

रसो वै सः। रसꣳ ह्येवायं लब्ध्वानन्दी भवति। को ह्येवान्यात्कः प्राण्यात्। यदेष आकाश आनन्दो न स्यात्। एष ह्येवा-

யத்வை தத் ஸுக்ருதம்। ரஸோ வை ஸ: ரஸꣳ ஹ்யேவாயம் லப்த்வானந்தீ பவதி। கோஹ்யேவான்யாத், க: ப்ராண்யாத்। யதேஷ ஆகாஶ ஆனந்தோ ந ஸ்யாத்। ஏஷ ஹ்யேவானந்த

---

(நாம ரூப விளக்கமுடைய) பிரபஞ்சம் உண்டாயிற்று. அது தன்னைத் தானகவே (பிரபஞ்சமாகச்) செய்து கொண்டது. அக் காரணத்தால் அது 'ஸ்வயங் கர்த்தா' என்று சொல்லப்படும். எது 'ஸ்வயங்கர்த்தா' வோ அதுவே (ஆனந்த) ரஸம். இந்த ரஸத்தை யடைந்தேயன்றோ இவன் (உண்மையான) ஆனந்த முள்ளவனுகிருன். இந்த ஆனந்தம் (பிரம்மானந்த ரஸம்) ஆகா

---

அவித்வானுக்கும் ஸமமானதால் வித்வானைப் போல் அவித்வானும் அதை அடைவானு, மாட்டானு? (2) அவித்வான் அடையமாட்டான் என்ருல் வித்வானுங்கூட ஒருவேளை அடையாமற் போவானு?

7. (யதேஷ ஆகாஶ ஆனந்தோ ந ஸ்யாத்) இந்த ஆனந்தம் ஆகாசத்தில் இல்லாமலிருந்தால்—

இந்த ஆனந்தம் அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாயிருப்பதைக் காண்பதே காட்சி. ஆ—எங்கெங்கும் நாற்புறத்திலும் மேலுங்கீழும், காஶதே - பிரகாசிக்கிறது என்ற காரணத்தாலேயே ஆகாசத்துக்கு அப் பெயர் ஏற்பட்டது; அதனுலேயே ஆகாசம் பிரம்மம் என கூறப்படும். இப்படி நிறைந்துள்ள ஆனந்தமான பரம் பொருளை உயிருடனிருக்கும் போதும் அதற்குப் பின்னும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு கணமும் அடைந்தவனுகவே இருக்கிருன். ஒவ்வொரு மூச்சிலும் ஒவ்வொரு செயலிலும் உள்ள ஆனந்தம் இதுவே. அதில்லாவிட்டால் யார் எதைத் தான் செய்யமுடியும்? வித்வானுக்கும் அவித்வானுக்கும் இது சமம். இரண்டு பேரும் அடைந்தாலும் வித்வான் இதை அறிகிருன்; அவித்வான் அறிவதில்லை.

ஒ. 'கண்டார் கண்ட காட்சியும் நீ காணுர் காணுக் கள்வனும் நீ'
'எங்கும் நிறைந்திருப்பன் எட்டியும் எட்டாதிருப்பன்'.

இது முதற்கேள்விக்கு விடை.

வித்வானுங்கூட அவித்வானைப்போல் ஒருவேளை அடையாமற் போவானு என்பது இரண்டாவது கேள்வி. எப்போது தனக்கும் பிரம் மத்துக்கும் பேதத்தைப் பார்ப்பதில்லையோ அப்போதுதான் அபயப்பிர திஷ்டை என்ற முக்தி நிலையை வித்வான் அடைகிருன். ஸகல சாஸ்திரங்

ऽऽनंन्दयाति । यदा ह्येवैष एतस्मिन्नदृश्ये ऽनात्म्ये ऽनिरुक्ते ऽनिलयने ऽभयं प्रतिष्ठां विन्दते । अथ सोऽभयं गतो भवति ।

யாதி। யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின் னத்ருஶ்யே ऽநாத்ம்யே ऽநிருக்தே ऽநிலயனே ऽபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே। அத ஸோ ऽபயங்கதோபவதி। யதா-ஹ்யேவைஷ ஏதஸ்மின் னுதர-மந்தரங்

---

சத்தில்(சிற்றம்பலத்திலோ பேரம்பலத்திலோ)இல்லாமலிருந்தால் எவன் அபான வாயுவால் இயங்கும் செயல்களைச் செய்யமுடியும்? எவன் பிராணவாயுவால் இயங்கும் செயல்களைச் செய்ய முடியும்? இதுவே யன்றோ (உலகிற்கு) ஆனந்தம் அளிப்பது. உருவும் உடலும் குறியும் இடமும் இல்லாத இந்தப் பரம் பொருளில் எப்போது இவன் (முமுக்ஷு) நிலைபெறுகின்றானோ அப்போதே இவன் பயமற்ற (முக்தி) நிலையை அடைந்தவன் ஆகிறான். இப்பரம்பொருளில் எப்போது இவன் ஒரு சிறிதேனும் பேதத்தைச் செய்கிறானோ (தன்னினும் வேறாகக்காண்கிறானோ) அப்

---

களையும் கற்ற வித்வானுங்கூட எதுவரை பரமாத்ம வஸ்துவினிடத்தில் ஒரு சிறிதேனும் பேதத்தைக் கல்பிக்கின்றானோ (உத்-அரம்-அந்தரம் குருதே) அதுவரை அவன் பிரம்மத்தை அடைந்தவனாகான். ஞானிகளுக்கு எல்லா பயங்களையும் போக்குவது எதுவோ அதே பிரம்மம் இந்த வித்வானுக்கு அவித்வானுக்குப் போலவே பயத்தை விளைவிப்பதாக இருக்கிறது. பேதத்தைக் காணும் வரை பயத்தைக் காண்பான். பயத்தைக் காணும்வரை அதை அடையாமல் அதினின்று எட்டி நிற்பவனாகிறான். இது இரண்டாவது கேள்விக்கு விடை.

(யத்ர நான்யத் பஶ்யதி) எந்நிலையில் ஒருவன் பிரம்மத்தைத் தவிர வேறொன்றையும் காண்பதில்லையோ அந்நிலையிலுள்ளவன் தான் உண்மையில் வித்வான், ஆசைவாய்ப்பட்டு அழிந்துபோகாதவன் (ஶ்ரோத்ரியன், அகாமஹதன்). இனி (அனுவாகம் 8-ல்) அவன் பெருமையும் அவன் அடையும் அளவிலா ஆனந்தத்தின் பெருமையுங் கூறப்படுகிறது.

**பிரம்மமே பயத்துக்குக் காரணமாகவும் ஆகின்றது—**

ஒ. (பயக்ருத் பயநாஶன:) பயப்படுத்துவோனும் பயத்தைப் போக்குவோனும் அவனே. (விஷ்ணு ஸஹஸ்ர நாமம்).

**தத்து ஏவ பயம்**—அதுவே பயத்துக்குக் காரணமாகவும் ஆகின்றது. ஒ. (அபயே பயதர்ஶின:) பயமற்றதில் பயத்தைக் காண்பவர்கள்

(மா. காரிகை, 3.39)

यदा ह्येवैष एतस्मिन्नुदर-मन्तरं कुरुते। अथ तस्य भयं भवति। तत्त्वेव भयं विदुषो ऽमन्वानस्य। तदप्येष श्लोको भवति ॥ ७ ॥

भीषास्मा-द्वातः पवते। भीषोदेति सूर्यः। भीषास्मा-दग्निश्चेन्द्रश्च। मृत्यु-र्धावति पञ्चम इति। सैषाऽऽनन्दस्य

குருதே। அத தஸ்ய பயம் பவதி। தத்த்வேவ பயம் விதுஷோ ஽மன்வானஸ்ய। ததப்யேஷ ஶ்லோகா பவதி ॥ 7 ॥

பீஷாஸ்மாத் வாத: பவதே। பீஷோதேதி ஸூர்ய:। பீஷாஸ்மா-தக்நிஶ்சேந்த்ரஶ்ச। ம்ருத்யுர்த்தாவதி பஞ்சம இதி।

---

போதே அவனுக்கு (ஜனனமரண ஸம்ஸார) பயம் ஏற்படுகிறது. வித்வானுயினும் (இங்ஙனம் ஒற்றுமையை) எண்ணிப் பாராதவனுக்கு அதுவே (பிரம்மமே) பயத்துக்குக் காரணமாகவும் ஆகின்றது. அதைப்பற்றிப் பின்வரும் மந்திரமும் உளது.

8. இந்தப் பரமாத்வாவினிடம் பயத்தால் காற்று வீசுகிறது; பயத்தால் சூரியன் உதிக்கிருன்; அக்கினியும் இந்திரனும் பயத்தால் (அங்ஙனமே தத்தந் தொழிலை செய்கின்றனர்); ஐந்தாவதாக யமன் பாய்கிருன். இந்தப் பிரம்மானந்தத்தின் நிர்ணயம்

---

உருவும் உடலும் குறியும் இடமுமில்லாத—

ஒ. ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்ருர் ஆரயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (திருவாசகம்)

பேதவ்யபதேஶாச்ச (பி. சூ. 1.1.17)

அஸ்மிந்நஸ்ய ச தத்யோகம் ஶாஸ்தி (பி. சூ. 1.1.19)

ஆத்மக்ருதே: பரிணுமாத் (பி. சூ. 1.4.26.)

பானையில் உலை வைத்து அரிசியைப் போட்டால், அரிசியை வேக வைக்கும் சூடு, நீரினுடையதோ பானையினுடையதோ அன்று. அவ்வாறே மனிதனுடைய சக்தியும் அவனுடையதன்று, இறைவனுடையதே. (ரா. கி.)

ஒ. இறைவன் உலகை உண்ணும்போது யமன் இவனுக்கு ஊறுகாய் போன்றவன். (கட. 2.24)

நேரேதானிரவு பகல் கோடாவண்ணம்
நித்தம் வர உங்களை இந்நிலைக்கே வைத்தார்
யாரே அங்கவர் பெருமை என்னே என்பேன். (தாயுமானவர்)

मीमाꣳसा भवति। युवा स्यात् साधु युवाऽध्यायकः। आशिष्ठो द्रढिष्ठो बलिष्ठः। तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात्। स एको मानुष आनन्दः। ते ये शतं मानुषा आनन्दाः। स एको मनुष्यगन्धर्वाणामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये

ஸைஷானந்தஸ்ய மீமாꣳஸா பவதி । யுவா ஸ்யாத் ஸாது யுவாऽத்த்யாயக: । ஆஶிஷ்டோ த்ரடிஷ்ட்டோ பலிஷ்ட்ட: । தஸ் யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் । ஸ ஏகோ மானுஷ ஆனந்த: । தே யே ஶதம் மானுஷா ஆனந்தா: । ஸ

---

பின்வருமாறு :—ஸாதுவாயும் யௌவனமுள்ளவனுயும் அத்தியயனம் செய்தவனுயும் ஏவல் திறமையுள்ளவனுயும், திடச்சித்தமும் உடல் வன்மையும் பெற்றவனுயும் ஒருவன் இருந்து, எல்லாச் செல்வங்களும் நிறைந்த இந்த பூமி முழுதும் அவனுடையதாகவும் இருக்குமேயானுல் (அவன் அடையக்கூடிய) அது ஒரு மனித ஆனந்தத்தின் அளவு. இந்த மனித ஆனந்தத்தின் நூறு மடங்கு எதுவோ அது மனித கந்தர்வர்களுடையும் ஆனந்தத்தின் ஒரு அளவு. கேள்வியிற் சிறந்தவனுயும் (மனித) ஆசைகளில் மடியாதவனுயும் உள்ளவனுக்கும் (இவ்வானந்தம் கிடைக்கின்றது). மனித கந்தர்வர்களுடைய ஆனந்தத்தின் நூறு மடங்கு தேவ கந்தர்வர்களுடைய ஆனந்தத்தின் ஒரு அளவு. கேள்வியிற் சிறந்தவனுயும் (மனித கந்தர்வ) ஆசைகளில் மடியாதவனுயும் உள்ளவனுக்கும் (கிட்டுகின்றது). தேவ

---

**கந்தர்வர்கள்**—ஸூக்ஷ்மமான சரீரங்களும் அருமையான இந்திரிய சக்திகளும் படைத்து ஆடல் பாடல்களில் வல்லவர்களாயும் உள்ளவர்கள்.

**கர்மதேவர்கள்**—நகுஷனைப்போல் நற்கர்மங்களால் தேவர்களானவர்கள்.

ஒ. அஸ்மின் கல்பேऽஶ்வமேதாதி கர்ம க்ருத்வா மஹத்பதம் ।
அவாப்யாஜான-தேவைர் யா: பூஜ்யாஸ்தா: கர்மதேவதா: ॥
—பஞ்சதசீ. 14.31.

**முக்கியதேவர்கள்**—அஷ்டவசுக்கள், ஏகாதச ருத்திரர்கள், துவாதச ஆதித்தியர்கள், இந்திரன், பிரஜாபதி ஆக முப்பத்து மூவர்.

**இந்திரன்**—தேவராஜன். **பிருஹஸ்பதி**—தேவகுரு. **பிரஜாபதி**—விராட்புருஷன். **பிரம்மா**—ஹிரணியகர்ப்பன்.

शतं मनुष्यगन्धर्वाणामानन्दाः। स एको देवगन्धर्वाणामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं देवगन्धर्वाणामानन्दाः। स एकः पितॄणां चिरलोकलोकानामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं पितॄणां चिरलोकलोकानामानन्दाः। स एक आजानजानां देवानामानन्दः। श्रोत्रियस्य

ஏகோ மனுஷ்ய-கந்தர்வாணு-மானந்த: । ஶ்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய ॥ தே யே ஶதம் மனுஷ்யகந்தர்வாணு-மானந்தா: । ஸ ஏகோ தேவகந்தர்வாணு-மானந்த: । ஶ்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய । தேயே ஶதம் தேவகந்தர்வாணு-மானந்தா: । ஸ ஏக : பித்ருணுஞ் சிரலோக லோகானு-மானந்த: । ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தேயே ஶதம் பித்ருணுஞ் சிரலோக-லோகானு-மானந்தா: । ஸ ஏக ஆஜாநஜானுந் தேவானு-மானந்த: । ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தேயே ஶதமாஜாநஜானுந் தேவானு மானந்தா: । ஸ ஏக: கர்ம தேவானுந் தேவானு மானந்த: । யே கர்மணு தேவானபி யந்தி । ஶ்ரோத்ரியஸ்ய சாகா மஹதஸ்ய । தேயேஶதம் கர்மதேவானுந் தேவானுமானந்தா: ।

---

கந்தர்வர்களுடைய ஆனந்தத்தின் நூறு மடங்கு நீண்டகாலம் வாழக்கூடிய உலகங்களிலுள்ள பிதிருக்களின் ஆனந்தத்தின் ஒரு அளவு. கேள்வியிற் சிறந்தவனுயும் (தேவகந்தர்வ) ஆசைகளில் மடியாதவனுயும் உள்ளவனுக்கும் (இது கிட்டுகின்றது). இதைப்போல் நூறுமடங்கு பிறவியால் தேவர்களாயுள்ளவர்களின் ஆனந்தத்தின் ஒரு அளவு......இதைப்போல் நூறுமடங்கு கருமங்களின் பயனுக தேவப் பதவி யடைந்த கர்மதேவர்களுடைய ஆனந்தத்தின் ஒரு அளவு......இதைப்போல் நூறுமடங்கு (முக்கியமான) தேவர்களுடைய ஆனந்தத்தின் ஒரு அளவு...... இதைப்போல் நூறுமடங்கு இந்திரனுடைய ஆனந்தத்தின் ஒரு அளவு......இதைப்போல் நூறுமடங்கு பிருஹஸ்பதியுடைய ஆனந்தத்தின் ஒரு அளவு......இதைப்போல் நூறுமடங்கு (விராட் புருஷனுகிய) பிரஜா பதியின் ஆனந்தத்தின் ஒரு அளவு......இதைப்போல் நூறுமடங்கு (ஸூத்ராத்மாவான)

चाकामहतस्य। ते ये शतमाजानजानां देवानामानन्दाः। स एकः कर्मदेवानां देवानामानन्दः। ये कर्मणा देवानपियन्ति। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं कर्मदेवानां देवानामानन्दाः। स एको देवानामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं देवानामानन्दाः। स एक इन्द्रस्यानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतमिन्द्रस्यानन्दाः। स एको बृहस्पतेरानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं

ஸ ஏகோ தேவாஞ-மானந்த:। ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தேயே ஶதம் தேவாஞ-மானந்தா:। ஸ ஏக இந்த்ரஸ்யானந்த:। ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தே யே ஶதமி-ந்த்ரஸ்யானந்தா:। ஸ ஏகோ ப்ருஹஸ்பதே-ரானந்த:। ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய। தேயே ஶதம் ப்ருஹஸ்பதேரானந்தா:। ஸ ஏக:ப்ரஜாபதே-ரானந்த:। ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ॥ தே யே ஶதம் ப்ரஜாபதே ரானந்தா:। ஸ ஏகோ ப்ரஹ்மண ஆனந்த:॥ ஸயஶ்சாயம் புருஷே। யஶ்சாஸா-வாதித்யே। ஸ ஏக:। ஸ ய ஏவம் வித்। அஸ்மால்லோகாத்

பிரம்மாவின் ஆனந்தத்தின் ஒரு அளவு. கேள்வியிற் சிறந்தவனும் (முன் கூறிய) ஆசைகளில் மடியாதவனும் உள்ளவனுக்கும் (இவ்வானந்தம் கிட்டுகின்றது). எவன் இந்தப்புருஷனிடம் (இருதயகுகையில்) உள்ளவனே அவனும், எவன் சூரியனிடம் உள்ளவனே அவனும் ஒருவனே. எந்த (முமுக்ஷு) இங்ஙனம் அறிந்தவனே அவன் உலகத்தினின்று திரும்பி (வெளிநாட்டமில்லாதவனாய்) அன்னமயமான ஆத்மாவை அடைகிறான்.

8. 'பரம வ்யோமம்' என்ற இருதய குகையில் எது பிரகாசிக்கிறதோ, ஆகாசம் முதல் அன்னமயம் வரை உள்ள கார்ய உலகைச் சிருஷ்டித்து எது அதனுள் பிரவேசித்துள்ளதோ, எது எல்லையில்லாத ஆனந்த வடிவாயிருந்துகொண்டு தனது லவலேசத்தால் உலகத்தைக் களியூட்டுகின்றதோ, எது சூரிய ஒளிக்கும் மனிதனுடைய புத்திவிருத்திக்கும் ஒரே காரணமாய் விளங்குகிறதோ அதுவே 'ஸத்தியம், ஞானம், அனந்தம்' என்ற பரம்பொருள்.

बृहस्पते रानन्दाः। स एकः प्रजापतेरानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं प्रजापतेरानन्दाः। स एको ब्रह्मण आनन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। स यश्चायं पुरुषे। यश्चासावादित्ये। स एकः। स य एवंवित्। अस्माल्लोकात्प्रेत्य। एत-मन्नमय-मात्मानमुपसंक्रामति। एतं प्राणमय-मात्मान-मुपसंक्रामति। एतं मनोमय-मात्मान-मुपसंक्रामति। एतं विज्ञानमय-मात्मान-मुपसंक्रामति। एत-मानन्दमय-मात्मान-मुपसंक्रामति। तदप्येष श्लोको भवति ॥ ८ ॥

यतो वाचो निवर्तन्ते। अप्राप्य मनसा सह। आनन्दं

ப்ரேத்ய। ஏத-மன்ன மய-மாத் மான-முபஸங்க்ராமதி। ஏதம் ப்ராணமய மாத்மான-முபஸங்க்ராமதி। ஏதம் மனோமய-மாத் மான-முபஸங்க்ராமதி। ஏதம் விஜ்ஞான மய-மாத்மான-முப ஸங்க்ராமதி। ஏத-மானந்தமய-மாத்மான-முபஸங்க்ராமதி। ததப்யேஷ ச்லோகோ பவதி ॥ 8 ॥

யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மனஸா ஸஹ। ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்। ந பிபேதி குதச்சனேதி।

---

பிராண மயமான ஆத்மாவை அடைகிறான். மனோ மயமான ஆத்மாவை அடைகிறான். விஞ்ஞான மயமான ஆத்மாவை அடைகிறான். ஆனந்தமயமான ஆத்மாவை அடைகிறான். அதைப்பற்றிப் பின்வரும் மந்திரமும் உளது.

9. எதினின்று (எந்தப் பிரம்மானந்தத்தின் எல்லையி னின்று) எட்டிப்பிடிக்க முடியாமல் வாய்ச் சொற்கள் திரும்பிவிடு

---

ஸ யச்சாயம் புருஷே—

ஒ. அவனேயவனும் அவனும் அவனும் மற்றெல்லாமும் அறிந் தனமே.
—நம்மாழ்வார்.

(ஸோச்னுதே ஸர்வான் காமான் ஸஹ) அவன் எல்லா ஆனந்தங் களையும் பிரம்மத்துடன் அனுபவிக்கிறான் என்ற பிரதிஜ்ஞா வாக்கியம் நிரூபிக்கப்பட்டது.

9. நான் நல்லதை ஏன் செய்யாது போனேன்?—ஒ. (ந வர்த்

ब्रह्मणो विद्वान्। न बिभेति कुतश्चनेति। एतꣳ ह वाव न तपति। किमहꣳ साधु नाकरवम्। किमहं पापमकरवमिति।

ஏதꣳஹவாவ ந தபதி। கிமஹꣳ ஸாது நாகரவம்। கிமஹம் பாபமகரவமிதி। ஸ ய ஏவம் வித்வானேதே ஆத்மானꣳ ஸ்ப்ரு

---

கின்றனவோ—மனதுடன்கூட—அந்தப் பிரம்மானந்தத்தை யறிந்தவன் எக்காரணத்தாலும் பயமடைவதில்லை. "நான் நல்லதை ஏன் செய்யாது போனேன்? நான் பாவத்தை ஏன் செய்தேன்?" என்ற எண்ணம் இவனை வருத்துவதில்லை. (புண்ணிய பாவங்களுக்கு ஆத்மா கர்த்தாவும் இல்லை, ஸ்வர்க்க நகரங்களில் ஆத்மாவுக்கு ஆசையும் இல்லை என்று) இங்ஙனம் எவன் அறிகிறானோ அவனுடைய ஆத்ம ஞானத்தை இவைகளும் (புண்ணியபாவங்களுங்கூட) திடப்படுத்துகின்றன.

---

ததே கர்மாணு நோ கனீயான்) கர்மத்தால் இதற்கு ஏற்றமோ இழிவோ இல்லை. ப்ரு. 4.4.23.

ஒ. எந்த மனிதன் ஆன்மாவிலேயே இன்புற்று ஆன்மாவிலேயே திருப்தியடைந்து ஆன்மாவிலேயே ஸந்தோஷத்தைப் பெற்றவனாக உள்ளவனோ அவனுக்குச் செய்யவேண்டிய காரியம் ஒன்றும் இல்லை. அவனுக்கு இங்கே ஒரு கர்மத்தைச் செய்தாலும் பயன் இல்லை, ஒன்றைச் செய்யாததாலும் எப்பயனும் இல்லைதான். இவனுக்கு எப்பொருளிலும் பயனைக்கருதி நாடத் தகுந்தது ஒன்றும் இல்லை. (கீ. 3.17-18).

ய ஏவம் வேத—இது வேதமந்திரங்களின் பல்லவி போன்றது. வேதங் கூறும் உண்மையை உள்ளபடி எவன் உணர்ந்து கொண்டாலும் அவ்வுண்மை தானாகவே அவனுக்கு முக்தி தரும்.

எக்காரணத்தாலும் பயமடைவதில்லை—உலகத்தில் பாவம் என்பது உண்டு என்றால் அதுதான் பயமும் பலஹீனமும்.—விவேகாநந்தர்.

'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்'—அப்பர்.

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை.
—நம்மாழ்வார்.

பலாப்பழத்தை உரிக்கும்போது கையில் எண்ணெய் தடவிக் கொண்டால் பிசின் ஒட்டாது. இதுபோல் மனதில் யோகம் கூடியவனைக் கர்மபலன் ஒட்டாது. (ரா. கி.)

स य एवं विद्वानेते आत्मानꣳ स्पृणुते। उभे ह्येवैष एते आत्मानꣳ स्पृणुते। य एवं वेद। इत्युपनिषत्॥ ९॥

सह नाववतु। सह नौ भुनक्तु। सह वीर्यं करवावहै। तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः॥ हरिः ओ(३)म्॥

॥ इति तैत्तिरीयोपनिषदि द्वितीयः प्रश्नः॥

ணுதே। உபேஹ்யேவைஷ ஏதே ஆத்மானꣳஸ்ப்ருணுதே। ய ஏவம் வேத। இத்யுபநிஷத்॥ 9॥

ஸஹநாவவது। ஸஹநௌ புனக்து। ஸஹ வீர்யம் கரவாவஹை। தேஜஸ்விநாவதீத-மஸ்து மா வித்விஷாவஹை॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:॥ ஹரி: ஓம்॥

॥ இதி தைத்திரீயோபநிஷதி த்விதீய: ப்ரஶ்ன:॥

---

எவன் இங்ஙனம் இரண்டையும் (புண்ணிய பாவங்களில் பற்று துன்பத்திற்குக் காரணம் என்றும் ஆத்ம ஞானம் துன்பத்தைத் துடைப்பதென்றும்) அறிகிருனே அவன் அந்த ஞானத்தால் (புண்ணிய பாவங்களை வீரியமற்றவையாகச் செய்து) ஆத்மாவையே போற்றுகிருன். இங்ஙனம் உபநிஷத்து (விளக்கப் பெற்றது).

(குருசிஷ்யர்களாகிய) எங்களை இருவரையுஞ் சேர்த்துப் பிரம்மம் காப்பாற்றட்டும்.

முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இங்ஙனம் தைத்திரீயோபநிஷத்தில் இரண்டாவது பிரச்னம் முற்றும்.

---

ஸமபுத்தியுடன் கூடியவன் இவ்வாழ்க்கையில் புண்யம் பாவம் இரண்டையும் விடுகிருன். ஆகையால் யோகத்திற்காக முயற்சி செய்வாய். யோகம் கருமத்தில் ஸாமர்த்தியம் ஆகும். (கீ. 2. 50).

பார்த்தா! இதுவே பிராம்மீஸ்திதி எனும் நிலை. இதை அடைந்து ஒருவன் மோஹத்தில் அழுந்தமாட்டான். கடைசிக் காலத்திலும் இதில் நின்று பிரம்மத்தில் கலந்து போக்குவரவற்ற முக்தி நிலையை அடைகிருன் (கீ. 2. 72).

## ॥ तृतीयः प्रश्नः ॥ (भृगुवल्ली)

हरिः ओ(४)म् । सह नाववतु सह नौ भुनक्तु । सह वीर्यं करवाव है । तेजस्विनावधीतमस्तु मा विद्विषाव हैं ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

भृगुर्वै वारुणिः । वरुणं पितरमुपससार । अधीहि भगवो ब्रह्मेति । तस्मा एतत्प्रोवाच । अन्नं प्राणं चक्षुः श्रोत्रं मनो वाचमिति । तꣳहोवाच । यतो वा इमानि भूतानि जायन्ते ।

## ॥ த்ருதீய: ப்ரஶ்ன: ॥ (ப்ருகு வல்லீ)

ஹரி: ஓம் । ஸஹ நாவவது । ஸஹ நௌ புனக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்விநாவதீதமஸ்து । மா வித்விஷாவஹை ॥

॥ ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

ப்ருகுர்-வை வாருணி: । வருணம் பிதர-முபஸஸார । அதீஹி பகவோ ப்ரஹ்மேதி । தஸ்மா ஏதத் ப்ரோவாச । அன்னம் ப்ராணஞ் சக்ஷு: ஶ்ரோத்ரம் மனோ வாசமிதி । தꣳஹோ

---

## மூன்ருவது பிரச்னம் (பிருகு வல்லீ)

ஓம். (குருசிஷ்யர்களாகிய) எங்களை இருவரையுஞ் சேர்த்துப் பிரம்மம் காப்பாற்றட்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

1. வருண புத்திரஞன பிருகு ரிஷி பிரசித்தி பெற்றவர். தகப்பனுரான வருணரை அவர் நாடி 'ஐயனே! பிரம்மத்தை உபதேசித்தருள்க!' என்ருர். (வருணர்) அவருக்கு (பின்வரும்) இதைச் சொன்னுர் :—"அன்னம், பிராணன், கண், காது,

---

பிருகு வல்லீ—

ஏற்கெனவே கூறிய பிரம்மவித்தைக்குத் தவமாகிய ஸாதனமும், அங்ஙனம் தவம் செய்தவரின் கதையும் இந்த வல்லியில் கூறப்படுகிறது. இது வாருணீ உபநிஷத் எனப்படும்.

ஒ. ஜன்மாத்யஸ்ய யத:—(பி. சூ. 1.1.2.)

ஸாக்ஷாச்சோபயாம்னுனத்—(பி. சூ. 1.4.25.)

येन जातानि जीवन्ति । यत्प्रयन्त्यभिसंविशन्ति । तद्विजिज्ञासस्व । तद्ब्रह्मेति । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा ॥ १ ॥

अन्नं ब्रह्मेति व्यजानात् । अन्नाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते । अन्नेन जातानि जीवन्ति । अन्नं प्रयन्त्यभि-

வாச । யதோ வா இமானி பூதானி ஜாயந்தே । யேன ஜாதானி ஜீவந்தி । யத்ப்ரயந்த்-யபிஸம்விஶந்தி । தத் விஜிஜ்ஞாஸஸ்வ । தத் ப்ரஹ்மேதி । ஸ தபோऽதப்யத । ஸ தபஸ்-தப்த்வா ॥ 1 ॥

அன்னம் ப்ரஹ்மேதி வ்யஜானத் । அன்னாத்த்யேவ கல்-விமானி பூதானி ஜாயந்தே । அன்னேன ஜாதானி ஜீவந்தி । அன்னம் ப்ரயந்-த்யபிஸம்விஶந்தீதி । தத் விஜ்ஞாய । புன-ரேவ

---

மனம், வாக்கு (என்ற இவை யெல்லாம் பிரம்மத்துவாரம்).'' மேலும் அவருக்குக் கூறியதாவது :—''உண்டாய பிராணிகளெல்லாம் எதனிடமிருந்து உண்டாயினவோ, உண்டாகியவை எதனிடம் உயிர் வாழ்கின்றனவோ, முடிவுறும்போது எதனிடம் புகுந்து மறைகின்றனவோ அதை ஆராய்ந்தறிய முயல்வாய்; அதுவே பிரம்மம்.'' அவர் (இக்கருத்தில் மனதை நிறுத்தித்) தவஞ் செய்தார் ; தவஞ் செய்து,—

2. அன்னம் பிரம்மம் என்று ஆராய்ந்து அறிந்தார். அன்னத்திலிருந்தே யன்றோ இப்பிராணிகளெல்லாம் உண்டாகின்றன ; உண்டானவை அன்னத்தாலேயே உயிர்வாழ்கின்றன ; முடிவுறும்போது அன்னத்திலேயே மறைகின்றன. இங்ஙனம் அறிந்தபின் (அன்னம் உற்பத்தியும் நாசமும் உடையதாதலால் பிரம்மமாக மாட்டாது என்ற ஐயத்தால்) மீண்டும் பிதாவாகிய வருணரை நாடி 'பிரம்மத்தை உபதேசித்தருள்க'

---

**அன்னம் பிரம்மம்**—ஸ்தூலமாய்க் காணும் உலகையே உடலாய்க் கொண்ட விராட்புருஷன் பிரம்மம் என்றவாறு. (ஒ. பூ: பாதௌ யஸ்ய நாபிர்-விய-தஸு-ரநிலஶ்-சந்த்ர-ஸூர்யௌ ச நேத்ரே கர்ணாவாஶா ஶிரோ த்யௌர் முகமபி தஹநோ யஸ்ய வாஸ்தேயமப்த்தி:—விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தியானம்)

Government Oriental Manuscripts Library,
Triplicane P.O., Madras.

संविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तꣳहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा ॥ २ ॥

प्राणो ब्रह्मेति व्यजानात्। प्राणाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। प्राणेन जातानि जीवन्ति। प्राणं प्रयन्त्यभि संविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तꣳहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा ॥ 3 ॥

வருணம் பிதர-முப-ஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தꣳஹோவாச। தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ। தபோ ப்ரஹ்மேதி। ஸ தபோऽதப்யத। ஸ தபஸ் தப்த்வா ॥ 2 ॥

ப்ராணோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்। ப்ராணாத்ந்யேவ கல்-விமானி பூதானி ஜாயந்தே। ப்ராணேன ஜாதானி ஜீவந்தி। ப்ராணம் ப்ரயந்த் யபிஸம்விசந்தீதி। தத்விஞ்ஞாய। புன ரேவ வருணம் பிதர-முபஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தꣳஹோவாச। தபஸாப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வா। தபோ ப்ரஹ்மேதி। ஸதபோऽதப்யத। ஸ தபஸ்-தப்த்வா ॥ 3 ॥

---

என்றார். (வருணர்) அவருக்குச் சொன்னதாவது—'தவத்தாலேயே பிரம்மத்தை ஆராய்ந்தறிய முயல்வாயாக. தவமே பிரம்மம்.' அவர் தவஞ்செய்தார்; தவஞ்செய்து—'

3. பிராணன் பிரம்மம் என்று ஆராய்ந்து அறிந்தார். பிராண சக்தியாலன்றோ இப்பிராணிகளெல்லாம் உண்டாகின்றன;...மீண்டுந் தவஞ்செய்து—

---

**பிராணன்-மனம்-விஜ்ஞானம் பிரம்மம்**—ஸூக்ஷ்மமாய் ஸூத்ராத்மாவாயுள்ள ஹிரண்யகர்ப்பன் பிரம்மம் என்றவாறு.

ஒரு பட்டிக்காட்டான் அரசனைக்காண விரும்பி அரண்மனைக்குச் சென்றான். வாயிலில் பகட்டாக உடையணிந்து நிற்கும் சேவகனைக் கண்டு அவன்தான் அரசனோ என்று சந்தேகித்தான். பின் அவன் அனுமதிபெற்று உள்ளே சென்று அங்கே காரியதரிசியைக் கண்டு அவன்தான்

मनो ब्रह्मेति व्यजानात्। मनसो ह्येव खल्विमानि भूतानि जायन्ते। मनसा जातानि जीवन्ति। मनः प्रयन्त्यभिसंविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तꣳहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा ॥ ४ ॥

विज्ञानं ब्रह्मेति व्यजानात्। विज्ञानाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। विज्ञानेन जातानि जीवन्ति। विज्ञानं प्रयन्त्यभि संविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितर-

மனோ ப்ரஹ்மேதி வ்யஜானாத். மனஸோ ஹ்யேவ கல்-விமானி பூதானி ஜாயந்தே. மனஸா ஜாதானி ஜீவந்தி. மன: ப்ரயந்த்யபிஸம்விஶந்தீதி. தத் விஜ்ஞாய. புனரேவ வருணம் பிதர-முபஸஸார. அதீஹி பகவோ ப்ரஹ்மேதி. தꣳஹோவாச. தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ. தபோ ப்ரஹ்மேதி. ஸ தபோ ऽதப்யத. ஸ தபஸ்-தப்த்வா ॥ 4 ॥

விஜ்ஞானம் ப்ரஹ்மேதி வ்யஜானாத். விஜ்ஞானாத்த்யேவ கல்-விமானி பூதானி ஜாயந்தே. விஜ்ஞானேன ஜாதானி ஜீவந்தி. விஜ்ஞானம் ப்ரயந்த்-யபி ஸம்விஶந்தீதி. தத்

---

4. மனம் பிரம்மம் என்று ஆராய்ந்து அறிந்தார். மனதின் சக்தியாலன்றோ இப்பிராணிகளெல்லாம் உண்டாகின்றன... மீண்டுந் தவஞ் செய்து—

5. விஜ்ஞானம் பிரம்மம் என்று ஆராய்ந்து அறிந்தார். விஜ்ஞான சக்தியாலன்றோ இப்பிராணிகளெல்லாம் உண்டாகின்றன...மீண்டுந் தவஞ்செய்து—

---

அரசனோ என்று எண்ணினான். பின் அவன் அனுமதி பெற்று அடுத்த வாயில் சென்று ஒரு உயர்ந்த உத்தியோகஸ்தரைக் கண்டு அவர் அரசனோ என்று தயங்கினான். பின்னும் உள்ளே சென்று மந்திரியைக் கண்டு மீண்டும் சந்தேகித்தான். கடைசியாக அரசன் முன் வந்த போது சந்தேகம் தானாகவே நீங்கி இவர்தான் அரசன் என்று தானே கண்டுகொண்டான் என்று ராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்லியுள்ளார்.

मुपंससार। अधीहि भगवो ब्रह्मेति। तꣳहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा ॥ ५ ॥

आनन्दो ब्रह्मेति व्यजानात्। आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। आनन्देन जातानि जीवन्ति। आनन्दं प्रयन्त्यभि संविशन्तीति। सैषा भार्गवी वारुणी विद्या। परमे व्योमन् प्रतिष्ठिता। य एवं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या ॥ ६ ॥

விஜ்ஞாய। புனரேவ வருணம் பிதர-முபஸஸார। அதீஹி பகவோ ப்ரஹ்மேதி। தꣳஹோவாச। தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ। தபோ ப்ரஹ்மேதி। ஸ தபோऽதப்யத। ஸ தபஸ்-தப்த்வா ॥ 5 ॥

ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜானாத்। ஆனந்தாத்த்யேவ கல்-விமானி பூதானி ஜாயந்தே। ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி। ஆனந்தம் ப்ரயந்த்-யபிஸம்விஶந்தீதி। ஸைஷா பார்க்கவீ வாருணீ வித்யா। பரமே வ்யோமன் ப்ரதிஷ்ட்டிதா। ய ஏவம் வேத ப்ரதிதிஷ்ட்டதி। அன்னவா-னன்னாதோ பவதி। மஹான் பவதி பிரஜயா பஶுபிர் ப்ரஹ்மவர்ச்சஸேன। மஹான் கீர்த்யா ॥ 6 ॥

---

6. ஆனந்தம் பிரம்மம் என்று ஆராய்ந்து அறிந்தார். ஆனந்தத்திலிருந்தேயன்றோ இப்பிராணிகளெல்லாம் உண்டாகின்றன. உண்டானவை ஆனந்தத்தாலேயே உயிர்வாழ்கின்றன. முடிவுறும்போது ஆனந்தத்திலேயே மறைகின்றன. இங்ஙனம் விவரிக்கப்பட்ட இதுவே வருணர் உபதேசித்துப்

---

அதுபோல் ஆனந்த மயகோசத்தை யடையும் வரை ஸாதகனுக்குச் சந்தேகம் மீண்டும் மீண்டும் எழுகிறது.

ஆனந்தம் பிரம்மம்—காரண சரீரமாகிய ஆனந்தமயகோசத்தில் வியஷ்டியில் ஜீவனாகவும் ஸமஷ்டியில் ஈசுவரனாயும் தோன்றுவது பிரம்மம் என்றவாறு.

अन्नं न निन्द्यात्। तद्व्रतम्। प्राणो वा अन्नम्। शरीरमन्नादं। प्राणे शरीरं प्रतिष्ठितं। शरीरे प्राणः प्रतिष्ठितः। तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्। स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या ॥ ७ ॥

அன்னம் ந நிந்த்யாத் । தத் வ்ரதம் । ப்ராணோ வா அன்னம் । ஶரீர-மன்னாதம் । ப்ராணே ஶரீரம் ப்ரதிஷ்ட்டிதம் । ஶரீரே ப்ராண: ப்ரதிஷ்ட்டித: । ததேத-தன்ன-மன்னே ப்ரதிஷ்ட்டிதம் । ஸ ய ஏத-தன்ன-மன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிதிஷ்ட்டதி ॥ அன்னவா-னன்னாதோ பவதி । மஹான் பவதி ப்ரஜயா பஶுபிர்-ப்ரஹ்ம-வர்ச்சஸேன । மஹான் கீர்த்யா ॥ 7 ॥

---

பிருகு உணர்ந்த வித்தை. (ஆனந்தமயமான) பரம ஆகாசத்தில் நிலைபெறுவதாம். எவனொருவன் இங்ஙனம் (தவத்தால் பிருகுவைப்போல் முறைப்படி ஆராய்ந்து) அறிகிறானோ அவன் (பிரம்மத்தில்) நிலைபெறுகிறான். (இம்மையிலும் குறைவற்ற) அன்னம் படைத்தவனாகவும், அன்னத்தை உண்டு களிப்பவனாகவும் ஆகின்றான். மக்களாலும் பசுக்களாலும் ஞான ஒளியாலும் சிறப்படைகிறான். கீர்த்தியால் மகானாகிறான்.

7. அன்னத்தை இகழக்கூடாது. அது விரதம். (எது உண்ணப்படுகிறதோ அது அன்னம், எது உண்கிறதோ அது அன்னாதம்). பிராணனும் சரீரமும் அன்னமும் அன்னாதமும்

---

ஒ. (த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா) இரண்டு இணைபிரியாத பறவைகள் ஸமானமாக ஒரே (ஸம்ஸார) விருக்ஷத்தை வாசஸ்தானமாயடைந்தவை. சிருஷ்டிகர்த்தாவாயும் ஈசனாயும் உள்ள பொன்போலொளிரும் புருஷனை எப்போது பார்க்குந் திறமையுள்ளவன் பார்க்கிறானோ அப்போது அவ்வித்துவான் புண்ணிய பாவங்களை உதறிவிட்டு மாசற்றவனாய்ப் பரமபுருஷனுடன் ஸாம்யத்தை அடைகிறான் (மு. 3.1.1-3).

(புருஷாந் ந பரங் கிஞ்சித் ஸா காஷ்ட்டா ஸா பாரகதி:) ஸர்வ ஸாக்ஷியாயும் எல்லாக் கோசங்களையுந் தனக்குப் புரியாயுங் கொண்டுள்ள

अन्नं न परिचक्षीत। तद्व्रतम्। आपो वा अन्नम्। ज्योतिरन्नादम्। अप्सु ज्योतिः प्रतिष्ठितम्। ज्योतिष्यापः प्रतिष्ठिताः। तदेतदन्न-मन्ने प्रतिष्ठितम्। स य एतदन्न-मन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभि-र्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या॥ ८॥

அன்னம் ந பரிசக்ஷீத। தத் வ்ரதம்। ஆபோ வா அன்னம்। ஜ்யோதி-ரன்னாதம்। அப்ஸு ஜ்யோதி: ப்ரதிஷ்ட்டிதம்। ஜ்யோதிஷ்-யாப: ப்ரதிஷ்ட்டிதா:। தததேத-தன்ன-மன்னே ப்ரதிஷ்ட்டிதம்। ஸ ய ஏத-தன்ன-மன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிதிஷ்ட்டதி। அன்னவா-னன்னாதோ பவதி। மஹான் பவதி ப்ரஜயா பஶுபிர்-ப்ரஹ்மவர்ச்சஸேன। மஹான் கீர்த்யா॥ 8॥

---

ஆகின்றன. பிராணனிடம் சரீரம் ஒடுங்கி நிற்கும். சரீரத்தில் பிராணன் ஒடுங்கி நிற்கும். இவ்வாருக அன்னம் அன்னத்தில் ஒடுங்கி நிற்கின்றது. எவன் இங்ஙனம் அன்னம் அன்னத்தில் நிலைபெறுவதை அறிகின்றானோ அவன் நிலையான பதவியை எய்துகிறான். அன்னம் படைத்தவனாகவும் அன்னத்தை உண்டு களிப்பவனாகவும் ஆகிறான். மக்களாலும் பசுக்களாலும் ஞான ஒளியாலும் சிறப்பையடைகிறான். கீர்த்தியால் மகானாகிறான்.

8. அன்னத்தை எறியாதே. அது விரதம். நீரும் நெருப்பும் அன்னமும் அன்னாதமும் ஆகின்றன. நீரில் நெருப்பு ஒடுங்கி நிற்கும். நெருப்பில் நீர் ஒடுங்கி நிற்கும்...கீர்த்தியால் மகானாகிறான்.

---

புருஷனுக்கப்பால் அவனுக்குச் சாக்ஷியாக வேறொன்றுமில்லை. அதுவே எல்லை. அதுவே பராங்கதி (கட. 1.3.11.)

**பரமே வ்யோமன் ப்ரதிஷ்ட்டிதா**—ஒ. யோ வேத நிஹிதங் குஹாயாம் பரமே வ்யோமன் (தை. 2.1). ஆகாசம் மூன்றெனக் கூறப்படும். நாம் வெளியில் காண்பது **மஹாகாசம்** (ஸ்தூலம்). கனவிலும் நனவிலும் மனத்துள் காண்பது **சித்தாகாசம்** (ஸூக்ஷ்மம்). சித்தத்தின் ஸாக்ஷி உறையுமிடமாகிய புத்திகுகையிலுள்ளது **சிதாகாசம்**. இங்கு 'பரமேவ்யோமன்' என்றது சிதாகாசம் அல்லது **சிதம்பரம்**. ஒ. கட. 2.3.17.

अन्नं बहु कुर्वीत। तद्व्रतम्। पृथिवी वा अन्नम्। आकाशोऽन्नादः। पृथिव्यामाकाशः प्रतिष्ठितः। आकाशे पृथिवी प्रतिष्ठिता। तदेत-दन्न-मन्ने प्रतिष्ठितम्। स य एत-दन्न-मन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभि-र्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या॥ ९॥

அன்னம் பஹு குர்வீத। தத் வ்ரதம்। ப்ருதிவீ வா அன்னம்। ஆகாஶோऽன்னாத:। ப்ருதிவ்யா-மாகாஶ: ப்ரதிஷ்ட்டித:। ஆகாஶே ப்ருதிவீ ப்ரதிஷ்ட்டிதா। ததேத-தன்ன-மன்னே ப்ரதிஷ்ட்டிதம்। ஸ ய ஏத-தன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிதிஷ்ட்டதி। அன்னவா-னன்னாதோ பவதி। மஹான் பவதி ப்ரஜயா பஶுபிர்-ப்ரஹ்மவர்ச்சஸேன। மஹான் கீர்த்யா ॥ 9 ॥

---

9. அன்னத்தை மிகுதியும் உண்டாக்க வேண்டும். அது விரதம். பூமியும் ஆகாசமும் அன்னமும் அன்னாதமும் ஆகின்றன. பூமியில் ஆகாசம் ஒடுங்கி நிற்கும். ஆகாசத்தில் பூமி ஒடுங்கி நிற்கும்...கீர்த்தியால் மகானாகிறான்.

---

அன்னத்தை இகழக்கூடாது—

ஒ. (அன்னேன ப்ராணா:, ப்ராணைர் பலம், பலேன தபஸ், தபஸா ஶ்ரத்தா, ஶ்ரத்தயா மனீஷா, மனீஷயா மனோ, மனஸா ஶாந்தி: ஶாந்த்யா சித்தஞ் சித்தேன ஸ்ம்ருதிம், ஸ்ம்ருத்யா ஸ்மாரம், ஸ்மாரேண விஜ்ஞானம், விஜ்ஞானேனாத்மானம் வேதயதி, தஸ்மா-தன்னந் ததன், ஸர்வாண்யே தானி ததாதி) அன்னத்தால் பிராணனையும், பிராணனால் பலத்தையும், பலத்தால் தவத்தையும், தவத்தால் சிரத்தையையும், சிரத்தையால் புத்தியையும், புத்தியால் மனதையும், மனதால் சாந்தியையும், சாந்தியால் சித்தத்தையும், சித்தத்தால் நினைவையும், நினைவால் ஸ்திதப்பிரஜ்ஞையும், ஸ்திதப்பிரஜ்ஞையால் விஜ்ஞானத்தையும், விஜ்ஞானத்தால் ஆத்மாவையும் பெறுவதால் அன்னத்தைக் கொடுப்பது இவையெல்லாவற்றையும் கொடுத்ததாகிறது. —(நாராயண உப.)

ஒ. ஆகாரம் உட்கொள்ளும் சமயத்தில் அதைப் பழித்தலோ, குறை கூறலோ, சந்தேகித்தலோ ஆரோக்கிய முறையாகாது. சாப்பிடும்போது இது நல்லது, இது எனக்கு ஆரோக்கியந்தரும், பலம் தரும், உள்ளத்தையுஞ் சுத்தமாக்கும் என்றே எண்ணி உணவை உட்கொள்ள வேண்டும். (உபநிஷதப்பலகணி—ராஜாஜி).

न कंचनन वसती प्रत्याचक्षीत । तद्व्रतम् । तस्माद्यया कया च विधया बह्वन्नं प्राप्नुयात् । अराध्यस्मा अन्नमित्याचक्षते । एतद्वै मुखतोऽन्नꣳराद्धम् । मुखतोऽस्मा अन्नꣳराध्यते । एतद्वै मध्यतोऽन्नꣳराद्धम् । मध्यतोऽस्मा अन्नꣳराध्यते । एतद्वा अन्ततोऽन्नꣳराद्धम् । अन्ततोऽस्मा अन्नꣳराध्यते ॥ १0.१ ॥

ந கஞ்சன வஸதௌ ப்ரத்யாசக்ஷீத । தத் வ்ரதம்। தஸ்மாத் ய்யா கயா ச விதயா பஹ்வன்னம் ப்ராப்னுயாத் । அராத்த்யஸ்மா அன்ன-மித்யாசக்ஷதே। ஏதத்வை முகதோऽன்னꣳ ராத்தம்। முகதோऽஸ்மா அன்னꣳ ராத்த்யதே । ஏதத்வை மத்த்யதோऽன்னꣳ ராத்தம் । மத்த்யதோ ऽஸ்மா அன்னꣳ ராத்த்யதே। ஏதத்வா அந்ததோऽன்னꣳ ராத்தம் । அந்ததோ ऽஸ்மா அன்னꣳ ராத்த்யதே ॥ 10.1 ॥

---

10.1. வீட்டை நாடி வந்த எவரையுந் தள்ளிவிடக் கூடாது. அது விரதம். ஆகையால் எவ்விதத்திலாவது மிகுதியும் அன்னத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். வந்தவர்க்கு அன்னம் ஆயத்தமாயிருக்கிறதென்று சொல்லுவர் (பெரியோர்). அளிக்கும் அன்னத்தை உத்தமமான முறையில் ஆக்கியளித்தால் இவனுக்கு உத்தமமான அன்னம் கிட்டும் ; மத்திமமான முறையில் ஆக்கியளித்தால் இவனுக்கு மத்திமமான அன்னம் கிட்டும் ; அதமமான முறையில் ஆக்கியளித்தால் அதமமான அன்னம் கிட்டும்.

---

**நீரும் நெருப்பும்**—சூரிய வெப்பமும் வயிற்றிலுள்ள உஷ்ணமும் நீரை உண்பதால் நீர் அன்னம், உஷ்ணம் அன்னாதம். சூரிய வெப்பத்தால் மழையும் வியர்வையும் உண்டாகிறது. மழையாலும் வியர்வையாலும் வெப்பந் தணிகிறது. ஆகையால் ஒன்றிலொன்று ஒடுக்கம்.

**அன்னத்தை எறியாதே**—உணவு நன்றாயில்லை என்று தள்ளக் கூடாது. நன்றாயிருப்பதையும் அளவுக்கு மிஞ்சிப் பரிமாறிக்கொண்டு பிறகு எறியக் கூடாது. உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவுப் பொருளைக் காட்டிலும் அருமையான பொருள் உலகத்தில் உண்டோ?

(உபநிஷதப்பலகணி—ராஜாஜி.)

**அன்னம் பஹுகுர்வீத**—உனக்காக மட்டும் உணவு உண்டாக்கினால் போதாது. நாட்டில் அனைவருக்கும் பயன்படுமாறு ஏராளமாக உண்

य एवं वेद । क्षेम इति वाचि । योगक्षेम इति प्राणापानयोः । कर्मेति हस्तयोः । गतिरिति पादयोः । विमुक्तिरिति पायौ । इति मानुषीः समाज्ञाः । अथ दैवीः । तृप्तिरिति वृष्टौ । बलमिति विद्युति ॥ १०.२ ॥

ய ஏவம் வேத । க்ஷேம இதி வாசி । யோக-க்ஷேம இதி ப்ராணுபானயோ: । கர்மேதி ஹஸ்தயோ: । கதிரிதி பாதயோ: । விமுக்திரிதி பாயௌ । இதி மானுஷீ: ஸமாஜ்ஞா:। அத தைவீ:। த்ருப்திரிதி வ்ருஷ்டௌ । பலமிதி வித்யுதி ॥ 10.2 ॥

---

10.2. இவ்விதம் அறிந்தவன் (அன்னம்'படைத்தவனுகவும் அன்னத்தை உண்டு களிப்பவனுகவும் ஆகிருன். மக்களாலும் பசுக்களாலும் ஞான ஒளியாலும் சிறப்பை யடைகிருன். கீர்த்தி யால் மகானுகிருன்). (இனி அத்தியாத்மா உபாஸனை வருமாறு :—) பாதுகாப்பாக வாக்கில் உளதென்றும், பிராணுபான சக்திகளில் யோகக்ஷேமமாகவும், கைகளில் கருமமாகவும், கால்களில் நடையாகவும், எருக்குழியில் மலப்போக்காகவும், (பிரம்ம சக்தியே உளதென்று உபாசிக்க வேண்டும்). இங்ஙனம் மானிட சரீரத்தைப் பற்றிய உபாசனை. இனி 'அதிதைவ' உபாஸனை வருமாறு. மழையில் மகிழ்ச்சியாகவும், மின்னலில் மிகுந்த சக்தி வடிவாகவும் (பிரம்மத்தை உபாசித்தல் வேண்டும்).

---

டாக்கு. உணவு ஏராளமாக உண்டாக்குவதே சமூகத்திற்குச் செய்யும் பேருதவி. செல்வம் படைத்துச் சிக்கனமாக வாழ்ந்தால் உலோபித்தனம் வந்து மனதைக் கவர்ந்து கொள்ளப் பார்க்கும். அது கூடாது. வந்த விருந்தினரைப் போ என்று சொல்லாதே. எவருக்கும் இடங்கொடுப்பாயாக. அதுவே ஒழுக்கம். (உபநிஷதப் பலகணி—ராஜாஜி).

**பாதுகாப்பாக வாக்கில் உளது**—ஆகையால் வாக்கைக் காக்க வேண்டும். அதுதான் சிறந்த க்ஷேமம்.

ஒ.—யா காவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (குறள்).

**யோகக்ஷேமம்**—ஈட்டலுங் காத்தலும் யோகக்ஷேமம். பிராணனும் அபானனும் உடலின் யோகக்ஷேமத்தைக் காக்கின்றன.

यश इ॑ति प॒शुषु। ज्योतिरिति न॑क्षत्रे॒षु। प्रजाति-रमृत-मानन्द इ॑त्युप॒स्थे। सर्व॑मित्याका॒शे। तत्प्रतिष्ठेत्यु॑पासी॒त। प्रति॑ष्ठावान् भ॒वति। तन्मह इत्यु॑पासी॒त। म॑हान् भ॒वति। तन्मन इत्यु॑पासी॒त। मान॑वान् भ॒वति॥ १0.३॥

तन्नम इत्यु॑पासी॒त। नम्यन्ते॑ऽस्मै का॒माः। तद्ब्रह्मेत्यु॑पा-सी॒त। ब्रह्म॑वान् भ॒वति। तद्ब्रह्मणः परिमर इत्यु॑पासी॒त।

யஶ இதி பஶுஷு। ஜ்யோதிரிதி நக்ஷத்ரேஷு। ப்ரஜாதி-ரம்ருத-மானந்த இத்-யுபஸ்த்தே। ஸர்வ-மித்யாகாஶே। தத் ப்ரதிஷ்திட்டேத்-யுபாஸீத। ப்ரதிஷ்ட்டாவான் பவதி। தன் மஹ இத்யுபாஸீத। மஹான் பவதி। தன் மன இத்யுபாஸீத। மான வான் பவதி॥ 10.3॥

தந் நம இத்யுபாஸீத। நம்யந்தேऽஸ்மை காமா:॥ தத் ப்ரஹ்-மேத்-யுபாஸீத। ப்ரஹ்மவான் பவதி। தத் ப்ரஹ்மண: பரிமர

---

10-3. பசுக்களில் புகழ் செல்வமாகவும், நக்ஷத்திரங்களில் ஒளியாகவும், கருக்குழியில் அழிவிலாத ஸந்ததியை வளர்க்கும் ஆனந்தமாகவும், ஆகாசத்தில் (பிரபஞ்சம்) அனைத்துமாகவும் (பிரம்ம சக்தியே விளங்குகிறதென்று உபாசிக்க வேண்டும்). அதை ஆதாரமென உபாசித்தால் இவன் ஆதாரத்தை உடையவனாகிறான்; அதை மஹத்தென உபாசித்தால் இவன் மஹானாகிறான்; அதை மனம் என உபாசித்தால் மனோவன்மை பெற்றவனாகிறான்.

10.4. அதை 'நம:' என்று உபாசித்தால் காமங்கள் இவனை வணங்கி நிற்கும். அதை வேதமென்று உபாசித்தால் வேதத்தை உணர்ந்தவனாவான். அதை பிரம்மாண்டத்தின் 'பரிமரம்' (நாசசக்தி) என உபாசித்தால் இவனைச் சூழ்ந்து பகைக்கின்ற சத்துருக்களும், இவனிடம் பிரியமில்லாத விரோதி

---

10.4. 'மம' என்ற இரண்டெழுத்தே பந்தம். 'ந மம' என்ற மூன்றெழுத்தே மோக்ஷம். (ம. பா.).

पर्येणं म्रियन्ते द्विषन्तः सपत्नाः। परि येऽप्रियाः भ्रातृव्याः। स यश्चायं पुरुषे। यश्चासावादित्ये। स एकः॥ 10.4॥

स य एवंवित्। अस्माँल्लोकात्प्रेत्य। एत-मन्नमय-मात्मान-मुपसंक्रम्य। एतं प्राणमयमात्मानमुपसंक्रम्य। एतं मनोमयमात्मान-मुपसंक्रम्य। एतं विज्ञानमयमात्मान-मुपसंक्रम्य।

இத்யுபாஸீத। பர்யேணம் ம்ரியந்தே த்விஷந்த: ஸபத்னு:। பரியே ஽ப்ரியா ப்ராத்ருவ்யா:। ஸ யஶ்சாயம் புருஷே। யஶ்சாஸா-வாதித்யே। ஸ ஏக:॥ 10.4॥

ஸய ஏவம் வித்। அஸ்மால்-லோகாத் ப்ரேத்ய। ஏத-மன்ன மய-மாத்மான-முபஸங்க்ரம்ய। ஏதம் ப்ராண-மய-மாத்மான முபஸங்க்ரம்ய। ஏதம் மனோ-மய-மாத்மான-முபஸங்க்ரம்ய।

---

களும் நாசமடைகின்றனர். (உபாசனையின் முடிவான தத்துவம்) புருஷனிடத்தில் உள்ளுறைபவன் எவனே அவனும், சூரியனிடத்தில் உறைபவன் எவனே அவனும் ஒன்றே (என்பதாம்).

10.5. எவன் இங்ஙனம் அறிந்தவனே அவன் இவ்வுலகை நீத்து, அன்னமயமான ஆத்மாவை அடைந்து, பிராணமயமான ஆத்மாவை அடைந்து, மனோமயமான ஆத்மாவை அடைந்து, விஜ்ஞானமயமான ஆத்மாவை அடைந்து, ஆனந்தமயமான ஆத்மாவை அடைந்து—(அனைத்துக்கும் அப்பாலுள்ள

---

**ஸ ஏக:**—ஒ. ஆங்கென்று மீங்கென்று முண்டோ ?
சச்சிதானந்த சோதி யகண்ட வடிவாய்,
ஓங்கி நிறைந்தது கண்டாற்—பின்ன
ரொன்றென் டிரண்டென் றுரைத்திட லாமோ
—சங்கர, சங்கர, சம்போ !
(தாயுமானவர்).

10.5. ஒ. காக்கை குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம். (பாரதி).

एतमानन्दमयमात्मानमुपसंक्रम्य । इमाँल्लोकान् कामान्नी कामरूप्यनु संचरन् । एतत्साम गायन्नास्ते ।

हा ३ वुहा ३ वुहा ३ वु ॥ १०.५ ॥

अहमन्न-महमन्न-महमन्नम् । अहमन्नादो२ऽहमन्नादो२-ऽहमन्नादः । अह५ श्लोककृदह५ श्लोककृदह५ श्लोककृत् । अहमस्मि प्रथमजा ऋता३स्य । पूर्वं देवेभ्यो ऽमृतस्य ना ३

ஏதம் விஜ்ஞான-மய-மாத்மான-முபஸங்க்ரம்ய । ஏத-மானந்த மய-மாத்மான-முபஸங்க்ரம்ய । இமா५ல்-லோகான் காமான்னீ காமரூப்யனு-ஸஞ்சரன் । ஏதத் ஸாமகாயன்னாஸ்தே ।

ஹா (3) வு ஹா (3) வு ஹா (3) வு ॥ 10.5 ॥

அஹ-மன்ன-மஹ-மன்ன-மஹமன்னம் । அஹமன்னாதோ(2) ऽஹமன்னாதோ (2) ஹமன்னாத: । அஹ५ ஶ்லோகக்ரு-தஹ५ ஶ்லோகக்ரு-தஹ५ ஶ்லோக க்ருத் । அஹமஸ்மி ப்ரதமஜா ருதா (3) ஸ்ய । பூர்வந் தேவேப்ப்யோ ऽம்ருதஸ்ய நா (3) பாஇ ।

எல்லை நிலத்தில் நின்று)—இஷ்டமானதை உண்பவனாயும், இஷ்டமான உருவத்தை ஏற்பவனாயும், இவ்வுலகங்களில் பின் கூறியவண்ணம் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டு சஞ்சரிப்பான்.

ஆச்சரியம்! ஆச்சரியம்! ஆச்சரியம்!

10.6. நானே அன்னம், நானே அன்னம், நானே அன்னம்! நானே அன்னாதம், நானே அன்னாதம், நானே அன்னா

**காமான்னீ காமரூபீ**—உ - ம். நாரதர்.

ஒ.—தெளிந்த சித்தமுடையவன் எந்த எந்த உலகத்தை மனதால் ஸங்கல்பிக்கிறானோ, எந்த போகங்களை விரும்புகிறானோ அந்தந்த உலகத்தையும் அந்தந்த போகங்களையும் அடைகிறான். (மு. 3. 1.10)

ஒ. பிரு. 1. 4. 5.

**ஸாமகானம்**—இங்கு ஸாமம் என்பதில் ஸமத்வம் என்னும் கருத்தும் தொக்கி நிற்கின்றது.

ஒ. எவர்களுடைய மனது ஸமநிலையில் நிறுத்தப்பட்டதோ அவர்களால் இங்கேயே பிறவி ஜயிக்கப்பட்டது. பிரம்மம் ஸமமானதும் தோஷமற்றதும் அன்றோ? அக்காரணத்தால் அவர்கள் பிரம்மத்தினிடம் நிலைபெறுகின்றனர். (கீ. 5.19).

भा इ । यो मा ददाति स इ देव मा 3 वा: । अहमन्नमन्न-मदन्तमा 3 द्मि । अहं विश्वं भुवनमभ्यभवां । सुवर्न ज्योतीः । य एवं वेद । इत्युपनिषत् ॥ 10.6 ॥

सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्विनावधीतमस्तु माविद्विषावहै ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥ हरिः ओ(3)म् ॥

इति तैत्तिरीयोपनिषदि तृतीयः प्रश्नः ॥

யோ மா ததாதி ஸ இதேவ மா (3) வா: । அஹ-மன்ன-மன்ன-மதந்த-மாத்மி । அஹம் விஶ்வம் புவன-மப்ப்யபவாம் । ஸுவர்ந ஜ்யோதீ: । ய ஏவம் வேத । இத்யுபநிஷத் ॥ 10.6 ॥

ஸஹநாவவது । ஸஹநௌ புனக்து । ஸஹ வீர்யங் கரவாவஹை । தேஜஸ்விநா-வதீத-மஸ்து மா வித்விஷாவஹை ॥

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ஹரி: ஓம் ॥

இதி தைத்திரீயோபநிஷதி த்ருதீய : ப்ரஶ்ந: ॥

---

தம்! (உணவும் நானே உண்பவனும் நானே. உணவுக்கும் உண்பவனுக்கும் உள்ள) உறவை உண்டாக்கியவனும் நானே! உறவை உண்டாக்கியவனும் நானே! உறவை உண்டாக்கியவனும் நானே! அழகும் ஒழுங்குமே (ருதம்) உருக் கொண்ட இவ்வுலகிற்கு முன்னுதித்தவனாக நானே உள்ளேன். தேவர்களுக்கும் முன்னவன் நான். அழியாப் பதவியின் நடுநிலை நான். (அன்ன ரூபியான) என்னை எவன் கொடுக்கிறானோ அவன் இதனால் ஆத்ம ரக்ஷணம் செய்தவனாகிறான். (இங்ஙனம் அறிந்து கொடுக்காவிட்டால்) உண்பவனை உணவாகிய நான் உண்டு விடுகிறேன். உலகனைத்துமாகி அதையழிப்பவனும் நானே. (இவ்வுலகனைத்தையும் ஒருவனாய் நின்று பிரகாசிக்கச் செய்யும்) சூரியனுடைய ஒளி போன்றது (என் ஒளி). எவன் இவ்வாறாக (சாந்தனாய் பிருகுவைப் போல் தவத்தால் உண்

மையை) அறிவானே (அவன் முக்தி எய்துகிறான்). இங்ஙனம் உபநிஷத்து (விளக்கப் பெற்றது).

(குரு சிஷ்யர்களாகிய) எங்களை இருவரையுஞ் சேர்த்துப் பிரம்மம் காப்பாற்றட்டும்.

ஓம். மூவ்வகையிலும் சாந்தி நிலவுக!

ஒ. கடல் ஞாலம் செய்தேனும் யானே யென்னும், கடல் ஞால மாவேனும் யானேயென்னும்—நம்மாழ்வார்.

**அஹமஸ்மி ப்ரதமஜா**—ஒ. ஐ. 2.5

உபநிஷத்தின் விஷயச் சுருக்கம் :—

## 1. சீக்ஷாவல்லீ

சிஷ்யன் குருகுலத்தில் அத்தியயனம் செய்யவேண்டிய முறையும், அவன் செய்ய வேண்டிய உபாஸனைகளும், முக்கியமாக ஓங்காரத்தின் தியானமும், குருகுலத்தை விட்டுச் சென்றபின் உலகில் நடந்துகொள்ள வேண்டிய வழியும் சீக்ஷாவல்லியில் போதிக்கப்படுகிறது.

வேதத்தை அத்தியயனம் செய்யும்போது எழுத்துக்களின் உச்சரிப்பில் சிறிதும் பிழையின்றி, வர்ணம், ஸ்வரம், மாத்திரை முதலியவற்றைச் சரிவரப் பயிலவேண்டும். ஒவ்வொரு சொல்லையும் ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் ஆராய்ந்து எழுத்துக்களின் கூட்டுறவால் புதிய கருத்துக்கள் தோன்றும் விந்தையையும் சிந்தித்தால் ஸ்தூல உலகில் ஸூக்ஷ்மப் பொருளைக் காணுந் திறமை மனதுக்கு ஏற்படும். உலகமே சொல்லும் பொருளும் போன்று இருக்கின்றது. ஒரு சொல்லின் முதற் பகுதி போன்றவள் தாய்; பிற்பகுதி போன்றவன் தந்தை; அதின் பொருள் போன்றவன் குழந்தை என உபாசித்தல் வேண்டும்.

'யச்சந்தஸாம்' எனும் மந்திரம் ஓங்காரத்தின் பெருமையைக் கூறுவது. அதை ஜபிப்பதால் புத்தி சக்தியும், ஞாபக சக்தியும், இந்திரியங்களின் சக்தியும் உடலின் வன்மையும் வளரும் என்று பெரியோர் கூறுகின்றனர். புத்தியில்லாதவனிடம் உடல் வன்மை அனர்த்தத்துக்கு இடமாதலால் புத்தியைப் பிரார்த்தித்த பின்னரே உடல் வன்மை வேண்டப்படுகின்றது. "ஓங்காரமாகிய இந்திரன் என்னைப் புத்தியால் பலவானாகச் செய்யட்டும். ஆன்ம ஞானமாகிய அழியாச் செல்வத்தைத் தரிப்

பவனாக நான் ஆகவேண்டும். என் உடல் அதற்குத் தகுதியுள்ளதாக இருக்கவேண்டும். என் நாக்குத் தேன் போன்ற இனிய மொழிகளையே பேசவேண்டும். காதுகள் நல்ல கேள்வியால் பயன்பெற வேண்டும்," என்பது சிஷ்யன் பிரார்த்தனை.

குருவின் பிரார்த்தனை: "பிறர்க்கு என் வாழ்க்கை பயன்படும் வண்ணம், ஆடைகளும், ஆடுமாடுகளும், அன்னபானங்களும் என்னிடம் நிறைந்திருக்கவேண்டும். பிரம்மசாரிகள் என்னை நாடி எல்லாத் திக்குகளிலிருந்தும் தடையின்றி வரவேண்டும். இந்திரிய ஜயமுடையவர்களாகவும், சாந்தமான மனதுடையவர்களாகவும், அவர்கள் இருக்க வேண்டும். மாதங்களால் வருஷம் பூர்த்தியாவது போல் நல்ல சிஷ்யர்களால் என் வாழ்க்கை பூர்த்தியடைய வேண்டும்."

ஓங்காரத்தின் நாலு பாதங்களாகப் பின்னர் "பூ: புவ: ஸுவ: மஹ:" என்ற வியாஹ்ருதிகள் தியானம் செய்யப்படுகின்றன. 'மஹ:' என்றதை மாஹாசமஸ்யர் என்ற ரிஷி கண்டுணர்த்தியவர். அது பிரம்மத்திற்கு உடல்போலும் மற்றவை அங்கங்களைப் போலும் உள்ளன. புருஷனுடைய கலைகள் பதினாறும் நான்கு வியாஹ்ருதிகளிலும், ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம் என்ற நிலைகளிலும் நாலு நாலாகப் பிரித்து உபாசிக்கப்படவேண்டும். பதினாறுவது கலையில் ஜீவன் பிரம்மத்துடன் ஐக்கியமாகிறான்.

இந்த ஐக்கியம் யோகியால் எங்ஙனம் எய்தப்படுகிறதென்று அடுத்த அனுவாகம் கூறுகிறது. எங்கும் நிறைந்துள்ள பரமாத்மாவே இருதயாகாசத்தில் மனோமயனாகவும், பொன்போன்று ஒளிர்பவனாகவும், அங்கிருந்து மேல் நோக்கிச் செல்லும் ஸுஷும்னா நாடியில் மின்னல்கொடி போல் பிரகாசித்துக் கொண்டு உள் நாக்குஸ்தானத்தின் வழி, உச்சிக் குழி (பிரம்மரந்திரம்) வரையும் அதற்கப்பாலும் சஞ்சரிப்பவனாகவும் உள்ளவன் என்று யோகி காண்கிறான். இந்த உபாஸனத்துக்கு முன் இந்த தேகத்திலுள்ள இந்திரியங்களுக்கும் மனதுக்கும் மட்டும் அதிபதியாக அறியப்பட்ட ஆத்மா இவ்வுபாஸனையின் பயனாக விசுவரூபியாக எல்லா தேகங்களிலுமிருக்கிற இந்திரியங்களுக்கும், வியாஹ்ருதி வித்தையில் குறிக்கப்பட்ட உலகங்களுக்கும் அதிபதியாக உணரப்படுகிறான். மாஹாசமஸ்யர் என்ற குருவானவர் கருமயோகத்தால் சித்தசுத்தியடைந்து யோக்கியனான 'பிராசீனயோக்கியன்' என்ற சிஷ்யனுக்கு இங்ஙனம் உபதேசித்தார்.

பிரணவத்தில் ஒன்றாகவும், வியாஹ்ருதிகளில் நான்காகவும் உபா

சிக்கப்பட்ட பரம்பொருளே உலகில் ஐந்தைந்தாகவும் காணப்படுகிற தென்று மேலே கூறப்படுகிறது. வெளியில் ஐந்து விஷயங்கள் இருந்தால் அவற்றை அறிய உடலில் ஐந்து இந்திரியங்கள் இருக்கின்றன. இவ்வாற்ருல் அதிபூதமும் அத்தியாத்மமும் ஒன்றேயென உபாசிக்கப்பட வேண்டும்.

ஓங்காரமே பிரம்மம், ஓங்காரமே இது எல்லாம் என்று அடுத்த அனுவாகம் கூறுகிறது.

ஸாதகன் எந்த நிலையில் இருப்பினும், வேதம் ஓதுதலையும் ஓதுவித்தலையும் தவருது கைக்கொள்ள வேண்டும். இதுவே ஞான வாழ்க்கைக்குச் சிறந்த ஸாதனம், ஒப்பற்ற தவம், என்று வற்புறுத்திக் கூறப்படுகிறது.

குருகுலத்தில் வசித்து வந்த சிஷ்யன் கல்வி முடிந்து உலகில் புகும் போது குரு அவனுக்குச் செய்யும் அருமையான உபதேசத்துடன் சீக்ஷா வல்லி முடிவடைகிறது. அவ்வுபதேசத்தின் ஸாரமாவது: "உண்மையிலிருந்தும் அறத்திலிருந்தும் வழுவாமலும், நன் முயற்சிகளைக் கைவிடாமலும், ஓதுதலையும் ஓதுவித்தலையும் மறந்துவிடாமலும், வாழவேண்டும். தாயையுந் தகப்பனையும் ஆசாரியனையும் விருந்தினரையும் தெய்வமாகப் போற்றவேண்டும். ஸந்ததியாகிற நூலை அறுத்துவிடாமல் இல்லறம் நடத்தவேண்டும். தரும முறையில் நடத்தப்படும் இல்வாழ்க்கையில் தானம் செய்தல் ஒரு முக்கியமான கடமை. கொடுப்பதைச் சிரத்தையுடனும், லோபித்தனமில்லாமலும், அடக்கத்துடனும், அன்புடனும் கொடுக்கவேண்டும். வாழ்க்கையில் சிக்கலான நிலையில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்குப் பிரமாணம் நல்லோர் வாழ்க்கையே. தருமப் பற்றுந் தயையுங் கொண்ட அந்தணர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிருர்களோ அவ்வாறே நடந்துகொள்ள வேண்டும். இதுவே கட்டளை. இதுவே உபதேசம். இதுவே வேதத்தின் முடிவான பொருள்."

## 2. ஆனந்தவல்லீ

பிரம்மானந்தத்தின் ஸ்வரூபத்தையும், அதன் அளவு கடந்த பெருமையையும் இவ்வத்தியாயம் கூறுவதால் இதற்குப் **பிரம்மவல்லீ** அல்லது **ஆனந்தவல்லீ** என்ற பெயர் வாய்ந்தது. பிரம்மம், ஸத்யம்-ஞானம்-அனந்தம். அதுவே ஸத்தாகவும் சித்தாகவும் ஆனந்தமாகவும் உள்ளது. அதை எவன் அறிகிருனே அவனுடைய ஆனந்தத்துக்கு எல்லையில்லை.

தோன்றும் உலகனைத்தும் பிரம்மத்திடமிருந்தே தோன்றியுள்ளதாக ஞானி காண்கிறன். ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி, செடி கொடிகள், அன்னம் என்பவை படிப்படியாகப் பிரம்மத்திலிருந்தே உண்டாயின. அன்னத்தின் ஸாரமாகியது மனித உடல். இந்த உடல் ஆத்மாவுக்கு ஒரு உறை போன்றிருக்கிறது. இது அன்னமய கோசம். இதனுள் கிரமமாகப் பிராணமய கோசம், மனோமய கோசம், விஜ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம். அன்னமயத்துள் பிராணமயம் அடங்கியதாய்த் தோன்றினும் அதைவிடப் பெரிது. அவ்வாறே பிராணமயத்துள்ளடங்கும் மனோமயம் பிராணமயத்திலும் பெரிது; அதிலும் பெரிது விஜ்ஜானமயம்; அதிலும் பெரிது ஆனந்தமயம். கோவிலின் கர்ப்பக்கிருஹம் சிறியதாயினும் அதன் பெருமை வெளிப் பிராகாரங்களின் பெருமையைவிட மேம்பட்டவாறு.

ஒவ்வொரு கோசமும் ஒரு பக்ஷியின் உருவத்துடன் ஒப்பிடப்படுகிறது. எந்தப் பிரம்மத்தினின்று இவ்வுலகும் உடலும் ஐந்து கோசங்களும் உற்பத்தியாயினவோ, அந்தப் பிரம்மமே அனைத்துக்கும் ஆதாரமாய்ப் பழத்துக்குள் வித்து இருப்பது போல் கோசங்கள் அனைத்துக்குள்ளும் உறையும் உண்மைப் பொருளாகும்.

எவன் இதை அறியமாட்டாமல் பிரம்மம் இல்லை என்கிறனே அவன் அஸத்து (கெட்டழிந்தவன்). எவன் பிரம்மந்தான் ஸத்தியம் என்று அறிகிறனே அவனே ஸத்து (நல்லவன்). பிரம்மமே தன் ஸங்கல்பத்தால் அனைத்திலும் புகுந்துறைகின்றது. அதுவே உருவாகவும், அருவாகவும், ஸகுணமாகவும், நிர்க்குணமாகவும், இடமுடையதாகவும் இடமேதுமிலதாகவும், சித்தாகவும் அசித்தாகவும் ஆயிற்று. வாழ்க்கையில் (ரஸம்) இன்பம் உண்டு எனின் அந்த இன்பம் இவ்வறிவுதான். இந்தப் பரமானந்தப் பரம்பொருளை ஒவ்வொருவனும் ஒவ்வொரு கணமும் அடைந்தே இருக்கிறன். ஒவ்வொரு மூச்சிலும் ஒவ்வொரு செயலிலும் உள்ள ஆனந்தம் இதுவே.

எப்போது தனக்கும் பிரம்மத்துக்கும் பேதத்தைப் பார்ப்பதில்லையோ அப்போது தான் ஞானி, 'அபயப் பிரதிஷ்டை' என்ற முக்தி நிலையை எய்துகிறன். எல்லா சாஸ்திரங்களையுங் கற்ற வித்வானுங்கூட எதுவரை பரமாத்ம வஸ்துவினிடத்தில் ஒரு சிறிதேனும் பேதத்தைக் கல்பிக்கிறனே அதுவரை அவன் பிரம்மத்தை அடைந்தவனகான். பேதபுத்தி யுள்ளவரை பயம் நீங்காது. பயம் நீங்காதவரை

முக்தி இல்லை. ஆனால் முக்தி யெய்தியவனுடைய ஆனந்தத்துக்கோ எல்லையில்லை.

ஸாதுவாயும், யௌவனம் நிரம்பினவனாயும், அத்தியயனம் செய்தவனாயும், ஏவல் திறமையுள்ளவனாயும், திடச் சித்தமும் உடல் வன்மையும் பெற்றவனாயும் ஒருவன் இருந்து, எல்லாச் செல்வங்களும் நிறைந்த இந்த பூமி முழுதும் அவனுடையதாகவும் இருக்குமேயானால் அவன் அடையக்கூடிய ஆனந்தம் ஒரு மனித ஆனந்தத்தின் அளவு. அதைப் போல் பல கோடி மடங்கு இந்திரன், பிருஹஸ்பதி, பிரஜாபதி முதலியவர்களின் ஆனந்தம். பிரம்மானந்தமோ இதற்கெல்லாம் அப்பாற்பட்டது, அளவு கடந்தது, மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதது. அதைத் தேடி வேறு உலகங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அது பிரகாசிக்கிறது. பேரம்பலத்தில் பிரகாசிக்கும் சூரிய ஒளியும் சிற்றம்பலத்தில் பிரகாசிக்கும் அறிவின் ஒளியும் அந்த ஒன்றேயாம்.

"நான் நல்லதை ஏன் செய்யாது போனேன்? நான் பாவத்தை ஏன் செய்தேன்?" என்ற எண்ணம் ஞானியை ஒருபோதும் வருத்துவதில்லை. புண்ணிய பாவங்களை வீரிய மற்றவையாகச் செய்து, ஞானியானவன் ஆத்மாவையே போற்றி வாழ்கிறான். கடைசி காலத்திலும் இந்நிலையில் வழுவாமல் நின்று பிரம்மத்தில் கலந்து போக்குவரவற்ற முக்தி நிலையை யடைகிறான்.

## 3. பிருகுவல்லீ

வருணபகவான் தனது புத்திரனும் சிஷ்யனுமான பிருகுவுக்குச் செய்த உபதேசமாக அமைவதால் இது பிருகுவல்லீ எனப்படும். பிரம்மவித்தையை நாடின பிருகுவுக்கு வருண பகவான் கூறியதாவது: "எல்லாம் எதிலிருந்து உண்டாயிற்றோ, எதில் நிலை பெறுகிறதோ, எதில் மீண்டும் லயமடைகிறதோ, அதை ஆராய்ந்தறிவாய், அதுவே பிரம்மம்."

அன்னத்திலிருந்து அனைத்துமுண்டாகி, அன்னத்திலேயே நிலை பெற்று, அன்னத்திலேயே மறைவதால் அன்னமே பிரம்மம் என்று பிருகு தீர்மானித்துக்கொண்டு வருணனிடம் வந்து அத்தீர்மானம் சரியா என்று கேட்டார். வருணன் "தவத்தாலேயே பிரம்மத்தை அறிய வேண்டும். தவமே பிரம்மம். மீண்டுந்தவஞ் செய்" என்றார். பிருகுவின் தீர்மானத்தை வருணன் தவறு என்று சொல்லவில்லை. முதல் படியில் அதுவும்

உண்மைதான். வருணன் தவத்தால் இன்னும் மேலே போகும்படி சொன்னார். படிப்படியாகப் பிராணன் பிரம்மம் என்றும், மனம் பிரம்மம் என்றும், விஜ்ஞானம் பிரம்மம் என்றும் ஆனந்தம் பிரம்மம் என்றும் பிருகு உணர்ந்தார். அது வரை இருந்த ஸந்தேகம் அப்போது அறவே நீங்கிற்று. எவனொருவன் பிருகுவைப் போல் இங்ஙனம் தவத்தால் ஆராய்ந்தறிகிறானோ அவன் பிரம்மத்தில் நிலை பெறுவான்.

ஒரு கோவிலுக்குள் நுழையுமுன் கோபுர வாசலில் வணங்குவது போல, ஸாதகன் பிரம்ம ஞானத்துக்குத் துவாரம் போன்ற அன்னத்தை இகழாமல் போற்ற வேண்டும் என்பது மேலே உபதேசிக்கப்படுகிறது. அன்னத்தைப் பழிப்பதுங் குறை கூறுவதும் நன்றாயில்லை யென்று தள்ளிவிடுவதும் தவறு. நன்றாயிருப்பதையும் அளவுக்கு மிஞ்சிப் பரிமாறிக்கொண்டு வீணாக்கக் கூடாது. உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவுப் பொருள் பிரத்தியக்ஷமான தெய்வம். அதைப் போற்றிப் பெருக்கவேண்டும். வந்த விருந்தினரைப் 'போ' என்று சொல்லக் கூடாது. எல்லோரையும் வரவேற்று ஆதரிக்க வேண்டும். அது சிறந்த தோர் விரதம்.

